# இந்து நாகரிகம்

## சில பார்வைகள்



**க.பொ.த. உயர்தரம்**

ஆக்கம்:

சின்னத்துரை சோதிலிங்கம் (சோதி)

B.A. Dip-in-Ed.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இந்து நாகரிகம் சில பார்வைகள்

க. பொ. த. உயர்தர வகுப்புக்குரியது



ஆக்கம்


சோதி B.A. Dip. in - Ed.

ஆசிரியர்

யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்

மல்லாகம்


15-10-2002

விலை: 160/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து நாகரிகம்
# சில பார்வைகள்

முதற்பதிப்பு 2002

ஆசிரியர்
**சின்னத்துரை – சோதிலிங்கம்**

வெளியீடு
**தேன்மொழி – சோதிலிங்கம்**
**"செல்வகம்"**
இணுவில் கிழக்கு,
காரைக்கால் வீதி,
இணுவில்.

பதிப்புரிமை – ஆசிரியருக்கே

அச்சுப்பதிவு
**ஸ்ரீ சாயி கணனி அச்சகம்**
**1227, கே. கே. எஸ். வீதி,**
**பூநாறி மரத்தடி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

| | |
|---|---|
| 1. பல்லவர் கால சமய வரலாற்றின் சிறப்பினை ஆராய்க. | 1-19 |
| 2. பல்லவர் காலத்து இந்து சமய வளர்ச்சியினை மேல் வருவனவற்றுடன் தொடர்புபடுத்தி விளக்குக. | 20-38 |
| 3. சைவ சமயப் பிரிவுகளினுள்ளே காஷ்மீர சைவம் பெறும் இடத்தினை ஆராய்க. | 39-45 |
| 4. தோத்திரமும் சாஸ்திரமும் சமய வாழ்வினை எவ்வாறு வளம் படுத்துகின்றன ஆராய்க. | 46-52 |
| **5. கட்டுரைகள்** | |
| I. சித்தாந்த சாஸ்திர நூல்களிலே திருவருட்பயன் | 53-62 |
| II. இந்துக்களின் ஒழுக்கவியல் பண்புகள் | 63-70 |
| III. காரைக்கால் அம்மையார் | 71-74 |
| IV. மனுதர்ம சாஸ்திரம் | 75-79 |
| V. தஞ்சைப் பெருங் கோயில் | 80-85 |
| VI. ஸ்ரீ தக்ஷண கைலாச புராணம் | 86-91 |
| VII. வெருகலம்பதி சித்திரவேலாயுதர் ஆலயம் | 92-96 |
| VIII. வானவன் மாதேவி ஈஸ்வரம் | 97-103 |
| IX. இலிங்கோற்பவ மூர்த்தமும் வழிபாடும் | 104-111 |
| X. தட்சிணாமூர்த்தமும் அதன் வழிபாடும் | 112-118 |
| XI. திருமந்திரமும் அது காட்டும் வாழ்வு முறையும் | 119-126 |
| XII. நாயக்கர் கால கோபுரங்கள் | 127-131 |
| XIII. சிவஞான போதம் | 132-141 |
| XIV. சிவஞான சித்தியார் | 142-148 |
| XV. நம்மாழ்வார் | 149-154 |
| XVI. உசாத்துணை நூல் | 155-157 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இந்து நாகரிகம் புதிய பாடத்திட்டம் 1997இல் நடைமுறைக்கு வந்த பின் புதிய முறைமையிலான வினாக்கள் கட்டுரை வடிவிலும் கட்டமைப்பு வினா முறையிலும் இடம்பெறும் அதே நேரம் முன்பு ஒரு சமயம் முதலாம் வினாவாக கட்டாய வினாவாக எதிர்பார்க்கப்பட்ட விடயம் இப்போது அவ்வாறு இல்லாது விடப்பட்ட போதும் மாணவர்களின் தனித்துவம் மிக்க ஆற்றல் திறன்களை பல முறமைகளில் இருந்தும் வெளிக் கொணரப்படும் முறையில் அண்மைக் காலப் பகுதியில் பரீட்சை வினாத்தாள்களின் இறுதி வினாவாக விருப்புக்குரியதான முறையில் விளக்கக் கட்டுரை வடிவில் வினவப்படுவதுண்டு அத்தகைய நிலையினை மாணவர்கள் இலகுவாக கொண்டு விடையளிப்பதற் கேதுவாக தமது பரந்து பட்ட அறிவுத் திறனை வெளிக்காட்டும் சந்தர்ப்பத்தினை உருவாக்கிக் கொடுக்கும் முகமாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இதனை மாணவர் பயன்படுத்தி உயர் பலனை பெறும் அதே நேரம் கடந்த காலங்களில் என்னால் வெளியிடப்பட்ட வினாவிடைப் புத்தகங்களுக்கு மாணவர்களும் ஆசிரியப் பெருமக்களும் தந்த பேராதரவு இதனை எழுதத் தூண்டியது.

இதற்கெல்லாம் உற்ற துணையாகி இருந்து என்னை நெறிப்படுத்திய அன்னை சிறுகாமிக்கும் இதனை குறுகிய கால இடைவெளியில் வெளியிட விரும்பிய போது அதனை செவ்வனே நிறைவேற்றித் தந்த சாயி கணனி அச்சக உரிமையாளர் சக ஊழியர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதுடன் அன்னை சிவகாமியின் பாதாரவிந்தங்களுக்கு இச் சிறு நூலை சமர்ப்பணம் ஆக்குவதில் பெருமை அடைகின்றேன்.

**சி. சோதிலிங்கம்**

**'செல்வகம்'**
இணுவில் கிழக்கு,
இணுவில்.
**15-10-2002**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவர்கால சமய வரலாற்றின் சிறப்பினை ஆராய்க

தமிழ் இலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரை கி.பி 6 கி.பி 9 வரையுள்ள காலம் பொதுவாக பல்லவர்காலம் எனப்பட்ட போதும் உண்மையில் 575 - 890 வரையான காலப்பகுதியை உள்ளடக்கிய தாக காஞ்சியை தலைநகராக அமைத்துத் தொண்டை நாட்டுடன் தமிழகத்தின் பல பகுதிகளையும் இணைத்து ஆட்சிசெய்த காலமாக கொள்ளப்படுவது பல்லவர் காலமாகும்.

## I. காலமும் சூழலும்

பல்லவ மன்னர்களில் ஒருவானகிய சிம்மவிஷ்ணு கி.பி 575ல் களப்பிரர், மழவர், சாளுக்கிய மன்னர் பரம்பரையினரை எதிர்த்து போராடி அவர்களை தோற்கடித்தமையின் பேறாக ஸ்தாபிக்கப்பட்ட பேரரசு அவனது உடன்பிறப்பாளனான பீமவர்மனின் வழித்தோன்றல்களால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட நிலையில் அபராஜிதவர்மனைச் சோழ அரசன் ஆதித்தவர்மன் தோற்கடித்ததோடு கி.பி 890ல் முடிவுறுகின்றது. இதே நேரம் இக்காலத்தின் ஆரம்ப நிலை அவைதீக மதசெல்வாக்குகளினால் இந்துசமய வரலாறு பின்தள்ளப்பட்டு மிகவும் நலிவடைந்திருந்த வேளை அதனை வளர்த்தெடுக்க வேண்டிய கடப்பாடு அக்கால மக்களுக்கிருந்த நிலையில் கி.பி 5ம் நூற்றாண்டளவில் தோன்றிய காரைக்காலம்மையாரும் முதலாழ்வார்கள் எனப்படும் பேயாழ்வார் பூதந்தாழ்வார், பொய்கையாழ்வார் ஆகிய சைவ, வைணவ அடியார்களும் சைவ வைணவ பத்தியியக்கத்துக்கு அடியெடுத்துக் கொடுக்க அதனை தமது வாழ்வாலும் வாக்காலும் தொண்டுகளாலும் சமயகுரவர்களும் பின் வந்த ஆழ்வார்களும் முன்னெடுத்து சென்றமையின் பேறாக பல்லவர்கால வைதீகசமய வரலாறு சைவம் வைணவம் என்ற பிரிவுகளினூடாக ஒரு மரத்தின் இருகிளைகளாக செழித்து வளர்ந்ததுடன் பத்திநிலையில் சமயவரலாறு பொதுமக்கள் இயக்கமாக வளம்படுத்தப்பட்ட காலமாக கருதப்படுவதுடன் ஏனைய கால கட்டங்களிலும் சற்று வித்தியாசமான அரசியல் பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக மாற்றங்களின் பேறாக தனக்கெனெ ஒரு தனியிடத்தை பெற்ற காலமாக மிளிர்வது இப்பல்லவர் காலமாகும்.

## II. பல்லவர் கால சைவ சமயவளர்ச்சிப் போக்கு

பல்லவர் கால சைவசமய வரலாற்றை பொறுத்த வரை அதன் வளர்ச்சி நிலை தனித்துவம் மிக்கதாகவே காணப்படுகின்றது. காரைக்காலம்மையாரால் தொடக்கிவைக்கப்பட்ட சைவசமய வரலாற்றுப் பரப்பு பின்வந்த நாயன்மார்களினால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட நிலையில் வேறு எக்காலத்திலும் பெற்றிராத செல்வாக்கினை அது பெற்றுக் கொள்ளுகின்றது. காரணம் பல்லவர் கால ஆரம்பத்தில் தோன்றிய நாயன்மார்கள் எனக் கருதப்படும் சம்பந்தரும், நாவுக்கரசரும் ஒன்றுபட்டு ஊர்கள் தோறும் சென்று அற்புதங்கள் பலவற்றை செய்து அவற்றின் பேறாக சைவசமயமே மெய் சமயம் என்பதனை நிலைநாட்டியதன் பேறாக **1) மன்னர்கள் கூட மதம் மாறிய வரலாறுகள்** அறியமுடிகின்றது. அவ்வகையில் அவர்களின் ஆதரவு சைவசமயம் மேலோங்க காரணமாகிய நிலையில் அப்பர் பெருமானால் சைவனாக மதமாற்றம் செய்யப்பட்ட மகேந்திரவர்மன் திருச்சிராப்பள்ளியிலே உள்ள சமணப்பள்ளிகளை இடித்து அதில் பெறப்பட்ட கற்களை கொண்டு திருவதிகையில் குணதரவீச்சரம் என்ற திருக்கோயிலை கட்டுவித்தான் என்பதும் இதனால் சமணம் மதிப்பிழந்தது சைவம் தலையெடுத்தது, மேலும் ஞானசம்பந்தக் குழந்தை பாண்டிய மன்னன் வெப்பு நோயால் வாடிய போது மங்கையக்கரசியாரின் வேண்டுதலால் அங்கு சென்று "மந்திரமாவது நீறு" என்ற பாடலின் ஊடாக அவனது வெப்புநோயை நீக்கியதும் அவன் முதுகுக் கூனையும் நிமிரச் செய்தார் இதனால் மன்னன் மனந்தெளிந்து சமணசமயத்தை புறக்கணித்துச் சைவ சமயத்தை மேற்கொண்டு நின்ற சீர்நெடுமாறனாயினான். இதனால் பாணடி நாடெங்கும் சைவநெறி ஒளி பெற்றது. இங்கு "அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்ற மரபு பேணி மக்களும் சமயம் மாறினர் இதனால் சைவசமயம் தனித்த நெறியாகி எங்கும் ஒளிவிட்டு பிரகாசித்து வளரலாயிற்று. இதுமட்டுமன்றி இக்காலத்தில் தோன்றிய **2) நாயன் மார்களின் வழிகாட்டலில்** மக்கள் நம்பிக்கை கொண்டு அவர்கள் பின் தொடர்ந்து சென்ற நிலையில் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலமைத்துவம் பல வழி முறைகளில் சைவம் செழித்தோங்க வழி பிறந்தது. அவ்வகையில் **3) தலயாத்திரைப் பெருமைகளால்** திருக்கோயில் வழிபாட்டு மரபு சிறப்பு பெற்ற நிலையில் சைவ சமய பெரியார்களுள் முதன் முதலாக சமயப் பிரசாரம் செய்வதற்கு ஊர்கள் தோறும் கால் நடையாக தலயாத்திரை செய்தபெருமை நாவுக்கரசருக்கே உரியது. இவர் சுமார் இருபத்தைந்து ஆண்டுகால மாக இப்பணிமுறையினை மேற்கொண்டிருந்தார் என்பதும் அறியக்கிடக்கின்றது. இத்தகைய நிலையில் இவர் தமது பாடல்களில் கடவுள் வழிபாடு அதுவும் தலவழிபாட்டின் இன்னிறயமையாமையினை பல பாடல்களில் விளக்கியுள்ளார் அவ்வகையில் “ஆக்கையாற் பயனென் அரண்கோயில் வலம் வந்து பூக்கையால் அட்டிப் போற்றியென்னாத இவ்வாக்கையாற் பயனென், நெக்குநெக்கு நினைப்பவர் நெஞ்சுளே புக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன் வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச் சூழ்ந்த மாமலர் தூவித் துதியாதே வீழ்த்த வாவினையேன் நெடுங்காலமே என்பனவும் இவைபோன்ற வேறு பல கூற்றுக்களும் கோயில் வாழிபாட்டுச் சிறப்புக்களை அறிய உதவுகின்றது. ஞானசம்பந்தக் குழந்தையை பொறுத்த வரையிலும் இறைவன் எழுந்தருளியுள்ள திருத்தலங்களின் வழிபாட்டு பெருமையிலே மக்கள் தேவர்கள் அன்றி விலங்கினங்கள் பறவைகள் முதலிய உயிரினங்களும் வழிபட்டு நற்கதி பெற்ற வரலாற்றையும் நாயனார் தமது திருப்பாடல்களில் விபரித்து சென்றுள்ளார் அவ்வகையில் திருவனைக்கா என்னும் திருத்தலத்தில் ஆனை வழிபட்டு அருள் பெற்றதும் திருவெண்காட்டில் வெள்ளாணை வழிபட்டு நற்கதி எய்தியதும் திருப்புள்ளிருக்கும் வேளூரில் சம்பாதி சடாயு எனும் கழுகுகள் பூசனை புரிந்து பெறற்கரும் பேறு பெற்றதும் நாயனார் திருமுறையிகளில் இடம் பெற்றுள்ளன. இவற்றையெல்லாம் “விறல்மிக்க கரிக்கருள் செய்தவனே” என்றும் “அயிராவதம் பணிய மிக்கதனுக்கருள் சுரக்கும் வெண்காடும் முக்குன நன்குடையானு முக்கணுடையிறையவனே” என்றும் “தன்னாய சாம்பாதி சடாயென்பார் தாமிருவர் புள்ளானார்க் கரையனிடம் புன்னிருக்கும் வேளூரே” என்றும் அருளுவர். சுந்தரமூர்த்தி நாயனாரும் திருக்கோயில் பலவற்றை வழிபட்டதுடன் அவையாவும் சிறப்புற்று இருந்தது என்றும் எடுத்தியம்பியுள்ளார் சோழநாட்டின் கலயநல்லூர் எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தலத்தினை கண்டு மகிழ்ந்து பாடுகின்றார் திருக்கலய நல்லூர்ப் பெருமருமானின் கோயிலழகு திருவிழாப்பொலிவு அடியார்களின் வழிபாட்டுச் சிறப்பு முதலியன யாவும் "குரும்பை முலை மலர்க்குழலி" எனத் தொடங்கும் திருப்பதிகத்தினூடாக சிறப்பிக்கப்பட்டுள்ளது இதனை மையமாக கொண்டு மக்கள் சைவசமயத்தில் ஆர்வமும் ஊக்கமும் பற்றும் பத்தியும் பூண்டொழுகினார்கள் என்பதும் அறியக்கிடக்கின்றது.

மாணிக்கவாசகரைப் பொறுத்தவரையில் முதல் மூவரைப் போலவே ஊர்கள் தோறும் நடைப்பயணம் மேற்கொண்டு ஆங்காங் கெழுந்தருளிய இறைவனை பாடியருளிய நிலையில் விதிவிலக்கான முறைகளில் அவ்வூர் மக்களின் பழக்கவழக்கங்கள் விளையாட்டுக்கள் முதலியவற்றையும் மக்கள் அவற்றை தம் வாய்மொழிப்பாடல்களூடாக எடுத்துக் காட்டியமை இவற்றினூடாக சிவபிரானின் அருட்சிறப்பை உட்பொருளாக்கும் அணுகுமுறையை கையாண்டுள்ளார். இவ்வகையில் இவர் பாடிய திருவெம்பாவை, திருவெம்மானை திருப்பொன்னூசல், திருப்பூவல்லி, திருச்சாழல் ஆகிவற்றிலே மக்களின் அனுபவத்திற்குள்ளேயே சைவசமய சிறப்புக்கள் தனித்துவம் மிக்கதாக அமைந்திருந்தமையினை எடுத்துக் காட்டிச் சென்றுள்ளார்.

மேலும் சைவசமய வரலாற்று தனித்துவம் மிக்க தாக என்றுமே நிலைத்து நிற்பதற்கு ஏதுவாக திருப்பதிகங்களினூடாக 4) **இறைவனின் பெருமைகள்** எடுத்துக் காட்டப்பட்ட நிலையில் ஞானசம்பந்தர் இறைவன் பெருமை விரித்துரைத்துப் பேசும்போது பெய்யுமா மழையானவன், நீடினாருலகுக்கு உயிராய் நின்றான், இகழும் காலன் இதயத்தும் என்னுளும் திகழும் ஈசன், தொகுத்தவன் அருள்மறையங்கம் ஆகமம் வகுத்தவன், நலமலிகொள்கையர் முத்தியாய் மூவரின் முதல்வனாய் நின்றவன், பத்தியாற் பாடிடப் பரிந்தவர்க்கருள் செயும் அத்தனார், அயனோடு மாலுக்கு காணொணா வண்ணத்தார், கருவினாலன்றியே கருவெலாமாயவர், உருவினாலன்றியே உருவுசெய்பவர், அந்தமாயுல காதியுமாயவன், என்றெல்லாம் போற்றியவர் "வாழ்க அந்தணர் எனத் தொடங்கும் திருப்பாசுரத்திலே மிகவருமையாக எடுத்துரைத்துள்ளார். நாவுக்கரசரைப் பொறுத்தவரையில் இறைவன் பெருமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துரைக்கும் நிலையில் அடியார்கட்கார முதமானவன், அடியாரை அமரருலகம் ஆள்விப்பவன், ஆஞ்செழுத்தும் நினைவார் கென்றும் மந்தவன், அருமந்த நன்மையெல்லாம் அடியவர்க்கீந்தவன், ஆளான அடியவர்க்கு அன்பன், சலங்கெடுத்துத் தயாமூல தன்ம மென்னும் தத்துவத்தின் வழிநின்று சார்ந்தோர்க்கெல்லாம் நலம்கொடுக்கும் நம்பி தொழுது எழுந்து ஆடிப்பாடித் தோத்திரம் சொல்லி அழுமவர்க்கு அன்பர், உற்றுணர்ந்துருகி ஊறி உட்கசிவுடையவர்க்கு நற்றுணை என்றெல்லாம் எடுத்துக் காட்டி விளங்கியுள்ளார் சுந்தரரை பொறுத்தவரையில் இறைவன் பெருமை கூறும்போது பேராயிரம், உடையானை, எண்குணத்தினானை. இறையவனை, மறையவனை மூவரில் முதலாயவன்தனை பேசினாற் பெரிதும் இனியானை ஆருயிர்க்கெல்லாம் மருந்தனான் தனை, கற்றகல்வியிலும் இனியானை, தொண்டரைப் பெரிதும் உகப்பானை வேதத்தின் பொருளானை, ஓங்காரத்துவவாகி நின்றானை அல்லலில் அருளேபுரிவானை முற்றும் பின்னையாய் முன்னே முளைத்தானை வீடில்லாத வியன் புகழானை எவ்வுயிர்க்கும் வைப்பினை, இன்ன தன்மையன் என்றறியொன்ணா எம்மானை என்றெல்லாம் எடுத்தக் காட்டுவர். மாணிக்கவாசகர் சிவன் திரிபுரம் எரித்தமை, தக்கன் வேள்வி தகர்த்தமை, மகேந்திர மலையில் ஆகமங்கள் சொன்னமை, திருமாலும் நான்முகனும் தேட ஒளிப்பிழம்பாய் நின்றமை, அருச்சுனனுக்காகத் திராத வேடம் பூண்டமை நந்தம்பாடியில் ஆசிரியனாய் வந்தமை அந்தணனாய் வந்து இந்திரசாலங்காட்டிமை, திருப்பூவணத்தில் சித்தராய்த் தோன்றியமை திருவாதவூரில் சிலம்போசை காட்டியமை பூவலத்தில் பாவநாசஞ் செய்தமை, பாண்டியன் ஒருவனுக்குத் தண்ணீர்பந்தர் வைத்தமை, பட்டமங்கையில் அட்டமாசித்தி அருளியமை, திருவேகம்பத்தில் அம்மையாருக்குப் பாகங்கொடுத்தமை, சந்திர தீபத்துச் சாத்திரனானமை, இராவணன் மனைவி மண்டோதரிக்கு அருளியமை என்பன போன்ற அருட் செயல் பெருமைகள் எடுத்துக்காட்டியுள்ளார் இவையெல்லாம் மக்கள் இறைவன் மீது மிகுந்த ஈடுபாடு கொள்ளவும் அவற்றின் பேறாக சைவசமயம் வளம்படுத்தப்படவும் காரணமாகின.

மேலும் **5) புராண தத்துவ கருத்துக்கள்** மக்கள் அறிய வகைசெய்யும் வகையிலும் எடுத்துக் காட்டி சமயம் வளர்க்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் சம்பந்தர் பாடல்களில் இராவணன் பற்றிய குறிப்புக்கள் எடுத்துக் காட்டப்பட்ட நிலையில் தீயவர்களும் தவறுகள் உணர்ந்து இறைவழிபாட்டில் ஈடுபட்டால் இறைவன் அருள் பெறலாம் என கூறப்பட்ட நிலையில் இதனை அப்பர் பெருமானும் தமது பாடலில் எடுத்துக்காட்டி அவற்றின் ஊடாக மக்கள் மனங்களை மாற்றி சைவசமயம் வளம்படுத்த காரணமாகின்றார் மேலும் சம்பந்தர் பாடல்களில் திருமாலும் பிரமனும் சிவனின் அடிமுடிதேடியும் காண இயலாதவராயினர் எனவரும் புராணக் கதை பற்றிய குறிப்பு சிவன் மும்மூர்த்திகளிலும் உயர்ந்தவரென்பது இங்கு எடுத்துக்காட்டப் படுகின்றது. சுந்தரர் பாடல்களிலே சைவபக்தி இயக்கத்தில் சிவபெருமானுடைய திருக்கோலத்தையும் அருட்செயல்களையும் எடுத்துக் காட்டுவது முக்கியத்துவம் பெறுகின்றது வடமொழிப் புராண இதிகாசங்களிலுள்ள கதைகளும் கருத்துக்களும் இங்கே எடுத்தாளப்படுகின்றன. அப்பரும் சம்பந்தரும் எடுத்தாண்ட கதைகள் யாவும் சுந்தரரால் எடுத்தாளப்படுகின்றன புராண கதைகள் பல சிவனின் எல்லாம் வல்ல தன்மையைக் காட்ட எழுந்தன அப்பர் சம்பந்தர் தேவாரங்களிற் சிவனின் வீரதீரச் செயல்கள் அருள்காரணமாக நடைபெறுகின்றன என்ற கொள்கை எடுத்துக்காட்டப்பட்டதனை சுந்தரர் தேவாரமும் பூரணமாக ஏற்றுக்கொள்வதனை காண முடிகின்றது. அப்பருடைய தேவாரத்தில் அட்டவீரட்டானம் என குறிப்பிடப்படுவது. சுந்தரர் பாடலிலும் குறிப்பிடப் படும் நிலையில் திரிபுராந்தகன் தக்கசாரி, காமந்தகன், கஜாரிக கஜாந்தகன் ஜலந்தராரி, காலசங்காரன், அந்தகாரி, பிரமசிரச்சேதனன் என்று எட்டுக் கோலங்களில் சிவபிரான் எட்டுவீரச் செயல்களை தமிழ்நாட்டிலுள்ள அதிகை, பறியலூர், குறுக்கை, வழுவூர்விற்குடி, கடவூர், கோவலூர், கண்டியூர் என்னும் இடங்களில் ஆற்றினார் என்று புராணக்கதைகள் மக்களிடம் பிரசாரம் எய்தின. இப்புராணக் கதைகளிலே தொனித்த வீரம் சுந்தரர் பாடல்களில் அருளாக கமழ்கின்றது. உலகமாதாவாகிய உமையை சிவபெருமான் தம்பக்கத்தில் வைத்திருத்தல் அவரது அருளை உணர்த்துவதுடன் ஆன்மாக்களை ஆட்கொள்ளும் தகமைக்கு தக்க சான்றாகவும் அமைந்து காணப்படுகின்றன. என்ற விடயங்கள் எல்லாம் மக்களை சைவசமய பக்கம் சாரச்செய்து அதனை வளர்த்தெடுத்ததில் ஐயமில்லை மாணிக்கவாசகரைப் பொறுத்தும் இச்செயல்திறன்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது பாடல்களில் எடுத்துக் காட்டத்தவறவில்லை அத்துடன் இடமறிந்து புராண வரலாறுகளை பொருத்திவைத்து ஒரு புதியவரலாற்றை மக்கள் மத்தியில் எடுத்தியம்பி மக்கள் மனத்தை பிணித்து வைப்பத்தில் வல்லவர். அவ்வகையில் திருமாலும் நான்முகனும் அறியமுடியாவண்ணம் அண்ணாமலையாய் இறைவன் ஆண்டருளிய வரலாற்றை நாற்பது முறைக்குமேல் நமக்கு கூறுவர் கீர்த்தித் திரு அகவலில் "அரியோடு பிரமற்களவறியாதவன்" என்றவர் திருவண்டப் பகுதியில் "பிரமன்மால் காணாப் பெரியோன்" என்பர் பின்னர் "மாலறியா நான்முகனுங் காணாமலை" என்பர். இறைவன் சலந்தராசுரனை வென்ற வீரச் செயலைத் திருச்சாழிலிலும், திருத்தோணோக்கத்திலும் பாடுவர் இன்னும் வெள்ளானைக்குச் சாபந் தீர்த்தருளியமை, பன்றிக்குட்டிகளுக்கு பாலருத்தியமை, கரிக்குருவிக்கு உபதேசித்தமை முதலிய பேரருட் செயல்கள் அவர் உயிர்வர்கத்தின் மேற்கொண்டருளிய கருணைப் பிரவாகத்தை குறிப்னவாகவே அமைந்து காணப்படுகின்றது. இத்தகைய செயல்திறன்கள் அக்காலப்பரப்பில் சைவம் தனித்துவம் மிக்கநெறியாக வளர்ச்சியடைய காரணமாயிற்று.

மேலும் இக்கால சைவசமய வளர்ச்சிப் போக்கில் **6) கோயில்களும்** சிறந்ததோர் இடத்தைப் பெற்றிருந்தன என்பதனை அறியும் நிலையில் நாயன்மார்களின் ஊர்பயணங்கள் மேற்குறித்தவாறான சிவாலயங்களின் தொகை மேலும் பெருக வழிவகுத்தன பல புதிய கோயில்களை பல்லவ பாண்டிய மன்னர்கள் பல குறுநிலத்தலைவர்களும் கட்டியெழுப்பினர் முன்பே கட்டப்பட்டிருந்தும் இடையே சூழ்நிலைக் காரணிகளால் வழிபாடற்றிருந்த கோயில்கள் மீண்டும் திறக்கப்பட்டு வழிபாடுகட்கு வகைசெய்யப்பெற்றன. (உ+ம்) திருமறைக்காடு நாவுக்கரசர் உண்ணாவிரத நோன்பிருந்து இவ்வாலயத்தை மீட்டெடுத்தார் என பெரிய புராணச் செய்தி கூறும் இவ்வாறான தன்மையில் தமிழக வரலாற்றில் பல்கிப்பெருகிய கோயில்கள் பல்வேறு பெயர்களால் சுட்டப்பட்டன என்பதனை நாவுக்கரசரின் பாடல் எடுத்துக் காட்டும் நிலையில்

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோடெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில் சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியற் பொருப்பனையகோ குடில்கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும்அன்றே"

என எடுத்துக் காட்டியுள்ளார். இவ்வாறான கோயில்களுக்கு சென்றுவழிபடுவது மக்களின் அன்றாடான நடைமுறைகளில் ஒன்றாக சித்தரிக்கப்பட்டதன் பேறாக இதன் அவசியத்தின் தன்மையை நாவுக்கரசர் ஒருகட்டளையாகவே எடுத்தியம்பிய தன்மையில்

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு..."

என்ற பாடலூடாக மக்களின் அன்றாட கடமைகளில் ஒன்றாக சமயவளர்வின் செயல்திறனுக்கு வித்தாக கோயில்கள் அமையவேண்டியது அன்றைய காலகட்டத்தில் அவசியமாயிற்று. இதன் பேறாக "கோயிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழியும் தோன்றலாயிற்று. இதனை நாவுக்கரசர் தனது பாடலிலே எடுத்துக் காட்டிய நிலையில்

"திருக்கோயிலில்லாத திருவிலூரும்
திருவெண்ணீறணியாத திருவியலூரும்

என்ற பாடலடியினூடாக எடுத்துக் காட்டியுள்ளார். மக்களின் நடைமுறை வாழ்க்கையுடன் இணைந்து சித்தரிக்கப்பட்ட கோயில்கள் வழிபாட்டிடம் என்ற நிலைக்கு மேலாக கலைபயில் கூடங்களாகவும் அமைந்தன. பல்வேறு சிற்ப கட்டிடமுறை உத்திகள் கோயில்களின் அமைப்பிலே மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு கோயில்களில் பயின்ற சிற்ப கட்டிடக்கலை அமைப்புக்களின் வரலாறே பிற்பட்ட காலத்தில் மகேந்திரபாணி மாமல்லபாணி, இராஜசிம்மபாணி, நந்திவர்மபாணியாக வளர்ந்து அடுத்தகால கட்டங்களிலும் தனித்ததோர் இடம்பெற வழிகாட்டிய காலம் பல்லவர்கால சைவசமய வரலாற்றுக் காலம் என்றே கூறமுடிகின்றது. இவற்றுடன் பலவிதமான கலைமரபுகள் அதாவது இசைக்கலை, கூத்துக்கலை சார்ந்த உணர்வுகள் மக்கள் மத்தியில் ஊட்டப்பட்டு யாவரும் கூடி பாடத்தக்கனவாக கூட்டுவழிபாட்டு முறைக்கும் அவற்றின் பேறாக

"ஆலயம் தொழுவதும் சாலவும் நன்று"

என்ற முதுமொழிச் செயல்பாட்டை நிலைநிறுத்தவும் தொண்டர் குலமே தொழுகுலம் என்றும் அக்குலாம் ஒன்றுகூடும் இடம் கோயில் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயவளம்படுத்தும் நிலையம் என்ற எண்ணக்கருத்துக்கள் நிலைநிறுத்தப்பட்ட நிலையில் மாணிக்கவாசகரும் தமது திருவாசகத்திலே சிறப்பாக திருப்பெருந்துறைக் கோயிற் காட்சியும் இவ்வாறான ஒரு தொண்டர் குலத்தின் காட்சியாகவே சித்தரித்துச் சென்றுள்ளார். அக்கோயில்களில்

**"வலம் வந்து மடவார்கள் நடமாட**
**முழவு அதிர மழையென்றஞ்சிச்**
**சில மந்தி யலமந்து மரமேறி முகில் பார்க்கும்**
**திருவையாறே"**

என்ற சம்பந்தர் தேவாரம் கோயில் சூழல் கூத்துக்கலைப் பயிலிடமாகவும் திகழ்ந்ததை காணமுடிகின்றது. இவ்வாறான நிலைகள் பல்லவர் கால சைவசமய வரலாற்றில் மக்களின் நடைமுறை வாழ்க்கையுடன் இணைய தொடங்கிய கோயில்கள் நாளடைவில் சமுதாய மைய நிலையங்களாகி அவற்றின் பேறாக **7) "சமுதாய இணைப்புப்பாலம் கோயில்கள்"** என்ற மனப்பாங்கினை வளம் படுத்திக் கொடுத்தகாலம் பல்லவர் கால சமய வரலாற்றுக் காலமாகும்.

இக்காலத்தில் ஆலயங்களை மையமாக கொண்டு **ஆகமம் 8) சார்ந்த கிரிகை** முறைமைகள் உயர்வாக பேணப்பட்டு வந்த நிலையில் வடமொழிசார்பாக இருந்தவையெல்லாம் தமிழ்மொழிபெயர்ப்புக் குட்பட்டதாக மாற்றப்பட்டன இவற்றின் பேறாகவே ரௌவம் என்ற சிவாகமம் சிவஞானபோதம் என்று நூலாக மொழிபெயர்க்கப்பட்டன. இதே நேரம் கோயில் அமைப்பு முறைகள் கிரிகை முறைகள் எல்லாவற்றிலும் பல்லவ அரசர்கள் அதிக ஈடுபாடு கொண்டவர்களாகவே இருந்து சைவத்தின் சிறப்புநூல் ஆகமம் என்ற மரபினை வளர்த்துக் கொண்ட நிலையில் கி.பி. 7ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஆட்சிபுரிந்த பல்லவ மன்னனான இராஜசிம்மன் தனது விருதுகளுளொன்றாக ஆகமப்பிரியன் "என்பதையும் சூட்டிக் கொண்டான் என சாசனங்கள் கூறுவது அக்கால சமய வாழ்வில் ஆகமங்கள் சிறப்பிடம் பெற்றதனை அறியமுடிகின்றது. இத்துடன் இக்காலத்தில் சமய இயக்கத்திற்கு தலைமையேற்ற நாயன்மாரும் ஆகமங்களைப் பின்பற்றி தமது பதிகங்களில் பாடியுள்ளனர். இதற்கு ஏதுவாக மாணிக்கவாசகர் "ஆகம மாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" என்ற தொடரோடு சிவ வழிபாட்டு சிறப்பை தொடர்பு படுத்திய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் வைதீக கிரிகைகளோடு ஆகமங்களும் இக்காலத்தில் தோற்றம் கொள்வதையும் செல்வாக்கு பெறுவதையும் திருமூலரின் திருமந்திரத்தினாலும் மாணிக்கவாசகரின் மணிவாக்குகளாலும் அறியலாம் ஆகம அடிப்படையிலான கோயிற்பூசைகள் மகோற்சவங்கள் இடம்பெற்ற செய்திகளும் பரவலாக கிடைத்துள்ளன ஐப்பசி ஓண விழா கார்த்திகை விளக்கீடு, திருவாதிரைநாள், தைப்பூசம், மாசிக் கடலாட்டு, பங்குனியுத்தரம், அட்டமி நாள் பொற்காப்பு, பெருஞ்சாந்தி முதலாம் பெருவிழாக்கள் இடம்பெற்றதை திருஞானசம்பந்தப் பெருமானின் திருமயிலாப்பூர்த்தி திருப்பதிகத்தின் வாயிலாய் அறியலாம் மார்கழி நோன்பு பற்றி மாணிக்கவாசகர் தமது பாடலில் எடுத்துக் காட்டியும் உள்ளார். இவர்களுடைய காலத்தில் ஆகம கருத்துக்களும் அவற்றின் செயல்களும் சமயவரலாற்றில் முக்கிய இடம் பெற்றநிலையில் சிவன் உறையும் இடம் சிவாலயம் என்பதும் அதுவே சமய இயக்கத்துக்கு நிலைக்களன் என்பதனால் ஆகம மரபுசார்ந்த கிரிகைமரபுகள் வழிபாட்டு முறைமைகள் பூசைமுறைமைகள் அவை எடுத்தியம்பும் சமயத்தத்துவங்கள் மிக உயர்வாக எடுத்தக்காட்டி சைவசமய வரலாறு வளம்படுத்தப்பட்ட காலம் பல்லவர்கால சமயவரலாற்றுக் காலம் ஆகும்.

இக்கால சைவ சமய வரலாறு மேலும் ஒரு படி வளர்ச்சி நிலை அடைவதற்கு **9) பத்திநிலைப் பெறுபேறுகளும்** காரணமகிய நிலையில் காலத்தால் முத்தியவர்களான நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் அவைதீக மதங்களுக்கெதிரான போராட்டத்தில் அனல்வாதம், புனல்வாதம் செய்து சைவசமயமே மெய்ச்சமயம் என நிலைநாட்டிச் செல்ல பத்தித்திறன் செயல்பாடுகள் காரமாகிய நிலையில் நாயன்மார்களுள் பலர் தம்மளவில் பத்திநிலையில் தலைநின்றோர் செயற்கரிய தியாகங்கள் மேற்கொண்டோர் குறிப்பாக கண்ணப்பர், சிறுத்தொண்டர், திருநீலகண்டர் முதலியவர்களது செயற்பாடுகள் பக்திநிலையின் சிகரங்களாக பேசப்படுகின்றன. கண்களை வழங்குதல் பிள்ளைக்கறி சமைத்தல் இளமைக்கால வேட்கைகளை துறத்தல் என்பன இவர்களின் செயற்கருஞ் செயல்களாக அமைந்தன என பெரியபுராணம் கூறும் மேலும் நாயன்மார்களுள் ஒரு வகையினர் தம்மளவில் பத்தர்களாகத் திகழ்ந்ததோடு மட்டுமன்றி அவ்வுணர்வைப் பாடல் வடிவில் வெளிப்படுத்தியவர்களும் கூட. திருநாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகர் போன்றோரை இவ்வகையில் காட்டலாம். இவர்கள் பத்தியியக்கத்தை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்ற வகையில் அவ்வியக்கத்தை செயல்பட வைத்த செயல்வீரர்களுமாவர். தென்னிந்தியாவின் பல பாகங்களுக்கும் நடைப்பயணம் மெய்கொண்ட இவர்கள் பத்தி உணர்வையும் அதற்கு தூண்டு கருவிகளான ஆகம, புராண, இதிகாசச் செய்திகளையும் பண்ணமைந்த பாடல்களாற் பரப்பியவர்கள் மக்கள் வாழ்க்கையில் சமய உணர்வை இணைத்தவர்கள் இவர்களுள் முதல்வராக காணப்படுபவர் நாவுக்கரசர் சைவத்தில் பிறந்து சமணம் சார்ந்தவாழ்வு மேற்கொண்டு பின் சைவத்துக்கு மீண்டவர் தமக்கு பல இடர்களை விளைவித்தபோதும் அவற்றை சகித்து உயிர்பிழைத்தார் அதன் மூலம் சைவத்தின் பெருமையை உலகறியச் செய்தவர். அத்துடன் தன்னை தண்டித்த மன்னனையே சைவனாக மாற்றியவர் பல ஊர்களுக்கும் நடைப்பயணம் மேற்கொண்டு தமிழோடு இசைபாடும் மரபினை வளர்த்தவர் அதேநேரம் சமணர்கள் வந்தழைத்த வேளை "நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்" என சட்டமறுப்புக்குரல் கொடுத்து பத்திவெளிப்பாடும் அவற்றின் மூலம் இறைவன் துணை எம்பக்கம் இருக்கும் வரை எமக்கு ஏது இடர் என எடுத்துக் காட்டியவர். இத்துடன் பல தலயாத்திரையின் போது கயிலை தரிசனம் செய்ய ஆசைகொண்டு பல நாட்களின் முயற்சியாக திருவையாற்றை அடைந்தவேளை இறைவன் கயிலைக்காட்சி காணமுடியாது திரும்பிச் செல்லும் படி வேண்ட "ஆளும்நாயகன் தரிசனம் கண்டல்லாமல் மாளும் இவ்வுடல் கொண்டுமீளேன்" என உறுதிபட எடுத்துரைத்து அவற்றின் மூலம் பத்திவைராக்கியத்தின் தனித்துவத்தை எடுத்துக்காட்டியவர். இவரைத் தொடர்ந்து ஞானசம்பந்தரும் பத்தியியக்கத்திறனை ஊர்கள் தோறும் சென்றுபண்கனிந்த பாடல்களால் சிவன் புகழை ஏற்றில் போற்றிய நிலையில் நாவுக்கரசர் வடதமிழகத்தில் பல்லவ மன்னனை மதம் மாற்றம் செய்தமை போல் சம்பந்தர் தென் தமிழகத்தில் பாண்டி மன்னனை மதம் மாறவைத்தவர் அத்துடன் தமது தலைமைத்துவத்தினூடாக பரம்பொருள்மீது பத்தி கொண்டும் மற்றவர்களை பத்திகொள்ளச் செய்தநிலையில் பாண்டியனின் சபை சென்று அனல்வாதம் புனல்வாதம் என்பவற்றில் வெற்றிகொண்டு ஏனைய மதத்தவரை தம்பக்கம் சேர்த்துக் கொண்டவர். இத்துடன் திருமணப் பந்தலிலே உற்றார் உறவினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகிதம் முத்தியடைய விரும்பி "காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி.... பாடியமையின் பேறாக போரொழிப் பிழம்பு தோன்றி முத்தியின்பம் அடைய வழிசெய்யப்படக் காரணம் அவர் இறைவன் மீது கொண்ட பத்தித்திறனே காரணமாயிற்று இதேநேரம் சுந்தரரை எடுத்துக் கொண்டால் இவர் முதல் இருவர் போல் ஊர்கள் தோறும் நடைப்பயணம் மேற்கொண்டவர் இறைவனுடன் தோழமையில் மிக நெருக்கமான உறவு கொண்டவர் சந்தர்ப்பவசத்தினால் தவறுகள் விடும்போது இறைவனால் தண்டிக்கப்பட்டவர் இதே வேளைகளில் தான் செய்த தவறுகளை மன்னிக்கும் படி இறைவனிடம் வேண்டி பாடல்கள் பாடியபோது இறைவனால் மன்னிக்கப்பட்டவர் இவற்றுக்கெல்லாம் காரணம் இறைவன் மீது கொண்ட பத்தி இத்தகைய நிலையிலேதான் பரவையாரை மணந்து கொண்ட சுந்தரர் திருவெற்றியூர் சென்று விதிவசத்தால் சபதம் செய்து கொடுத்து சங்கிலியாரை மணந்து கொண்டார். பின்பு திருவாரூர் நினைவு வர அங்கே செல்ல முற்பட்ட வேளையிலே சபதம் தவறியமையால் கண்பார்வை இழந்தார். கண்பார்வையிழந்த நிலையில் கசிந்துருகிப் பாடிய பாடல்கள் பத்திநயம் கொண்டவையாகவே காணப்பட்டன. இவற்றின் பேறாக காஞ்சிபுரத் திருத்தலத்திற்கு சென்று "கடையானேன் என்னை பிழை பொறுத்து" எனப் பாடல் பாட இடது கண்பார்வை கிடைத்தது. மீண்டும் திருவாரூரை அடைந்து அங்குள்ள வான்மீக நாதனை துதித்து "மீளா அடிமை உமக்கே" எனப்பாடல்பாட வலது கண் கிடைக்கப் பெற்றார் இத்தகை அருஞ்செயல்களுக்கு காரணம் அவர் இறைவன் மீது கொண்ட பத்தி நிலையாகும். இவருக்குபின் பத்தி இயக்க வரலாற்றிலே அறிமுகமாகியவர் மாணிக்கவாசகர் இவர் ஏனைய மூவரை விட சற்று உயர்ந்து நின்றவர் ஏனைய மூவரும் இறையருளை நாடி நின்றவர்கள் ஆனால் மாணிக்கவாசகர் அந்த அருளைப் பெற்றுத் திழைத்தவர் அந்த அனுபவத்தை சொற்களில் வடித்ததன் மூலம் தமிழுக்குப் பத்தியின் மொழி என்ற பெருமையை ஈட்டித்தந்தவர். அந்த வகையில்

**"அன்பினால் அடியேன் ஆவியோடாக்கை**
**ஆநந்த மாய்க் கசிந்துருக**
**என்பரமல்லா இன்னருள் தந்தாய்**
**யானிதற் கிலனோர் கைம்மாறே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு மாய்ப் பின்பும் முழுதுமாய் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென் பெருந்துறையாய் சிவபெருமானே
சீருடைச் சிவபுரத்தரசே.

என பத்தி அனுபவத்தை பரம்பொருளின் புகழை இறைவன் தனக்கு செய்த இன்னருள் திறனை பலவாக எடுத்தியம்பிய நிலையில் இவை அவரது திருவாசகப் பாடல்கள் பலவற்றிலும் செறிந்து காணப்படும் நிலையில் இவற்றின் பெருமையால் இறைவனே ஒரு சந்தர்ப்பத்தில்

"வாசகம் பாடிய வாயால் ஒரு கோவை பாடுக"

எனக்கேட்டார் என்றால் அவரது பாடல்களில் காணப்படும் பத்தித்திறன் செயல்பாட்டுத் திறனை கூறவும் வேண்டுமா இப்பத்தியானது சிவபத்தியாக மட்டுமல்ல 10) **சிவனடியார் பத்தியாகவும்** மிளிர்ந்து சைவசமய வரலாற்றை வளம்படுத்திய நிலையில் சிவனுக்கு தொண்டு செய்து சிவப்பேறு பெற்றவர்களை அவர் பாடத்தவறவில்லை அவ்வகையில் சாக்கிய நாயனார் என்பார் புறமதத்தினராய் ஒழுகிய பொழுதிலும் கல்லெறிந்து நல்லசிந்தையோடு அகப்பூசை புரிந்து பேறு பெற்றார் கணம்புல்லர் கணம்புல்லு விற்று திருவிளக்கேற்றும் திருப்பணிபுரிந்தார் அவரை நல்லருந்தவத்த கணம் புல்லர் என்றும் எண்ணிறந்த குணத்தினாலே கணம் புல்லன் கருத்து தந்தார் என்றும் பாடுவார். அமர் நீதியார் என்பார் அடியார்களுக்கு செய்து வந்தத் திருத்தொண்டினை புகழ்ந்து அவரும் அவர் மனைவியாரும் திருவருளுக்கு இலக்கண வைபவத்தைக் குறிப்பர். நமிநந்தி என்பார் திருவாரூரில் இறைவனுக்கு நீரால் விளக்கேற்றிய தொண்டர் "அவரைத் தொண்டன் நம்பிநந்திநீரால் திருவிளக்கிட்டமை நீ ணாடறியுமன்றே'' என்பர் இன்னும் அடித்தொண்டன் நம்பி என்பான் உளன் அரூர் அமுதினுக்கே என்றும் "ஆராய்ந் அடித்தொண்டர் ஆணிப்பொன்" என்றும் பாடுவர். இவற்றுக்கும் மேலாக அக்காலத்து சிவனடியார் திருவேடப்பொலிவை படம்பிடித்துக் காட்டி அவர்கள் எக்குலத்தை சார்ந்தவராக இருந்தாலும் என்றும் எம்மால் வழிபாடு செய்யப்படவேண்டியவர்கள் என்பதனை

"சங்க நிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியோடு வானாளத் தருவரேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்குவார் அவர் செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க்கே காந்தர் அல்லா ராகில்
அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக் கண்பராகில்
அவர் கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே"

என எடுத்துக் காட்டிச் சென்றமை சிவனடியார்களை எவ்வாறு மதித்து போற்றினார் என்பதனை அறிய ஆதாரமாக இருக்கும் அதே நேரம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூட சிவன் புகழைப்பாடுவதோடு அமையாமல் சிவனடியார் புகழையும் பாடத் தவறவில்லை இவர் தமக்கு சமகாலத்திலும் முன்னரும் வாழ்ந்த சிவனடியார்களை போற்றிய நிலையில் அவற்றின் சிறப்பு

**"தில்லை வாழந்தணர் தம்அடியார்க்கும் அடியேன்"**

என்ற பாடலில் எடுத்துக் காட்டப்பட்ட நிலையில் இதனை மையமாகக் கொண்டு திருத்தொண்டர் தொகை உருவாக்க அதன் துணைக்கொண்டு சேக்கிழார் பிற்காலத்தில் பெரியபுராணம் என்ற சிவனடியார் வரலாறு கூறும் ஒரு காவியத்தையே உருவாக்கியமை அக்கால சமயவரலாற்றில் சிவனடியார்க்கு கொடுக்கப்பட்ட இடம் பற்றி அறிய முடிகின்றது.

மேலும் 11) **பெண்ணடியார்கள் நிலையில்** காரைக்காலம்மையாரினால் தொடக்கி வைக்கப்பட்ட சைவசமய வரலாற்று பணிமுறைகள் பின் வந்த திலகவதியாரும் மங்கையக் கரசியாரும் தொடர்ந்து செய்தனர் தமது சைவசமயத்தை விட்டு சமணசமயத்துக்கு சென்ற நாவுக்கரசர் மீண்டும் சைவத்திற்கு வரக்காரணமாக இருந்தவர் அவரின் தமக்கையாராகிய திலகவதியார். சமணசமயத்தை அனுசரித்த பாண்டியனும் பாண்டியநாடும் பின்னர் சைவத்துக்கு மதம் மாறக் காரணமாக இருந்தவர் பாண்டியமாதேவியராகிய மங்கையக்கரசியார் இவர் ஞானசம்பந்தக் குழந்தையை தமது நாட்டுக்கழைத்து வரவேற்று சைவம் பரப்ப வழிவகுத்தார். இவரது பணியினை பாராட்டிய நாயனார் "மங்கையக்கரசி வளவர் கோன்பாவை வரிவளைக் கை மடமாணி பங்கையச்செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாடோறும் பரவ" என்றும் "செந்துவர் வாயான் சேவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ண சிவன் திருநீற்றினை வளர்க்கும் பந்தனை விரலான பாணடிமாதேவி என்றும்" பாடிச் சென்றமை தமிழ் பெண்கள் சைவசமய மறுமலர்ச்சிப்போக்கில் எத்தகைய இடம்பெற்றனர் என்பதனை அறிய முடிகின்றது.

மேலும் பொது நோக்கில் பல்வேறுபட்ட சிந்தனை மரபுகளும் எடுத்துக் காட்டப்பட்டு சைவசமய வரலாறு வளர்க்கப்பட்ட காலம் பல்லவர் காலம் இங்கு நாயன்மார்களின் அளப்பெரிய தொண்டுகளின் காரணத்தால் அவர்களின் பாடல்களில் 12) **சித்தாந்த எண்ணக்கருத்துகள்** எடுத்தக் காட்டப்பட்ட நிலையில் இறைவனின் இயல்பு உயிர்களின் இயல்பு இறைவன் உயிர்களுக்கு அருள்புரியும் திறன் கற்றவர்களும் ஞானிகளும் இறைவனுக்கு அடியவராய் அன்பு செய்யும்முறை இறைவன் அன்படியார்களின் மனத்தில் எழுந்தருளி இன்பம் அளிக்கும் வண்ணங்கள் முதலியவற்றை எடுத்துக்காட்டிச் சென்ற அதேநேரம் இத்தகைய நெறிமுறையில் நின்று வாழ்ந்த உத்தமர்கள் தமது உள்ளத்திலே உணர்வு வடிவாய் எழுந்தருளிய இறைவனை அகக்கண்ணால் கண்டு வழிபட்டதுடன் அதனால் தாம்பெற்ற இன்ப உணர்வுகளை உவகை வெளிப்பாடாக தமது பாடல்களில் எடுத்துக் காட்டி அவற்றின் பேறாக சித்தாந்த எண்ணக்கரு முடிந்தமுடிபாக பிற்காலத்தில் தோன்றுவதற்கு வழிசமைத்து சமயம் வளர்த்தவர்கள். இத்தகைய நிலையில் நான்கு நாயன்மார்களுமே எளிமையான வழிமுறைகளாக போற்றப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறிமுறைகளில் நின்று வாழ்ந்துகாட்டிய நிலையில் இறைவனுடன் கொண்ட தொடர்புகள் அதன் பேறாக உரிமைக்குரல் எழுப்பி தாம் விரும்பியவற்றை பெற்றதோடு இவ்வையகத்தில் நின்று வாழ்வோரும் அத்தகைய பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என வழிகாட்டியவர்கள் 13) **சிவசின்னங்களின் பெருமையால்** சிவவழிபாடு சிறக்க வழிகாட்டிய நிலையில் வீபூதி, உருத்திராக்கம், ஐந்தெழுத்து மந்திரம் போன்றவை சமயவாழ்விலே பெற்றுள்ள இடம் அவை எத்தகைய சாதனை செய்யக்கூடியது என்பதெல்லாம் எடுத்துக்காட்டிய நிலையில் சிறப்பாக ஞானசம்பந்தர் வீபூதி பெருமையில் பாண்டிய மன்னனின் வெப்பு நோயை மாற்றியதுடன் அதன் பெருமை என்றுமே பேணுவதற்கேற்ற முறையில் "திருநீற்றுப் பதிகம்" என ஒன்றை முன் வைத்துச் சென்றுள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலே தீயவழியில் செல்பவர்கள் கூட சிவமந்திரம் உச்சரித்து திருநீற்றை அணிந்து கொண்டால் உய்திபெறுவர் என்பதனை எடுத்துக் காட்ட "இராவணன்மேலது நீறு" எனவும் விழித்துச் சென்றுள்ளார். நாவுக்கரசரும் இவற்றுடன் நெருங்கிய தன்மை கொண்ட நிலையில் தீராத நோயையையும் தீர்க்கும் அருமருந்து திருநீறு என்ற எண்ணக்கரு முன்வைக்கப்பட்டுள்ளது. இத்துடன் ஐந்தொழுத்து மந்திரத்தின் சிறப்பு பல இடங்களிலும் எடுத்துக் காட்டப்பட்டநிலையில் ஞானசம்பந்தக் குழந்தை திருமணப்பந்தலில் "காதலாகி கசிந்து..... நாதன் நாமம் நமச்சிவாயவே" எனவும் நாவுக்கரசர் "கல்லுடன் கட்டி கடலில் விடப்பட்டபோது" "சொற்றுணை வேதியன்...... நற்றுணையாவது நமச்சிவாயவே" எனவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "மற்றுப்பற்றெனகின்றி....... நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே" எனவும் மாணிக்கவாசகர் தமது சிவபுராணத்தில் "நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க" எனவும் எடுத்துக் கூறிய நிலை ஐந்தெழுத்தின் பெருமை பிரணவத்தின் மகிமை என்பன உணர்ந்து சிவனடியார்கள் போற்றும் போது சிவன் அருள் புரிவான் என்ற எண்ணக்கரு எடுத்துக் காட்டப்பட்டமை சைவத்தின் பெருமைக்கு சிறந்த சான்றாகின்றது.

மேலும் 14) **பண்ணிசையினூடாக** சமயம் வளர்க்கப்பட்ட நிலையினை நாயன்மார்கள் தம்பாடல்களில் எடுத்துக்காட்டிய நிலையில் இசை எல்லோர் உள்ளத்தையும் உருக்கவல்லது தன்வசப்படுத்த வல்லது. எனக்கொண்டு ஞானசம்பந்தர் பாடல்கள் பாடிய நிலையில் தலயாத்திரைகளின்போது பண்ணுடன் கூடிய பாடல்கள் பாடுவதனை இலட்சியமாகக் கொண்டிருந்தார் என்பது அவரது திருவிழிமிழலைப் பதிகத்தில் காணும் இடத்து "பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும்" என்ற பாடலூடாக குழல், யாழ் வீணை முதலிய இசைக்கருவிகளுடன் கூடிய பாடல்களாக அவரது பாடல்கள் காணப்பட்டன. என்பதும் நாவுக்கரசர் பாடல்களில் அவர் தாம் பல தொண்டு முறைகள் செய்வதனை கடனாக கொண்டிருந்த நிலையில் இசையுடன் பாடல்கள் பாடுவதனை எப்பொழுதும் தவிர்க்கவில்லை என்பதனை

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்

என்ற அடிகளூடாக அறிந்து கொள்வதுடன் மறுபுறம் "பண்ணின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையாகி நின்றாய் போற்றி ஓசை யொலியெலா மானாய் நீயே'' என்ற பாடலடிகள் எல்லாம் அவர் பண்ணிசை மரபினூடாக பாடல்கள் பாடி அவற்றினூடாக சமயம் வளர்த்துக் கொண்டார் என்பதனை அறியமுடிகின்றது. சுந்தரரைப் பொறுத்தவரையில் தமது தேவாரப்பாடல்கள் பண்நயம் பொருந்தியவை கடவுளே இசையுருவாய் உள்ளார் என்றும் அவர் இசையுருவாய் உள்ளார் என்றும் அவர் இசைப்பாடல்களை கேட்பதில் விருப்பமுள்ளவர் என்றும் பெரியோர் கூறுவர். இதன்பேறாக "ஏழிசையாய் இசைப்பயனாய்" இருப்பர் என்று சுந்தரர் பாடுவர் இன்னும் "பண்ணுளீராய்ப் பாட்டுமானீர் பத்தர் சித்தம் பரவிக் கொண்டீர்" என்றும் "பண்ணாய் இன் தமிழாய்ப் பரமாய் பரஞ்சுடரே" என்றும் "பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய்" என்றும் பாடுவர். மாணிக்கவாசகரைப் பொறுத்தவரையிலும் அவர் பாடிய திருவாசகம் படிப்போர் உள்ளத்தை பரவசப்படுத்தக் கூடியது கல்மனம் கொண்டோரையும் கசிந்துருகச் செய்யவல்லது எனக்கூறும் தன்மை அது பண்ணிசை மரபுடன் கூடியது என அறியக்கிடக்கும் அதேநேரம் இறைவனே அதில் மயங்கி இறங்கிவந்து "வாசகம் பாடியவாயால் ஒரு கோவை பாடுக" எனக்கூறினார் என்றால் அதில் உள்ள இசைமரபுத்திறன் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. இத்துடன் திருவாதவூரில் சிவாயத்து நடராஜ மண்டபத்தில் நடராசப்பெருமான் இவருக்கு பாதச்சிலம்பொலி கேட்கச் செய்து அருளிய திறனை இவரே தனது பாடலில் எடுத்துக் காட்டிய நிலையில்

"வாதவூரினில் வந்தினி தருளிப்பாதச்சிலம்பொலி காட்டிய பண்பும்" என்றபாடலூடாக அறிந்து கொள்ள முடிந்துற்ற நிலையில் பல்லவர் கால சைவசமய வரலாற்றில் நாயன்மார்களின் பாடல்களில் காணப்பட்ட பண்ணிசை வளர்ச்சிப் போக்கும் அக்கால சமயவரலாற்றை வளம்படுத்தியது எனக் கூறலாம்.

மேலும் சமய வரலாற்றில் 16) வர்ணாச்சிரமதர்மக் கோட்பாட்டு நீக்கத்தின் மூலம் ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமன் என்ற சிந்தனை முன்வைக்கப்பட்ட சமயம் வளர்க்கப்பட்ட நிலையில் அக்காலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள் சமகாலத்து சமூகத்தின் முரண்பாடுகள் பலவற்றை நோக்கி அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரமைப்புக்கேற்ற தமது மனிதநேய உணர்வலைகளை வெளிப் படுத்தியுள்ளார் இவ்வகையில்

**"சாத்திரம் பல பேசும் சழக்கர்கள்**
**கோத்திரமும் குலமுங் கொண்டென்செய்வீர்"**

என நாவுக்கரசர் எடுத்தியம்பி இவ்வரிகள் ஊடாக சாத்திரமும் தோத்திரமும் குலமும் பேசிநின்ற அக்கால வர்ணதர்மநிலையினரை நோக்கி கண்டனம் செய்ததுடன் பத்திப்பணியிலே பல்வேறு சமூகத்தினரும் சாதிவேறுபாடின்றி அந்தணரான திருஞானசம்பந்தர் முதல் தாழ்ந்த்தப்பட்டவரான திருநாளைபோவர் (நந்தனார்) வரை தொண்டர் குலமாகவும் தொழுகுலமாகவும் திகழ்வதற்கு வழிகாட்டப்பட்டது. அத்துடன் தொண்டர்குலம் சமூகத்தின் பொய்மை யாளரைவெறுத் ததுடன் அப்பொய்மையாளர் பணம் படைத்தவர்களாக இருந்தாலும் அவர்கள் புறங்கணிக்கப்படவேண்டியவர்கள் என எடுத்துரைக்கப்பட்ட நிலையில்

**"தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்**
**சார்பினும் தொண்டர் தருகிலாப்**
**பொய்மை யாளரைப் பாடாதே எந்தை**
**புகலூர் பாடுமின் புலவர்காள்"**

என சுந்தரர் எடுத்தியம்பி பொருளுக்காக தகுதியற்றோரை புகழும் மனப்பாங்கினை தவிர்த்து உண்மையான பத்திகொண்டு பரம்பொருளை பாடுவோர் அவர் எக்குலத்தவராக இருந்தாலும் எம்மால் என்றும் போற்றப்படவேண்டியவர்கள் என எடுத்துக்காட்டி அத்தகயவரைப் போற்றுவதனூடாக சாதிசமரசத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து சைவசமயவரலாறு வளர்க்கப்பட்ட காலம் பல்லவர்காலம்.

மேலும் ஏனைய மதங்கள் எனப்படும் அவைதீகமதத்தின் சூழலில் இருந்து மக்களை விடுவித்து அவர்களுக்கு நல்ல வழிகாட்டி அதற்கு தாமே நல்லவழிகாட்டிகளாக அமைந்திருந்து தலைமைத்துவம் தாங்கி முன்அழைத்து சென்று ஏனைய மதங்களை புறங்கான செய்ததுடன் சமூகத்தில் சமயத்தின் போர்வையிலே காணப்பட்ட 16) **பலியீடல்** வேள்வி முறைகளினூடக நிகழ்த்தப்பட்ட உயிர்பலியிடல் என்பனவற்றை தடுத்து "மனமது சுத்தமானால் மந்திரம் செபிக்க தேவையில்லை" என்ற எண்ணக்கருவுக்கேற்ப சாதாரண


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திப்பாடல்களை பாடுவதனூடாக பரம்பொருளின் இன்னருளைப் பெறலாம் என எடுத்துக் காட்டியதுடன் அத்தகைய வழிகாட்டல்களை செய்யக் கூடிய தேவார, திருவாசகங்கள் உள்ளடக்கிய பெருநிதியத்தை 17) **நிதிக்களஞ்சியமாக தந்து** சைவசமய வரலாறு ஏனைய காலகட்ட வரலாற்றுக் முன்னோடியாக அமைவதற்கும் அது என்றுமே மங்காமல் மறையாமல் இருந்து வளர்ச்சி பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற காலமாக இருந்து வழிகாட்டிய காலம் பல்லவர்கால சைவசமய வரலாற்றுக் காலம் என்றே கூறலாம். இதற்கு ஏற்புடையதாகவே மாணிக்கவாசகர் தமது சிவபுராணத்தில்

**"தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்தநாட்டவர்க்கும் இறைவா போற்றி"**

என எடுத்துக் காட்டிச் சென்றதும் அவற்றின் சிறப்பை உணரக்காரணமாகின்றது.

## III ***பல்லவர் கால வைணவ சமயவளர்ச்சிபோக்கு பற்றி பின்வரும் தலைப்புகளின் ஊடாக ஆராய்க***

– 1997 A/L

அ. கோயில் வழிபாடு
ஆ. கடவுட் கோட்பாடு
இ. புராண இதிகாச மரபு (விடைகள்)

***வினாவிடை இல. 01 பக்கம் 178 - 187***

## உசாத்துணை நூல்கள்


1. இந்துநாகரிகம் - பாகம் - 03 - 1997
வித்துவான் - **க. சொக்கலிங்கம் M.A**
பக்கம் - 90 - 93

2. தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் - 1978
**பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை** பக் - 102

3. தமிழ் இலக்கிய வரலாறு - 1995 மறுபதிப்பு
**பேராசிரியர் வி. செல்வநாயகம் M.A**
பக் 64 - 74




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவர் காலத்து இந்துசமய வளர்ச்சியினை மேல் வருவனவற்றுடன் தொடர்புபடுத்தி விளக்குக

தமிழ் இலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரை கி.பி 6-9 நூற்றாண்டுக்குட்பட்ட காலப் பகுதி பல்லவர் ஆட்சிக்காலம் எனப்படுகின்றது இக்காலம் இந்துசமய வரலாற்றைப் பொறுத்த வரையில் வளம் படுத்தப்பட்டகாலம் என்றே கூற முடிகின்றது. அதற்கு காரணம் பல்லவ அரசர்கள் பின்பற்றிய கொள்கைகள் அவர்கள் நாயன்மார் ஆழ்வார்களின் வழிகாட்டலின் பேரில் மதம்மாறி பத்திநெறி வழிநின்று பரம்பொருளின் இன்னருள் பெற்றுக்கொள்வதற்கு நிலையான உறுதியான பொருட்கள் கொண்டு கோயில்கள் அமைத்ததுடன் அத்தகைய கோயில்களை வழிபாடு செய்தும் கிரிகை முறமைகளை தொடர்ந்து பேணியும் வைதீக சமயவரலாறு பாரத தேசத்தில் பரவுவதற்கும் அவற்றின் பேறாக சமுதாய மாற்றங்களினைக் கண்டு சமத்துவம் மிக்க ஒரு சமுதாயத்தையும் ஏனைய அடிமைப் படுத்தல் நிலைகளில் நின்று விடுதலை பெற்று தனித்துவம் மிக்க வாழ்வு முறையும் அவற்றின் ஊடாக இந்து சமயவரலாற்றுப் போக்கில் ஒரு முத்திரையை பொறிப்பதனையும் இலட்சிய மாகக் கொண்டு வாழ்ந்த காலமாக கருதப்படுவது இப் பல்லவர்காலம் இக்கா சமயவரலாறு பலபடிகளினூடாக வளம்படுத்தப்பட்ட நிலையில் அவற்றின் சிறப்புநிலைகளை நாம் எடுத்து நோக்குவோமானால்.

## I. அரசர் பின் பற்றிய கொள்கைகள்

பல்லவர் கால ஆட்சி வரலாறு சங்கமருவிய காலப் பிற்பகுதியிலே களப்பிரரின் ஆட்சி கி.பி 6ம் நூற்றாண்டளவில் வலிகுன்ற அவர்களுக்கு கீழ்ப்பட்டிருந்த பாண்டியர் அவருடன் போர் செய்து பாண்டி நாட்டைக் கைப்பற்றினர் அந்நூற்றாண்டிற் பல்லவர் தமிழ் நாட்டில் புகுந்தமை விசேஷமாக இங்கு குறிப்பிடத்தக்கது பல்லவரென்பர் தமிழ் நாட்டிற்கு வடக்கே சாதவாகன வமிசத்தினர் சிறப்புடன் விளங்கிய காலத்தில் அவர் தம் ஆட்சிக்குட்பட்டிருந்த சில மாகானங்களுக்கு தலைவராக இருந்து வந்த ஒருவகுப்பினர் சாதவாகனப்பேரரசு நிலைதளரவே பல்லவர் தாம் தலமைவகித்த மாகாணங்களுக்குத் தாமே அரசராகி பிறநாடுகளையும் தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சிக்குட்படுத்தினர். தமிழ்நாட்டின் வடபாகத்தையும் தமதாக்க காத்திருந்த பல்லவர் களப்பிரரின் ஆட்சி வலுகுன்றியிருப்பதையறிந்து அவர்களுடன் போர் செய்து முதலில் தொண்டை மண்டலத்தையும் பின் சோழ மண்டலத்தையும் கைப்பற்றினர். களப்பிரை வென்ற பாண்டியன் கடுங்கோனின் காலம் தொடக்கம் முன்னூறு ஆண்டுகளுக்கு மேற் பாண்டிநாடு பாண்டியமன்னர்களாற் ஆட்சி செய்யப்பட்டது. தமிழ் நாட்டின் மேற்குப் பகுதியை சேரமன்னர் ஆண்டுவந்தனர் பல்லவ அரசன் சிம்ம விஷ்ணுவின் மகன் மகேந்திரவர்மனும் போரில் ஆற்றலும் சமாதான ஆர்வமும் கொண்டு பல்துறைகளிலும் திறமையுள்ளவனாக விளங்கினான் அதே நேரம் பலதுறைகளுக்கும் ஆதரவு கொடுத்து வளர்த்ததுடன் தானும் அதில் கூடுதலான ஈடுபாடுகள் கொண்ட நிலையில் மத்திவிலாசன் விசித்திரசித்தன் குணபரன் போன்ற பட்டங்களை பெற்று இந்து சமயமரபையும் கலாச்சார முறைமைகளையும் வளர்த்துவந்தான் அத்துடன் இந்துமரபு முறமைகள் சார்ந்த கட்டிடநிர்மாணப் பணிகளில் முதன்மைபெற்று அதற்கு ஆதரவுகள் கொடுத்து அப்பணி முறமைகள் சிறப்பாக வளர்வதற்கு ஆதரவு கொடுத்ததுடன் தனது ஆர்வத்திறன் களால் ஒரு கவிஞனாகவும் இசைக்கலை வல்லவனாகவும் விளங்கி னான் இவன் சிலகாலம் சமணசமயத்தை தழுவிய போதும் அப்பர் சுவாமிகளின் அருள்பெற்று சமணசமயத்தை துறந்து சைவசமயம் மாறி அவற்றினூடாக "அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி" என்ற மரபு முறமை தழைக்கும் வகையிலே இந்து சமய நெறிமுறமைகள் தனித்துவ முறையிலே வளம்படுத்தப்படுவதற்கும் மக்களும் அந்நெறி சென்றமையின் பேறாக இந்து சமய நெறிமுறமையினை தமது வாழ்வுடன் இணைத்துக் கொள்வதற்கு வழிவகுத்துக் கொடுத்தான். இவனை தொடர்ந்து நின்ற சீர் நெடுமாறன் என சுந்தர மூர்த்திகளால் பாராட்டப்பட்ட பாண்டியன் அரசகேசரி மாறவர்மனும் கி.பி 670-710 வரை தமிழ் நாட்டை ஆட்சி புரிந்தனர். இத்தகைய நிலையில் பல்லவ பாண்டிய மனனரின் ஆட்சிப் பரம்பலில் இந்து சமய நெறியானது அரச நெறியாக கொள்ளப்பட்டது. அரசர்களின் சடங்கு முறையிலே வைதீக சமயம் சார்ந்த கொள்கைகள் பின்பற்றப்பட்டன இது வெறும் அறவழியை வாழ வேண்டிய நெறியாகக் கருதி வாழ்க்கைப் போரிலே தடுமாறிக்கொண்டிருந்த தமிழ் மக்களுக்கு மத்தியில் புதிய நெறி ஒன்று தோன்றியது. வடஇந்தியாவிலே ஏற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதீக சமய மறுமலர்ச்சிச் செல்வாக்கு தமிழ்நாட்டில் ஏற்படத் தொடங்கியது சங்கமருவிய காலப்பிற்பகுதியில் பல்லவ மன்னர் சிலர் வேதாகமக் கல்வியை தமது நாட்டிலே விருத்தி செய்தனர் சமயங்களில் பிராமணரின் முதன்மை அதிகரிக்கப்பட்டன. சைவர்களின் ஆகமங்கள் வைணவரின் சங்கிதைகள் சாத்தரின் தந்திரங்களில் சமய வழிபாட்டு கிரிகைக்கும் பிராமணருக்கும் முக்கியத்துவம் தந்தன அகரம் அல்லது அக்கிரகாரம் என்ற பிராமணர் குடியிருப்பு நிறுவப்பட்டன. அத்துடன் அங்கு அவர்களுக்கு வைதீகக்கல்வி போதிக்கப்பட்டன கோயில்கள் கட்டப்பட்டு விழாக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. அத்துடன் பிராமணர்களுக்கு தானங்கள் வழங்கப்பட்டன. சடங்கு முறைமைகளிலே வைதீகம் சார்ந்த கொள்கைகள் கோட்பாடுகள் பின்பற்றப்பட்டன. இவற்றினூடாக இந்துசமய வரலாற்றுப் பரப்பானது தனித்துவ மிக்கதோர் தன்மையிலே வளம்படுத்தப்பட்டன.

மேலும் கல்விநிலையில் பல்லவ அரசர்கள் வடமொழிக்கல்வி மரபுக்கு பேராதரவு அளித்தனர் இவர்களுக்கு முன்னரும் கல்வி சிறந்தோங்கியமைக்கு காஞ்சியில் நிலவிய கடிகை ஸ்தானம் சான்றாகும். ஆரம்ப அரச பரம்பரையினரான மயூரசன்மன் என்பான் அக்கடிகையிலே கற்றுத்தேர்ந்தவன் என்பது வரலாறு தரும் செய்தி அது பல்லவர் காலத்திற்கு பின்னரும் நிலவியது என்பது தெரிகின்றது. கடிகாசலம், பாகூர் ஆகிய இடங்களிலும் கல்விக் கழகங்கள் விளங்கின. இவை நன்கு நடப்பதற்கு வேண்டிய ஆதரவும் ஊக்குவிப்பும் அவ்வவ் விடங்களை நிருவகித்து வந்த அரச அலுவலர்களால் வழங்கப்பட்டன. கலைக்கழகங்களில் மாணவருக்கு உண்டி, உறையுள் மருந்து வழங்கப்பட்டன. வடமொழி வல்லவாராயும் அம்மொழியின் இலக்கண இலக்கிய பேரறிவு வாய்ந்தோராயும் விளங்கிய புலவர்கள் இராசசிம்மனின் அவைக் களத்தை அணி செய்தார்கள். கட்டிட, சிற்ப, ஓவிய நாடக நாட்டிய மரபுகள் உள்ளடக்கிய இதிகாச புராணங்கள் முதலியவற்றை போதிக்கும் நிறுவனங்களுக்கு மன்னர் பேராதரவு வழங்கியதோடு தாமும் இலக்கணங்களில் சிறந்திருந்தனர் இத்தகைய நிலமைகள் இந்துசமயமரபை கலாச்சார முறையில் காலங்காலமாக வளர்த்தெடுக்க ஏற்ற வழிவகுத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II. பத்திநெறி

பல்லவர் கால சமய வரலாற்றிலே சிறந்த வழிமுறைகளி லொன்றாக காணப்பட்டது. பத்திநெறி. இப்பத்தி நெறி எம்மை பரபொருளிடம் அழைத்துச் செல்லும் அதேநேரம் எமக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள வாக்கினால் கூற முடியாத தொடர்பாக இருக்கின்றது. இத்தகைய நிலையில் தான் பல்லவர் காலத்துப் பெரியார்கள் தம்முடைய காலத்துக்கு முன் வழக்கிலிருந்த செய்யுள்மரபு முதலியவற்றை தம்முடைய உணர்ச்சி பேதங்களை வெளிப்படுத்துவதற்கு தழுவிக் கொண்டது போலவே தம்முடைய பத்திநிலையை புலப்படுத்துவதற்கு வடமொழிப் புராண இதிகாசங்களிலுள்ள கதைகளையும் கருத்துக்களையும் துணையாகக் கொண்டுள்ளனர்.

சைவ நாயன்மார்கள் சிவபெருமானுடைய திருக்கோலக் காட்சிதனையும் அருட்டிறங்களையும் சித்தரித்துக் காட்டுவதை நோக்கும் போது வடமொழி நூல்களிலுள்ள கருத்துக்களை எத்துணைச் சிறப்பாகத் தம்முடைய பதிகங்களில் எடுத்தாண்டிருக் கின்றனர் என்பது புலப்படும். அவர்களைப் போலவே வைணவ ஆழ்வாரும் பாகவதம், இராமாயண, மகாபாரதம் முதலிய வடமொழி நூல்களிலுள்ள கதைகளை நன்கு பயன்படுத்தியுள்ளனர். கோசலை தாலாட்டு, தசரதன் புலம்பல், தேவகி புலம்பல் கண்ணனுடைய பாலலீலைகள் முதலிய நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு ஆழ்வார்கள் தம்முடைய பத்திநிலைகளை ஒரு புதுமுறையிலே வெளியிட்டுள்ளனர் அக்காலத்தில் சைவநாயன்மாரும் வைணவ ஆழ்வார்களும் தோன்றியிராவிடின் சைவத்தையும் வைணவத்தையும் சமணபௌத்த மதங்கள் நிலைதளரச் செய்திருக்குமென கூறுதல் பிழையாகாது. நாயன்மார் ஆழ்வார் என்னும் சொற்களுக்கு முறையே தலைவர் இறைவனின் குணங்களில் ஆழ்ந்திருப்பவர் என்பன பொருளாகும். பல்லவர் காலத்தில் வாழ்ந்த சிவனடியார்களுள் தலைசிறந்ததோராக கருதப்படுவோர் திருஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், சேரமான்பொருமாள், மாணிக்கவாசகர், திருமூலர் முதலியோராவர் பன்னிரு ஆழ்வார்களில் முதலாழ்வார் மூவருமொழிந்த திருமாளிசையாழ்வார், பெரியாழ்வார், கோதையார், தொண்டரடிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடியாழ்வார் குலசேகராழ்வார், திருமங்கை, திருப்பாணாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார் ஆகிய ஒன்பதின் மரும் பல்லவர் காலத்தவராவர்.

நாயன்மார்கள் பாடிய பத்திப்பாடல்களை சோழப்பெருமன்னர் காலத்திலிருந்த நம்பியாண்டார் நம்பி தேடிப்பெற்று அவற்றைத் திருமுறையாக வகுத்ததுபோலவே நாதமுனிவரும் ஆழ்வார்கள் பாடிய பிரபந்தங்களை தேடிப்பெற்று நாலாயிரத்திவ்விய பிரபந்தம் எனத் தொகுத்துள்ளனர். தம் உள்ளத்தை இறைவனுக்கு கோயிலாக அமைந்துக் கொண்ட நாயன் மார்களும் ஆழ்வார்களும். இறைவன் திருவருளை எண்ணியெண்ணி நெஞ்சுருகிப் பாடிய பாக்களின் பெருமை அளவிடற்கரியது, தெளிவு, அறிவு, பத்திச்சுவை ஓசைப்பெருக்கு முதலிய பல சிறப்பியல்புகளை உடையன. அத்திருப்பாடல்கள் சமய பௌத்த முனிவர்கள் கொள்ளக் கூடிய புறவேடங்களால் ஒருவன் இறைவனை நாடோறும் நினைத்து நைந்து உள்ளங் கசிந்துருகினாலன்றி அவனருளைப் பெற முடியாது என்பதையும் தம் வாழ்க்கையால் மக்களுக்கு எடுத்துக் காட்டி அவர்களை நல்வழிப்படுத்திய பெரியார்களின் கள்ளமற்ற உள்ளத்தை அவர்கள் பாடிய திருப்பாசுரங்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. சங்கமருவிய காலப்பிற்பகுதியில் எழுந்த பத்திப் பிரவாகமொன்றே பல்லவராட்சிக் காலத்தில் சைவம், வைணவம் என்ற இருநதிகளாக ஓடி சமயவரலாற்றை தழைக்கச் செய்ததெனலாம்.

மேலும் பல்வேறு வழிகளிலே சமண பௌத்த மதங்களுக்கு எதிராகத் தோன்றிய பத்திமார்க்கம் பொதுமக்கட்சார்புடையதாயிற்று. இம்மார்க்கம் தமிழகத்து வைதீக சமயங்களின் மறுமலர்ச்சி எனக் கொள்ளலாம் நாயன்மார்களும் ஆழ்வார்களும் முன்னின்று மக்களுக்கு நல்லசெல்நெறி காட்டுவதற்காக இப்பத்திமார்க்கத்தினை இதய பூர்வமாக மக்களிடையே பரப்பவேண்டியவர்களானார்கள் சமண பௌத்தருடைய அரசியற் செல்வாக்கு இவர்களை மூர்க்கமாக எதிர்க்கலாயிற்று ஆனால் மக்களாதரவு பெற்ற மார்க்கமாகப் பத்தி பரிணமித்ததால் பல்லவ, பாண்டிய அரசர்கள் பத்திமார்க்கத்தில் இணைந்தார்கள் இதேநேரம் நாயன்மார் ஆழ்வார்கள் பத்திநெறிபரப்பும் தலைவராகினர் இதற்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் சமண,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த மதத்தவர்களின் எதிர்ப்புக்கள் சேர்ந்து போயிற்று. இறைவன் மேற்கொண்ட திடமான பத்தி எவ்வித எதிர்ப்புக்களையும் முகங்கொள்ள அடியார்களுக்கு உதவிற்று. இந்நிலையில் நாவுக்கரசர் தம்மை வரும்படி சமண மன்னன் அழைத்த வேளையில் "நாமர்க்கும் குடியல்லோம் நமனையஞ்சேம்" என்று குரல் கொடுப்பதற்கு இறைபக்தியும் மக்களாதரவும் அவர் மனநிலைக்கு உரம் கொடுத்தன தில்லை வாழ் அந்தணரும் திருநீலகண்டத்துக்குயவனாரும் எவ்வித வேற்றுமையின்றி இறையடியவரானார்கள் சமண, பௌத்த பள்ளிகள் நிறைந்திருந்த தமிழ்நாட்டிலே சைவ, வைணவக்கோயில் ஊர்கள் தோறும் ஏழலாயின அரசர்கள் குடைவரைக்கோயில்களையும் கற்றளிகளையும் அமைத்தனர். பாழடைந்த கோயில்கள் புனருத்தாரணஞ் செய்யப்பட்டன. நாயன்மாரும் ஆழ்வார்களும் தலங்கள் தோறும் சென்று பத்திப்பாசுரங்களைப் பாடித் தாமுந் தரிசனஞ் செய்து பொதுமக்களையும் இறைபத்திக்கு இட்டுச் சென்றனர். இதனால் தமிழ்ப் பண்ணிசை மரபு சிவனடியார்களின் தொண்டுகள் பெருகின. அவர்களும் பக்தி நெறியில் இணைந்தனர். பக்தி இலக்கணம் தமிழ் நாட்டில் வெற்றி பெற்றது. சமண பௌத்த மக்கள் செல்வாக்கிழந்தனர். பண்டைத் தமிழ் வழிபாடும் வைதீக சமய நெறிகளும் ஒன்று சேர்ந்து தமிழ் நாட்டிலே சைவ, வைணவ மதங்களாக வேரூன்றின.

சைவ சமய வரலாற்றில் ஞான சம்பந்தக் குழந்தை இளம் வயதிலே சமணர்களுடன் அனல் வாதம், புனல் வாதம் செய்து சைவமே மெய் சமயம் என நிலை நிறுத்திட அவர் இறைவன் மேற் கொண்ட பக்தி காரணமாகிய நிலையில் ஒரு சமயம் பாண்டிமாதேவியின் வேண்டுகோட்படி பாண்டி நாடு செல்ல ஆயத்தமாகிய நிலையில் நாவுக்கரசர் கொடும் சமணர் இருக்கும் இடத்திற்கு செல்ல வேண்டாம் என தடுத்த போதும் இறைவன் மீது கொண்ட பக்தியினால் எதனையும் பொருட்படுத்தாது அங்கு சென்று சைவத்தை தளைக்கச் செய்ய இறைபக்தி காரணமாயிற்று. நாவுக்கரசரைப் பொறுத்த வரையிலும் சமணர்கள் எத்தனையோ துன்பங்கள் விளைவித்த வேளையிலும் அத்தனை துன்பங்களிலிருந்து விடுபட பக்தி மயமான பாடல்கள் பாடியதும் இறுதி நிலையில் கயிலை தரிசனம் செய்ய ஆசை கொண்டு சென்ற வேளை அது ஆக முடியாத காரியம். வந்த வழியே திரும்பிச் செல்லும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியராக வந்த இறைவன் வேண்டுதல் செய்ய "ஆளும் நாயகன் தரிசனம் கண்டு அல்லாமல் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என உறுத்படக் கூற அவர் உள்ளத்தில் உருவாகிய பக்தி காரணமாகிய நிலையில் இறுதியில் சமணர் கல்லுடன் கட்டி கடலில் பாச்சியபோது

"சொற்றுணை வேதியன்.......................................

நற்றுணை யாவது நமச் சிவாயவே"

என உறுதிபட உச்சரித்துக் கொண்டமையின் பேறாக திருப்பாதிலிப் புலியூர்க் கரையை அடைய முடிந்தது. இதே வேளை சுந்தரர் கூட இறைவனுடன் நெருங்கிய தோழராக விளங்கிய நிலையில் இறைவனின் சோதனைகளுக்கு ஆளாகி, உரிமையுடன் அவரிடம் வேண்டுதல் செய்வதற்கு பக்தி நிலைப் போக்கு காரணமாகிய நிலையில் இறுதியில் கண் தெரியாது குருடராக பல தல யாத்திரை மேற் கொண்டு இறுதியில் கச்சியேகம்பத்தை அடைந்து கண்பார்வை தந்தாலே அன்றி அவ்விடத்தை விட்டு அகலமாட்டேன் என உறுதிபடக் கூறுவதற்கு பக்தி காரணமாகிய நிலையில் பக்தி பாசுரங்கள் பாடி கச்சியேகம்பத்தில் இடது கண்ணும் திருவாரூரை அடைந்து அங்குள்ள வன்மீகநாதரைத் துதித்து "மீளா அடிமை உமக்கே" என்னும் பதிகம்பாடி வலக்கண் பார்வையும் பெற்றுக் கொள்ள காரணமாகியது பக்தியாகும். மாணிக்கவாசகரைப் பொறுத்த வரையிலே உயர் பதவி வகித்த போதும் அதில்நிறைவு கொள்ளாது இறைவனால் ஆட்கொள்ளப் படுவதற்கு பலவிதமான வேண்டுதல்களை எல்லாம் செய்த அவர் ஒரு சந்தர்ப்பத்தில் தனது அடைக்கலப்பத்துப் பாடலிலே தன்துயர நிலையைப் புலப்படுத்தும் நிலையில்.

**"ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளில் லையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றாள் புரியாயே"**

என தன்னை நொந்து இறைவனைக் குழைவிக்கின்றார். இவரது பாடலில் பக்தியானது மனிதாபிமானத்தின் உணர்வு வானத்தைத் தொடும் அற்புத சக்தியாக பரிணமிக்கத் தொடங்குகின்றது. அவ்வகையில் அவரது மனப்போராட்டங்களையும் இறையனுபவத் தையும் ஞான நிலையையும் ஆன்மத்துடிப்பையும் காட்டுவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது திருவாசகப்பாடல்கள் காணப்படுகின்றன. இங்கே பக்திச்சுவை சொட்டும் பாசுரங்களைப் படிப்பதனால் உண்டாகும் அனுபவங்கள் நீடித்து இருக்க வேண்டின் பக்திச்சுவை சொட்டும் பாசுரங்களை படிப்பதனால் உண்டாகும் அனுபவங்கள் நீடித்து இருக்க வேண்டின் இசை மட்டம் போதாது அவற்றில் பொதிந்துள்ள அரிய கருத்துக்களையும் உணர வேண்டும் இதனாலேயே"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் என்றாா."

இத்தகைய நிலையில் உள்ளத்தைத் தொடும் அளவுக் கேதுவான பாடல்கள் பாடி பத்தி நெறி வளர்த்து சமய வரலாற்றை வளம்படுத்தியவர்கள் நாயன்மார்கள்

ஆழ்வார்கள் நிலைதனிலே பல்லவர் கால ஆரம்ப காலத்தில் வாழ்ந்தவராகக் கொள்ளப்படும் திருமாளிகையாழ்வாரினால் தொண்டை மண்டலத்திற்குரியதாக பக்தி செல்வாக்குப் பெற்ற நிலையில் முதலாழ்வார்கள் முன்னெடுத்துச் சென்ற பாதையில் அது

**"அன்பே தகழியாய் ஆர்வமே நெய்யாய்**
**இன்புருகு சிந்தை ஈடுவிளக்காகக் கொண்டு**
**நந்தா விளக்கேற்றி"**

நாராயணனை வழிபட்டவர்கள் இவ்வாறான பாடல்களில் திருமாளிகை ஆழ்வாரின் பாடல்களுக்கும் திருநாவுக்கரசர் பாடல்களுக்கும் ஒற்றுமை காணப்படுகின்றது. இருவரும் வேற்று மத சகவாசத்தில் வாழ்ந்து அதனின்று விடுபட்ட நிலையைக் காணமுடியும். நிலையில் தொண்டரடி பொடியாழ்வார் பாடல்களிலும் சமண பௌத்தம் இழித்துக் கூறப்படுகின்றது. இவரது பாடல்களில் பாகவத பக்தி எடுத்துக் காட்டப்படுகின்றது. பெரியாழ்வார் பாண்டியன் சபைதனிலே சமயவாதம் புரிந்து வைணவத்தை வெற்றி பெறச் செய்தார். இறைவன் மேலிருந்த அன்பு மேலீட்டால் இவர் தம்மை மறந்து இறைவன் நீடு வாழ வேண்டுமென இறைவன் மேலேயே திருப்பல்லாண்டு பாடியவர் குலசேகராழ்வார் சேரநாட்டாட்சியைத் துறந்து தொண்டரானார் தமிழ்நாட்டு மேற்குப் பகுதியில் வைணவம் செழிக்க இவர் துறவு உதவி இருக்கும். திருமங்கையாழ்வாரே வைணவ பக்திப் பாடல்களை பெருந்தொகையாகப் பாடியவர். மூவர் தேவாரங்களையும் இவர் தனது பக்திப் பாடல்களில் பயன்படுத்தியுள்ளார். ஆழ்வார் பாடல்களுள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடையனவே கவிச்சுவை மிக்கதாக அமைந்தது என்பர். மறைமலையடிகள் திருப்பானாழ்வார் தீண்டத்தகாதவரென கருதப்பட்ட மக்களின் பிரதிநிதியாக வைணவ பக்தி இயக்கத்திலே இடம் பெறுகின்றார் எனலாம். ஆண்டாள் பெண்ணுள்ளத்தில் காதல் தவிப்பை பக்தியோடு கலந்து உணர்ச்சியின் எல்லையை காண்கின்றார் நம்மாழ்வார் மாணிக்கவாசகரை ஒத்தவர், இவரும் ஞானநெறியில் நின்றனர். காதல் மார்க்கத்தில் நின்ற நம்மாழ்வார் இறைவனை எண்ணி உருகுவதனை அது காட்டி நிற்கும் நிலையில் இக்காலம் சைவ பக்தி இயக்கத்தைப் போல வைணவ பக்தி இயக்கமும் பாண்டி நாட்டிலேயே மிகச் சிறந்த பாடல்களை தோற்றுவித்து உச்சக் கட்டத்தை அடைகின்றது.

இவ்வாறான நிலையில் சைவ பக்திப் பாடல்களிலும் பார்க்க வைணவ பக்திப்பாடல்கள் உணர்ச்சிகளை ஆழமாக தொடுக்கின்றன. சரணாகதி எனப்படும் பிரபக்தி மார்க்கம் ஒன்றே. வழியுறுத்தப்படு கின்றது. வேதங்களில் சிறப்பிடம் பெற்ற கர்ம மார்க்கம் உபநிசத்துக்களில் சிறப்பிடம் பெற்ற ஞானமார்க்கம் யாவும் பத்தி மாாக்கத்தோடு இணையும் போதே பயனுள்ளவையாகின்றன. எனப்படுகின்றது. பயனை எதிர்பாராது கடமையைச் செய்ய வேண்டும் என்ற பகவத் கீதை உபதேசம் வாழ்விலிருந்து ஒதுங்கிப் போகும் வைராக்கியம் மனப்பான்மைக்கு தடையாக அமைகின்றது. பிறவாயாக்கைப் பெரியானாகிய சிவனிலும் பார்க்க அவதாரம் எடுத்து வரும் திருமால் அடியார்கள் அண்மித்து செல்லக் கூடியவராக காணப்படுகின்றார். சங்ககாலத்தில் சிறப்புற்றிருந்த இயற்கை நெறியின் ஒரு அம்சமான உலகியற் காதல் பத்திப் போர்வையிலே திரும்பவும் தலை காட்டுகின்றது. சிவனும், திலுமாலும் தத்தம் சத்தியோடு இணைந்து வணங்கப்படுகின்றனர். புலவர்கள் தங்கள் இதயங்களைத் திறந்து இயல்பாக எழும் கலையுணர்ச்சிகளைக் கடவுளின் பெயரில் வெளியிட்டனர். கோகுலத்தில், பிருந்தாவனத்தில், கண்ணன் கோபிகைகளுடன் செய்த லீலைகள் ஆழ்வார்களின் பக்திக் காதலைப் பாடும் போது அடிப்படையாக அமைத்து அப்பாடல்களுக்கு இயற்கைத் தன்மையை அளிக்கின்றன. தாருகவனத்திலே பிச்சாடனமூர்த்தியாகச் சென்ற சிவன் இருடிபத்தினிகளை மேகிக்கச் செய்த கதை மரபு நாயன்மார் பாடல்களில் எடுத்தாளப்படுகின்றது. இத்தகைய தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இறைவன்மீது கொண்டிருந்த ஈடுபாடுகளையும் அதனால் உருவாக்கப்பட்ட பத்தித் திறன் வெளிப்பாடுகளையும் கண்டறிந்து கொள்வதற்கு காரணமாகின்றதெனலாம்.

## III ஆலய வழிபாடு

பல்லவர் கால சமய வரலாற்றில் நாயன்மார்கள் அழ்வார்களின் வழிகாட்டலினால் மனம்மாற்றம் பெற்ற மன்னர்கள் ஆலயங்களை புணருத்தாரணம் செய்தார்கள். அதேநேரம் அழியாததும் நிலையானதுமான பொருட்கள் கொண்டு புதிய கோயில்களையும் அமைத்துக் கொண்டனர். ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்தும் ஆதரிப்பாரின்றி அழியும் நிலையில் இருந்த ஆலயங்களை பத்தி வெளிப்பாட்டுத் திறத்தினால் நாயன்மார்களால் போற்றப்பட்டன. இந்நிலையில் அதனை முன்னெடுத்துச் சென்றோராக அப்பரும், சம்பந்தரும் அக்காலத்தில் அரிய தொண்டுகள் பலவற்றைச் செய்தனர். அவற்றுட் மக்களாற் கைவிடப்பட்ட ஆலய வழிபாட்டு முறைக்குப் புத்துயிரளித்தமையும் ஒன்றாகும். ஆலயத்துக்குச் சென்று மக்கள் இறைவனை வழிபடும் பொழுது அவர்கள் எல்லோரும் ஒருங்கு கூடி ஆடிக்கொண்டும் இறைவனைப் பாடிக்கொண்டும் ஆலயத்தைச் சுற்றி வருதல் அவன் புகழ் பாடுதல், துதித்தல் ஆகியனவும் அக்கால கோயில் வழிபாட்டு முறையாயிருந்தன. அம்முறையினை மக்கள் போற்றாமையே கோயில்கள் நிலை குன்றுவதற்கும் காரணமென்பதை அறிந்து அந்நாயன்மாரிருவரும் ஊர்கள் தோறும் சென்று ஆங்காங்குள்ள சிவாலயங்களை தரிசிக்கலாயினர். அவற்றுள் வீற்றிருக்கும் சிவபிரானின் அருட்டிறத்தையெல்லாம் நினைந்து நெஞ்சுருகி தேவாரத் திருப்பதிகங்களை பாடிக் கொண்டு அடியார் புடைசூழ கோயில்களைச் சுற்றி வலம் வந்தனர். அத்தேவாரங்கள் அவரின் அகவிருளை அகற்றும் விளக்காயின. இவ்வாறு அவர் புரிந்துணர்ச்சி பெற்றுக் கோயில் வழிபாட்டில் ஊக்கம் கொள்ளவே அழியும் நிலையடைந்த சிவாலயங்கள் அழியா நிலை பெற்றதோடு பிற்காலத்தில் கலைக்களஞ்சியங்களாகவும் திகழ்ந்தன. அப்பர் சுவாமிகள் ஆலயங்கள் தோறும் சென்று உழவாரத் திருப்பணியை இடைவிடாது செய்து வந்தமையினால் அவற்றை நன்னிய நிலையில் வைத்து மக்கள் சரியைத்தொண்டினை ஆலயங்களில் ஆதரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றுவது அவர்கள் செய்த தொண்டினை பேணுவதற்கு ஏற்புடையதாகின்றது.

ஞான சம்பந்தரைப் பொறுத்த வரையிலே அவர் அப்பர் சுவாமிகளைப் போல் துன்பங்கள் அனுபவித்தவரல்லர். புலன்வழிச் செல்லுதலாலுண்டாகும் துன்பங்களை ஒரு குழந்தை அறியமாட்டாது. ஆதலின் உலக வாழ்க்கை இழித்திடத்தக்க தொன்றாக அவருக்கு தோன்றவில்லை.

> **" நாளாய போகமே நஞ்சணியுங் கண்டனுக்கே**
> **ஆளாய அன்பு செய்வோம் "**

என்றும் தம நெஞ்சுக்கு அறிவுறுத்தி ஆலயம் தோறும் சென்று அரனை வழிபட்டார். இயற்கை அழகிலும் இறைவனருளிலும் ஒரே வகையான ஈடுபாடு அவருக்கிருந்தது அதனால் அவருக்குண்டான குதூகலம் உணர்ச்சி மிக்க பாடல்களாக பரிணமித்துள்ளன. இயற்கையின் தோற்றமும் இறைவனின் உருவமும் அவருக்கு ஒன்று போலக் காட்சியளித்தன. இன்பமேலீட்டால் துள்ளிக் குதித்தாடிய ஆளுடைய பிள்ளையாருடைய பாடல்களிலுள்ள ஓசையும் ஒத்திசைவும் துள்ளிக் குதித்து செல்கின்றன. இயற்கை வருணணை கவிச்சுவையுடன் கலந்து வருதலை அவர் பாடல்களில் எங்கும் காணலாம்.

> **"புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி**
> **யறிவழிந்திட டைம் மேலுந்தி**
> **அலமந்த போதாக அஞ்சலென் றருள் செய்வான்**
> **அமருங் கோயில்**
> **வலம் வந்து மடவார்கள் நடமாட முழவு அதிர**
> **மழை யென்று அஞ்சி**
> **சிலமந்தி யலமைந்து மரமேறி முகில்பார்க்கும்**
> **திருவையாறே**

என்ற பாடல் அதற்கு ஏற்ற ஊ-ம் ஆகும்.

சுந்தரரைப் பெற்றுத்தவரையும் தலயாத்திரையின் போது கவிச்சுவை பொருந்தப் பெற்ற அவர் திருப்பாடல்களிலே இறைவன் அருள் அழகு இறைவனது மறவாத மணந்தராய் வாழ்ந்த சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை முன்னிலைப்படுத்தியும் விளையாட்டாக புகழ்ந்து பாடுவது ஒரு தனிச்சிறப்புண்டு. அதற்கு ஏற்ற இடம் ஆலயம் என்பதையும் உணர்ந்து பல தலங்களையும் தரிசனம் செய்தார். என அறியக் கிடக்கின்றது. மாணிக்க வாசகரைப் பொறுத்தவரை இளமையிலே சிவாகமங்கள் முதலிய சமய நூல்களையும் இலக்கண இலக்கியங்களையும் கற்றுத்தேர்ந்து சில காலம் பாண்டியனுக்கு அமைச்சராயிருந்து அரசியல் வினைகளைச் செய்து வந்தார். சிவன் குருவடிவாக வந்து அவரை ஆட்கொண்ட பின இறைவன்பைப் பெறுதலொன்றனையே தனது வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டு திருவுந்தர கோச மங்கை திருக்களுக் குன்றம் சிதம்பரம் ஆகிய தலங்களைத் தரிசித்துக் கல்லும் கரையும் படி பாடிய பாட்டுக்களே திருவாசகமாக கருதப்பட்ட நிலையில் உணர்ச்சி மிக்க சொற்றொடர்கள் நிரம்பியுள்ள திருவாசகப் பாடல்கள் யாவும் திருப்பெருந்துறையில் காட்சி கொடுத்து ஆட்கொண்ட இறைவனைப் பின்பு காணப்பெறாமையால் தாயை நினைந்தழும் பிள்ளையைப் போல அவர் மனங்கலங்கிப் பாடிய பாக்கள் யாவும் படிப்போர் நெஞ்சை உருக்குவன. அவர் பெற்ற சிவானுபவங்களைப் புலப்படுத்தி நிற்கும் திருவாசக திருப்பதிகங்கள் அனைத்தும் ஆலய வழிபாடு செய்வதனுடாக பெறப்படும் பயன்கள் அனைத்தையும் எடுத்துக் காட்டுவனவாகவே காணப்படுகின்றன.

ஆழ்வார்களைப் பொறுத்தவரையிலும் ஆலய வழிபாட்டுடனேயே சமய வரலாற்றை வளம் படுத்தினர். அவ்வகையில் முதலாழ்வார்கள் மூவரும் அகத்தும் பின் புறத்தும் திருமாலைக் கண்டுகளித்து இயற்கையிலே இறைவனைத் தரிசித்து நனவிலும் கனவிலும் திருமாலெண்ணமுடையோராய் வாழ்ந்த நிலையில் திருமாலிடத்தில் கொண்டிருந்த அளவற்ற அன்பினை என்றன் அளவன்றால் யானுடைய அன்பு என்னும் ஒண் தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு என்றும் காண் காண் என விரும்பும் கண்கள் என்றும் கூறும் அவர்பாக்கள் தெளிவாக புலப்படுத்துகின்றன. திருமழிசையாள்வார் நாக்கொண்டு மானிடம் பாடாத நிலையில் திருமாளிடம் அளவு கடந்த பத்தியுடையராய் திருக்குடந்தை, திருவெ·கா, திருவரங்கம் முதலிய தலங்களுக்கு சென்று திருமாலின் புகழைப் பத்திவைராக்கியத்துடன் பாடித்திரிந்த தனால் அவர் பத்தி சாரார் என்றும் அழைக்கப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்றும் மறந்தறியேன் என்நெஞ்சத்தே
வைத்து நின்றும் இருந்தும் நெடுமாலை"

என்று பாடுவதிலிருந்து அவரது சலியாத உள்ளத்தின் திண்மையை நாம் உணரலாம். திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் பெரிய பெருமாளிடத்தில் ஆரா அன்பு கொண்டு அவருக்கு பூமாலை சாத்துதல் முதலிய கைங்கரியங்களைச் செய்து தம் வாணாளைக் கழித்த தொண்டரடிப் பொடியாழ்வார் பாடிய பிரபந்தங்கள் திருமாலை திருப்பள்ளி எழுச்சி என்பன. திருமாலின் அருளைப் பெற்று அவர் நாமங்களையே சொல்லிச் சொல்லி உவப்பிலா ஆனந்தம் கொள்பவர் அவர் என்பதனை அறிய ஆதாரமாகின்றது. திருமங்கையாழ்வாரைப் பொறுத்த வரையில் கள்வர் குடியில் பிறந்து திருமங்கையென்னும் நாட்டையாண்ட சிற்றரசராவர் அவரும் சுந்தர மூர்த்தி சுவாமிகள் தொண்டரடிப் பொடியாழ்வார் முதலிய அருட் செல்வர்களைப் போலவே பக்தர்களுக்கு செய்த கைங்கரியத்தை பெரிதாக மதித்தவர் ஆலய வழிபாடும் அவ்வாலயத்திற்குப் பணிபுரிவதிலேயும் தமது பொருளையெல்லாம் செலவிட்டார் என்பது அவருடைய பாக்களி லிருந்து அறியக்கிடக்கின்றது. இமயந் தொடக்கம் குமரி முனை வரையுமுள்ள திருமால் கோயில்கள் பலவற்றைக் கண்டு தரிசித்துப் பாடிய பதிகங்களே அவர் பாடியருளிய பெரிய திருமொழியாக காணப்படுகின்றது. இத்தகைய நிலையில் பல்லவர் கால ஆலய வழிபாட்டில் பதிகங்களின் செல்வாக்கும் அதிக இடம் பித்துள்ளன என்பதனை அறிய முடிகின்றது.

மேலும் பல்லவர் கால கோயில் வழிபாட்டின் முக்கியத்துவம் அடியார் பலரின் வரலாற்றினால் புலனாகின்றது. கோவில் கட்டுதல் கோவிற் குளங்கள் தோண்டுதல் நைவேத்தியம் வைத்தல் விளக்கேற்றுதல், கற்பூர தீபமேற்றுதல் சந்தணம் வழங்கல் இசைக்கருவிகள் வழங்கல் இலிங்கத்துக்கு அபிஷேகம் செய்தல் கோயில் விழாக்களை நடத்துதல் விழாக்களின் தரிசனத்துக்குப் போதல் என்பன கோயில் வழிபாட்டில் அடங்கும். பிராமணரல்லாதவரும் பூசை செய்தனர். வீபூதி தரித்தல் உருத்திராட்சம் அணிதல், பட்சாட்சர செபம் என்பவற்றோடு பூசை வழிபாடுகளைச் செய்தல் ஆகம வழிபாட்டில் அடங்கும் திருப்பதிகம் பாடுதலும் அதனை இசைக்கருவிகள் இட்டு வாசித்தலும் பாடுதலும் கோவில் வழிபாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபகுதியாகின்றன. கோயில்களில் புராண படணம் நடைபெற்றது. திருப்பதிகம் பாடுபவர்களுக்கு வழங்குவதற்கெனக் அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டன. கண்ணப்பர், சாக்கியர் என்போர் சரித்திரங்களினாற் பத்தி வழிபாடே முக்கியம் என்பது தெரிய வருகின்றது. சிவனடியாரினை வணங்குதலும் தொண்டரிடத்தில் காணப்பட்டது. கணநாதர் சம்பந்தரையும் அப்பூதியடிகள் அப்பரையும் பெருமிழைக் குறும்பர் ஆரூரையும் வழிபட்டு வந்தனர். சிவனடியாரை சிவனாகவே மதிக்க வேண்டும் என்ற கருத்துக்குக் காணப்பட்டது. இதற்கு ஆலய வழிபாட்டின் இன்றியமையாமை சைவ, வைணவ சமய வரலாற்றிலே உணரப்பட்டமையும் காரணமாகிய நிலையில் மனம், வாக்குக் காயம்என்ற மூன்றாலும் வழிபாடு நடைபெற்றது. வாக்கு ஆகிய மந்திரமும் காயத்தின் ஆகிய கிரியையும் மனத்தின் சிந்தனையோடு கூட்டியே நிகழ்த்தப்பட்டன. இத்தகைய நிலைகள் அக்கால ஆலய வழிபாட்டின் இன்றியமையாமையினை எடுத்துக் காட்டி விளக்க காரணமாக அமைந்தன.

மேலும் ஆலய வழிபாட்டின் மூலம் கலைவளம் பெற்று விளங்கிய காலம் பல்லவராட்சிக் காலம் சிற்பம், ஓவியம். இசை, நடனம் முதலிய நுண் கலைகள் அவர் காலத்தில் உயர்நிலை பெற்றிருந்தன. என்பது அவர்கள் குடைந்தெடுத்த கோயில்களிலிருந்தும் அக்காலத்து சிலாசனங்களிலிருந்தம் அறியக் கிடக்கின்றது. பல்லவர் காலத்து பெருங் கோயில்களில் நடன மண்டபம் தருக்க மண்டபம் முதலிய பல மண்டபங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதனால் அக்கோயில்கள் சமயக்கல்வி, சாத்திரக்கல்வி இசை: நடனம், முதலியவற்றை வளர்ப்பதற்குரிய இடங்களாகவும் விளங்கினவென்று ஆராய்ச்சியாளர் கூறுவர். எல்லாச் சமயத்தோரும் தத்தம் மதங்களை வளர்த்தற் பொருட்டு நாடெங்கிலும் பல மடங்களைக் கட்டினர். அவை துறவிகளுக்கு தங்குமிடமாகவும் திக்கற்றவர்களுக்கு புகலிடமாகவும், மாணவர்கள் உண்டியும், உறையுளும் பெற்றுக் கலை பயிலிடமாகவும் விளங்கின. இவ்வாறு சமயத்தை வளர்த்தற்கெனக் கட்டப்பட்ட மடங்களும் பிறவும் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் கலைவிருத்திக்கும் பெரிதும் பயன்பட்டன. திருஞானசம்பந்த சுவாமிகள் முதலிய சைவப் பெரியார்கள் சிவனடியார்களுடன் ஊர்கள் தோறும் சென்று ஆலய வழிபாடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து அவ்வாலயங்களில் தங்கியிருந்து தொண்டு செய்வதற்கு அக்காலத்திலிருந்த சைவத் திருமடங்கள் பெரிதும் பயன்பட்டன. வைதீக சமயங்களை வளர்த்தற் பொருட்டு மறையவர் பலருக்கு மானியமாக நிலங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அவர்கள் ஆகமம் முதலியவற்றைப் படிப்பதற்கு ஆலயங்களை மையமாகக் கொண்டு வடமொழிப் பாடசாலைகள் பல அக்காலத்தில் நிறுவப்பட்டன. சிவன், திருமால் முதலிய கடவுளர்க்கு கோயில்கள் பல வெடுக்கப்பட்டன. வேதியர்களுக்கு பல நிலங்களை மானியமாகக் கொடுத்தும் மடங்களை ஆதரித்தும் வைதீக சமயங்களை வளர்த்ததோடு பல்லவர் அரசர்கள் பலரும் ஆலயங்களை மையமாகக் கொண்டு சமய சமூக செயற்பாட்டு மையங்களாக வழிபாட்டு முறைமைகளை வளம்படுத்தியதுடன் கலை மரபுகளில் சிறப்பிடம் பெறும் இசைக்கலை, சிற்பக்கலை முதலிய இன்பக் கலைகளை ஆதரித்தும் வந்தனர். என்பதற்கு இக்காலத்தில் எழுந்த இலக்கியங்கள் கோயில்கள் கல்வெட்டுக்கள் தக்க சான்றாக இருக்கும் அதேநேரம் அக்காலத்தில் ஆலயங்களும் வழிபாட்டு முறைகளும் அதனை மையமாக கொண்ட கலை வளத்திலும் பிறவற்றிலும் நாடடைந்திருந்த சிறப்பினை ஒருவாறு அறியலாம்.

## IV. சமுதாய மாற்றம்

பல்லவர் கால சமய வரலாற்றைப் பொறுத்தவரை ஆரம்ப காலத்திலே வருணப்பாகுபாடு பெரிதும் பேணப்பட்டது. இக்கால சமய வரலாறு வைதீக சமய இலக்கணங்களானதால் அந்தணரும் முன்னின்றனர். இதனால் மறையவர் சமூகத்திலே மிகவும் உயர்ந்தோராய்க் கணிக்கப்பட்டனர். மன்னர்கள் அவர்களை மதித்து பலவித சலுகைகளையும் அவர்களுக்கு வளங்கினர். அந்தணரல்லாத தமிழ் மக்களும் இடம் பெற்றனர். சைவ பக்தியியக்கமும் வைணவ பக்தியியக்கமும் பெரிதாக இக்காலத்தில் அமைந்தமையால் அதன் துணை கொண்டு தமிழகம் வெளியுலக தொடர்புகளை பெறத் தொடங்கியது. சைவசமய நாயன்மாரின் சரிதையை நோக்கும்போது தமிழ்நாட்டில் அக்காலத்தில் வாழ்ந்த பல்வேறு சாதியருள்ளும் சிலர் சிவபக்தர்களாக வாழ்ந்தனர் என்பதும் அறியக்கிடக்கின்றது. இத்தகைய நிலையில் பல்லவர்கால சைவ பக்திப் பாடல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றுவதை ஆரம்பித்து வைத்த காரைக்காலம்மையார் வணிக சாதியினராகக் காணப்படும் நிலையில் சமுதாய மாற்றம் உற்பத்தி வாணிப சமுகத்தினரூடாகவே உருவாக்கப்பட்ட நிலையில் சங்கமருவிய காலத்தில் தமிழகத்தை ஆண்டோர் களப்பிரராகிய அந்நியா அவர்கள் மக்களிலிருந்து விலகியோராய் கானப்பட்ட பல்லவரோ வடமொழிச்சார்புடையோராய் தம்மைப் பேரரசராய் நிலைநிறுத்திக் கொண்ட வராயும் விளங்கியதோடு தாம் தெய்வாம்சம் பொருந்தியவர் எனப் போற்றப்படுவதையும் விரும்பினர் இதற்கு இரண்டு உதாரணங்களைக் காட்டலாம். ஒன்று இராசசிம்மனின் பெருமைகள் பேசும் கல்வெட்டு மற்றது திருமங்கையாழ்வாரின் பாசுரக்கூற்று.

"இவன் பரமேசுவரன் உறுப்புக்கள் யாவும் ஒன்றுகூடிப் பிறந்தாற் போன்றவன். உடல் வலியிலும் பெரும் புகழிலும் நரசிம்மாவதாரத்தை ஒத்தவன் இந்த சத்திரிய சூடாமணி தேவர்க்கும் பிராமணர்க்கும் செல்வந்தந்தவன் தன்கீழுள்ள நிலமகளை நான்மறையானர் நுகருமாறு செய்தவன்."

என்று இராச சிம்மனின் கல்வெட்டு அவனைப் பரமேசுவரன் நிலைக்கே ஏற்றிவிடக் காண்கின்றோம்.

திருமங்கையாழ்வாரின் கூற்றிலே திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேன் என்னும் கூற்றின் வாயிலாக பொதுப்படையில் மன்னர் யாவரும் திருமாலின் அமிசம் பொருந்தியவரே என்பதை வலியுறுத்துகிறார். இவ்வாறு மன்னன் தெய்வமாகவும் அவனால் வணங்குந்தகையர் மறையவர் எனவும் கொள்ளப்பட்ட ஒரு காலகட்டத்தில் மற்றைய வருணத்தினர் அவர்களிலிருந்து கிளைத்த மற்றைச் சாதியார் ஆகிய சாமானிய மக்களின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதை ஓரளவு ஊகிக்கலாம். வணிகரும் வேளாளரும் சமூக அந்தஸ்தைப் பெற்றாலும் அவர்களுக்கு கீழ்பட்டோர் சமூக இழிப்பிற்கு உள்ளானமைக்கும் சான்றுகள் உள்ளன.

இதற்கு ஏதுவாகவே திருஞானசம்பபந்த மூர்த்திநாயனார் திருநீலகண்ட யாழ்ப்பாணர் வரலாறு, சேரமான் பெருமாள் நாயனார் ஏகாலியன் சந்திப்பு, திருநாளைப்போவார் நாயனார் தில்லைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானைத் தரிசிக்க இருந்த தடைகள் திருப்பாணாழ்வார் திருவரங்கத்துக் கோயிலுக்கு செல்லமுடியாதிருந்த நிலை முதலாகப் பல்லவர்காலத்து அடியார்களின் வரலாறுகளின் வாயிலாக சாதிப்பிரிவினையின் கடுமையான போக்கை ஒருவாறாக அறிந்து கொள்ளும் அதே நேரம் இக்கால பத்திநெறிவளர்ச்சிப்போக்கு அதனை மையமாக கொண்ட ஆலயவழிபாட்டு மரபு ஆலயங்களை சமுதாயத்தின் மையங்களாக்கி அவற்றினூடாக "கோயிலில்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்ற முதுமொழிகளை தோற்றுவிக்க காரணமான அதே நேரம் ஆலயங்கள் எல்லாம் பல்வேறுபட்ட சமூகப் பிரிவினரையும் ஒன்றினைக்கும் நிறுவனமாக செயல்பட்டதுடன் "ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமன்" என்ற எண்ணக் கருவையும் உருவாக்க வழிவகுத்து அவற்றினூடாக சமுதாய மாற்றத்தை உண்டுபண்ணிக் கொண்ட காலம் பல்லவர்கால சமய வரலாற்றுக் காலமாகும்.

மேலும் பல்லவர் காலத்தில் வாழ்ந்த சிவனடியார்களும் ஆழ்வார்களும் அங்காங்கே காணப்பட்ட சமூகப் பிரிவுகள் பற்றி தமது கண்ணோட்டத்தில் புலப்படுத்தியுள்ளமை நோக்கற்பாலன அவ்வகையில் அப்பர் அடிகள்

**"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்**
**கங்கைவார் சடைக்கரந்தார்க் கண்பாரகில்"**
**அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"**
என எடுத்துக் காட்டியதும் தொண்டர் அடிப்பொடியாழ்வார்.

**"பழுதிலா ஒழுகலாற்றுப் பலசதுப் பேதிமார்கள்**
**இழிகுலத்தவர்களேனும் எம்மடியார்களாகில்**
**தொழுமின் நிர் கொடுமின் கொள்மின்"**

என்றும் உரைப்பது அக்காலச் சாதிஅமைப்பின் சமுதாய போக்கு நிலைகளை எடுத்துப்புலப்படுத்த காரணமாகின்றன. இதேவேளை அப்பரும், தொண்டரப்பொடியாழ்வாரும் முறையே சிவனடியாரையும் வைணவ அடியாரையும் சமத்துவநோக்கில் கண்டனரன்றி சாதியாசாரத்தை ஒட்டுமொத்தமாக சாடவில்லை எனினும்

**சாதிகுலம் பிறப்பெனும் சுழிப்பட்டுத் தடுமாறும்**
**ஆதமிலி நாயேனை - என்றும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்திரம்பல பேசுஞ் சழுக்கர்காள்
கோத்திரமுங்குல முங்கொண்டென் செய்குவீர்

என மணிவாசகப் பெருந்தகையின் மணிவாக்கு இறையருளை வேண்டுவோர் சமத்துவபாவமுடையோராய் விளங்கவேண்டும் என எடுத்தியம்பிய கூற்று அக்கால சமூதாய வரலாற்றில் சமூகமாற்றங்கள் பல நிகழ்வும் அவற்றின் ஊடாக இந்துசமய வரலாறு வளம்படுத்தவும் ஏற்றகாரணியாக அமைந்தது எனலாம்.

பல்லவர்காலத்தில் தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்ட சைவ, வைணவ சமயபேரெழுச்சிகள் அவற்றை முன்னெடுத்து சென்ற நாயன்மார் ஆழ்வார்களின் வழிகாட்டல்கள் எல்லாம் இக்கால சமுதாய வரலாற்றை மாற்றியமைத்துக் கொண்ட நிலையில் சைவநாயன்மார் களில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது திருத்தொண்டர் தொகையில் "தில்லை வாழ் அந்தணர் தக்ம் அடியார்க்கும் அடியேன்" என எடுத்துக் காட்டி பல வர்க்கத்தவர்கும் தான் அடிமையானவர் என எடுத்துக்காட்டி ஏனைய வர்க்க்கத்தினரை உயர்கூட்டமாக மதித்துக் கொண்டதும் வைணவ ஆழ்வார்களில் ஒருவராகிய பெரியாழ்வார் சாதி இனம் என்பன கடந்த நிலமையிலமைந்த தொண்டர் குலத்தை பற்றிஎடுத்துக் காட்டி விளக்கிய நிலையில் பத்தரின் பாதத்திலுள்ள தூசு எனப்பொருள்படும் தொண்டரடிப்பொடி என்ற சொற்றொடர் தனிச் சிறப்பு வாய்ந்தது கங்கையில் நீராடுவதிலும் பார்க்கத் தொண்டரின் அடிப்பொடி ஆடுதல் தூய்மையானது என்பர் குலசேகர ஆழ்வார் தமிழ்நாட்டில் தமக்குமுண்பிருந்த சிவனடியார்களை எல்லாம் நம்பியாரூரர் திருத்தொண்டர் தொகையில் கூறிய நிலையில் தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு வகுப்பினரும் அதில் இடம்பெற்றனர். அவ்வகையில் வைதீகப் பேரறிஞர் சோமாசிமாறர், உருத்திரபசுபதி ஆகம அறிஞர் சிவகோசரியார், அறிஞரும் புலவருமாகிய பொய்யடிமையில்லாத புலவர் காரி, பேரரசராகிய நெடுமாறன், கழற்சிங்கன், சிற்றரசராகிய ஏயர்கோன், கோட்புலி, மீனவராகிய திருக்குறிப்புத் தொண்டர் வேடராகிய கண்ணப்பர் இவரெல்லோருஞ் சேர்ந்தே சிவனடியார் கூட்டம் உருவாகின்றது. சிவ பக்தி ஒன்றே இவர்கள் யாவருக்கும் பொதுவானது என எடுத்துக் காட்டியமையி னூடாக சமூகமாற்றம் காணவிளைந்த அதேநேரம் இவர் யாவரும் யாவராலும் வணங்கப்பட வேண்டியவர் என எடுத்துக்காட்டப்பட்டமை அக்கால சமய வரலாற்றில் அவர் காண விளைந்த சமூகமாற்றம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பரந்துபட்ட மனப்பான்மையை எடுத்துக் காட்ட காரணமாகிய துடன் அது என்றுமே இந்துசமய வரலாற்றினூடாக பேணப்படவேண்டும் என்பதனையும் நிலைநாட்ட காரணமாகின்றது. இதே நிலையில் ஆழ்வார்களில் ஒருவராகிய மதுரகவி ஆழ்வார் நம்மாழ்வாரையே இறைவனாக கொண்டு வணங்கி வந்துள்ளார் இறைவனிடமும் குருவிடமும் ஒரே விதமான பத்தி கொள்ள வேண்டும் இருவரும் ஒரே தரத்தினர் என்பதனை எடுத்துக்காக்காட்டுகின்றார். அந்தணராகிய மதுரகவி வேளாளராகிய நம்மாழ்வாரைக் குருவாகக் கொண்டதும் வைணவத்தைப் பொது மக்களியக்கமாக்க உதவியது இவற்றின் பேறாக சோழமண்டலத்து திருவரங்கம் தொண்டைமண்டலத்துத் திருவேங்கடம், பாண்டிமண்டலத்து அழகர் கோயில் என்பன ஆழ்வார்களால் பாடப்பட்ட தமிழ் நாட்டிலுள்ள தலைசிறந்த வைணவத் தலங்களாக மாறின. சைவர்களுடைய கோயில்களுள்ளே சிதம்பரம் சிறப்புற்றது போல வைணவர்களுடைய கோயில்களுள்ளே திருவரங்கம் சிறப்புற்றது. இத்திருத்தலங்கள் எல்லாம் அக்கால சமய வரலாற்றில் சமுதாயத்தின் ஒருமைப்பாட்டு மையங்களாக மாறியதுடன் சமுதாய மாற்ற மையங்களாகவும் விளங்கின. இத்தகைய நிலைப்பட்ட வரலாற்றினை உருவாக்கி இந்துசமய வரலாற்றை வளர்ச்சிப் பாதையில் இட்டுச்சென்ற காலமாக மிளிர்வது பல்லவர் காலமாகும்.

## உசாத்துணை நூல்கள்


1. தென்னிந்திய வரலாறு - 1966
   **K.A. நீலகண்ட சாஸ்திரி M.A** பக் - 165
2. தமிழ் இலக்கிய வரலாறு - 1995
   **பேராசிரியர் வீ. செல்வநாயகம் M.A** பக் 63 - 74
3. தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் - 1969
   **டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை P.H.D.** பக் 100 - 136
4. இந்து நாகரிகம் பாகம் - 03 - 1997
   **க. சொக்கலிங்கம் M.A** பக் - 101
5. சிவத்தமிழ் ஆராய்ச்சிக் காட்டுரைகள் - 1985
   **மணிவிழாச்சபை வெளியீடு** பக் - 46




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமய பிரிவுகளினுள்ளே காஷ்மீர சைவம் பெறும் இடத்தினை ஆராய்க

சைவசமய பிரிவுகளில் ஒன்றாக காஷ்மீர் என்ற பிரதேச மக்களால் பின்பற்றப்பட்டுவரும் ஒருசமய நெறியாக காணப்படுவது கி.பி. 9ம் நூற்றாண்டு தொடங்கி சிவனால் எழுதப்பட்ட சிவசூத்திரத்தை தமது கொள்கைக்கு ஆதாரமாக கொண்டு பரவிவரும் சமயக்கோட்படாக காணப்படுவது. இத்துடன் துர்வாசருடைய மானசீக புத்திரரான திரியம்பகர் திரிகம் எனப்படும் அத்வைத சைவசமயத்தை பரப்பினார். அது காஷ்மீரத்தில் வழங்கி வருவதால் காஷ்மீர் சைவம் எனப்படுகின்றது. இத்திரிக தரிசனம்

1. ஆகமசாத்திரம்
2. ஸ்பந்தசாத்திரம்
3. பிரத்ய பிஜ்ஞாசாத்திரம், எனப்பட்டு ஆகம சாத்திரம்

பதி, பசு, பாசம் ஆகிய மூன்றும் உண்மை என நம்புவதால் திரிகம் எனப்பெயர் பெறுகின்றது. மறுபுறத்தில் அதனை சிவன், சத்தி, அணு எனவும் வலியுறுத்தி செல்கின்றது. ஸ்பந்த சாஸ்திரம் ஒன்றிலிருந்து பன்மை நிலைக்கு மாற்றம் அல்லது தோற்ற அசைவு எனக்குறிப்பிடுகின்றது. பிரத்ய பிஜ்ஜை கண்டுகொள்ளல் இவ்வழியில் ஆன்மா சிவனோடு தனக்குள்ள ஒற்றுமையை கண்டு கொள்ளல் எனக் கருதப்படும் நிலையில் இவ் காஷ்மீர சைவமானது முடிவான உள்பொருள் சிவன் அல்லது சம்பு எனக்கொண்டு சிவன் அசையும் அசையாப் பொருட்களுக்கு ஆன்மாவாக காணப்படுகின்றார் என்றும்

| | |
|---|---|
| உறையுமிடத்து | - விஸ்வமயன் |
| கடந்தநிலையில் | - விஸ்வோத்திரணம் |
| அறிவுமயமானவன் | - சைத்தன்னியன் |
| முழுஅனுபூதி | - பரசம்வித் |
| உயர் இறைவன் | - பரமேஸ்வரன் |

இத்தகைய முறைகளில் காணப்படும் பல்வேறு வடிவங்களும் சம்புவின் வடிவங்களே என்பதனை வலியுறுத்திச் செல்லும் ஒரு சமயப் பிரிவாக காண்ப்படுவது. இச் காஷ்மீர சைவம் ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II. ஆதார இலக்கியங்கள்

இச் சைவமானது தமது கொள்கை கோட்பாடுகளுக்கு பல அறிஞர் பெருமக்களால் எழுதப்பட்ட நூல்களை ஆதாரமாக கொண்ட நிலையில் ஸ்பந்த சாஸ்திரம் ஆகம சாஸ்திரத்தை விளக்க வந்தது இவ்வகையில் முதல்நூல் வசுகுப்தரால் எழுதப்பட்ட ஸ்பந்தசூத்திரம் கல்லடரால் "ஸ்பந்த சர்வஸ்வம்" என்ற உரை இதற்கு எழுதப்பட்டது திரிக தரிசனத்தின் தத்துவ விளக்கமாக அமைந்த சாஸ்திரம் பிரத்ய பிஜ்கை சாஸ்திரம் என்று கூறப்படுகின்றது. சோமநாதரால் இயற்றிய சிவதிருஷ்டி இத்துறையில் சுபக்கம், பரபக்கம் என்ற முறையில் அமைந்துள்ளது. அடுத்து இவ்வகையில் கருதத்தக்க நூல் "ஈச்வரபிரத்திய பிஜ்ஞா என்பதாகும். இதற்கு உரை எழுதியவர்கள் உற்பலாசாரியரும், அபிருவ குப்தாசாரியரும் ஆவர் உத்பலரின் சிவஸ்தோத்ராவனீ போன்ற தோத்திரங்களும் இத்தத்துவங்களை விளக்கும் அதேநேரம் காஷ்மீரத்தின் எல்லாத்துறைகளையும் விளக்கும் வகையில் அமைந்தவை அபிநவகுப்தரின் தந்திரலோகம் பரமார்த்தசாரம் என்பவையும் சோமராஜரின் பிரத்யபிஜ்ஞா ஹருதயம் என்ற நூலாகவும் அமைந்து காணப்படுகின்றது.

## III. பரம்பொருளும் அதன் வெளிப்பாடும்

சிவன் சத்தியினின்றும் வேறுபட்டவன் அல்லன் அவன் எக்காலத்திலும் பஞ்ச கிருத்தியங்களைச் செய்து கொண்டே இருக்கின்றான் அவனது இச்செயலனைத்தும் விளையாட்டேயாகும். அவன் சத்தியால் தோன்றிய இப்பிரபஞ்சம் அவனினின்றும் வேறுபட்டதல்ல மாயை வசத்தாற் பலவாகக் காட்சியளிக்கின்றது. சாரசரங்களடங்கிய இப்பிரபஞ்சம் அவனுடைய பிரிவே ஏனைய முப்பத்தைந்து தத்துவங்களும் பரமாத்மாவான சிவன் சைத்தன்ய சொருபன் அத்வைதிகள் "பிரமம் ஒன்றே உண்மைப் பொருள் உலகைப்பொய்த்தோற்றம் என்பர் காஷ்மீர சைவர். அத்வைதக் கொள்கையை மேற்கொண்டபோதிலும் உலகம் பரமசிவனின் மறுவடிவம் ஆனதால் உலகமும் உண்மைப் பொருளே என்பர். சைதன்ய சொருபனான சிவன் பிரகாச விமரிசமயமானவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லப்படுகின்றது. அத்வைதம் சாந்தம் பிரமம் என்பதை காஷ்மீர சைவம் ஒத்துக் கொள்வதில்லை ஞானசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்தி ஆகியவற்றோடு கூடிய சிவன் உலகத்தைப் படைத்தும் காத்தும் கரந்தும் விளையாடுகின்றான். ஞானப்பிரகாசமாக இருக்கின்ற சிவனுக்கு விமரிசம் முக்கிய இலக்கணம். விமரிசம் என்பது ஸ்பந்தத்தை (அசைவை) அல்லது கிரிகையைக் குறிக்கும் அக்கிரிகைதான் படைப்பு முதலாகிய தொழில்கள் அறிவுச்சுடராக இருக்கும் சிவனே உயிர்ப்பொருளாயும் (சித்) உயிரில் பொருளாயும் (அசித்) காட்சி தருகின்றான் அவனுடைய சத்தியே இப்பிரபஞ்சமாக விரிகின்றது. அவனுடைய பிரகாசம் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது. என்பதை உணர்பவனே பரமாத்ம (சிவன்) சொருபத்தை உணர்ந்தவனாகின்றான்.

இங்கு சிவன் சத்திவழியாக இப்பிரபஞ்சம் ஐந்து விதம் வெளிப்படுகின்றது.

1. சித்சத்தி - மனவாற்றல், சுயப்பிரகாசம்
2. ஆனந்தசத்தி - அதுவே ஆனந்தம்
3. இச்சாசத்தி - விருப்பத்திற்குரிய சத்தி
4. கிரியா சத்தி - செயலின் ஆற்றல்
5. ஞான சத்தி - அறிவுச் சத்தி

இவ்வாற்றல்கள் மூலம் தன்இச்சைப்படி சிவன் தோற்றுகின்றான். இச்சிவனும் அவனது சத்திகளும் கதிரவனும் அவனது கதிர்களும் போல்வன. கதிரவனது கதிர்கள் விரியும் போது தானே உலகிலுள்ள பொருள்கள் விளக்கம் பெறுகின்றன. அதுபோல சிவனுடைய இச்சை முதலிய செயல்கள் தொழிற்படும் போதுதான் பிரபஞ்ச உண்மை புலனாகின்றது பரமேஸ்வரன் பூரண சுதந்திரன் ஆகையினாலே பல்வேறு உயிர்களாக உயிரில்லாத பொருள்களாக தோன்ற வேண்டும் என்ற இச்சை ஏற்பட்டு விட்டால் அந்த ஆனந்தக்களிப்பு நிலையில் இவ்வுலகிற் காணப்படும் சித்தாகவும் அசத்தாகவும் உலவுகின்றான். இவ்விளையாட்டைத்தான் ஸ்பந்தம் என்றும் கீரிடை என்றும் காஷ்மீர சைவம் கூறுகின்றது. சந்திரன் ஓடுகின்ற புனிதகங்கையில் ஓடுவது போலவும் அழுக்கு நிறைந்த குட்டையில் சலனமற்றிருப்பதுபோலவுந் தோன்றினாலுஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரனின் தூய்மையும் இயல்பும் மாறாதிருப்பதுபோல பரமேசுவரன் பல்வேறு பிறவிகளை மேற்கொண்டு சுகதுக்கங்களை நுகர்ந்தும் சட்டபொருளாய்க் கிடந்தும் வரினும் அவனுடைய ஞானாநந்த சொரூபத்தில் எந்த வேறுபாடும் இல்லை அவனும் அவனது மற்றொரு வடிவமான பிரபஞ்சம் அத்வைத நிலையில் உள்ளன. தூய வெண்மையான படிகக்கல் பல வண்ணப் பொருள்களைச் சார்ந்த விடத்தும் அவ்வவ் வண்ணத்தை உடையதாகத் தோன்றுகையிலுந் தன் இயல்பு கெடாமலேயிருத்தல்போல ஈஸ்வரனும் தேவர், மனிதர் விலங்கு, மரம் முதலான உருவங்களை எடுத்தபோதும் தன்னுடைய நிலையான சித்சொரூபத்தையே கொண்டிருக்கின்றான் இது அபிநவகுப்தரின் கூற்று. இச்சித்சத்தியே தோற்றுவித்தல், நிலைபெறுதல், அழித்தல் என்னும் முத்தொழிலைச் செய்வதாக சைவர்கள் கூறுவர். இச்சத்தியை காஷ்மீர சைவத்தில் "சிவபட்டாரிகை" என்று கூறுவர் சிவன் சீவனாகிச் சிற்றறிவு வயப்பட்டுப் பலப்பலவாக விகற்பித்து எழுவதே தோற்றம் உலகில் உள்ள பொருள்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையே நிலைபேறு மெய்யறிவு பெற்றுயானே சிவன் என்றும் புறப்பொருட்களெல்லாம் எனது வெளிப்பாடே என்றும் மீண்டும் உணர்வதே சம்ஹாரம் எனவும் கூறப்பட்டநிலையில் இவற்றுக்கெல்லாம் காரணன் சிவனே எனவும் காஷ்மீர சைவத்தினர் கருத்துக் கொள்வர்.

## IV *சீவாத்மா*

சைத்தன்ய சொருபனான பரமேஸ்வரன் சர்வ வல்லமை பொருந்தியவனாகையால் தனது பரிபூரணமான இச்சை, ஞானம், கிரிகை ஆகிய சத்திகளை குறுக்கிக்கொண்டு சீவன்களாகக் காட்சியளிக்கின்றான். இத்தகைய உருக்கள் கொள்ளும்போது சத்துவம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களைக் கொண்ட வனாகின்றான் விரிந்த கடல்போன்றவன் பரமசிவன், கடல்மீது எழுந்து மறையும் அலைகள் போன்றவை சீவன்கள் சிவன் வேறு சீவன் வேறு என்ற உணர்வு மாயையின் காரியம் முற்றறிவும் பேராற்றலும் கொண்ட ஈசுவரனே தானாக இருக்கின்றேன் என்ற உணர்வுவோடு செயற்பட்டால் வினைப்பயன்கள் உயிரைச் சாரா. பரமசிவனின் முத்தொழிலுக்கேற்பச் சீவனுக்கு விழிப்புநிலை, கனவுநிலை, உறக்கநிலை என்ற மூன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைகின்றன. பாசங்களின் வாசனை தீர்ந்து போகும் போது உயிர் சுத்த பூரானானந்தத்துக்குரிய நிலையை அடைகிறது அதுவரை பிறவி தோறுஞ் செய்த வினைப்பயனை, சுகதுக்க மோகங்களை உயிர் அனுபவித்து வருகின்றது.

பரமேஸ்வரன் ஆடுகின்ற அரங்கம் சீவாத்மா. இவ்வரங்கத்திற் பற்பல வேடங்கள் புனைந்து ஆடுகின்றான் பரமன். இக்காட்சியை யோகிரரே காணவல்லவர் ஆணவம் முதலான பாசங்களோடு கூடியதால் உயிர் பசு எனவும் அநாதியாகையால் “நித்யம்” எனவும் “அகம்” என்ற பண்பினாற் குறிக்கப்படுவதால் உருவற்றது. என்றுங் கொள்ளப்படுகின்றது. சார்ந்தன் வண்ணமாந் தன்மை உடையது உயிர். உயிர் தன்னை அறிவோனாகவும் நுகர்வோனாகவும் கருதிக் கொண்டு பிறபொருள்களை அறியப்படுவன. நுகரப்படுவன என்ற பேத உணர்வு கொண்டு செயற்படுவதால் கட்டுண்டு கிடக்கிறது. இதனால் தனது இயல்பு நிலை மறக்கின்றது இந்தச் சிவன் சிவ சூரியனின் கிரணங்களாகி அருட் சத்தி படியும் காலத்தில் மெய்யறிவு பெறுகிறது. சடப் பொருளினின்றுஞ் சைதன்யனான நான் வேறு என்று அறியத் தலைப்படுகிறது. விசித்திரமான இப்பிரபஞ்சம் தன்னால் சுதந்திர சத்தியால் விளையாட்டாக ஒரு சித்திரம் போல் தீட்டப்பட்டதென்று உணர்கிறது. மீண்டும் இப்படி உயர்ந்த மாத்திரத்தே சீவன் சிவமாகிறது. இவ்வாறு உண்மை நிலையை உணர்வதே பிரதிய பிஜ்ஞை எனப்படும். இத்தகைய நிலையை அடைவதற்கு வழி முடிவான உள்பொருளோடு ஒன்றானது எனக்கொள்ள வேண்டும். உண்மை நிலை உணராது நிற்கும் ஆன்மா இறை உண்மை உணர்ந்த பின் மகேசுவரனுடைய முழுமையான தன்மைகளான எல்லாம் வல்ல தன்மை ஓர் ஆன்ம வழிகாட்டியினால் எடுத்துச் செல்லப்பட்ட மாத்திரத்திலே அந்தான்மா இருத்தலின் முழுப்பயனை அடைகின்றது.

## V மோட்சம்

சிவன் தான் பரிபூரணம் பேரறிவையும் பேராற்றலையும் கொண்டவன் என்பதை அறியாமையே பந்தம் என்பர். அப்படி இறைவனே தன் ஆற்றலை குறுக்கிக் கொண்டு பல்வேறு உயிர்களாய உழல்வதேன் என்ற வினாவுக்கு அவனது இயல்பான ஸ்ந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அசைவு) அது அவன் விரும்பிய வண்ணஞ் செயலாற்றுஞ் சுதந்திரம பெற்றவன் என்பதாகும். உயிர்களுக்கு தனுகராதிகளைக் கொடுத்து வினைப்பயனைப் புசிப்பிக்கச் செய்து அவற்றை ஈடேற்றவே படைக்கப்படுகின்றன. என்ற சைவசித்தாந்தக் கொள்கையினின்றும் இது வேறு பட்டிருப்பதைக் காணலாம். இவ்வறியாமை நீங்கி முத்தியடைவதற்கு நான்கு உபாயங்கள் கூறப்பட்டுள்ளன. அவையாவ

1) ஆணவோபாயம் 2) சாக்தோ பாயம்
3) சாமபவாபாயம் 4) அனுபாயம் என்பனவாகும்.

**1) ஆணவோ பாயம்:**

தூலதத்துவங்களைச் சுக்கும தத்துவங்களிலும், சுக்குமதத்துவங்களை பரதத்துவத்திலும் பாவனையால் லயிக்கச்செய்து சிவபதத்தை அடைதல் இதில் முத்திரைகள், மந்திரங்கள் தியானம் இஷ்டதேவதையின் பூசை முதலானவை இடம் பெறுகின்றன.

**II) சாந்தோபாயம்:**

மந்திர சக்தியின் வெளிப்பாடு பராசக்தி உலகமாக காட்சியளிக்கின்றது என்று எண்ணுவது மனனம் பேத உணர்வினின்று சீவனைக் காப்பது தாரணம். இவை இரண்டின் சேர்க்கை மந்தரம் இதன் பெருமை பரமேசுவரனுடைய சக்தி சமாதி நிலையிலுள்ள யோகிகளிடம் பிரகாசிக்கின்றது.

**III) சாம்பவோபாயம்:**

ஒருவர் தனது இச்சா சக்தியினால் பரம்பொருள் சமாவேதத்தைப் பெறுகின்றான் அந்நிலையில் தானே அந்தச் சர்வகர்த்தாவாகவும் சர்வக்ஞனாகவும் உள்ள பரமேசுவரன் என்று அறிகின்றான். இவ்வறிவை குருவின் ஊடாகவும் பெறுகின்றான்.

**IV) அனுபாயம்:**

இங்கு திவிர சத்திநிபாத நிலை வேண்டற்படுகின்றது. சீவனின முயற்சி வெகு குறைவு இதில் ஜபம், தியானம், யாகம் இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டற்படுவதில்லை. இதனையே திருமூலர் "கண்ணிய சேதனன் கண்வந்த பேரருள் அண்ணல அடிசேர் உபாயமதாகுமே" என்று கூறுகின்றார். இறைவனின் அருட்சக்தி குருவடிவில் வந்து உயிரை உய்விக்கின்றது. என்பதும் இவற்றிலே குலம், பால், ஆசிரமம் என்ற பாகுபாடு இன்றி அனைவரும் முத்தி பெறுவதற்கு உரியவர்களே என்பது கணஷ்மீர சைவத்தினரின் கொள்கையாகும்.

இங்கு விடுதலை பெற்ற ஆன்மாவானது மாயை என்னும் மாயத்தினை வெற்றி கண்டு பிரமத்தோடு நீரில் நீர் சேர்வது போல பாலுடன் பால் கலப்பது போல இரண்டறக் கலந்து விடுகின்றது. இவ்வாறு தியானத்தின் மூலம் தனிமங்கள் யாவும் சிவன் என்ற பொருளாகி விடும் போது உலகை பிரமமாக காண்கிறவனுக்கு என்ன துன்பம் என்ன மயக்கம் ஏற்படும். என்பதும் இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றது.


1. **ஆதார உசாத்துணை நூற் பட்டியல்**

சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்
**மணிவிழாச்சபை வெளியீடு** - 1985

பக்கம் - 112

2. இந்துநாகரிகம் பாகம் I - 1995
**வித்துவான் க. சொக்கலிங்கம் M.A**
பக்கம் - 16

3. இந்துசமயத் தத்தவம்
**T. M. P. மகாதேவன்** - பக்கம் - 161




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரமும் சாஸ்திரமும் சமய வாழ்வினை எவ்வாறு வளம் படுத்துகின்றன ஆராய்க

இந்து சமய திருநூல்கள் வரிசையில் சிறப்பிடம் பெறுவது தோத்திரமும் சாஸ்திரமும் ஆகும். இவை சித்தாந்த நெறியை சிறப்பித்துச் செல்லும் வகையில் அவற்றின் இருகண்களாக போற்றப்படுகின்றன.

இத்தகைய நிலையில் தோத்திரமானது சிவபெருமானின் திருவுருவச் சிறப்புக்கள் அவரின் பரம் பொருளாந் தன்மைகள் அப்பெருமானை அடியார்கள் தம்கோயில் நிலையாக இருத்தி வழிபட்ட வகைகள் அவ்வழிபாடுகள் எக்காலத்திற்கும் எக்காலத்தவர்க்கும் ஆன்ம அனுபவங்களாய் நிலைத்து நின்று வழிகாட்டும் தன்மைகள் பழைய புராண இதிகாசச் செய்திகள் திருத்தலச் சிறப்புக்கள் அடியார் பெருமைகள் வேண்டுதல்கள் என்ற பல்வேறு விடயங்கள் அடங்கியிருக்கும்.

சாத்திரங்களிலே நியதியான முறையில் அநாதியான பொருளாம் முப்பொருள் அதாவது பதி, பசு, பாசம் ஆகியவற்றின் உண்மைகள் பதியை பசு அடைவதற்கான வழிவகைகள் அவற்றின் பேறாக வினைப்பயன்கள் போக்கும் முறைமைகள் அவற்றினால் ஆன்மா படும் துயரங்கள் என்பன மிக விரிவாக எடுத்துப் பேசப்படுகின்றன.

மேலும் இவற்றின் சிறப்பு நிலைகள் பற்றி நோக்கும் போதும் வேதாந்த தத்துவத்திற்கு உபநிடதங்கள் போல சைவசித்தாந்த தத்துவத்திற்கு தோத்திரங்கள் சாஸ்திரங்கள் அமைந்துள்ளன என சைவச்சான்றோர் கருத்துக்கள் கூறுவர். தோத்திரங்களில் முதல் ஏழு தொகுப்பும் சம்பந்தர் நாவுக்கரசர் சுந்தரர் முதலாம் மூவரினால் அருளிச் செய்யப்பட்டவை இவை தேவாரம் என்ற பொதுச் சொல்லால் வழங்கும் தேவாரம் வேதசாரம் என்பது ஆன்றோர் வாக்கு எட்டாம் தோத்திரம் திருவாசகம் நெஞ்சக்கண கல்லை நெகிழ்ந்துருகி ஆற்றல் வாய்ந்தது. இதன் சிறப்புச் சைவ மக்கள் மட்டுமன்றி வேற்றுநாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்று சமய மக்களையும் மிகுதியும் கவர்ந்தது திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த கலாநிதி ஜீ. யூ. போப் என்பார் திருவாசகத்தின் கனிவையும் ஆன்ம அனுபவத்தையும் சைவசித்தாந்த நுண்கருத்துக்களையும் பெரிதும் பேற்றியமை குறிப்பிடத்தக்கது. ஒன்பதாம் தோத்திரம் சிவநேயச் செல்வர்கள் ஒன்பதின்மார் இயற்றிய திருவிசைப்பாவும் அவ் வொன்பதின்மருள் ஒருவரான சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டும் பத்திநெறி வளர்ச்சிக்கு பெரிதும் உபகாரமானவை பத்தாம் தோத்திரம் திருமந்திரம் ஒரு காலத்திலே மங்கியிருந்த சைவநெறிக்கு மீண்டும் புத்துயிர் அளித்து அதன் தத்துவங்களை பேணிக்காத்து எமக்குத் தந்த ஞானக்கருவூலமாகும். சிவாகமங்களின் சாரம் முழுவதுமே திருமந்திரத்தினுள் அடக்கி விட்ட தெனலாம் இதன் சிறப்பு நோக்கி இதனை திருமூலர் சொல் என்று போற்றுவதும் வழக்கம் பதினோராம் தோத்திரத்தில் திருவாலவாய் உடையரான இறைவர் உள்ளிட்ட சைவச் சான்றோர் பன்னிருவரின் திருப்பாசுரங்கள் அடங்கியுள்ளன. பன்னிரண்டாம் தோத்திரம் சிவனடியார்கள் வரலாற்றையும் சிறப்புக்களையும் விரித்துரைக்கும் திருத்தொண்டர் புராணமாக அமைந்துள்ளது. இங்கு பத்திச்சுவை நனிசொட்டச் சொட்ட பாடப்பட்டுள்ள தன்மை படிப்போர் உள்ளங்களை எவ்வாறு பரவசப்படுத்தும் என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகின்றது.

சாஸ்திரங்களைப் பொறுத்த வரையில் சைவத்தின் முடிந்த முடிவான உண்மைப் பொருள்கள் பற்றி விளக்கும் தத்துவ நூல்களாக அமைந்து காணப்படுகின்றன. அத்துடன் குருபரம்பரை வாயிலாக எமக்கு கிடைத்த ஞானச் செல்வங்களாகவும் அவை அமைந்து காணப்படுகின்றன. அத்துடன் பதின்னான்கு நூல்காளாகவும் ஆறு ஆசிரியப் பெருமக்களால் உருவாக்கப்பட்டதாகவும் காணப்படுகின்றது.

## தோத்திரமும் சாஸ்திரமும்

மேலும் தோத்திரமானது சிவனென்னும் நாமத்தை தமக்கே உரிய செம்மேனி யெம்மானாகிய பரம் பொருளின் புகழ் பரவும் தெய்வப் பாமாலைகளின் தொகுப்பாக தொகையால் பன்னிரண்டு என போற்றிப் பரவப்பெறும் இருபத்தேழு அருளாளர்களின் திருவாக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்த அத்திருமுறைகளை திருநெறிய தமிழ் என்பர் சான்றோர் அரனின் அருள்பெற விரும்பும் அடியார்களோ அத்தெய்வத் திருநெறித் தமிழை தோத்திரம் எனக்கொள்வர் தோத்திரம் பகன்றிடும் அருள்வார்த்தை அனைத்தும் அம்மை அப்பனின் அருள் திறத்தை அள்ளித் தருவனவாகும் அவை தந்த திருவருளின் வழி நின்று திருவருள் வகுத்துக் கொடுத்த நெறியினை உணர்ந்து அந்நெறியினை உலகுக்குக் கொடுத்த நெறியினை கொடுக்கவேண்டிய சாஸ்திரங்கள் பின்னர் படைக்கப்பெற்றன. தோத்திரம் தந்த அருள்ளாளர்களும் சாஸ்திரம் படைத்த ஞானாசிரியர்களும் தங்களுக்கு கிடைத்த திருவருளை பாக்களாக்கவும் சூத்திரங்களாகவும் நமக்கு தந்து சென்றுள்ளனர் அவர்களின் இருநெறிகளும் வெவ்வேறாக அமைந்திருந்தாலும் அந்நெறி சென்றடையும் முடிவோ அந்தமிலான் திருவடியேயாகும் என்பதில் ஐயமில்லை.

இங்கு தோத்திரமும் சாஸ்திரமும் காட்டிடும் இறையனுபவங்கள் இறையில் கோட்பாடுகள் ஒன்றுக் கொன்று முரணாகாது ஒன்றையொன்று தழுவி ஒன்றிலிருந்து ஒன்று வளர்ந்து அருட் செல்வங்களாக மிளிர்கின்றன. எனலாம். இன்றைய மெய்பொருள் வல்லுனர்கள் இவை இரண்டையும் ஒப்பீடு செய்து இன்றைய இளைஞர் சமுதாயம் ஏற்கும் வண்ணம் பல வித கோணங்களில் எழுத்துரைகளாக தந்துள்ளனர்.

இந்நிலையில் சித்தாந்தத்தில் முதலிடம் பெறுவது முப்பொருள் இயல்பாகும். முப்பொருள் இயல்பைத் தோத்திரமும் சாஸ்திரமும் விளக்கமாகவும் விரிவாகவும் எடுத்து இயம்புகின்றன முப்பொருள் இயல்பில் முன்னதாம் முழு முதலாம் இறை இயல்பினை தோத்திரங்கள் அனுபவ நிலையில் விளக்கிட சாத்திரம் சான்று காட்டி நிறுவுகின்றது எனலாம். ஆனால் அதே நேரத்தில் தோத்திரம் சுருங்கக் கூறியதை சாஸ்திரம் விரிவாகவும் விளக்குகின்றது. என்பதை நாம் உணர வேண்டும் உதாரணமாக இறைவன் நிலையை அகர உவமையில் எடுத்தியம்புவது சைவத் திருநூல்களின் மேன்மையாகும். "அகர முதலான அணி ஆப்பனூரானை" என பாலறவாயராம் சம்பந்தப் பெருமானும "ஆனைத்து முன்னெழுத்தாய் நின்றார் போலும்" என வாகீசராம் அப்பரும் "அகர முதலின் எழுத்தாகி நின்றாய்" என தம்பிரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழராம் சுந்தரரும் இறைவனின் இயல்பை அகர உவமையால் சுட்டி உள்ளனர். இத்தகைய தோத்திரக் கருத்துக்கள் சாத்திரத்தில் இடம்பெறும் பொழுது சிறந்ததோர் வளர்ச்சி அடைந்துள்ளது. எனலாம்.

இத்தகைய நிலையில் 13ம் நூற்றாண்டின் இறுதியில் சித்தாந்த அட்டகம் தந்த உமாபதி சிவாச்சாரியார்" அகர உவமையை "தம் முதற்குறட்பாவில் பயன்படுத்தி உள்ளார்.

**"அகர உயிர் போல் அறிவாகி எங்கும்**
**நிகரிலிறை நிக்கும் நிறைந்து"**

என்பது அக்குறட்பாவாகும் இங்கு தனக்குவமை இல்லாதவனுக்கு அகர உவமை காட்டியது பொருந்துமா என்ற வினாவை எழுப்பி அதற்குவிடையாக எழுத்துக்களில் அகரம் பொருந்தியிருப்பது போன்று எல்லாப் பொருட்களிலும் இறைவன் பொருந்தியிருக்கின்றான் என்ற பொருளை குறட்பா தருவதோடு அகரத்திற்கும் இறைவனுக்கும் உள்ள வேறுபாட்டையும் குறிப்பாக தருகின்றார். அகரம் மற்ற எழுத்துக்களோடு புணர்ந்து ஒரு கால் நீங்கும் இயல்புடையது ஆனால் அப்படிப்பட்ட நிலையில் இறைவன் இல்லை அவன் எப்பொருளினும் நீக்கமின்றி நிற்கின்றான் என்பதே அவ்வேறுபாடு இத்தகைய வேறுபாட்டை சுட்ட சிவனார் குறளில் நிறைந்து என்ற சொல்லை பெய்து வைத்து அறிவுறுத்துகின்றார் மேலும் உவமை கூறினாலும் அவனுக்கு உவமை இல்லை என்பதனை "நிகரிலிறை'' என்ற சொல்லால் பெறவைக்கின்றார். இக்கருத்து தோத்திரத்திலிருந்து சாத்திரம் வளர்ந்ததைக் காட்டுகின்றது.

மேலும் தோத்திரம் காட்டியதனை சாஸ்திரம் வலியுறுத்தியதனை முப்பொருள்களின் தடத்த சொரூப இலக்கிணங்களை கூறும் போது முழுக்கமுழுக்க இடம் பெறுகின்றது. உயிரின் இலக்கணத்தை சுட்டும் போது பலவிதமான வேறுபட்ட கருத்துக்கள் தோன்றுவது இயற்கை ஆனால் தோத்திரம் கூறுவதை சாத்திரங்கள் சற்றேனும் மாறாமல் தெளிவாக ஏற்றுக் கொண்டே இலக்கணம் வகுத்துள்ளன. உயிர் தூல உடம்பிலிருந்தும் சூக்கும உடம்பிலிருந்தும் பிரிந்து செல்வதைக் கூறும் போது சாஸ்திரங்கள் தோத்திரங்களை அடியொற்றியுள்ளன. எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்திரங்களுக்கு தோற்றுவாயாக அமைந்த தோத்திரநூலாகிய திருமந்திரப் பாடலில் உயிரானது உடம்பிலிருந்து பிரிவதனை

**"நாக முடலூரிபோது நல்லண்டா**
**மாக நனாவிற்கனா மறந்தல்லது**
**போகலு மாகும் அரனருளாலே சென்**
**றேகு மிடஞ் சென்றிருப்பயன் உன்னுமே"**

என எடுத்துக் காட்டி உயிர் தூல உடம்பினை விட்டு வேறு தூல உடம்பினை பெறுவதற்கு பாம்பு சட்டையைக் கழற்றிப் புதிய சட்டையை பெறுவதையும் தூல உடம்பு விட்டு சூக்கும உடம்பைப் பெறுவதற்கு நனவு உடம்பிலிருந்து நீங்கி கனவு உடம்பிற்கு செல்வதையும் உவமையாக கூறுகின்றது இதனை அப்படியே அடியோற்றிச் சிவஞானபோத வெண்பா கருத்து விளக்கிச் செல்கின்றது. திருமூலர் நாகமுடலூரி போலும் என்ற தொடரை பயன்படுத்தி அதே கருத்தை சிவஞானபோத வெண்பா வெளிப்பாடையாகவே காட்டும் நிலையில்

**"அரவு தன் தோலுரிவும் அக்கனவும் வேறு**
**புரகாயம் போய் வருமப் பண்பும் - பரவின்**
**குடாகாயை வாகாயக் கூடத் தாட்டம் என்ப**
**கடா துள்ளம் போமாறது"**

என்ற பாடல் மூலம் புலப்படுத்துகிறது. இவ்வெண்பாவில் "அரவுதன் தோலுரிவு என்ற தொடர் மூலரின் கருத்தை உட்படுத்தி விளக்கியிருப்பது படித்து இன்புறத் தக்கதாகும்.

அடுத்து உயிர் முத்தி நிலையில் எவ்வாறு இருக்கும் என்பதனை தோத்திரமும் சாஸ்திரமும் மிகத் தெளிவாக காட்டுகின்றன. ஆன்மா சிவத்தோடு ஒன்றியைந்து சிவமாகிய நிலையிலும் இறைவனுக்குரிய ஐந்தொழிலைச் செய்யாது முத்தி நிலையிலும் இறைவனுக்கு அடிமையாய்ச் சிவாநுபவ நுகர்ச்சி ஒன்றிற்கே உரிய தாக அமையும் என்பது சைவம் கணட முடிந்த முடிவு இதனையே "சித்தமலம் அறு வித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்" என்பார் மணிவாசகர் அப்பெருமான் கூறிய அத்தொடரில் சித்தமலம் அறுந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பேறு கிடைத்தது என்பது கூறப்பெற்ற பின் "எனையாண்ட" என்னும் அமைப்புக் காணப்பெறுவது முன்கூறிய கருத்தை வலியுறுத்தும் இதனையே மிகச் சிறப்பாக சாத்திர வித்தகர் அருணந்தி சிவாச்சாரியார்

உம்பர் பிரான் உற்பத்தியாதிகளுக்குரியன் உயிர்தானும் சிவாநுபவம் ஒன்றினுக்கும் உரித்தே எனப் பகர்வர்.

தோத்திரப் பாடல்களில் மலத்தினுடைய எண்ணிக்கை வகுத்துக் கூறப்பெறவில்லை ஆனால் அதே நேரத்தில் மலமெனும் பாசத்தை அவர்கள் குறிக்காமல் இல்லை "பாசமாம் பற்றறுத்து" என்று மாணிக்கவாசகரும் பாசமறுத்தது எனச் சம்பந்தரும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாம். தேவார ஆசிரியர் குறிப்பாகக் காட்டிய மலத்தை சாத்திர வல்லுநர்கள் வகைப்படுத்திக் காட்டியுள்ளார்கள்.

"திரிமலத்தார் ஒன்று அதனில் சென்றார்கள் அன்றி ஒரு மலத்தாரயும் உளர். என்பன போன்ற சாஸ்திரக்கருத்துக்களை காட்டாகக் காட்டலாம் எனவே சாஸ்திரம் தோத்திரம் கூறிய தொகைகளை விரித்துக் காட்டும் பண்பிலும் உயர்ந்து நிற்கிறது எனலாம். ஆணவமலம் பற்றிய கருத்துக்களை தோத்திரம் கூறியதை விட சாத்திரம் விளக்கி உரைக்கின்றது. அத்தகைய வளர்ச்சிக்கு காரணம் சாத்திர காலங்கள் சித்தாந்த கொள்கைகளில் வளர்ச்சியடைந்திருந்தமையே ஆகும்.

அடுத்து தோத்திரங்களில் இடம்பெற்ற கருத்துக்கள் மட்டும் சாஸ்திரங்களில் அமையாது தோத்திரச் சொற்றொடர்களும் அப்படியே சாத்திரங்களில் இடம்பெற்றிருப்பதை கான முடிகிறது. இதற்கு பல உதாரணங்கள் காணப்படுகின்றன அதாவது

செய்வினையும் செய்வாவானும் அதன் பயனுங் கொடுப்பானும் மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக் கொண்டே என்பது பெரியபுராணம் தந்த எம்பெருமானாம் சேக்கிழாரின் அருள்மொழியாகும். இதனை அடிச்சுவடாகக் திருவருட்பயன் ஆசிரியர்

**"செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்**
**"ூ உய்வான் உளன் என்று உணர்"**

என்று பயன்படுத்தியிருப்பதை நாம் காணலாம் மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

162 Gyanoo

வினையா மசத்து விளைவதுணரார்
வினை ஞானம் தன்னில் வீடலுந்தேரார்

என்ற திருமந்திரம் கூறும் பகுதியும்

"வினையாலசத்து விளைதலான் ஞானம்
வினை தீரின் அன்றி விளையாவாம்

என்ற சிவஞானபோத வெண்பாவும் ஒப்பீட்டுப் பார்த்து மகிழத் தக்கதாகும்.

மேலும் முத்தி நிலையில் தாள்தலை எனும் இரு சொற்களும் புணருங்கால் தாடலை ஆவதுபோல் ஆன்மாவும் சிவனும் பிரித்தறிய முடியாது சிவன் ஆன்மாவின் கண்ணும் அடைந்திருக்கும் என்பது சைவப்பெரு நூல் முடிவாகும் இதனை குறிப்பாக சேக்கிழார் பெருமான்

தங்கள் பெருமான் அடி நீழல் தலையாம்
நிலைமை சார்வுற்றார்"

என்று குறிப்பிடுவார் இக்குறிப்பை நமக்கு நன்கு புலனாகும் வண்ணம் திருவருட் பயன்ஆசிரியர்

"தாடலைபோல் கூடியவை தான் நிகழாவேறின்பக்
கூடலைத் நீ ஏகம் எனக் கொள்"

எனக் கூறுவார். இத்தகைய நிலையில் சாத்திரங்கள் கருத்துக்களாலும் சொல்லாட்சியாலும் தோத்திரங்களை அடியொற்றிச் செல்வதை நாம் காண முடிகின்றது.

இத்தகைய செயல் திறன்கள் இவை சமய வாழ்வினை வளம்படுத்த அவற்றின் சிறப்புக்களை பாமரமக்களுக்கும் என்றுமே எடுத்து இயம்பிநிற்கும் பொருட்டு உருவாக்கப்பட்ட தன்மை அவை சமயவாழ்வில் பெறும் சிறப்பினை உணர்ந்து கொள்ளக் காரணமாகின்றன.

## உசாத்துணை நூல்கள்


1. தெல்லிப்பழை அருள் மிகு துர்க்காதேவிதேவஸ்தானத்தில் நடைபெற்ற பவள விழா மலர் மகாநாட்டு உரை நிகழ்ச்சிகளில் தொகுப்பு - 1981
   **புலவர் பழ முத்தப்பன் M.A** - பக்கம் - 75 - 80
2. இந்து நாகரிகம் பாகம் I 1995
   **வித்துவான் க. சொக்கலிங்கம்** - பக் - 9 - 10
3. இந்துநாகரிம் க.பொ.த உயர்தரம் - வினாவிடை 2001
   **ஆசிரியர் சி. சோதிலிங்கம்** - பக் - 128




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கக் கட்டுரைகள்

### சித்தாந்த சாத்திர நூலிகளிலே

# திருவருட்பயன்

சித்தாந்த சாஸ்திர நூல்கள் பதினான்கினுள் ஒன்றாக உமாபதி சிவாச்சாரியாரால் 1307 ஆம் ஆண்டு செய்தருளப்பட்ட நூலாக காணப்படுவது திருவருட்பயன் திருவருட்பயன் என்பது திருவருளின் பயனை எடுத்தியம்புவது உமாபதி உருவாக்கிய சித்தாந்த அட்டகங்களில் முதல்நிலையில் வைத்தென்னப்படுவது சிவத்தின் பிரகாசத்தால் சிவப்பிரகாசத்தினை உருவாக்கி ஆசிரியர் அடுத்த நிலையில் சிறப்பும் பெரும் பயனும் உள்ள நூலாக இந்நூலினை உருவாக்கிய நிலையில் இது சைவசித்தாந்த உண்மைகளை மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்தியம்பும் நூலாகக் காணப்படுகின்றது.

இந்நூலானது திருக்குறள் வெண்பாக்களால் விளக்கப்பட்டநிலையில் பத்துத் தலைப்புக்களில் ஒவ்வொன்றும் பத்துக் குறள்களைக் கொண்டதாக எளிமை, இனிமை மனதில் பதியும் தன்மை கொண்டு திருக்குறளுக்கு நிகராக ஒப்பிடக் கூடியதாக அமைந்துள்ளது. இங்கு 101 குறள் வெண்பாக்கள் கொள்ளப்பட்ட நிலையில் முதல் பாடல் விநாயக கடவுள் வணக்கத்துடன் அமைய ஏனைய 100 குறள்களும் திருவருளின் உபசரிப்புத் தன்மைகளை எடுத்து இயம்புவன.

இங்கு நாற்பாதத்திலும் இறுதியான ஞான பாதத்தார் அறிய வேண்டிய பதி, பசு, பாச இயல்புகளையும் திருவருளாகிய குருவின் தீட்சையால் ஆன்மா முத்தி பெறும் வழிவகைகளையும் விளக்கும் முதல் ஐந்து அதிகாரங்களிலும் திருவருளின் இயல்பையும் பின் ஐந்து அதிகாரங்களிலும் திருவருளின் பயனையும் கூறுகின்றது.

திருவருளுக்கு முதற் காரணனான பதியின் இயல்பு முதலாம் அதிகாரத்திலும் திருவருளைப் பெற்று உய்வதற்குரிய உயிரியல்பு இரண்டாம் அதிகாரத்திலும் திருவருளின் துணையால் நீக்கப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவின் உபதேச வழி நின்று மெய்யுணரும் முறை ஆறாம் அதிகாரத்திலும் அதனால் ஆத்ம சொருபத்தை அறிதல் ஏழாம் அதிகாரத்திலும் அவ்வழியே மெய்யணர்வாகிய சிவபோதம்பெற்ற ஆன்மா சிவபோகத்தை அனுபவித்தல் எட்டாம் அதிகாரத்திலும் திருவருட்சத்தி வடிவாய் முத்திக்கு வித்தாய் இருக்கின்ற பஞ்சாட்சர மந்திர இயல்பு ஒன்பதாம் அதிகாரத்திலும் முடிந்த பயனாகிய சீவன் முத்தி நிலை பெற்றோர் தன்மை பத்தாம் அதிகாரத்திலுமாக இங்ஙனம் பின்னைந்து அதிகாரங்களும் திருவருளின் பயனைக் கூறும்.

முதல் அதிகாரமான பதிமுது நிலையில் பதியின் சிறப்பியல்புகள் பலவகை எடுத்தியம்பிய நிலையில்

"அகர வுயிர் போல் அறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து."

என்ற குறள் ஊடாக அகரமாகிய உயிா மற்றெல்லா எழுத்துக்களுடனும் கலந்து பிரிவின்றி நின்றாற் போலத் தனக்கோர் உவமை இல்லாத கடவுள் உயிர்களிலெல்லாம் ஒழிவுற நிறைந்து அசைவின்றி நிலை பெற்றிருப்பான் என்பதும் அவன் தனது நிலையினை உயிாகள் சாரும் வண்ணம் செய்யும் வல்லமை வாய்ந்த சத்தியோடு பிரிவின்றிக் கலந்து விளங்குவான். எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி அவற்றிற்கும் அப்பாலாய் நிற்கும் பெருமைக்கும் நுண்ணிய பொருள்களிலும் மிக நுண்ணியதாக விளங்கும் நுண்மைக்கும் பயன் கருதாது உயிர்கள் மேல் என்றும் இரக்கமுடையவனாக இருக்கும் பெருங் கருணைக்கும் உயிர் அறிவினால் அறிய முடியாமல் இருக்கும் பேற்றின் அருமைக்கும் ஒப்பில்லாதவனாய் இறைவன் நிலவுகின்றான். எல்லாவற்றையும் படைத்தும் காத்தும் உயிாகளின் பிறப்பு இறப்புக் கேதுவாகிய ஆணவமலம் என்னும் குற்றத்ததோடு அவற்றை ஒடுக்குகின்றவனும் அவற்றிற்கு என்றும் புகலிடமாய் நிற்பவனும் இறைவனே யாவன் அவன் உருவத்திருமேனிகளையும் அருவத்திருமேனிகளையும் உயிர்களுக்கு அறிவாய் விளங்கும் ஞானத்திருமேனியும் உடையவன் உயிர்களெல்லாம் அறிவிக்க அறியும் தன்மையுடையவனாக விளங்குவதால் அவைகள் தமக்கு மேலானதொரு இறைவனை உடையனவாகும். இறைவன் தமக்கு மேலான ஒருவனை உடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனல்லன். வெந்நீரில் உள்ள சூடு போல எல்லா உயிர்களுடனும் எல்லா இடத்திலும் இறைவன் ஒருவனே கலந்து நிற்கும் ஆற்றல் உடையவன் அங்ஙனம் கலந்து நிற்கும் பொழுது அவ்வுயிர்களின் தன்மையை எய்தாமல் தன் தன்மையுடையவனாகவே இறைவன் விளங்குவான். இறைவன் உயிர்களின் அறிவுக்கறிவாய் நின்று பிறவி நோயைத் தீர்க்கும் மருத்துவனாக நிலவுகின்றான் அவனை என்றும் நினைத்தால் உயிர்களுக்கு நன்மையுண்டாகும் என்பதற்கோர் ஐயமில்லை என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

உயிரவை நிலையிலே பலவாய உயிர்களின் தன்மை பற்றிக் கூறப்பட்ட நிலையில் உயிர்கள் பிறந்த கால அளவையும் இனி அவைகள் பிறக்கப் போகும் கால அளவையும் அறிய முடியாமை போலவே இறைவன் திருவடிகளை அடைதற் பொருட்டு துறந்தவர் தொகையையும் இனித் துறப்போர் தொகையையும் அறிய முடியாது என்பது

**" பிறந்த நாள் மேலும் பிறக்கு நாள் போலுந்**
**துறந்தோர் துறப்போர் தொகை"** ௭

என்ற குறளடியாக எடுத்து விளக்கப்பட்டுள்ளது அத்துடன் ஆன்மா விஞ்ஞானகலர், பிரளயாகலர் சகலர் என மூவகைப்படுவர் மூவகை உயிர்களும் ஆணவ மலத்தை உடையவரே ஆவர் நனவிலே அறிந்தவற்றைக் கனவிலே மாறாகக் காணும் உயிர்களுக்கு நிலைத்த அறிவும் இல்லை உறுதியான செயலும் உளவாகாது மெய் முதலிய பொறிகளின் உதவியின்றி ஒன்றையும் அறிய மாட்டாத உயிர்கள் அறிவு என்ற பெயர் மிகப் பொருத்தமில்லாத தென்றே கூறலாம். விழித்து நோக்கும் கண்ணிலே ஒளி இல்லாது போனால் ஒளியும் இருளும் உலகமும் எவ்வாறு அறியப்படும் அங்ஙனமே இறைவனின் திருவருளும் தத்துவங்களின் உண்மையையும் ஆணவத்தால் மயக்கமுற்ற அறிவு விளக்கமில்லாத உயிர்களுக்கு எவ்வாறு தோன்றும் நிலைபெற்ற ஞானமாய் விளங்கும். இறைவன் நிலையில்லாத சடப் பொருளைச் சாரமாட்டான். அவற்றைச் சுட்டி அறியவும் மாட்டான். அசத்தாகிய உலகப் பொருட்கள் சத்தாகிய இறைவனை உணரமாட்டா. சத்தாகிய இறைவனையும் அசத்தாகிய உலகப் பொருட்களையும் பகுத்தறியவல்ல உயிர் சதசத்தெனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் பெறும். உலகில் இருளில் இருளாய் விளங்கியும், ஒளியில் ஒளியாய் விளங்கியும் நிற்கும் பொருள்கள் காணப்படுகின்றன. இங்ஙனமே உயிரும் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் தன்மையுடையதாகும். பகலில் கண்ணொளி விளக்கமில்லாத கோட்டானுக்குச் சூரியனின் ஒளியும் இருளாகவே இருக்கும். அங்ஙனமே ஆணவச் சார்புடைய உயிர்களுக்கு இறைவனின் திருவருளானது தோன்றாது மறைந்து நிற்கும். நீண்ட காலம் பிறந்தும் இறந்தும் வருந்துகின்ற உயிர்கள் எப்பொழுது திருவருளை உணருமோ அப்பொழுது தான் தமது துன்பத்தில் இருந்து அது விடுதலையடைய முடியும் என்பதும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் அதிகாரமாகிய இருண் மலநிலையிலே அறியாமையே வடிவமாகிய இருண்மலம் என்னும் ஆணவத்தின் தன்மைபற்றி கூறப்பட்டுள்ளது. தொனறு தொட்டே தொடர்ந்து வருகின்ற பிறப்பு இறப்புத் துன்பங்களும் மேலாய வீட்டின்பமும் இவற்றை முறையே கூட்டி வைப்பதான மும் மலங்களும் சிவமும் இல்லை என்பது எவ்வாற்றானும் பொருந்தாத கொள்கையாகும். உலகின் கண்ணுள்ள பொருள்களையும் அவற்றின் வேறுபட்ட குணங்களையும் தோன்றாவண்ணம் மறைந்து நிற்கும் பொருள் இருளேயன்றி வேறொன்றுமில்லை. இங்ஙனமே உயிரின் அறிவை மறைத்து நிற்பது இருண்மலமாகிய ஆணவடேயன்றி வேறொன்றுமில்லை என்பது எடுத்துக்காட்டப்படுமிடத்து

**" இருளான தன்றி யிலதெவையும் ஏகப்**
**பொருளாகி நிற்கும் பொருள்"**

என்பதனூடாக வலியுறுத்தப்படுகின்றது மேலும் இருள் தான் மறைத்த பொருளின் உருவத்தைக் காட்டாவிட்டாலும் தன் வடிவத்தைக் காட்டும் ஆணவமானது தன்னையும் காட்டாது பிறபொருளையும் காட்டாது இந்த ஆணவம் உயிரின் அகத்தில் உள்ளொளியாக நிற்கும் சிவத்தைச் சாராமல் அநாதியே உயிர்களைப் பிணித்து நிற்கும் தன்மையுடையது ஆணவமாகிய பெண் பல. உயிர்களைப் புணர்ந்து நின்று தனது தலைவர்களாகிய உயிர்களுக்குத் தன்னைக் காட்டாது மறைக்கும் கற்பினை உடையவளாவாள் ஆணவத்தைப் பற்றிப் பலவாறு கூறுவதனால் ஒரு பயனுமில்லை உயிர்கள் அறிய வேண்டியபொருளை அறிவதற்கான மெய்யுணராச்சியைப் பொருந்தாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயக்கத்தைப் பொருந்தி நிற்கும் தன்மையெல்லாம் ஆணவம் கொடுத்ததென்று தெரிய வேண்டும். ஆணவமில்லையானால் உயிர்களுக்குப் பிறவித்துன்பம் உண்டாகாது. ஆணவம் உயிர்களுக்கு இயல்பாகவே உள்ள குணமானால் சிவ ஞானத்தினால் ஆனவம் நீங்கும்பொழுது உயிரும் அழிந்து விடும். அங்ஙனம் உயிர் அழியாது நிற்றலால் உயிரின் பிறவித்துன்பங்களுக்கு காரணம் ஆணவமேயாகும். ஆணவம் இடையில் வந்து உயிரைச் சேர்ந்ததானால் அங்ஙனமது இடையிலே வந்து சேர்ந்ததற்குக் காரணம் வேண்டும் காரணமில்லையானால் முத்தி நிலையிலும் ஆணவம் உயிருடன் பொருந்தக் கூடும் இதனால் ஆணவம் ஆண்மாவுடன் அநாதியே பொருந்தியது. என்பதனை உணரலாம். உயிர்கள் மாயையினால் தனு, கரண, புவன, போகம் முதலிய கிடைக்கப் பட்டபோதும் ஞானத்தைப் பெறமாட்டாதாயின் ஆணவம் ஒருபோதும் அவைகளை விட்டு நீங்காது. இராக் காலத்திலே உள்ள இருளைப் போக்குவதற்குக் கைவிளக்குப் பயன்படுதல் போல மாயையின் காரணங்களாகிய தனு கரணம் முதலியன இறைவனின் திருவருளாகிய கதிரவன் ஒளி தோன்றுமளவும் ஆணவ இருளைச் சிறிது போக்கத்தக்க அறிவைக் கொடுக்கும் என்பது இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

நான்காம் அதிகாரமாகிய அருளது நிலையிலே திருவருளின் தன்மை பற்றி கூறப்பட்டுள்ளது. ஒருவருக்கு மிக இன்றியமையாததாய் ஒரு பொருள் வேண்டிய காலத்தில் அப்பொருளிலும் சிறந்த பொருள் உயிர்களுக்கு இல்லை. திருவருள் என்பது இறைவனின் கருணையாகும் அது சூரியனின் ஒளிபோல் என்றும் எங்கும் வியாபித்திருக்கும் தன்மையுடையது. சடப்பொருளாகிய உடம்புக்கு ஒருகாலமும் அறிவு உண்டாவதில்லை. ஆணவமலத்தால் பிணிக்கப்பட்ட உயிர்கள் தாமாகவே ஒன்றை அறியத்தக்கனவல்ல. திருவருள் அறிந்து அறிவிக்காவிடில் அறிவைப் பெறுபவர் யார்? ஒருவருமில்லை. திருவருளின் கண் தங்கி வாழ்கின்ற உயிர்கள் அத் திருவருளின் வழிப்பட்டுப் பேரின்பத்தை நுகராமல் உலகப் பற்றாகிய கடலில் அமிழ்ந்திக் கிடக்கின்றன. திருப்பாற் கடலில் வாழ்கின்ற மீன்கள் பாலைப் பருகாமல் சிறு உயிர்களைத் தேடிக் கொன்று தின்பது போலவே திருவருளை மறந்து உலகப்பற்றில் அழுந்திய ஆன்மாக்களின் செயல் என்று கூறலாம். தரை எல்லாவற்றையும் தாங்கி நிற்பது போலவே திருவருள் ஆதாரமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று நம்மை நடத்துகின்றது. திருவருளை உணராதவர்கள் தற்கேடர்களேயாவர் திருவருளை எங்கும் போய் நாம் தேடவேண்டியதில்லை. திருவருளின் எல்லைக்குள்ளேயே எப்பொழுதும் நாம் தங்கியிருக்கின்றோம். சிற்றின்பத்திலே எமது உள்ளம் ஈடுபட்டு நிற்கும் வரையும் திருவருளை அறிய முடியாது ஞான நூல்களை உலகப்பற்றால் மன அமைதியின்றிக் கேட்டால் உறியிலிருக்கும் பாற்குடத்திலுள்ள பாலைப்பருகாமல் பாற்குடத்தில் நின்று பாய்ந்து இறப்பில் ஓடும் பூச்சியைப் பிடித்துத் தின்ன முயன்ற பூனையின் செயல்போல் பயனற்றதாகும் என்பது எடுத்துக் காட்டப்படும் நிலையில்

"பரப்பமைந்து கேண்மினிது பாற்கலன் மேற் பூளை
கரப்பரந்து நாடும் கடன்."

என்பதனூடாக எடுத்து இயம்பி இவ்வாறு இல்லாது திருவருட் பேறு பெற வேண்டும். திருவருட் பேற்றையடையாதார் வீடுபேறு எய்தமாட்டார் என்பதும் இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

ஐந்தாம் அதிகாரமாக அருளுருநிலையில் ஞான வடிவாகிய குருவினது தன்மை பற்றிப் பேசப்படுகின்றது. இங்கு தோன்றாத் துணையாய் நின்று உயிர்களுக்கு அறிவித்து அருளிய திருவருள் கண்ணாற் காணப்படும் குருவடிவமாய்த் தோன்றி உயிர்களை விட்டு நீங்காமல் நின்று அருள் புரிகின்றது. ஒரு வீட்டில் ஒருவருடன் கூடி வாழ்கின்றவர்கள் தான் அவருக்குரிய பிணியை அற்வார்கள். உலகில் உள்ளார் அப்பிணியை அறியமாட்டார்கள். இங்ஙனமே உயிருக்குள்ள மலப்பிணியை அவ்வுயிருடன் கலந்து நிற்கும் இறைவன் திருவருளே அறியும். தன்மையுடையதாகும். அருளுருதல் தோன்றாவண்ணம் குருவடிவில் மறைந்து நின்று அருள் செய்யவந்த திருவருளை யார் அறிவார்கள் நிலையில்லாத உடலையம் ஆணவத்தால் மறைக்கப்பட்ட அறிவையும் உடையவாகளாய் உள்ளவர்கள் திருவருளையும் அத்திருவருளின் வடிவமாயுள்ள குருவையும் காணமாட்டார். விலங்கு முதலியவற்றைப் பிடிப்பதற்கு அவைபோன்ற பழக்கப்பட்ட மிருகங்களையே கருவியாகக் கொள்வதுபோல இறைவனும் மக்களை உய்யக் கொள்வதற்கு மக்கள் வடிவமாகிய குரு உருவத்தை தாங்கி வருவதனை எடுத்துக் காட்டுவதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருள் குருவடிவம் தாங்கி வருவதால் உயிகளுக்கே பயன் உண்டாகுமன்றி இறைவனுக்கு யாதொரு பயனுமில்லை ஒருவன் உடலில் பாம்பு தீண்டியதினால் ஏறிய நஞ்சானது பாம்புக்குப் பகையாகிய கீரி அவனைத் தீண்டியவுடன் இறங்காது கீரியாகத் தன்னைப் பாவிக்கின்ற மந்திரவாதியின் பார்வையாலேயே நஞ்சு இறங்கும். இங்ஙனமே ஆணவ மலமும் இறைவனின் திருவருள் குருவடிவாய்த் தோன்றி அருள்புரிவதால் நீங்காது அருள் வடிவாய் விளங்கும் குருவினால் சகலராகிய உயிர்களின் மலம் நீங்கும். விஞ்ஞான கலர்ருக்கு இறைவன் உள்நின்றே அருள் புரிவான். பிரளயகலர்ருக்கு நேராகத் தோன்றி அருள் புரிவான் இங்ஙனம் இறைவன் அருள் புரியாவிட்டால் வீடு பேற்றினபத்தை எத்தகையோரும் அடைய முடியாது. சூரிய காந்தக்கல் சூரியனின் எதிர்ப்பாட்டால் நெருப்பை வெளிப்படுத்திப் பஞ்சை எரிக்கின்றது. சூரியனின் எதிர்ப்பாடு இல்லாவிட்டால் சூரிய காந்தக் கல்லில் நெருப்புத் தோன்றாது. இங்ஙனமே குருவின் அருள் இல்லா விட்டால் உயிர்கள் சிவஞானத்தைப் பெற முடியாது என்பதும் இங்கு எடுத்துரைக் கப்பட்டுள்ளது.

ஆறாம் அதிகாரமான அறியுநெறியில் உண்மைப் பொருளை அறியும் முறமையும் அதில் குருவின்நிலை அக் குருவருளினால் அறியும் மெய்ப்பொருளுண்மை என்பன எடுத்துக்காட்டப்படுகின்றது. இங்கு ஒன்றையொன்று ஒவ்வாது வளர்ந்துவரும் புண்ணிய பாவங்கள் இரண்டையும் ஒன்றாக மதிக்கும் எண்ணம் ஆன்மாவின் உள்ளத்தில் உண்டானால் இறைவனுடைய திருவருட்சத்தி ஆன்மாவில் பதியும் ஒருவனாகிய இறைவனும் பலவாகிய ஆன்மாக்களும் ஆணவம், கன்மம் என்னும் மலங்களும் சுத்தமாயை அசுத்தமாயை என்பனவுமான ஆறு பொருள்களும் அநாதியானவைகளாகும். ஆன்மாவாகிய நீ உய்தற்பொருட்டு வினையை செய்வானும் சேர்ப்பானும் செய்வினையும் அதன் பயனும் உண்டென்பதை உணர்வாயாக. உடம்போடு ஒற்றுமைப்பட்டு நிற்கும் ஆன்மா சிவஞானத்தோடு கூடி வேறற நிற்கும் தன்மை உடம்பின்கண் உயிர் வேறறக் கலந்து நிற்கும் தன்மையைப் போன்றதாகும். பளிங்கானது தன் நிறத்தையும் தன்னைச் சார்ந்த பிற பொருள்களின் நிறங்களையும் பெற்று விளங்குவதற்கு சூரியனின் கதிர்கள் காரணமாதல் போல் இறைவனின் அறிவு ஆற்றல்கள் உயிர் தத்துவங்களில் கட்டுப்படுத்தற்கும் அவற்றை நீங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டின்பத்தை அடைவதற்கும் காரணமாகும் என்பதை உணர்தல் வேண்டும். உயிரின் செயல் வழிநின்றே ஐம்புலன்கள் தொழிற்படுதல் போல் உயிரானது தனது செயல்களையும் இறைவன் செய்வழி நிகழ்வனவென்றே உணர வேண்டும். ஞானம் எப்படி இருக்கும் எங்ஙனம் எம்மை வந்தடையும் என்றெல்லாம் நீ ஆராயாதே. உலக விடயத்தை நினைத்தல் போல் ஞானத்தைப் பற்றி ஊன்றிச் சிந்தியாதே. நீ முந்திப் பாராதே. ஞானமானது தானாகவே வந்து உனக்குத் தோன்றும். அப்பொழுத காண்பாய் ஞானத்தையடைந்தபின் உண்டாகும் பேரின்பத்தையே நீ நுகரும் பொருளாக நினைந்து ஞானமாகிய பேரொளியே கருவியாகக் கொண்டு இன்பத்தில் மூழ்கி நிற்பாயாக திருவருளாகிய ஞானம் உனக்கு எப்படி வெளிப்பட்டதோ அப்படியே அதனைக் கண்டு அற்யாமையை நிக்கி அது மீண்டும் தோன்றா வண்ணம் ஞானத்தின் வயப்பட்டு இருக்க வேண்டும் என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

ஏழாம் அதிகாரமாகிய உயர்விளக்கத்திலே ஆன்மா யான் எனது என்னும் செருக்கறுத்து மலநீக்கம் பெற்ற தன்மை கூறப்படும் நிலையில் ஆன்மா தூய்மைப்படுத்தலே தூய அறிவாளனாகிய இறைவனை அடைவதற்கு வழியாகும். ஆன்மாவின் அறிவில் இருவினை ஒப்புத்தகுதி உண்டாக வேண்டும். மலம் வலிகெடுதலாகிய மலபரிபாகம் தான் திருவருளைப் புலப்படுத்தும் அறியாமையின் முனைப்பு அடங்கினால் அன்றி அருள் தோன்றாது ஆணவ முனைப்பு உண்டாகாமல் இருத்தல் திருவருளுக்குள் நாம் இருத்தலைக் காட்டும் குருடர்களுக்கு எப்பொழுதும் இருட்டே இருப்பதாகத் தோன்றுதல் போல் மலச்சார்புடைய ஆன்மாவுக்குப் பாசந்தான் உண்மைப் பொருளாகத் தோன்றும் திருவருள் வழியே நிற்பவரை வினைப்பயன்கள் தொடரமாட்டா திருவருளின் துணையில்லாமால் சிவத்தினை அடைதல் முடியாது திருவடிக்கீழ் அடிமையாகி நிற்கும் ஆன்மாவுக்கு ஐம்புலன்களால் வரும் துன்பங்கள் நீங்கிப் போம் விளக்கொளியை முன்னிட்டுச் சென்று பொருளை அடைவதுபோல ஆன்மா திருவருளை முன்னிட்டுச் செல்லின் இறைவனைச் சேரும் ஆன்மாவே திருவருளைப் பற்றி நின்று பேரின்பத்தை அடைவதாகும். திருவருளுக்கு இவ் வறிவு தேவையில்லை ஆன்மா திருவருளின் வயப்பட்டு நிற்பதே நன்று சிவம் ஆன்மாவுக்கு தன்னை அளிக்கும் உயிர் அறிவுக்கு சிவம் தோன்றமாட்டாது என்பதும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாம் அதிகாரமாகிய இன்புறு நிலையில் ஆன்மா பேறு அடையும் முறைமை, ஆன்மசுத்தி என்பன கூறப்பட்டு அதனால் எய்தப் பெறும் பேறும் திருவருளை முன்னிட்டுச் செல்வோர் பேரின்பத்தை அடைவார்கள் சிவன் எப்போதுமே பேரின்பப் பொருளாகவே விளங்குபவர் இன்ப நுகர்வு ஆன்மாவுக்கே உரியது சிவத்துடன் ஆன்மா தாடவைபோல் ஒன்று படின் இன்பத்தை நுகரும் இதுவே அத்துவித நிலையாகும் மோன சமாதிநிலை எய்தியவர்கள் இம்மையிலே இன்பத்தை நுகர்வார்கள் இச் சமாதி நிலையில் நிற்பவர்கள் பேயால் பிடிக்கப்பட்டவர்களைப் போல் காணப்படுவர் இவர்களுக்குச் சீவ, சிவ வேறுபாடு தோன்றாது காண்பவன் காட்சி காட்சில் பொருள் என்ற வேறுபாடு தோன்றாத இன்பநிலையே உயர்ந்த நிலையாகும் அதனை சொல்லாற் கூறமுடியாது எல்லா இன்பங்களிலும் மேலான வீட்டின்பம் உண்டாக வேண்டுமானால் அயராது பேரின்பநிலை ஏற்பட வேண்டும் அன்புநிலை ஏற்பட்டால் இன்பநிலை தோன்றும் பேரின்பமே முடிந்த இன்பமாகும் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

ஒன்பதாம் அதிகாரத்தில் ஐந்தெழுத்து நிலை பற்றி கூறுமிடத்து திருவருளின் பலனாக முத்தின்பம் பெறுவதற்கேதுவாக காட்டப்பட்ட வழிமுறை ஆகமங்களும், வேதங்களும் சாத்திரங்களும் ஐந்தெழுத்தின் பொருளையே தெரிவிக்கும் நூல்களாகும் ஓங்கார மந்திரத்துள் சிவன் சத்தி ஆணவம் சுத்தமாயை உயிர் என்றும் ஐந்தும் பொருந்தி நிற்கும் சிவபெருமான் உயிர்களின் பொருட்டே ஊனநடனமும், ஞானநடனமும் புரிந்தருள்கின்றார். மலம் ஆன்மாவைப் பற்றிநிற்கும் மலமற்றால் ஆன்மா சிவத்தினை அடையும் நகாரம் முதலாகச் சொல்லப்படும் தூலபஞ்சாட்சரம் முத்தியில் வேட்கை யுடையவர்க்கு உடையதாகாது சிகாரம் முதலாகவரும் பஞ்சாட்சரம் பிறவித் துன்பத்தை போக்கவல்லதாகும் இதனை சூக்கும ஐந்தெழுத்தென்றும் சொல்வார்கள் திருவருளே ஆன்மாவுக்கு வாழ்வளிப்பதாகும். வகாரமானது சிவத்தைக் காட்டி உயிரை உய்விக்கும் குற்றமற்ற மறைப்புச் சத்திக்கும் அருட்சத்திக்கும் நடுவே நில்லாது அருட்சத்திக்கும் சிவத்திற்குமிடையே நிற்பதுதான் வீடடைதற்குரிய வழியாகும். எல்லா வகையான அருள்நூல்களும் பிறவாமைக் கேதுவாகிய சாதனங்களாயே கூறுவனவாகவே அமைந்து காணப்படுவதும் இங்கு நோக்கத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தாம் அதிகாரமான அணைந்தோர் தன்மையில் சீவன் முத்தர்களின் தன்மை எடுத்துக்காட்டப்பட்ட நிலையில சீவன் முத்தர்களாகிய ஞானிகள் எப்பொழுதும் தம்மறிவு சிவன் அறிவால் கவரப்பெற்றவராகித் தம்முள்ளம் முழுவதும் சிவஞானத்தால் நிரம்பப் பெற்ற விளங்குவார்கள் இவர்கள் தம்மால ஐற்தொழில்கள் புரிய முடியுமென்று ஒருபோதும் நினைக்கமாட்டார்கள் சுவர்க்க போகங்களையும் பொருட்படுத்தமாட்டார்கள் அதிகார விருப்பம் அற்று இருப்பார்கள் இவர்கள் முழு உணர்வு பெற்றாலும் இறைவனையே நோக்யிருப்பார்கள் வேறுபொருள்களை நோக்கார் உலகத் தாக்கம் தமக்கு ஏற்பட நேர்ந்தால் உடனே தம் அறிவை இறைவனிடத்தே செலுத்தும் செயலில் ஆமை போன்றவர்கள் இவர்களுக்கு சிற்றின்பவேட்டைக கிடையாது பேரறிவு உடையவர்களாய் விளங்குவார்கள் இவர்கள் அகத்தும் புறத்தும் திருவருட் காட்சியையே களிப்பார்கள் இவர்கள் பற்றற்ற நிலையிலிருந்துதான் எக்கருமத்தையும் செய்வார்கள் இவர்களுக்குச் சஞ்சித வினையில்லைஆகாமிய வினை ஏறாது பிராரத்தவினை தணிந்துபோம் இவர்கள் இப் பிறப்பிலேயே பரமுத்தி என்னும் சிவானந்த நுகர்வை எய்தியிருப்பார்கள் இவர்கள் சிவத்தினைனயடையப் பெறாத உயிர்கள் வருத்துவதைக் கண்டு அவர்களின் துயரத்தைத் தீர்க்கும் வண்ணம் தமது கருணை வெள்ளத்திலே மிகுதியாக அலைந்து முயல்வார்கள் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இத்தகைய நிலையில் படிமுறைத்திறன் வளர்ச்சியிலே பரம்பொருளின் திறன் ஆன்மாவின்நிலை ஆணவமலப்போக்கு அதனை நீக்குவதற்கு இறைவன் இன்னருள் அதனை புரிந்து கொள்ளமுடியாத ஆன்மாவுக்கு குருவாக வந்து அருள்புரிதல் அதனை உணர்ந்த ஆன்மா விளக்கம்பெற்று இன்புற்ற நிலையில் ஐந்தெழுத்தோதி அதன்பேறாக ஜீவன்முத்திநிலை அடைவதற்குரிய வழிகளை காட்டி நன்நிலைப் படுத்தி செல்லும் ஒரு நூலாக காணப்படுவது திருவருட் பயனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் ஒழுக்கவியல் பண்புகள்

இந்துவாகப் பிறந்த ஒவ்வொரு மனிதனும் உன்னதமான முறையில் வாழ்வதற்கு ஏற்ற வழிகாட்டுவது சமயம் இந்து சமயம் வெறும் தத்துவ நோக்கில் அமையாது வாழ்க்கை நோக்கிலும் அமைந்துள்ளது. மனிதன் மனிதனாக வாழுவதற்கு இலட்சியம் அவசியம் அலட்சியத்தை வரையறுத்துத் தருபவை இந்து சமயத் திருநூல்களாகும். இவ் இந்துசமயத் திருநூல்கள் அறநெறி நூலாக, சாத்திர நூலாக காணப்படுவதுடன் இவை எல்லாம் ஒழுக்கத்தை வலியுத்திச் செல்பவையாகவே காணப்படுகின்றன.

ஒழுக்கம் என்பது வரையறுத்துக் கொடுக்கப்பட்ட ஒழுங்கான வாழ்க்கை முறை இவற்றில் அன்பு, கருணை, பொறுமை, கொடை, மூத்தோரை மதித்தல், குருபத்தி, தெய்வபத்தி என்பவற்றுடன் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு விட்டுக் கொடுத்தல் கூட்டுறவாக தொழிற் படல் ஆகியன பெரும் பாலும் அடங்கும். இவைபற்றி எடுத்தியம்பிச் செல்லும் நூலாக கருதப்படுபவை ஔவையாரினால் உருவாக்கப்பட்டுய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, நீதிநெறி ஆகிய நூல்கள் தனிப்பட்ட மனித வாழ்வின் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க முறைமைகளை வலியுறுத்திச் செல்பவையாக அமைந்து காணப்பட பொது ஒழுக்கவியல் திறன்கள் பற்றி பகவற்கீதை, திருக்குறள், தர்மசாஸ்திரம், உபநிடத சிந்தனைகள், இதிகாச புராணக் கதைகள் என்பன ஒழுக்கவியல் பட்ட வாழ்வு முறைமையுடன் கடமைகளின் அவசியத் திறனையும் அது மனித வாழ்வினை எவ்வாறு வளம்படுத்திச் செல்லும் என்பதனையும் எடுத்தியம்புகின்றன.

இவ்வுலகிலுள்ள எண்ணரிய பிறவிகளில் மானிடப்பிறவி தான் யாதினும் அரிதிலும் அரிது என்ற வாக்கின்படி பிறப்பிலுயர்ந்தது. மனிதப்பிறவியாகும் என்பது பெறப்படுகின்றது. இப் பிறவியின் நோக்கத்தை சரிவர அறிந்து அதற்கேற்ப வாழ்பவனே நிறை மனிதனாக விளங்குவான். மனிதன் நிறை மனிதனாக வாழ்வதற்கேற்ற வழிமுறைகளை ஞானிகள் எடுத்துக் கூறியுள்ளனர். மனித வடிவத்தில் பிறப்பெடுத்திருந்தால் மட்டும் போதாது. மனிதனாகப் பிறந்தவனிடத்திலே மனிதத் தன்மை பொருந்தியிருத்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். மனித வடிவில் வாழ்ந்திருந்தால் மட்டும் போதாது ஒவ்வொரு வகைகளில் மனிதல் தன்னை மேலோனாக மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் அறிந்திருத்தல் வேண்டும். இவ்வகையில் எல்லாநிலைகளிலும் நிறைவு பெற்றவனே ஆத்மீக சாதனையிலும் வெற்றிபெற கூடியவனாவான். ஆன்மீக நிலைக்கு உயர்ந்து வரும் உயர் மானிட வடிவத்தை எட்டுகின்றது என்பது அறிஞர் கருத்தாகும். மனிதன் பெற்றுள்ள உடம்பு நிறைவாழ்வுபெற உதவியாகவுள்ளது மனிதன் தனது மனதை பெருநிலை எய்தத் தகுதியுடையதாக ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும். இதற்கு மேலும் வழிவகுப்பது மனிதனுடைய ஒழுக்கமானது.

நெறியான வாழ்க்கைக்கும் ஒழுக்கமுடமைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு மனிதன் ஏன் ஒழுக்கமுடையவனாக இருக்க வேண்டும். தனது உள்ளத்தில் எழும் சிந்தனைகளுக்கேற்ப எப்படியும் நடந்து கொள்ளலாமே என எண்ணத்தூண்டுவது இயல்பே. இந்துக்களின் ஆன்மீக வாழ்வைப் பொறுத்த வரை ஒழுக்கம் சமய வாழ்வுக்கு பக்கபலமாக அமைகின்றது. மனிதமனம் தனக்குத்தானே உருவாக்கிக் கொண்ட செயல்களையே சிந்தனை என்கின்றோம். சில சிந்தனைகள் ஒழுக்கங்களை தனதாக்கிக் கொள்ளும்போது அது ஞானமாக நிறைவு பெறுகிறது. வாழ்வின் வளர்ச்சி நீடித்த மகிழ்ச்சி மாத்திரமன்றி ஆன்மீக வாழ்வுக்கும் ஞானம் வழி செய்கின்றது. இக்காரணத்தினால்தான் இந்துசமய திருநூல்கள் ஞானத்திற்கு சிறப்பிடம் வழங்கி உள்ளன. உபநிடதங்கள் ஞானத்தையே பிரதான பொருளாகக் கொண்டுள்ளன. பகவற்கீதை ஞானயோகமாக உபதேசிக்கின்றது. ஆகமங்கள் ஞானபதமெனச் சிறப்பிக்கின்றது. ஞானநிலையில் ஒருவன. கடவுள் திருவுளத்துக்கு ஒப்ப ஒழுகவேண்டும் என்பதை மனிதன் உணரத் தவறுவதில்லை. ஒழுக்கத்துடன் கூடிய வாழ்க்கையின் வாயிலாக மனிதன் தனது விழுப்பத்தை வெளிப்படுத்த வேண்டுமென்பதை வள்ளுவர்

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும்."**

என்று வலியுறுத்திக் கூறுவது குறிப்பிடத்தக்கது. மலரானது தன்னிடத்தேயுள்ள அழகையும் நறுமணத்தையும் இயல்பாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தல் போல மனிதனும் தன்னிடத்தேயுள்ள புனிதத் தன்மையையும் பேரன்பையும் பண்பையும் புலப்படத்தக் கடமைப்பட்டுள்ளான். எனவும் அதற்காகவே மானிடப்பிறவி ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும் கொள்வதில் தவறில்லை தனது மேலான இயல்பை தொற்றிவிப்பதற்கு ஒழுக்கம் ஒன்றே அவனுக்குரிய வழி என்றும் குறிப்பிடத்தக்கது. மனிதனுக்கு ஒழக்கம் விழுப்பம் தரும் காரணத்தால் ஒழுக்கம் மனிதனால் உயிரினும் ஓம்பப்படும் எனக் குறள் அறிவுறுத்துகின்றது. ஒழுக்கமானது நாளடைவில் மனிதனை தெய்வ சந்நிதியில் கொண்டு சேர்த்து விடுகின்றது.

ஒழுக்க நெறியை அடிப்படையாக கொண்டிருப்பது அன்பும் அறனும் இதன் சிறப்பு இல்வாழ்க்கையெனும் அதிகாரத்தில் எடுத்துக் காட்டப்படுமிடத்து

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது."**

என்பதனூடாக கணவன் மனைவியருக்குள் அன்பும் பிணைப்பும் அறநெறிப்படியே நிகழ்ந்தது. வருவதும் உடையதானால் இல்வாழ்க்கையின் பண்பும் பயனும் அந்த வாழ்வாகவே இருக்கும் எனவே எடுத்துக்காட்டப்பட்ட அதே நேரம சமயநூல்கள் எல்லாம் பொது அறங்களென பல விடயங்களை எடுத்துக்காட்டிச் சென்ற நிலையில் இவற்றில் சிறப்பாக தாய் தந்தை குரு ஆகியோரைப் போற்றுதல் தெய்வபக்தி கொள்ளல் அகிம்சைவழி நடத்தல் வாய்மையே அறமாகக் கொள்ளுதல் வெ.ஃ.காமை என்பன எடுத்துக் காட்டியநிலையில்

**"இலமெனும் வெ.ஃ.குதல் செய்யார் புலம்வென்ற**
**புன்மையில் காட்சியவர்"**

என்பதில் ஐம்பொறிகளையும் வென்ற குறையில்லாத ஆய்வாளர்கள் (அறிவாளர்கள்) யாம் பொருளில்லா தேம் என்ற வறுமை நிலையிலும் பிறர் பொருளைக் கவர விரும்ப மாட்மார்கள் என்பதும் அவர்கள்

**"அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனூடாக பொறாமை, ஆசை, சினம், கடும் சொல் என்னும் ஒரு சிறிதும் இடம் தராது ஒழுகுதல் வேண்டும் அதுவே சிறந்த ஒழுக்கமாகும். என எடுத்துக்காட்டிச் சென்றதுடன் இதற்கென திருவள்ளுர் தமது திருக்குறளில் ஒழுக்கமுடமை எனும் அதிகாரத்தையும் 14ம் நிலையில் வைத்து எண்ணியுள்ளார் இங்கு

**"ஒழுக்கம் உடமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்"**

என்பதில் ஒழுக்கமே குடிப்பிறப்பு. ஒழுக்கம் தவறுவதால் அவர்களது குடும்பமே இழிந்த குடியாய் விடும் எனவும் இன்னொரு குறளில்

**"அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று இல்லை**
**ஒழுக்கம் இல்லான் கண் உயர்வு"**

அதாவது பொறாமை உள்ளவன் இடத்தில் உயர்ச்சி இல்லாதது போல நல்லொழுக்கம் இல்லாதவனிடத்தும் உயர்வு இல்லை எனவும் இன்னோரிடத்தில்

**"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்"**

என்பதனுடாக நன்மைக்கு வித்து நல்லொழுக்கம் தீய பழக்கம் எப்போதும் துன்பத்தையே கொடுக்கும் என எடுத்துக்காட்டியது மன்றி ஒழுக்கத்தையே உயர்வாக கொண்டு நடப்பவர்

**"ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே - தீய**
**வழுக்கியும் வாயாற் சொலல்"**

என்பதில் தீய சொற்களைத் தவறியும் தம் வாயினாற் சொல்லும் குற்றம் நல்ல ஒழுக்கம் உடையவர்களுக்கு ஒரு போதும் பொருந்தாத பண்பாகும் என எடுத்துக் காட்டியதுடன் இவர்கள் ஐம்புல அடக்கம் மிக்கவர்களாகவே இருக்க வேண்டும். அவற்றினுடாகவே சிறந்த ஒழுக்வீயல் பண்புகளைப் பேணமுடியும் என்பதும் இங்குவற்புறுத்தப் பட்டுள்ளன.

மேலும் சிறப்பறங்கள் இருவகையாக கூறப்பட்ட நிலையில் அவை முறையே இயமம் நியமம் எனக. கொள்ளப்படுகின்றன. இங்கு இயமம் என்பது கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, பிறர் மனை விரும்பாமை. இரக்கமுடமை. வஞ்சனையில்லாமை, பொதுவுடமை, மனங்கலங்காமை, அற்பாகரம், சுகியுடமையெனும் பத்துமாம். நியமம் என்பது தவம், சந்தோஷம், தெய்வபக்தி, தானம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசுவரபூசை, ஞானசாத்திரம் கேட்டல். இலக்கை. புத்தி. செபம், விரதம் என எடுத்துக் காட்டப்பட்ட நிலையில் இவற்றை சிறப்பாக கடைப்பிடிக்கவேண்டும் இவற்றினூடாக உயர்நிலையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது எடுத்துரைக்கப் பட்டுள்ளன. இத்தகைய நிலையில் இருந்து சமயத் திருநூல்கள் பலவும் இவ் ஒழுக்கவியல் பண்புகளை எடுத்துரைத்துச் சென்றுள்ளன. இவை பொதுமறைக்கோட்பாடாக "மாதா, பிதா, குரு தெய்வம்" எனும் மகா வாக்கியத்தினை உலகுக்குப் பொதுவாக கூறிச்சென்றுள்ளன. இத்துடன் தாயிற் சிறந்த கோயிலில்லை தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை எனடபன இள வயதில் இருந்த அற்முகம் செய்யப்பட்டு மதிக்கப்பட்டு வருகின்றன.

உபநிடதங்களில் "குருவேதம் பத" குருவைத் தெய்வமாக வணங்குவதால் இறைவனை அடையமுடியும் எனவும் பெரியவர்களை மதித்தல், சகோதரர்களை பேணுதல், உறவினர்களை அனுசரித்தல், ஏழைஎழியவர்களைப் பாதுகாத்தல், பஞ்ச லக்கணங்களை செய்தல் என்பன வலியுறுத்தப்படுகின்றன. இன்னும் உழைத்து உண்ணுவோம் உணவுப் பொருட்களை சீரழிக்கக் கூடாது. பிறரில். தங்கியிருந்து உண்ணலாகாது என்ற நியதிகளும் வலியுறுத்தப்படுகின்றன.

பகவற்கீதையிலே பயன்கருதாத கடமை வலியுறுத் தப்படுகின்றன. இவற்றின் ஊடாக கர்மயோகத்தின் தனித்துவநிலை நிலைநிறுத்தப்படுகின்றன. இவற்றில் இறைவனை அடைவதற்குரிய வழிமுறைகளில் விருப்பு வெறுப்பு ஆசாபாசம் இன்பதுன்பம் எனது உனது என்ற பேச்சுக்களுக்கு இடமில்லை இதனால் இந்நூலானது ஒழுங்கான வாழ்க்கை முறைக்கு வழிகாட்டுகின்றது எனலாம். இத்துடன் ஒருவன் ஆன்மீக மேம்பாடு அடையவிரும்பின் பிறப்பு இறப்பு என்ற பெருங்கடலில் மூழ்காது தன்னைத்தானே உயர்த்திக் கொள்ளுதல் வேண்டும். தன்னை **இழிவு படுத்துதல்** ஆகாது ஏனெனில் தானே தனக்கு நண்பன் தானே தனக்குப் பகை என்று கீதை உபதேசிக்கின்றது. ஆத்ம மேம்பாட்டுக்கு தியானம் ஒரு சிறந்த சாதனையாக கீதை குறிப்பிடுகின்றது. மனதைத் தியானத்தில் நிறுத்தி உள்ளத்தை அடக்கிய யோகி இறைவனிடத்தில் முத்திநிலையில் நிறைவுபெறுகின்ற சாந்தி எய்தகின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனைப் பக்தியுடன் வழிபடுபவர்க்குப் புத்தியோகம் கைவரப்பெற்று இறைவனை அடைகின்றனர். இறைவன் அவர்களுக்கு அருள் கொண்டு அந்தக கரணத்தில் வீற்றிருந்து மெய்ஞானச் சுடர்விளக்காய் அறியாமை என்னும் இருளை அகற்றி வீடுகின்றார். இறைவனை அடைந்தவனுக்கு மறுபிறப்பில்லை என்பது கீதை போதனை. அனைத்து தர்மங்களையும் இறைவனுக்குகென்று அர்ப்பணம் செய்து அவனைச்சரணடைதல் வேண்டும். அப்பொழுது இறைவன் அனைத்துப் பாவங்களிலிருந்தும் எம்மை ஈடேற்றுவான் கவலையும் ஒழியும் என்ற உபதேசம் ஆன்மீக மேம்பாட்டுக்கு ஒழுக்கவியல் பண்குபுகளே உற்றதுணையாக அமைந்துள்ளன என்பதனை உடுத்துக்காட்டி நிற்கின்றன எனலாம்.

திருக்குறள் தமிழில் உள்ள சிறந்த அறநூலாககும். இந்துக்களின் ஒழுக்க நூலாக கருதப்படுவது அன்பு, ஒழுக்கம், கருணை என்பனபற்றி வலியுறுத்துகின்ற நிலையில் இதிலே முப்பால் பாகுபாடு சிறப்பாக அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பாலில் உயர்வாக அறம்பற்றி எடுத்துக்கூறி ஏனைய படிநிலை சிறப்பாக அமைந்து கொள்ள இன்றியமையாதது. வேண்டப்படுவது அறனம் எனவும் இது மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய உயர்ந்த நெறிகளை சுட்டிச் செல்கின்றது. சத்தியம், தர்மம், பொறுமை, கொடை, நன்றியறிதல் ஆகிய பண்புகளை சுட்டி சிற்பது இவற்றை ஒழுங்காக பேணுவதனூடாக ஒழுக்கமுள்ள வாழ்வினை வாழ முடியும் எனவும் அதனால் சகல பேறுகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் இது வலியறுத்திச் செல்கின்றது.

உபநிடதங்களைப் பொறுத்த வரையில் அளவற்ற ஆற்றலை அளிக்கும் ஞானச்சுரங்களாய் விளங்குகின்றன. உலகம் முழுவதற்கும் புதிய ஆற்றலை உதவக் கூடிய தெய்வசக்தி உபநிடதங்களிலே உள்ளது. முழு உலகத்தினருக்கும் புத்துயிரும் புதுவாழ்வும் ஞானநோக்கும் உதவி உய்யக் கொள்ளலாம் எல்லாச் சமயங்களிலுமுள்ள மக்களின் ஆற்றல் அழிந்தவர்களையும் தாழ்த்தப்பட்டவர்களையும் துன்பத்திலே அழுந்திக்கிடந்து துடிக்கின்ற வர்களையும் முரசொலி எழுப்பி மிகமிக ஆர்வத்துடன் அழைப்பவை அதாவது ஆண்மையுடன் உருத்தெழுச்து நின்றுவிடுதலையடையுங்கள் எனவும் அதற்கு இன்றியமையாது. ஒழக்கவியல் பண்புகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணுங்கள் எனவும் ஆராவேட்கையுடன் அறைகூவி அழைப்பவை இவ்வுபநிடதங்களாகும்.

இங்கு ஆசிரியரும் மாணவரும் ஒருமனப்பட்டு அறிவாராய்ச்சியில் ஈடுபட்டு அவற்றின் மூலமாக பல அறிவுத்திறன் விருத்திகளையும் பெற்றுக் கொண்ட நிலையில் கடோ, உபநிடதத்தில்

**இறைவன் இருவோமையும் காப்பானாக அவன்**
**இருவோமிடத்தும் அன்பு கொள்வோமாக**
**இருவோமும் ஒருங்கே ஊக்கத்தோடு முயலவோமாக**
**எமது கல்வி எமக்கு அறிவொளி ஊட்டுவதாக**
**எம்மிடையே வெறுப்புத் தோன்றாதிருப்பதாக**

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி என எடுத்துரைக்க தைத்தரிய உபநிடதமானது ஆசிரியர் மாணவருக்கு கூறும் அறிவுரையாக

**உண்மை பேசுக. அறம் செய் ஓதுவது ஒழியேல்**
**அன்னையைத் தெய்வமாகப் போற்றுக.**
**தந்தையைத் தெய்வமாகப் போற்றுக.**
**ஆசிரியரைத் தெய்வமாகப் போற்றுக.**

எனவும் எடுத்தியம்பிச் செல்ல பிரகதாரணிய உபநிடதத்திலே பொருள் பொதிந்த பிரார்த்தனையாக

**பெய்யின் நீக்கி என்னை மெய்யில் நடத்துக.**
**இருளில் நீக்கி என்னை ஒளியில் நடத்துக.**
**இறப்பில் நீக்கி இறவா நிலைக்கு இட்டுச் செல்க.**

எனவும் எடுத்துக் காட்டி செல்லும் நிலையில் ஈச உபநிடதத்தில் "இயங்கும் இந்த உலகிலே இயங்கும் பொருள் ஒவ்வொன்றிலும் இறைவன் நிறைந்துள்ளான் இவற்றின் மேல் வைக்கும் பற்றினை விடுவதன் மூலம் இன்பம் காண்க. பிறர்க்குரிய பொருளை வேகற்க என எடுத்தியம்பி எல்லாவற்றையும் இன்பமாகக் கண்டு உரிமை கோரல் தவிர்த்து வாழவேண்டும் என எடுத்தியம்பும் நிலையில் இந்துசமயம் ஒழுக்கத்தை மையமாகக் கொண்டு எழுந்தது. இதனால்தான் நீதிநூல்கன் கூறும் கருத்துக்களை தன்னளவில் ஏற்றுக் கொண்டு அவற்றையெல்லாம் அறநெறிக் களஞ்சியங்களாக பேணி வருவதனைக் காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைக்காலம்மையார்

தமிழக சைவசமய வரலாற்றைப் பொறுத்த வரையில் காரைக்காலம்மையார் தனித்த இடத்ம் பெறுகின்றார். இவரது காலம் கி பி. 5ஆம் நூற்றாண்டளவில் என்றும் மறுபுறம் இ.பி. 6ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியாக இருக்கலாம் என அறிஞர் பெருமக்கள் கருத்துக்கள் கூறிய நிலையில் சங்கமருவிய காலப் பிற்பகுதியில் சைவபக்தி இயக்கத்தின் தோற்றத்திற்கு முன்னோடியாக விளங்கியவர். தமது வாழ்வியலில் ஏற்பட்ட பத்தி பூர்வமான அனுபவங்கள் அவரை ஒரு சிவபக்தராக்கி சைவபக்தி தழைத்தோங்க வழி பிறந்த நிலையில் இறைவனின் திருவருள் பெற்ற அம்மையார் திருக்கையிலை நோக்கி நடந்தார். கைலைமலையை அடைந்தார். மலைமீது ஏறினார். காலால் ஏறுவதனை தவிர்த்தார். தலையினால் நடந்து சென்றார். இதனை உமாதேவியார் கண்டார். தலையினால் நடக்கும் இவ்வெலும்பு வடிவின் அன்பு என்னே எனக்கூறினார். வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் எனக் கூறிய இறைவன் புனிதவதியார் அண்மையில் வந்ததும் அம்மையே! என அழைத்தார். அதுகேட்ட புனிதவதியார் அப்பா என்றுகூறிப் பெருமானை வணங்கினார்.

இறைவன் அம்மையாரை நோக்கி நம்பால் இங்கு வேண்டுவது என்ன என்று கேட்டார். அது கேட்ட அம்மையார்

**"இறவாத இன்ப அன்பு**
**வேண்டிப் பின் வேண்டுகிறார்.**
**பிறவாமை வேண்டும் மீண்டும்**
**பிறப்புண்டேல் உன்னை என்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும்**
**வேண்டும் நான் மகிழ்ந்து பாடி**
**அறவா நீ ஆடும்போது உன்**
**அடியின் கீழ் இருக்க" என்றார்.**

அவர் கேட்டவாறு இறைவன் அருள் புரிந்தார். திருவாலங்காட்டில் தன் தீரநடனத்தைத் தரிசிக்கும் அருள் கொடுத்தார். அம்மையார் தலையினால் நடந்து திருவாலங்காட்டை அடைந்தார. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் பாடினார். அவர் அடியில் கீழ் என்றும் இருக்கனிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பெருமையில் காலைக்கால் அம்மையார் தலையால் நடந்த பதியாதலின் திருவாலங்காட்டைக் காலால் மிதிப்பதற்கு அஞ்சிய திருஞானசம்பந்தர் ஊரின் வெளிப்புறத்தில் தங்கினார் என செக்கிழார் பெருமான் தனது பெரிய புராணத்தில் எடுத்துக் காட்டிச் சொல்வது அவரின் பெருமையை மதிப்பிட்டுக் கொள்ளக் காரணமாகின்றது. இதுமட்டமன்றி காரைக்காலம்மையார் சிறந்த பக்தி வைராக்கியமுடையவராய் இறைவன் திருவுருவத்தை கண்டனுபவித்தல் அவன் புகழ் பாடுதல் என்பவற்றைத் தன் வாழ்க்கையின் குறிக்கொளாகக் கொண்டடு தன் காலத்தைக் கழித்தார். உலகவாழ்விற் பிறிதொன்றினையும் விரும்பாது இறைவன் திருமேனியழகில் இலயப்பட்டு நிற்றலொன்றனையே அவாவினரென்பதை அவர்பாடிய திருவந்தாதிகள் வாயிலாக அறியக் கிடக்கின்றது.

காரைக்காலம்மையார் பாடியருளிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை, அற்புதத்திருவந்தாதி, என்னும் நாலு நூல்களும் 143 செய்யுட்களை உடையனவெனினும் இவை யாவும் பல்லவர் காலத்துச் சமய இலக்கியங்களை ஒரு புது வழியிற் செல்ல வைத்த அத்துணைப் பெருமை வாய்ந்தவை. அம்மையார் அருளிச் செய்த பிரபந்தங்கள் பல்லவர் காலத்து பக்திப் பாடல்கள் தோன்றுவதற்கும் அவற்றின் ஊடாக புதிய ஒரு சமுதாயத்தை நல்வழிப்படுத்திக் செல்வதற்கும் ஒரு அறிகுறியாக அவற்றுக்கு முன் விடிவெள்ளி போன்று உதயமானவை எனினும் பல்லவர் கால இலக்கியப் போக்கிற்கு வழிகாட்டி வைத்த பெருமை அம்மையார் அருளிச் செய்த பிரபந்தங்களுக்கே உண்டு. அதனால் அம்மையார் தமிழ் நாட்டு பெரும் புலவர் வரிசையில் வைத்து எண்ணத்தக்க சிறப்பு வாய்ந்தவர் எனக் கூறுதல் பொருத்தமுடையதாகும்.

இவரது பாடல்கள் எல்லாம் 11ம் திருமுறையில் இரண்டாவதாக வைத்தெண்ணப்படுகிறது. பாடல்கள் எல்லாம் தோத்திர மரபுக்குட்பட்ட நிலையில் தேவார முதலிகளுக்கு முற்பட்டவராய் அவர்களின் பாடல்களுக்கெல்லாம் முன்னோடி முறைமையிலான பாடல்களை பாடி தொடக்கி வைத்த பெருமைக்குரியவராகின்றார். குறிப்பாக பத்துப்பாடல்களால் இறைவனைத் துதிக்கும் பாமாலையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிகத்தை முதன்முதல் பாடி மூவர் முதலிகளுக்கு முன்னோடியாக திகழ்கின்றார். இவரது பாடல்களிலே அழகிய சொல்லாட்சியும் அரிய கருத்தாழமும் அளப்பெரும் பத்திச் சுவையும் நிறைந்துள்ளன. இறைவன் மேல் ஆராக்காதல் கொண்ட அம்மையார் அவனைக் கண்ணரக் கண்டு கையாரக் கும்பிட்டு அவன் தாளில் என்றும் இருக்க விரும்புகின்றார். நான் பிறந்து மொழி பயிலத் தொடங்கிய நாள் முதலாக உன்மேல் அன்பு வைத்திருக்கிறேன.நாளாக அந்த அன்பு மேன்மேலும் பெருகி வருகின்றது. நீயோ தேவர்களின் இடர் களைவதற்காக ஆல காலத்தை உண்டு நீல கண்டனாய் விளங்குகின்றாய் அத்தகைய கருணை உள்ள நீ எனது இடரைக் களைவது எப்போது என்று பரிவோடும் உரிமையோடு கேட்கிறார்.

**"பிறந்துமொழி பயின்ற பின்னெல்லாம் காதல்**
**சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் நிறந்திகழும்**
**மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே**
**எஞ்ஞான்று தீர்ப்ப திடர்."**

இவற்றினுடாக இறைவனை காணாது துயரம் அடைவது எடுத்துக் காட்டப்படுகின்றன்.

மேலும் அன்று எனது இளமைப்பருவத்திலே உற்றார் உறவினரோடு இருக்கையில் உன் பெருமையுணர்ந்து உனக்கு ஆட்பட்டேன் அப்போது நான் உனது திருவுருவைக் கண்டிலேன். இன்று உற்றார் உறவினர் எல்லாம் விட்டகன்ற பின்பு நான் உன்னையே பற்றாகக் கொண்டிருக்கின்றேன். இன்னும் நான் உன் திருவுருவைக் காண்கின்றிலேன். உன்னுடைய தலைவன் எப்படிப்பட்ட உருவமுடையவன் என்று ஊரார் எந்நேரமும் என்னைக் கேட்கின்றனர். நான் அவர்களுக்கு என்ன விடை கூறுவேன். உன்னுடைய திருவுருவம் எப்படிப்பட்டது அந்த உருவம் எது என்று கூறமாட்டாயா என வேண்டிய நிலையில்,

**"அன்றுந் திருவுங் காணாதே ஆட்பட்டேன்**
**இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்**
**எவ்வுருவோன் நும்பிரான என்பார்கட் கென்றுரைக்கேன்**
**எவ்வுருவோ நின்னுருவம் ஏது**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அங்கலாய்த்து வினாவுவதாகக் காட்டப்படும் அதே நேரம் தம்முடைய பேரன்புக்கு பத்திரமான பெருமானைக் காணப்பெற்றால் தாம் என்ன செய்வார் என்பதை அம்மையார் மற்றொரு வெண்பாவிலே பாடுகின்றார்.

"கண்ணாரக் கண்டும் என் கைலாரக் கூப்பியும்
எண்ணார எண்ணத்தால் எண்ணியும் விண்ணோன்
எரியாடி என்றென்றும் இன்புறுவன் சொல்லோ
பெரியானைக் காணப் பெறின்".

என்பதனுடாக இறைவனைக் காணவேண்டும் என்ற ஆராக் காதலினாலே உந்தப் பெற்றவராக எடுத்துக் காட்டப்படுகின்றார். இவரது பெருமை சைவ உலகுக்கு என்றும் சித்தரித்துக் காட்டப்பட வேண்டும் என்பதற்காகவும் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு அவனருகிலே இருந்து அவராடும் ஆனந்தக் கூத்தை காண பெருமை பெற்ற திறனையும் எடுத்துக் காட்டும் முகமாக சமய வரலாற்றில் பொற்காலமாக சித்தரிக்கப்பட்ட சோழர் காலத்திலே பொருளாதார வளர்ச்சியின் பேறாக உருவாக்கப்பட்ட வெண்கலப் படிமங்களிலே இவரது வடிவமும் ஒன்றாக கருதப்பட்டு ஆலயங்களில் வைத்துப் போற்றப்படுகின்றன. ஈழத்து வரலாற்றைப் பொறுத்த வரையில் பொலநறுவைக் காலத்திலே உன்னதமான வடிவமாக சோழ மன்னர் பரம்பரையால் ஆலயங்களில் வைத்துப் போற்றப்பட்டன என்பதற்கேதுவாக புதைபொருள் ஆய்வினூடாக கண்டெடுக்கப்பட்ட வடிவங்களிலே காலைக்காலம்மையார் வடிவமும் ஒன்றாகக் காணப்படுவது அவற்றின் பெருமை ஈழத்திலும் வைத்துப் பேணப்பட்டு வந்தது என்பதற்கு தக்க சான்றாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனுதர்ம சாஸ்திரம்

இநது சமய திருநூல்கள் வரிசையில் ஒன்றாகவும் வைதீக மரபிலே வேதங்களுக்கு அடுத்தபடியாக, தர்ம சாஸ்திர நூல்களின் வரிசையில் முதன்மையானதாக காணப்படுவது மனுதர்ம சாஸ்திரம் இங்கு தர்மம் என்னும் பதம் கடமை, நியதி, கட்டுப்பாடு பழக்கவழக்கங்கள் நடைமுறைகள் என மேலும் பல பொருள்படும் எனினும் இங்கு குறிப்பாக கடமை பழக்கவழக்கங்கள் எனும் கருத்துக்களிலே தான் இது பயன்படுத்தப்பட்டுள்ளது. வைதீக சமய சார்பான கடமைகள் பழக்கவழக்கங்களையே இந்நூல் தொகுத்துக் கூறுகின்றது. மனு என்பவலால் இயற்றப்பட்டது இதன் பேறாக இதற்கு மாணவ தர்ம சாஸ்திரம் என்ற பெயரும் உண்டு இந்நூலானது மனுவினால் உருவாக்கப்பட்ட நிலையில் மருந்து போன்றவை என தைத்திரீக சங்கிதை கூறிச் செல்கின்றது.

இந்நூலானது வேதகாலத்தை அடுத்துத் தோன்றியிருக்கலாம். இதன் மையப்பகுதி ஏறக்குறைய கி. மு. 2ம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்தினைச் சேர்ந்ததெனவும் சில பகுதிகள் கி. பி. 2ம் நூற்றாண்டு வரை சேர்க்கப்பட்டிருக்கலாம் எனவும் மேலைத் தேய சமஸ்கிரத அறிஞர் சிலர் இக்கால வரையறைக்கு முற்பட்டது எனவும் கருத்துக்கூறுவர். இந்நூல் இந்து சமய மரபிலுள்ள பழைய பழக்க வழக்கங்களையும் கடமைகளையும் கூறுவதுடன் இந்து சட்ட நூலாகவும் நீதிபரிபாலனத்துக்கு உரியதாகவும் இலங்குகின்றது. இம்மரபிவே பழக்கவழக்கங்களும் சட்டத்தின் பாற்படும் எனவே பழங்காலத்தில் பிரதானமான இந்துச் சட்ட நூலாகவும் இது முக்கியத்துவம் பெற்றுள்ளது. 18ம் நூற்றாண்டில் இந்தியாவின் சில பகுதிகளில் ஆட்சி புரியத் தொடங்கிப் பின்இந்தியா முழுவதையும் தம் ஆட்சிக்குட்படுத்திய ஆங்கிலேயர் இதன் முக்கியத்துவத்தினை உணர்ந்தனர். அவர்கள் தொடக்கத்திலே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த இந்திய நூல்களில் இதுவும் ஒன்றாக கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலானது மனு வாழ்ந்த காலத்தில் இருந்த நீதிநெறிகளையும் ஒழுக்கநெறிகளையும் ஒன்று சேர்த்து விரிவாக தருவது இவை சரியான வழியைத் தெரிந்து அதனந்படி வாழ்ந்து சித்தி: சுத்தி அடைந்த நற்குணங்களைப் பெற்று உயர்ந்த சமய வாழ்வுக்கு வழிகாட்டுவன. ஒருவன் தனக்குரிய தொழிலை சீர்கெடாது செய்தால் மற்றவனுக்குரிய தொழிலைத் திறம்படச் செய்வதிலும் சிறந்தது எனக் காட்டிச் சென்ற நிலையில் பன்னிரு அத்தியாயங்களையும் 2684 சுலோகங்களும் கொண்டதாகும்.

**முதலாவது அத்தியாயத்திலே** உலகப் படைப்பு அதன் பான்மையும் விளக்கப்படுகின்றது. தர்மசாஸ்திரம் எவ்வாறு உலகிற்கு கையளிக்கப்பட்டது என்ற வரலாறு முதலிலே சொல்லப்படுகின்றது. பின்னர் உயிர்களின் தோற்றம் தேவ மானிட வகுப்பு காலக்கணக்கு நால்வருணத் தோற்றம் இந்நூல் கூறும் பொருள் என்பன சொல்லப்படுகின்றன. நால்வருணக் கடமைகளில் பிராமணர், சத்தியர், ஐவசிகர், சூத்திரர், ஆகியோர் குறித்த விளக்கங்களை எல்லாம் இங்கு காணலாம். பிராமணர்களுக்கு இந்நூல் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றது எனலாம்.

**இரண்டாம் அத்தியாயத்திலே** தருமத்தின் மூலங்கள் குறிப்பாக இந்து சட்ட மூலங்கள் சமஸ்காரங்கள் பிரமச்சரிய ஆச்சிரமத்துக்குரிய நெற்கள் குறிப்பாக கல்வியும் கடமையும் இங்கே விரிவுபடுத்தப்படுகின்றது. பிரமச்சரியவிரதம் குருகுலக் கல்வி, குருகுலவாசம், விதிகள் சொல்லப்படுகின்றன. மாணவனுடைய இலக்கணம் ஆசிரியர்களின் சிறப்பியல்பு குருபத்தியின் இன்றியமையாமை குருவழிபாடு என்பன கூறப்பட்டுள்ளன.

**மூன்றாம் அத்தியாயத்திலே** கிருகஸ்த ஆச்சிரமம் இல்லறவியல் சிறப்பு சொல்லப்படுகின்றது. எத்தகைய குணநலன் உடையவர்கள் எத்தகைய குணநலன் உடையவர்களுடன் திருமணம் செய்து கொள்ளலாம். கூடா ஒழுக்கம் பற்றி விளங்கப்படுகின்றது இல்லறத்தானுடைய கடமைகளாகிய ஐம்பெரும் வேள்வி வீட்டிலே செய்யப்பட வேண்டிய வழிபாட்டு முறைகள் கடமைகள் என்பன கூறப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நான்காம் அத்தியாயத்திலே** பிராமணர் முதலியோருக்கான ஜீவண கிருத்தியங்களும் பொருளியலும் தனிமனித ஒழுக்கமும் அந்தணர்களுடைய இல்லற ஒழுக்கமும் சொல்லப்பட்டுள்ளது. வேள்வி செய்தல் செய்வித்தல், வேதம் ஓதல், ஓது வித்தல், ஈதல், ஏற்றல் ஆகிய கடமைகள் சொல்லப்பட்டுள்ளது,

**ஐந்தாவது அதிகாரத்திலே** உணவு பற்றியும் சுத்தம் பற்றியும் பெண்களுக்குரிய தர்மம் பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. உண்ணத்தக்கவை, உண்ணத்தகாதவை, புலால் அருந்துதல் தவிர்க்கப்படவில்லை. சுத்தம் பற்றிக் கூறும்போது, பிறப்பு இறப்பு என்பதனால் உண்டாகும் தீட்டு அசௌசம் என்பன குறித்துச் சொல்லப்படுகின்றது. மாதர்களுக்குரிய அறங்கள் அவர்கள் பின்பற்ற வேண்டிய தர்மங்கள் ஒழுக்கம் என்பன சொல்லப்படுகின்றன. மறுமணம் உடன் கட்டைஏறல் ஆகிய விதிமுறைகள் சொல்லப்படுகின்றது.

**ஆறாம் அத்தியாயத்திலே** வானப் பிரஸ்தம் சந்நியாசம் ஆகிய ஆச்சிரமங்கள் பற்றியும் அதிலே வானப்பிரஸ்த நிலையிலே பின்பற்ற வேண்டிய ஒழுக்கம், உண்ணும் உணவு, உடுக்கும் உடை, என்பன கூறப்படுகின்றது. மனைவியுடன் சென்று பிரமச்சாரியாக வாழவேண்டும் இதே அத்தியாயத்தில் துறவியின் இயல்புகள் கூறப்பட்டுள்ளது. துறவு நெறியின் இலக்கணம் சொல்லப்படுகின்றது. அந்தணரின் நால்வகை நிலையும் சொல்லப்படுகின்றது.

**ஏழாம் அத்தியாயத்திலே** ராஜ தர்மம் அதாவது அரசநீதி சொல்லப்படும் நிலையில் அரசனின் ஒழுக்கம் அவனுடைய கடமைகள் அரசாங்க அதிகாரிகள் போர்நெறி உள்நாட்டு வெளிநாட்டு வணிகம் வரிமுறை உளவறிதல் முற்றுகையிடல் போரிடல் வெற்றி கொள்ளல் என்பனவற்றுடன் அரசனின் அன்றாட நியமனங்களும் சொல்லப்படுகின்றன.

**எட்டாம் அத்தியாயத்திலே** பல்வேறு விவகாரங்கள் சிறப்பாக நீதிநெறியும் சட்டமும் கூறப்படுகின்றது. இவை இவை குற்றச் செயல்கள் என வற்புறுத்தப்படுகின்றன. கள்வெடுத்தல் உயிருக்கும் உடமைக்கும் சேதம் செய்தல் கொடுக்கல் வாங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கல் வினையில் நம்பிக்கைத் துரோகமான தண்டம் பலாத்காரம் கூடாத ஒழுக்கம் நிலத்தகராறு, தகாத செயல், குடிவகுப்பு நீதிமன்ற அடைப்பு நீதி வழங்கல் என்பன சொல்லப்படுகின்றன.

**ஒன்பதாவது அத்தியாயத்திலே** மாதர், ஆடவர்க்கான தர்மம் பற்றியும், இதிலே திருமணக்கிரிகைகள், மகப்பேறு பாகப்பிரிவினை, சூதாடுதல். பற்றியும் குற்றங்கள் அவற்றுக்குரிய தண்டனைகள் கூறப்படுகின்றன. சத்திரியா வைசிகா சூத்திரர் ஆகியோருடைய கடமைகள் கூறப்படுகின்றன.

**பத்தாவது அத்தியாயத்தில்** வர்ணக்கலப்பு ஜாதிகளின் தோற்றம் அவர்களுக்கு விதிக்கப்பட்ட கடமைகள் கீழ்ப் பிறப்பினர் உயர்வடைவதற்குரிய வழிகள் ஆபத்து தர்மம் என்பன கூறப்படுகின்றன.

**பதினோராவது** அத்தியாயத்தில் பாவச்செயல்களும் பிராயச்சித்தங்களும் சொல்லப்படுகின்றன.

i) வேள்வி செய்யும் போது ஏற்படும் பாவச்செயல்கள் பிழைகள் அதனால் விளையும் வினைகள்.
ii) அந்தணர்களை கொல்லும் வினைகள்.
iii) ஏனைய பாவங்களுக்குரிய பிராயச்சித்தம்.

**பன்னிரண்டாவதிலே** முக்குணங்கள் அதனால் ஏற்படும் நல்வினை தீவினை ஆன்ம விடுதலைக்குரிய உபாயங்கள் முதலியன பற்றியும் எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

இவ்வாறு உலகத் தோற்றம் தொடக்கம் வாழ்க்கைக்கான பல்வேறு நெறிமுறைகளும் கருத்துக்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அதுமட்டுமல்லாது இந்துசமய வரலாற்றிலே தனித்துவப் பங்கினை பெற்று தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் அன்றாட வாழ்க்கை நெறிகளையும் விதிகளையும் எடுத்துக் காட்டுகின்றன. அந்நிலையில் மக்கள் ஆட்சி சமத்துவம் பொதுவுடமை சமவுடமை சகோதரத்துவம் தனிமனித சுதந்திரம் எடுத்துக்காட்டி இந்துச்சட்ட நூல்களிலும் முதன்மை பெற்றிருந்தது. மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும் தத்தமக்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்வதன் மூலம் நாடு நன்மை அடையும் எனவும் தொழில்கள் பெரும்பாலும் பாரம்பரியமாக நடைபெறுவதற்கும் சமூக முன்னேற்றம் கருதி வேதத்தின் உண்மைகளை கால சூழ்நிலைக் கேற்ப நாளாந்த கன்மங்கள் அவற்றைப் பின்பற்றும் முறைகள் அதனால் பெறும் பயன்கள் அது மனிதன் ஒருவன் எவ்வாறு அறநெறிப்பட்ட வாழ்க்கை வாழ உதவுகின்றது. என்பன எல்லாம் எடுத்துக் காட்டுவதுடன் ஆன்மீக ரீதியான உயர்வைப் பெறுவதற்கு ஏற்ற நூலாக அமைந்து காணப்படுகின்றது.

ஓ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தஞ்சைப் பெருங்கோயில்

சோழர் காலத்து சமய வரலாற்றின் தனித்துவத்தை என்றுமே எடுத்துக் காட்டி நிற்கும் கோயில்கள் பலவற்றில் ஒன்றாக அமைந்த காணப்படுவது தஞ்சைப் பெருங்கோயிலாகும். இது சோழ அரசர்களில் ஒருவனாகக் கருதப்பட்ட இராஜ இராஜ சோழனினால் 985 - 1016ல் கட்டப்பட்ட நிலையில் இவனது அரசியற் திறனும் அவற்றின் பேறாகப் பெற்ற வெற்றிகளும் தலைநகரில் தனித்துவ மிக்க தலமாக இதனை அமைக்க ஏதுவாகியதுடன் சமய வரலாற்றில் பெருமையையும் சோழ நாட்டின் பண்பாட்டினையும் அரச குடும்பத்தின் பத்தியையும் பறைசாற்றுவதாகக் கட்டப் பெற்றது. இது அக்காலத்தின் கட்டிட சிற்ப ஓவியச் சிகரமாகவும் கலைவளர்ச்சியின் கோபுரக்கலசமாகவும் நிறுவன அமைப்புத் திறனின் வெற்றியாகவும் விளங்குகின்றது.

இராஜ இராஜ சோழன் தன் பேரரசின் செல்வத்தின் ஒரு பகுதியை இக் கோயிலைக் கட்டவும் அதன் பூசைகளையும், விழாக்களையும், கலைநிகழ்ச்சிகளையும் நடாத்துவதற்குச் செலவிட்டான். இதற்கென தேவகன்மிகளையும், கலைவாணர்களையும் நியமித்து அதன் பெருமை என்றும் பேணப்படுவதற்கேற்ற தொழிலாளர்களையும் அவர்களுக்கு ஏற்ற ஊதியங்களும் சொத்துடமை மிக்க நிலங்களையும் அளித்தான் என அறியக்கிடக்கின்றது.

இக் கோயிலின் அமைப்பு முறைமையினை நாம் எடுத்து நோக்கின் இந்தியக் கோயில்களில் மிகப் பெரியதும், மிகவும் உயரமானதும் கலைவனப்பில் நிகரற்றதுமான அப்பெருங் கோயில் இந்தியக் கட்டிடக்கலை வளர்ச்சியின் சிகரமாய் விளங்குகின்றது. ஒன்றன்முன் ஒன்றாக ஒரே நிரையில் அமைந்துள்ள விமானம், அர்த்த மண்டபம் மகாமண்டபம், நந்திமண்டபம், ஆகியனவும் அவற்றின் விசாலமான வளாகமும் மதில்கள் சூழ்ந்த 500 அடி நீளமும் 250 அடி அகலமும் கொண்ட பிரகாரத்தினுள் அமைந்துள்ள பிரகாரச்சுவர்களில் உட்புறத்தே எல்லாப் பக்கங்களிலும் கற்றாலையொன்று அமைந்திருக்கின்றது. அதிலே நூற்றுக் கணக்கான தூண்கள் வரிசையாக அமைந்துள்ளன. பரிவார தேவர் கோயில்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைக்கும் பாண்மையிற் கற்றாலை அமைக்கப்பட்டது. ஆலயத்தின் முகப்பிலே இரண்டு கோபுர வாயில்கள் உள்ளன. அவற்றுள் முன்புறமாக உள்ளது இரண்டாம் பிரகாரத்தின் நுழைவாயிலாக அமைந்திருந்தது. ஆனால் அப்பிரகாரத்தின் மதில்கள் இடிந்து அழிந்து விட்டன.

தஞ்சையிலே கோயிலின் பிரதான பகுதியாக விளங்குவது வானத்து முகில்கள் தோயும் வண்ணமாக ஓங்கியெழும் அற்புதக் கோலமான விமானமாகும். அது சிற்ப நூல்களிலே கஜப்பிருஷ்டம் என்று சொல்லப்படும் தூங் கானை மாடம் என்னும் வகையைச் சோந்ததாகும். இது 216 அடி உயரங் கொண்டது. பதினான்கு தளங்களால் அமைந்தது. விமானத்தின் பகுதிகளின் மிகவும் பொருத்தமான அளவுப் பிரமாணங்களும் மிகவும் செம்மையான வேலைப்பாடுகளும் அதன் ஈடிணையில்லாத வனப்புக்கு ஏதுவாயுள்ளன. 82 அடி சதுரமான அதன்தளம் 50 அடி உயரம் கொண்டது. அதன்சுவர்கள் எது விதமான வளைவுமின்றி நேராக நிமிர்ந்த தோற்றங் கொண்டவை அதற்குமேல் 13 நாற் சதுரமான தளங்கனுடன் உள்னோக்கிய சரிவு கொண்டு விமானம் அமைந்துள்ளது. உச்சித்தளத்தின் நீளம் அடித்தலத்தின் மூன்றில் ஒரு அளவுடையதாகும். நேராக நிமிர்ந்த அடித்தளத்தைக் கொடுங்கை இருவேறு பகுதிகளாகப் பிரிக்கின்றது கொடுங்கையின் கீழும், மேலும் அமைந்துள்ள சுவர்களிலே தேவ கோஷ்டங்களும் அரைத் தூண்களும் அலங்கார வேலைப்பாடுகளும் மிகுந்த வனப்புடன் அமைந்துள்ளன.

கர்ப்பக்கிருகம் உட்புறத்தில் 45அடிச்சதுரமாகும் அதனைச் சுற்றி 9அடி அகலமான திருச்சுற்றாலை உள்ளது. அதன் சுவர்களிற் சமகாலத்து ஓவியங்கள் இருந்தன. நாயக்கர் காலத்தில் அவற்றுக்கு மேலே புதிய சித்திரங்களை வரைந்து பழைய ஓவியங்களை மறைத்து விட்டனர். கருவறையின் நடுவிலே இராஜராஜ ஈசுவரமுடையார் என்ற பிரமாண்டமான இலிங்கம் இருந்தது இறையகத்து முன்னால் அந்தராளம் அமைந்திருக்கின்றது. அதனை அடைவதற்குத் தெற்கிலும் வடக்கிலும் படிக்கட்டுகள் உள்ளன. அந்தராளத்தின் இருபக்கங்கள் 8தூண்கள் இரண்டு வரிசையில் அமைந்துள்ளன. இறையகத்து வாயிற் புறத்தே அளவிற் பெரியதான துவாரபாலகரின் உருவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கிய கோஷ்டங்கள் உள்ளன. இறையகத்தைப் போல அர்த்தமண்டபமும் இருதள அமைப்பாகும். அந்தராளமும் அர்த்த மண்டபமும் ஒரு பொதுவான அதிஷ்டானத்தில் உள்ளன. அவற்றின் தேவ கோஷ்டங்களும் அரைத்தூண்களும் ஒரே மாதிரியானவை மகா மண்டபத்தின் நடுவிலே தூண்வரிசைகளும் ஓரங்களிற் சாலைகளும் உள்ளன. மகாமண்டபத்துக்கு முன்னால் சிறிது தூரத்தில் நந்தி மணடபம் உள்ளது. ஆதியான நந்தி மண்டபம் பழுதடைந்து விட்டதால் அதனை நீக்கி விட்டு நாயக்கர் காலத்திலே மிகவும் வனப்பு மிக்க ஒரு நந்தியின் உருவத்தை அமைத்துள்ளனர். கோயில் வளாகத்திலே வேறு மூன்று சந்நிதானங்களும் பிற்காலத்தில் அமைக்கப்பட்டன. வடக்குப் பக்கத்தில் அமைந்திருக்கும் அம்மன் கோயில் பாண்டியர் காலத்து திருப்பணியாகும். மேற்கிலுள்ள சுப்பிரமணிய சுவாமி கோயில் நாயக்கர் காலத்தில் அமைக்கப்பட்டது. பிள்ளையார் கோயில் மராட்டியர் காலத்துக்குரியது அவற்றின் வேலைப்பாடுகளும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

இக்கோயிலானது 1003ம் ஆண்டில் கட்டுவதற்கு தொடங் கப்பட்டு 1010ம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது இது தமிழகக் கோயில் கலையின் ஆர்வமிக்க முயற்சியாகும் ஆலய நிர்மானக் கலைமரபில் கட்டிடம், சிற்பம் ஓவியம் இதர இணைச்த கலையம்சங்களின் பூரணரமான சிறந்தது அனைத்தும் சேர்ந்தமைந்த கோயில் இது தென்னிந்தியாவிலே மிகப்பெரிதான விமானத்தைக் கொண்டது அந்தராலமும் தூண்களமைந்த பெரிய மகா மண்டபமும் உள்ளது. இந்த மண்டபத்தின் முன்பு மிகப்பெரிய ஒரே கல்லிலான நந்தி இருக்கின்றது. இரண்டடுக்கு வெளிச்சுவற்றுடன் கூடிய விமானம் சாந்தார வகையைச் சார்ந்தது பீடத்துடன் கூடிய மாபெரும் லிங்கம் அமைந்த கர்ப்பக்கிரகத்தை உள்ளடக்கியதாக இருக்கின்றது.கர்ப்பக் கிரகத்தின் வெளிச்சுவற்றில் நான்கு புறமும் வாயில் உள்ளது. உள் சுவற்றின் மூன்று புறமும் மாடங்களில் அமைந்துள்ள பெரிய சிற்பங்களையும் கருவறையிலுள்ள லிங்கத்தையும் பத்தர்கள் கண்டு தரிசிக்க இது வழி செய்கின்றது. வெளிப்புறச் சுவற்றில் உள்ள மாடங்களில் ஆள் உயர தெய்வச் சிலைகள் உள்ளன. பிரமிட் உருவ மேற்கட்டு 16 அடுக்குகள் கொண்டது ஒவ்வொரு அடுக்கிலும் சாலா, கூரா, பஞ்சர வகை சிறிய அளவு விமானங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சியில் மிகப்பெரிய ஒரே கல்லாலான எண்கோண சிகரம் உள்ளது விமானம், மண்டபம் ஆகியவற்றின் அடித்தலத்திலுள்ள சிற்ப வேலைப்பாடுகள் எளிமையாகவும் தெளிவாகவும் உள்ளன. உள் பிரகாரச் சுவற்றின் இருபுறமும் இரண்டு வரிசையாக அமைந்த ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

இந்த ஓவியங்கள் கோயில் கட்டி முடித்த பின் இராஜராஜ சோழன் காலத்திலேயே தீட்டப் பெற்றவை இவற்றுள் முக்கியமானவை திரிபுர தகனமும் சுந்தரமூர்த்தி நாயனாரின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களுமே திரிபுர தகன ஓவியம் வடக்குப் பிரகாரச் சுவர் முழுவதையும் அடைந்திருக்கின்றது. காம்பீர்யம் நிறைந்த இந்த நிகழ்ச்சி "வானோராகிய தேரில் நான் மறைக் கடும்பரி காட்டி நெடும் புறம் மறைத்து வார்துகின் முடித்துக் கூர்முட் பிடித்து" முப்புரத்தை எரிக்க முக்கண்ணன் நிற்கும் காட்சி மகத்தான முறையிலே வரையப்பட்டிருக்கின்றது. எட்டுத் தோளுடன் தேரில் நின்று கைகளிலே ஆயுதங்கள் பல இருக்கவும் வில்லை வளைத்து அம்பை எய்யாமலே தன் புன்முறுவலால் முப்புரத்தை எரிக்கும் அசகாயமும் வெற்றி கண்ட பெருமிதமும் அழகாக தீட்டப் பெற்றிருக்கின்றன. உள்புறம் இருப்பது கோயில் கட்டப்பட்ட காலத்தை சார்ந்த ஓவியங்கள் வெளிப்புறம் இருப்பது நாயக்க மன்னர் காலத்தைச் சேர்ந்தவை பிரகாரத்தின் மேல் அடுக்கிலுள்ள சுவர்ப்பகுதியில் 86க்கு மேற்பட்ட சிற்பங்கள் உள்ளன. பரத முனிவர் இயற்றிய நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள 108 கரணங்களில் 80க்கு மேற்பட்டவை சிவன் அபிநயித்துக் காட்டுவதாக அமைந்த சிற்பங்கள் இவை கோயிலை உள்ளடக்கி இரண்டு தட்டு பிரகாரச் சுவர் உள்ளது. அதன் உட்புறம் இரண்டடுக்குகள் கொண்ட மூடு மண்டபமும் முன்புறம் அளவில் பெரியதும் ஆனால் உயரக் குறைவானதுமான கோபுரமும் உள்ளன. மூடுமண்டபத்தில் இரண்டடுக்குகளைக் கொண்ட வரிசையாக 36 உப கோயில்கள் உள்ளன. திக்குல் பாலகர்களுக்கும் இதர தெய்வங்களுக்குமென ஏற்பட்ட கோயில்கள் இவை கோபுரத்துக்கு முன்புறம் இன்னொரு வெளிப்புறக் கோபுரம் பெரியதாக உள்ளது பிரகாரத்தின் மூன்று புறமும் மூன்று தோரண வாயில்கள் உள்ளன. இக்கட்டிடங்கள் சிற்பங்கள் இசையையும் நடனத்தையும் காட்டும் ஓவியங்கள் தவிர கோயிலின் சில பகுதிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலா சாஸனங்கள் பல அழக்காக பொறிக்கப் பட்டுள்ளன. கட்டிடத்தை கட்டியவரும் அவர்களுடைய உறவினர்களும் அளித்துள்ள நன்கொடைகள் போன்றவற்றைப் பற்றி அவை நிறையக் கூறுகின்றன. வெண்கலத்தில் சிலை வார்க்கும் கலைக்கும் அரசன் பெரும் ஆதரவு அளித்தான் என்பதை கோயிலில் அலங்கார வெண் சிலைகள் பல இருப்பதில் இருந்து அறிந்து கொள்ளலாம் அவற்றுள் இன்றும் வழிபடப்படும் அற்புதமான ஆனந்த நடராஜர் சிலை ஒன்று மக்கள் நுன்கலைத் துறையில் பெற்றிருந்த உயர்தர ஆற்றலுக்கு இக்காலத்தால் அழியாத கலைச்சின்னம் சான்று கூறுவதுடன் அக்காலத்தில் கட்டிக்கலையின் இணையற்ற சாதனை நிலையமாகவும் விளங்குவது தஞ்சைப் பெருங்கோயிலாகும்.

இக் கோயிலுக்கும் சமூகத்துக்கும் உள்ள தொடர்புகள் மிக இறுக்கமானது எனலாம் சோழர் காலத்து கோயில்களில் மிகவும் செல்வம் படைத்த கோயில் இதுவாகும். முதலாம் இராச இராசன் தனது படையெடுப்புக்களினால் பெற்ற பொருளனைத்தையும் இக் கோயிலுக்கே வளங்கினான். பொன்னும் வைரமும் இழைத்த அணிகலன்களாய் இதற்குக் கிடைத்தவை மதிப்பிடற்கரிய அளவினதாகும் பிற அரசர்களும் படையினரும் அதிகாரிகளும் வழங்கிய தானங்களும் மிகப்பல கோயிலுக்குக் கிடைத்த காசுகள் 12 வீதம் வட்டியாகக் கொடுத்தும் வருவாய் பெறப்பட்டது. கடனுக்குக் காசாய் வட்டி இறுக்காது. கற்பூரம் ஏலக்காய் முதலிய பொருள்களும் வழங்கப்பட்டன. இத்தகைய தஞ்சைக் கோயிலின் முன்மாதிரியைப் பின்பற்றிப் பிற கோயில்களும் செல்வவளத்தை அவ்வவ்வற்றின் தரத்திற் கேற்ப பெற்றுச் சிறந்த முறையில் நிர்வாகிக்கப்பட்டன. கோயிலில் பெருவிழாக்கள் மட்டுமன்றி நாடகங்கள் முதலாம் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

கோயில் நிர்வாகத்தில் அரசர்களின் வழி காட்டலில் பலர் நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டு நிர்வாகிக்கப்பட்டு வந்தது. இவ்வகையில் நிர்வாகப் பணியாளர்களின் தலைவனாக இருந்தவன் பொய்கைநாட்டுக் கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளாண் என்பவன் கோயில் பணிகளின் கண்காணி நாயகமாக பொய்கைநாட்டுக் கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண் என்பவன் கோயில் பணிகளின் கண்காணி நாயகமாக இருந்து செய்தவன் பாண்டி நாடான இராசராச மண்டலத்துத் திருக்கானைப்போர் கூற்றத்துப் பாளூர்க்கிழவன் அரவணையான் மாலரிகேசன் என்பவன் அர்ச்சகர் சிவாசாரியன் பவனபீடான் ஆவர். பதிகம் ஓத 48 பேர் பல்வித இசைக் கருவிகள் வாசிப்பதற்கு பலரும் நியமிக்கப்பட்டிருந்தனர். இதற்கேதவாகவே கோயிற் சுற்றாடலில் 400 தேவ ரடியார்களின் குடியோற்றப்பட்டனர். என எடுத்தியம்பப்படுகின்றது. இக்காலத்தில் உருவாக்கப்பட்ட கல் வெட்டுக்கள் யாவும் அக்கால அரசர் கோயில்களுக்கு வழங்கிய நிலதானங்கள் ஏனைய சேவைத்திறன்களை எடுத்தியம்ப காரணமாகின்றன. இராச இராசன் பெரிய கோயிலெனப்படும் தஞ்சைக் கோயிலின் வேலைகள் குறைவின்றி நடைபெற 35 சிற்றூர்களை விட்டதாக கல்வெட்டுக்கள் சான்று பகருகின்றன. இத்தகையதான பல்விதமான சிறப்பியல்புகளையும் பெற்று தனக்கோர் தனித்த இடம் பெற்று விளங்கிய தலமாகக் கருதப்படுவது தஞ்சைப் பெருங் கோயிலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ தசஷிண கைலாச புராணம்

ஈழத்திலே தோன்றிய தலபுராண வரிசையில் முதற் புராணமாக திருகோணமலையில் கோயில் கொண்டுள்ள கோணேஸ்வரப் பெருமானையும் மாதுமையம்மையாரையும் போற்றிக் கூறும் நூலாக காணப்படுவது ஸ்ரீ தசஷிண கயிலாய புராணமாகும். இந்நூலானது முழத்தில் எழந்துள்ள இருபத்துமூன்று தலபுராணங்களில் முதன்மையானது. இப்புராணத்தினை இயற்றிய ஆசிரியர் யார் என திட்டவட்டமாகக் தெரியாத போதிலும் கா. சிவசிதம்பரஐயர் பதிப்பித்த தட்சிண கைலாச புராணப் பதிப்பில் இது யாழ்ப்பாணத்து மகாவித்துவான் சிங்கை செகராசசேகரன் இயற்றியது எனக்கூறப்பட்டுள்ளது. பு. பொ. வைத்திலிங்க தேசிகர் பதிப்பில் பிரம்மஸ்ரீ பண்டிதராசரருச் செய்த ஸ்ரீ தசஷிண கைலாயபுராணம் என எழுதப்பட்டுள்ளது. இவற்றால் தசஷிண கைலாச புராணத்தின் ஆசிரியர் யார் என உறுதியாக கூற முடியாத போதிலும் நூலில் உள்ள அகச் சான்றுகளைக் கொண்டு தட்சஷிண கைலாச புராணம் ஆரியச்சக்கரவர்த்தி காலத்தில் சயவீரசிங்கையாரியனாம் செகராசசேகரனால் அது பாடப்பட்டது. இவன் தனது குருவாகிய சைவராச பண்டிதர் என்னும் வித்தகரின் வேண்டுகோளினாலே வடமொழியிலுள்ள நூலொன்றை ஆதாரமாகக் கொண்டு வித்துவ மரமொன்றின் வழியிலே உருவாக்கப்பட்ட நிலையில் ஏழு சருக்கங்களையும் 632 செய்யுள்களையும் கொண்டு அமைந்துள்ளது.

இப்புராணமானது திருக்கோணேசரத் திருத்தலத்தின் தோற்றம் அங்கு எழுந்தருளியிருக்கின்ற இறைவனின் பெருமை இவற்றுடன் கூடியதான பிறவிடயங்கள் பலவற்றையும் எடுத்துரைக்கின்றது. அவ்வகையில் இப்புராணத்தின் சிறப்பாயிரம் பாடிய அரசகேசரி என்பவர் அதன் பொருளடக்கத்தை மேல் வருமாறு வர்ணிக்கின்றார்.

"மணிநிறக் கண்டன் மாண்புறு கயிலையின்
அணிநிறக் கொடுமுடி ஆயிரத்தோர் முடி
படவரவு ஒதுங்கப் பறிதரும் இலங்கை
வடகடல் நடுவன் மாத்திரம் ஒலிப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமுக் கோணமலை தென் கயிலை
பரன்அருள் உருத்திரர் பதினொரு பேரும்
ஒருபது முகந்தரும் ஒன்பது விரிஞ்சரும்
வருகடற் கடகம் வழங்கிய மீனமும்
திருமலை தழுவிய தேசமுக நிருதனும்
பெருமத மலைகரிப் புரவலர் பலரும்
ஆசையோடு இறைஞ்சிய புராணநாள் கதையை
ஆசறு தமிழில் அரைகுதி என்றனன்"

என்பதனூடாக திருநீல கண்டனாகிய சிவபெருமான் தங்கியிருக்கும் மேரு மலையிலே 1001 சிகரங்கள் உண்டு. அவற்றை ஆதிசேடன் காவல் புரிகின்றான். அவன் ஒதுங்கும்படியாக அவனோடு போர் புரிந்த வாயுதேவன் அச்சிகரங்களுள் ஒன்றைப் பறித்துக் கடலின் நடுவிலே வைத்தான் அது தென்கயிலை என்னும் திரிகோணமலையாகப் பொலிந்தது. அத்தகைய திருமலையிலே பதினொரு உருத்திரர்களும் திருமாலின் வடிவினராகிய முகந்தர் பதின்மரும் ஆழ்கடலில் தேவர்களின் காப்பு வளையல்களைத் திருமாலின் அவதாரமாக்கிப் பெற்று வந்த பெருமீனும் இலங்கேஸ்வரனாகிய தசக்கிரீவனும் பூலோகத்து மன்னர்கள் வேறு பலரும் அத்தலத்திலே வழிபாடு செய்தனர். இவற்றைப் பற்றிய திவ்வியமான சரிதங்கள் அடங்கிய புராணக்கதையை இனிய தமிழ்ப் பாவினால் அமைத்திடுக என்றனன். எனக் கூற அவர் அதனை உருவாக்கினான் என்பதும் இது வடமொழியிலுள்ள மச்சேந்திய புராணத்தின் சாரத்தை மையமாகக் கொண்டு எழுந்தது. என்பதனை சிறப்புபாயிரம் கூறும் இடத்து

"ஆதரவின் இறைஞ்சுகதை கைலாச புராணமென
அறையலுற்றேன் மாதுரிய மச்சேந்திரிய
வடபுராணத்தியல்பு மருவத்தானே." என்பதனூடாக

தென் கயிலாயத்தின் சிறப்பினை விளக்கும் புராணக் கதையொன்று வடமொழியில் எழுதப்பட்டிருந்தது எனக் குறித்து நிற்கின்றது. இவற்றின் பேறாக இந் நூலானது ஒரு மகாத்மியம் போலானது எனவும் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புராணத்தின் ஏழாவது சருக்கமான திருநகரச் சருக்கத்திலே கோயிலைப் பற்றிய பொது வழக்கான சரிதம் ஒன்றின் அம்சங்கள் சேர்ந்து விடுகின்றன. அந்த சரித்திரம் குளக்கோட்டன் கஜபாகு என்னும் அரசர்க்ள் கோணேசர் கோயில் தொடர்பாக புரிந்த திருப்பணிகள் பற்றியது. அவர்களிருவருட் செம்பியனான குளக்கோட்டன் கோணேசராலயத்தை கற்றளியாகப் புனரமைத்து ஆலய சேவைகள் ஒழுங்காக நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். எனவும் விமானம் எழில்மிகு மண்டபம் கோபுரம் ஆகியன பொருந்திய மகத்தான ஈஸ்வரத்தையும் அழகிய பெருமாள் கோட்டத்தையும் மழைநீரைத் தேக்கும் திருக்குளத்தையும் பாவநாசம் என்னும் சுனையினையும் குளக்கோட்டன் என்று வழங்கும் சோழகங்கன் அமைத்தான் என்பதனை

"பார்தாங்கு கோயிலும் பொன் மண்டபமுங்
கோபுரமும் பரற்கு நாட்டி
பேர் தாங்கு மாயனுக்கு மலங்கார
வாலய மொன்றியற்றி முந்துங்
கார் தாங்கு திருக்குளமும் பாவநாசச்
சுனயும் கண்ட கண்டன்
சீதாங்கு குளக்கோட்டனென்னும் சோழகங்கனை
நம் சிந்தையில் வைப்பாம்." (7)

என எடுத்துக் காட்டுகின்றது. இது தசஷ்ண கைலாசபுராணத்து ஆசிரியர் குளக்கோட்டனைப் பற்றி சொல்லும் வர்ணனை. இது திருநகரச் சருக்கத்திலே கவிநயத்துடன் விரிந்துரைக்கப்படுகின்றது. நூலாசிரியா அரசனான சிங்கைச் செகராச சேகரன் நூற்பாயிரத்திலே குளக்கோட்டனைப் பற்றிய பாடல் சமய குரவரைப் பற்றிய பாடலைத் தொடர்ந்து வருகின்றது. சமயாபிமானியாகிய நூலாசிரியர் குளக்கோட்டனை நால்வரின் நிலையிலே வைத்துவிட்டார். குளக்கோட்டனைப்பற்றிய அவரின் நோக்கு உணர்ச்சி பூர்வமானது குளக்கோட்டன் திருப்பணிகளைப் பற்றிக்கூறும் நூல்களிலே தசஷ்ண கைலாச புராணமே மிகவும் பழமையானது எனலாம்.

கலைத்தால் அவனுக்கு ஒரு நூற்றாண்டுக்குப் பின்பட்ட வனாகிய கஜபாகு 12ம் நூற்றாண்டிலே பொலநறுவையில் அரசனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவன். அவன் கோணேசர் ஆலயத்து சேவைகளைப் புனருத்தாரணம் பண்ணியவன் சைவசமய சார்புடையவன். இம்மன்னர்களைப் பற்றிய ஆதாரபூர்வமான பல தகவல்களையும் இப்புராணம் எடுத்துக்காட்டி விளங்கிச் செல்வதும் அதன் பெருமையை உணரக் காரணமாகின்றன.

இப்புராணமானது திருகோணமலைத் திருத்தலத்தினை தசஷிணகைலாயம் என அழைப்பதுடன் அதற்கு .திரிகூடம், திரிகோணம், கோணபர்வதம், மச்சேகரம் எனும் பெயர்களும் இதற்குண்டு எனக் கூறுவதுடன் இத்தலத்தினை சத்தி போதாயணர் முதலிய இருடிகளும் தேவாசுரர்களும் பூசித்தனர். மகாசுனை என்னும் தீர்த்தமும் இங்கே உள்ளது. இதன் மகாதத்துவங்களையும் மேலான அற்புதங்களையும் எடுத்துக் கூறுவது அத்துடன் அம்பொன் மேனிலங்கை நீளத்தளவு நாறூற்றின் காதம், பம்பு, நாட்டகல மத்திற்பாதியினாற்பதே உம்பராலயங்கள் கோடியொன்பதுண்டசுரர்க்குள்ள செம்பொனாலயங்கள் மூன்றுகோடியிற்றிகழுமன்றே என எடுத்தியம்புவதன் ஊடாக இலங்கையின் நீள அகலத்தையும் இந்த ஆலயத் தொகையையும் இப் புராணம் கூறுவதுடன் அவற்றின் பெருமை என்றுமே அறிவதற்கு ஆதார நூலாக இருக்கின்றது. இத்தகைய வரலாறு எமக்கு பெருமையைத் தருவதுடன் சிங்கள மக்களுடைய இராசவளிகூட இப்பொழுது இருக்கும் இலங்கையை பன்னிரண்டில் ஒரு பங்கு என்கின்றது. மற்றைய பூம்பாகங்கள் எங்கே இத்துனை பரப்புடைய புண்ணிய பூமியிலே இருந்த ஆலயங்களையும் அவற்றை உருவாக்கியவர்களையும் அவற்றின் பெருமைகளையும் நம்மால் அறிய முடியாது.

இந்த சோழ மன்னர் குளக்கோட்டனே திருக்கோணேசர் ஆலயத்தைக் கட்டி நிர்வாகங்களையும் வகுத்தான் என்று கல்வெட்டுக் கூறுகின்றது. இலங்கையை ஆண்ட இராவணேகரன் தாயார் வழிபட்ட ஸ்தலமுமாம் என்பர். இது தேவாரம், திருப்புகழ் என்னும் திவ்விய அருட்பாக்கள் பெற்ற புண்ணிய தலமுமாகும். இக் கோயிலுக்கு அளவற்ற அர்ச்சகர் முதலிய பணியாட்களும் அசைவற்ற அசைவுள்ள திரவியங்களும் வேறு வேண்டிய செல்வங்களும் கணக்கிலடங்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் இருந்தன. என்பதனையும் இப்புராணம் சிறப்பாக எடுத்துக்காட்டிச் செல்கின்றது.

இப்புராணத்தின் ஊடாக இங்கு குடியிருக்கும் பெருமான் கோணேசர் அம்பிகையின் திருநாமம் மாதுமையம்மை (ஹம்சகமனாம்பிகை - பிடியன்ன மென்னடையும் மானெனவும் வழங்குவர்) இதனை உமாபதி சிவாச்சாரியார் அருளிய சிவநாமக் கலிவெண்பாவில்

**"மன்னு திருகோணமாமலையின் மாதுமைசேர்**
**பொன்னே கோணேசப் புராதனா"**

என்று வருவதாலறிலாம். இதன் ஊடாக இத்தலத்தின் பெருமையினை நோக்கும்போது பார்த்த மாத்திரத்தே போக மோட்சங்களைக் கொடுக்க வல்லது. நிர்க்குணமாயும் பராசக்தி சொரூபமாயும் உள்ளது. இதன் நடுவில் ரகஸ்யமான குகையொன்று உள்ளது. இம்மலை கோடி சூரியனின் ஒளியினை நிகர்த்தது. ஆயிரம் தங்கத் தூண்களோடும் நூற்றுக் கணக்கான இரத்தினமயமான ஒன்பது பிரகாரங்களோடு கூடியதுமாக விளங்குகின்றது. கோபுரங்களும் விதம் விதமான சிகரங்களும் உள்ளன. நான்கு வாயில்களோடும் மணிதோரணங்களோடும் கூடியதும் பல மண்டபங்களையுடையதும் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டதும் இரத்தினம் பதித்த ஜன்னல்களையுடையதும் பூந்தோட்டங்கள் மலிந்ததாக விளங்குகின்றது. அங்கே தங்கத் தாமரை மிளிர்கின்றதும் தங்கமயமான நெற்கதிர்களை உடையதும் அன்னம் சாரசப் பறவைகளால் சூழப்பட்டதுமான ஒரு தடாகம் இருந்தது. மேலும் அனேக அற்புதங்களைக் கொண்டதும் நந்தவனங்கள் நிறைந்ததுமாக விளங்குவது இத்தலம்.

அங்கே கறபக விருஷ்சத்தினடியில் சிந்தாமணியினால் அமைக்கப்பட்ட இல்லத்தின் நடுவில் பஞ்சப் பிரமையான அழகிய இரத்தின மஞ்சத்தின் நடுவில் தலையணைகளோடும் கூடிய ஹம்ச தூளிகா மஞ்சத்தின் மீது பத்மாசனத்தில் அமர்ந்துள்ளார் இறைவன் மேலும் ஒருமுகம் முக்கண் நான்கு கைகளுடன் கூட எல்லாவித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபரணங்களாலும் அலங்கரிக்கபபட்டுச் சந்திரசேகராக புஷ்பபாணம் கோதண்டம், பாசம், அங்குசம் தரித்து புன்சிரிப்போடு கூடிய முகத்துடன் வீற்றிருக்கின்றார். உலகமாகவும் இளஞ்சூரிய மண்டலத்தை ஒத்தவளும், நான்கு புயங்கள், முக்கண்களோடு கூடியவளும் பாசம், அங்குசம், வில், பாணம். தரித்தவளும் மந்தகாசம் புரிபவளுமாகிய அம்பிகையை மடியின் மீது வைத்துச் சங்கரன் வீற்றிருக்கின்றார்.

தென்பால் விநாயகரும் வடபால் சண்முகம் நந்தி பிருங்கி மகாாகளா் வைரவர் முதலியோர் புடைசூழ வீற்றிருக்கின்றார். நாரதர் பரிவாரங்களோடு கூட கீதமிசைக்கின்றார். அதனை தும்புருவும் கந்தர்வர் முதலியோரும் நன்கு பாடுகின்றனர். அப்சரஸ்திரீகள் நடம் புரிகின்றனர். இவ்வாறு நாட்டியம், கீதம், வேத கோஷங்கள் துந்துபி ஒலி தோத்திரங்கள் மந்திரங்கள், ஆகியவைகளால் சோபிப்பவரும் வேண்டுவார் வேண்டுவதை ஈவாருமான கோணேசப் பெருமான் இந்த உருவத்தை எடுத்துச் சதாசிவனாகவும் சச்சிதானந்த உருவினராகவும், சகலராகவும், நிஷ்கலராகவும் சாமகானத்தில் விருப்புள்ளவராகவும் நாதவிந்து சொருபராகவும் தாரகமந்திரமாகவும், காட்சியளித்து தட்சிண கைலாயத்தில் அம்பிகையோடு கூட விளங்குகின்றார். என மூன்றாம் சருக்கத்தில் கூறிச் செல்பவை அத் திருத்தலப் பெருமையை உணர்ந்து கொள்ள இப் புராணமானது எவ்வளவுக்கு உதவுகின்றது என்பதனை அறிய ஏதுவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருக்கலம்பதி சித்திர வேலாயுதர் ஆலயம்

கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்று விளங்கும் முருகத்திருத்தலங்களுள் சரித்திரம் வனப்பு கலை என்பவற்றால் சிறந்து மிகப் புராதனத்தையும் தனிச்சிறப்பையுமுடைய தமிழ் நாகரிகத்தின் சின்னமாக வெருங்கலம் பதி முருகவேள் ஆலயம் திகழுகின்றது. இது மட்டக்களப்பின் வடபால் எல்லையில் வெருகல் ஆறு பாய்ந்து ஓடுகின்றது வெருகல் கங்கை தீரத்திலே இவ்வூர் இருப்பதால் வெருக்கலம் என்று பெயர் உருவாகியது திருகோணமலையை அண்மித்ததான வெருக்கலம்பதி மட்டக்களப்பு மாவட்ட வடக்கு எல்லையாகும் அங்கு வயல் வெளிகளுக்கு மத்தியில் வெருகல் சித்திர வேலாயுத சுவாமி ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தின் எதிரே தாமரைத் தடாகம் ஒன்றுள்ளது. இது இயற்கையாகவே ஒரு தனிச்சிறப்பை அளிக்கின்றது. நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்து விழாக்களுக்கும் தீர்த்தோற்சவத்துக்கும் யாத்தரை செய்யும் பல்லாயிரக்கணக்கான மக்களை நோக்கும் போது இப்புராதன ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் முருக வேளுடைய பெருமையும் அருமையும் இனிது புலப்படுகின்றது.

இத்தலமானது மரபு வழிமுறைமையிலே திருப்படைக் கோயில் அமைப்பு முறைகளிலொன்றாக அமைந்து காணப்படுகின்றது. அதாவது கருவறையில் தெய்வ உருவப்படிமானத்திற்குப் பதிலாக அத்தெய்வத்தின் ஆயுதத்தை வைத்து வழிபடும் மரபு இதற்கேதுவாக இவ்வாலயத்தைப் பற்றிய பூர்வீக வரலாறு ஒன்று புராணக்கதையுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. சூரசம்சார காலத்தில் கந்தக் கடவுளார் விட்ட பாணமொன்று வெருகலம்பதிக்கு தென்புறத்தே சுமார் மூன்று மைல்களுக்கப்பால் உள்ள கதிரவெளிகு கிராமத்தைச் சேர்ந்த தம்பிரான் வெளி என்னும் விளை நிலத்திலே பதிந்ததாகவும் வேடர்கள் அதனைக் கண்டு எடுத்து கொத்துப் பந்தரிட்டு வழிபட்டனரென்றும் தெரிய வருகின்றது. வேடுவரால் பூசிக்கப்பட்டா இவ் வேலாயுதத்தை பல ஆண்டுகளின் பின் இவ் வூர்ப்பகுதியில் குடியேறிய மக்கள் சிறிய ஆலயமொன்றினை அமைத்து நித்திய நைமித்தியங்களை மேற் கொண்டனர் என அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துடன் இத் திருப்படைக் கோயிலானது பண்டைய அரசனின் மதிப்பும் மானியமும் சீர்வரிசைகளும் பெற்ற கோயிலாகக் கருதப்படும் நிலையில் கோயிலின் நிர்வாகப் பாராமரிப்பு மற்றும் தொண்டுகள் என்பவற்றைச் செய்யும் சாதியார்களை வகுத்து நியமித்து அக்கோயிலில் நடக்க வேண்டிய விழாக்கள் முதலியவற்றையும் ஒழுங்குற அமைத்து மட்டக்களப்பு சிற்றரசரும் கண்டிச் சிங்கள மன்னரும் அவற்றுக்கான மானியங்களை அவ்வப்போது வழங்கியுள்ளனர் எனவும் நிர்வாக தலைமைக்கு என கலிங்கவேளாளர் என்னும் சாதியர் நியமிக்கப்பட்டனர். இலங்கையைத் திரிசிங்கள தீவாக்கித் தீவின் முப்பகுதியையும் முறையே ஆண்ட வங்கர், சிங்கர், கலிங்கர் என்பாருள் கலிங்கராலே தம் நாட்டிலிருந்து கொண்டு வரப்பெற்று ஆங்காங்கே பிரதானிகளாக வைக்கப்பட்டிருந்தோர் கலிங்க வெள்ளாளர் ஆவர் அதனாற் பூபாலகோத்திரம் என்றும் இவர்கள் அழைக்கப்பட்டனர். இவர்கள் திருக்கோயிற் பணிக்கென்றே முதலில் கொண்டுவரப் பெற்று அப்பகுதியில் குடியேற்றப்பட்டனர் எனவும் அறிய முடிகின்றது. இவர்களைத் தொடர்ந்து குளக்கோட்டன் என்னும் மன்னனும் இலங்கையின் கிழக்குப் பாகத்தின் மீது படையெடுத்து தன் ஆதிக்கத்தை நிலை நிறுத்திய காலத்தில் கோணேஸ்வர ஆலயத்திருப்பணிகளையும் மேற்கொண்டான் என்று இங்குள்ள மக்களில் ஒரு சாரார் கூறுகின்றனர்.

இவ்வாலயத்தைப் பற்றி மற்றுமொரு சுவாரஸ்யமான கதை அவ்வூர் வாசிகளிடையே செல்வாக்குற்று விளங்குகின்றது. திருநெல் வேலியைச் சேர்ந்த நல்லைநாதர் செட்டியார் என்பவர் தன்னைப் பீடித்த குஷ்ட நோய் நீங்கும் பொருட்டு ஸ்தலயாத்திரை செய்தார் தென்னிந்திய ஸ்தலயாத்திரையில் ஈடுபட்டும் நோய் நீங்கப்பெறாத அவர் ஈழநாட்டில் பிரசித்தி பெற்று விளங்கும் கதிர்காமத் திருத்தலத்தை கேள்வியுற்று ஈழநாட்டுக்கு வந்தார். பாத யாத்திரை செய்த அவர் ஒருநாள் வெருக்கலம் பதியில் தங்கினார் முருகவேள் அவருக்கு சொப்பனத்திலே தோன்றி இப்புனித ஸ்தலத்தில் தங்கி தீர்த்தத்தில் நீராடினால் நோய் நீங்கும் என்றும் அரிப்பு என்னும் இடத்தில் பாதைக் கண்மையிலுள்ள மாவிலங்கை மரநிழலின் கண்ணமைத்துள்ள புற்றில் திரவியக் கிடாரங்கள் புதைக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன. என்றும் அவற்றைக் கொண்டு ஆலயமொன்றினை எடுக்க வேண்டும் என்றும் கூறி மறைந்தருளினார் இறைவனின் திருவருளை வியந்த செட்டியார் அப்புனித தீர்த்தத்திலே நீராடி நோய் நீங்கல் பெற்றார் தென்னிந்திய சிற்பிகளைக் கொண்டு ஆலயத்திருப்பணியை மேற்கொண்ட செட்டியார் முருகன், தெய்வானை, வள்ளியம்மன் விக்கிரகங்களை பிரதிட்டை செய்வித்து நித்திய நைமித்தியங்கள் ஒழுங்காக நடைபெறச் செய்வதற்காக தென்னிந்தியாவில் இருந்து பல்வேறு குடிகளை வருவித்தாராம் அதனால் அவரது நோயும் நீங்கிற்று இதன்பின் அவர் ஈச்சிலம் பற்றையில் வாழ்ந்த சித்துநாட்டார் எனப்படும் திமிலர் பரம்பரையினரிடம் ஆலயத்தை ஒப்படைத்துச் சென்றார் என வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

மேலும் திரவியங்களைச் செலவிட்டு விலையேறப் பெற்ற திருப்பணிப் பொருட்களையும் ஆபரணங்களையும் செய்தும் திருப்தி அடையாத நல்லைநாதச் செட்டியார் கண்டி மன்னனிடம் சென்று அங்கு இருந்த இரத்தினமொன்றை திருக்கொண்டு வெருக்கலம் பதியை அடைந்தார். இவனை அறிந்த அரசன் ஆத்திரமுற்று செட்டியாரைச் சிரசு தெரியும் வண்ணம் பூமிக்குள் புதைத்து மதயானையைக் கொண்டு மிதிக்கும் படி ஏவலாளர்களை அனுப்பினான் அரசன் ஆணையைச் சிரமேற் கொண்ட ஏவலாளர்கள் மதயானையை ஏவி விட்டனர் ஆயினும் நல்லைநாதச் செட்டியாருக்கு கிட்ட செல்ல மறுத்தது புறமுதுகு காட்டி ஓடத்தொடங்கியது. இதனைக் கேள்வியுற்ற மன்னன் ஆங்கு சென்று வினவிய போது முருகவேளுக்குப் பதக்கம் ஒன்று செய்வதற்காகவே மாணிக்கத்தைத் திருடியதாகச் செட்டியார் ஒப்புக் கொண்டார். ஆலயத் திருப்பணியின் பொருட்டே இவ்விதம் செய்தாரென்பதை உணர்ந்த அரசனும் செட்டியாரை மன்னித்து கங்கையில் நீராடி ஆலயத் தரிசனம் செய்து ஆலய நித்திய நைமித்தியங்களுக்கு நெல் விளை நிலங்களை நிலந்தமளித்தான். நல்லைநாதச் செட்டியார் அம் மாணிக்கத்தை நடுநாயகமாக வைத்து பதக்கம் ஒன்றினைச் செய்வித்து இறைவனுக்குச் சார்த்தி மகிழ்ந்தார். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த புராதனமானதுமான திருத்தல யாத்திரைகளுக்குரிய திருத்தலமாகவும் தீராத நோய்களை போக்கவல்லதுமாக விளங்குவது பற்றி வீரக்கோண் முதலியாரால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடப்பட்டதுமான சித்திர வேலாயுதர் காதலெனும் இலக்கியம் இத்தலப் பெருமையினை என்றுமே போற்றி நிற்கின்றதெனலாம்.

இத்தலம் 15ம், 16ம் நூற்றாண்டுகளில் பிரசித்தி பெற்று விளங்கியது என்று திரு. லீ அவர்கள் குறிப்பிட்டிருப்பதும் நோக்கபாலது இதன் பேறாக மன்னர் பலரும் இத்திருத்தல வளர்ச்சிக்கு பக்கபலமாக இருந்து உதவி புரிந்து வந்த நிலையில் சிறப்பாக கண்டியை ஆட்சி செய்த இராஜசிங்க மன்னன் இத்திருத்தலத்திற்கு நிலதானங்கள் வழங்கியதுடன் ஆபரணங்களையும் தானமாக வழங்கினான் என்றும் இவன் இந்து மதத்திற்கு வழங்கிய பேராதரவுக்கு சரித்திரமே சான்று பகரும் இப்பகுதி வன்னியர் ஆட்சியின் போது சீரும் சிறப்பும் பெற்று விளங்கியதாக "ரின்பரோ" ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். வன்னியர்களுடன் இவ்வாலய நிர்வாகம் நீண்ட காலமாக தொடர்புபட்டிருந்துது என்பதற்கு ஸ்தலபுராணம் சான்று பகருகின்றது. இவற்றை நோக்கும்போது இத்தலத்தின் தனித்துவத்தை அறிய முடிகின்றது. இவற்றுக்கு மேலாக வெருக்கலமபதிக்கு தாம் ஒருமுறை சென்றபோது ஆலயத்திலே பெருமளவு விலையுயர்ந்த ஆபரணங்களும் மாணிக்கங்களும் பதக்கங்களும் திருப்பணிப் பொருட்களும் விக்கிரகங்களும் இருந்ததாகவும் சுமார் 1500 பேர் அவ்வாலயத்தைக் காவல் செய்து கொண்டிருந்தனர் எனவும் திரு. லீ அவர்கள் குறிப்பிடப்பட்டிருப்பது அன்றைய ஆலயத்தின் சிறப்பையும் நித்திய நைமித்தியங்களையும் தெளிவாக புலப்படுத்துகின்றது எனலாம்.

16ம் நூற்றாண்டுக்கு பிற்பட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் நிர்வாக சூழல் மாற்றங்கள் இத் திருத்தலத்தை அந்நியர் ஆட்சிக்குட்படுத்திக் கொண்ட நிலையில் அத்தகைய இருள் சூழ்ந்த காலங்கள் கழிந்ததன் பின் கட்டட அமைப்பு முறைகளில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, நீர்கொழும்பு ஊரவர்கள் அதிக ஈடுபாடு கொண்டு தமது பிரதேச ஆதிக்கத்தை நிலைநாட்டும் வகையில் செயல்பட்டதுடன் ஆலய பிரகாரங்களை அமைத்து அவற்றின் தனித்துவங்கள் என்றுமே மாறாது பேணிக்காத்து வருவது பற்றி சாசன குறிப்புக்கள் சான்றுபகருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பெருமை வாய்ந்த இவ்வாலயத்திலே வருடாவருடம் ஆவணி மாதம் உத்தரட்டாதி நட்சத்தித்தன்று கொடியேற்றப்பட்டு 18 திருவிழாக்கள் நடைபெற்று 19ம் நாட்காலை தீர்த்தஉற்சவத்துடன் முடிவுறும். இதிலே 18ம் திருவிழா வெகு விமரிசையாக நடைபெறும். திருச்சூகர வேட்டை, தூதுபோதல் என்னும்ட நிகழ்ச்சிகள் முக்கியத்துவம் பெற்று விளங்கும் அண்மையிலுள்ள விளைநிலத்தை பன்றியொன்று அழிப்பதைக் கேள்வியுற்ற வேலாயுதக் கடவுள் தனது பரிவாரங்களுடன் வேட்டைக்கு எழுந்தருளி பன்றியைக் கொல்லுதலே திருச்சூகர வேட்டையாம். வேட்டைக்கெழுந்தருளிய காலத்திலே தனது துணைவியரான வள்ளி தெய்வானை என்போரை அழைத்துச் செல்லாமையினால் ஊடல், வாய்ப்படுதலை, தூது போதல் விளக்குகின்றது. இங்கு உற்சவத்திற்கு வரும் ஆயிரக்கணக்கான மக்கள் இவ்விரு நிகழ்ச்சிகளைக் காணாவிடில் தமது வெருக்கம்பதி யாத்திரை பூரணப்படாதெனக் கூறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும் வன்னியர்களின் சந்ததியினரால் நடாத்தப் பெறும் விழாக்களும் பழங்குடிச் செட்டிமாரால் நடத்தப்பெறும் விழாவும் சிறப்பாக எடுக்கப்படுகின்றன. தீர்த்தோற்சவத்துடன் வருடாந்த உற்சவம் நிறைவெய்தும் இந்நாளிலே தீக்குளிப்பு வைபவம் நடைபெறும் அதில் அடியார்கள் பலர் கலந்துகொண்டு தீக்கணல் தகியாதவாறு நடந்து செல்லும் காட்சி பலரையும் வியக்க வைக்கும். அன்று மதிய வேளையில் வெருக்கல. ஆற்றில் சுவாமி தீர்த்தமாடச் செல்வார், அங்கு திரைமறைவில் இயந்திரப் பெட்டியை யானைபோல் செய்யப்பட்ட அலங்காரத் தண்டிகை மீது எடுத்துச் செல்வர்.

அன்றிரவு தீருவூஞ்சலில் அலங்கார ரதத்தில் அலங்கரிக்கப்பட்ட முருகன் தெய்வானை வள்ளியம்மனுக்கு பூஜை நடைபெறும். இங்கு தினமும் மூன்று நேரப்பூஜைகள் நடைபெறும் பல ஊர்களைச் சேர்ந்தோர் தற்கால நிர்வாக அமைப்பில் கலந்து கொள்வதன் மூலம் சிறந்த நிர்வாகக் கட்டமைப்புள் நிர்வாகிக்கப்படும் பெருமைபெற்ற தலமாகவும் இது விளங்குகின்றது. இவ்வாலயத்தை அவ்வப்போது தரிசித்த பக்தர்களும், அடியார்களும் முருகவேள் மீது பாமாலை சூடியுள்ளனர். கிளித்தூது, சித்திரவேலாயுத சுவாமி திருவூஞ்சல், சித்திரவேலாயுதர் தோத்திரம் வெருகலம்பதி முருகவேள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிகம் வெருக்கலம்பதி மான்மியம் என்பன முருகவேள் மீது பாடபெற்றவற்றுள் சிறந்த பாமாலைகளாகவும் விளங்குகின்றன. இவற்றின் துணை கொண்டு என்றும் மங்காமல் மறையாமல் பெருமைபெறறு விளங்கும் திருத்தலமாக விளங்குவது வெருக்கலம்பதி முருகன் திருத்தலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானவன் மாதேவி ஈஸ்வரம்

ஈழத்திலே சோழராட்சிக் காலத்திலே உருவாக்கப்பட்ட திருத்தலங்களிலொன்றாக விளங்குவது வானவன் மாதேவி ஈஸ்வரமைமாகும். ஈழத்த இந்துமத வரலாற்றில் கி. பி. 1000 - 1250 வரைக்குட்பட்ட காலம் பொலநறுவைக் காலமென அழைக்கப்படும் நிலையில் இக்காலத்தில் முதலாம் இராஜ இராஜனால் ஈழத்தின் வடபகுதி கைப்பற்றப்பட இவனது மகனாகிய முதலாம் இராஜேந்திரனால் ஈழம் முழுவதும் 1017ல் கைப்பற்றப்பட்டது. இவர்களது ஆட்சி 1070 வரை நீடித்தது. ஈழம் சோழப் பேரரசின் ஒன்பதாவது மாகாணமாக விளங்கி மும்முடிச் சோழ் மண்டலம் என அழைக்கப்பட்டது. இதனை நிர்வாகிக்க சோழ நாட்டிலிருந்து இராசப் பிரதிநிதி ஒருவன் அனுப்பப்பட்டான். இவனைச் சோழ இலங்கேஸ்வரன் என ஈழக் கல்வெட்டுக்கள் அழைக்கின்றன. இவர்கள் காலத்தில் பொலநறுவை ஜனநாத மங்களம் என அழைக்கப்பட்டது. இது இராஜ இராஜனின் பட்டப் பெயர்களில் ஒன்றாக இருந்தது. இக்காலத்தில் அமைக்கப்பட்ட ஐயம்திரிபற்ற சான்றுகளின் அடிப்படையில் அமைக்கப்பட்ட கோயில்கள் பலவற்றுள்ளும் ஒன்றாகவும் இராஜ இராஜனின் பட்டத்தரசியும் இராஜேந்திர சோழனின் தாயானவளுமான வானவன் மாதேவியின் நினைவாக இராஜேந்திர சோழனால் அமைக்கப்பட்ட திருத்தலமாக விளங்குவது வானவன் மாதேவி ஈஸ்வரமாகும். இது ஈழத்து சிவாலயங்கள் பலவற்றுள்ளும ஒன்றாகவும் 2ம் சிவாலயம் என்ற பெருமையிலும் அழைக்கப்படுகின்றது.

இக்கோயிலானது பொலநறுவை நகரின் அரணமைந்த பகுதியினுள் வட கிழக்கு மூலையின் சமீபத்தில் காணப்படுகின்றது. பொலனறுவையிலே அகழ்வாராய்ச்சிகளை ஆரம்பித்த காலத்தில் சுமார் 100 வருடங்களுக்கு முன் அங்குள்ள கோயில்களிலே அதுவே நன்கு பேணப்பட்ட நிலையிலே காணப்படுகின்றது. ஆயினும் அண்மைக் காலங்களிலே கவனக்குறைவினால் அதிலே சில சேதங்கள் ஏற்பட்டுள்ளன. கலாச்சார முக்கோணம் உருவாக்கப்பட்ட பின்பு இக்கோயிலும் ஏனைய இந்துக் கோயில்களின் இடிபாடுகளும் உரிய கவனத்தைப் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோயிலில் கர்ப்பக்கிரகம் அந்தராளம் அர்த்தமண்டபம் நந்தி பீடம் கோபுரவாசல் ஆகிய பகுதிகளுடன் அமைக்கப்பட்டிருந்தது. அதன் நீளம் 66 அடி 4 அங்குலம் கோயில் வளாகத்தை சூழந்த சுவர் 96 அடி நீளமும் 84 அடி அகலமும் கொண்டதாகும். மதில் சுவர்கள் செங்கட்டிகளால் அமைக்கப்பட்டிருந்தன. கிழக்கிலும் வடக்கிலும் மதிற்சுவர்கள் நகரின் அரண்களை ஒட்டியிருந்தன. இதனை வணிகர்கள் கட்டி அவற்றின் சிறப்பினை பேணிவருவதாக கூறபபடுகின்றது. கொயில் கற்றளியாக அமைந்த கட்டிடமாகும். இது கருங்கல் சுண்ணக்கல் ஆகிய இருவகையான கற்களையும் கலந்து கட்டப்படடுள்ளது. கற்பக்கிரகமானது அதன் பக்கங்களில் 20.5 அடி அளவு கொண்ட சதுரமாகும் அதன் அடிப்பகுதியெனக் கருதப்படும் அதிஷ்டானம் 4 அடி 1 அங்குல உயரம் கொண்டது. கர்ப்பக் கிரகத்தின் சுவர்கள் 12 அடி உயரமானவை அவற்றிலே தேவகோஷ்டங்கள் உள்ளன. சுவர்களிலுள்ள அரைத் தூண்களில் தடி குமுதம் கண்டம் பலகை பத்ம இதழ் போதிகை என்னும்உறுப்புக்கள் உள்ளன.

கற்பக் கிரகத்தின் மேலமைந்த திரிதள விமானம் 31அடி 9 அங்குலம் உயரம் கொண்டது. சம காலத்திலே தென்னிந்தியாவில் அமைக்கப்பெற்ற கோயில்களில் விமானங்களோடு ஒப்பிடுமிடத்து இது சாதாரணமான அளவினைக் கொண்டதாகும். கர்ப்பக் கிரகத்தின் மேல் அகன்ற வளைவுகளையுடைய கொடுங்கையும் யாளி வரியும் அமைந்துள்ளன. முதலாவது தளத்தின் நான்கு மூலைகளிலும் கூடங்கள் உள்ளன. அவற்றினிடையே சாலைகளும் நாசிகைகளும் அமைந்துள்ளன. இரண்டாவது தளம் சதுரமானது. அ[illegible]ம் குமுதம் கண்டம் பத்ம பண்டிகை என்னும் படைகளைக் கொண்டது. சுவர்களிலே அரைத்தூண்கள் அமைந்துள்ளன. நான்கு பக்கங்களிலும் எல்லாமாக பன்னிரண்டரைத் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. மூன்றாம் தளம் சதுரமான பிரஸ்தரத்தில் அமைந்துள்ளது. இத்தலமானது எண்கோண வடிவமானது. அதன் சுவர்களில் இரண்டால் தளத்தில் உள்ளவற்றைப் போல் அரைத்தூண்கள் உள்ளன. இத்தளத்தின் மேலுள்ள பத்ம பணடிகையில் அமைந்திருக்கும் சிகரம் எண் கோணமான அமைப்புடையதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நிலையில் கோயிலின் அர்த்தமண்டபம் மகா மண்டபம் ஆகியன முற்றாகவே மறைந்து விட்டன. கிழக்கு நோக்கிய ஆலயத்தின் முற்புறத்தின் நந்திபீடம், பலிபீடம், கொடிமரம் ஆகியன அமைந்திருந்தன. கோயில் வளாகத்தின் வடகிழக்கு மூலையில் பிள்ளையார் கோயில் செங்கல்லினால் அமைக்கப்பட்டிருந்தது. இக் கோயிலில் இறையகம், அந்தராளம் என்பன அமைந்து காண பட்டதுடன் அதுவும் அதிஷ்டானதின் மேல் அமைக்கப் பட்டிருந்தது. வடமேற்கு மூலையில் இதனை ஒத்த தேவ கோட்டம் ஒன்று அமைந்திருந்தது. குமரக் கடவுளின் படிமமும் மயிலின் உருவமும் அதன் சுற்றாடலில் வேறு சிற்பங்களோடு காணப்பெற்றமையால் அது குமர கோட்டமாய் இருந்ததென்று உணர்ந்துகொள்ள முடிகின்றது.

இவ்வாலயத்திற்கு அரசர்களின் பணி முறைகளை முன்னின்று செய்வித்தனர் என்பதனைக் கல்வெட்டு சான்றுகள் கூறிநிற்கும் நிலையில் தென்னிந்தியாவிலிருந்து பொலநறுவைப்பகுதிக்கு அரச நிர்வாக சேவைக்கென வந்த நிர்வாக அதிகாரிகளும் படையினரும் நானாதேசி வணிகரும் தொழில் வினைஞரும் அந்தணரும் வேறு பல சமூகப் பரிவினரும் வழிபாடு செய்வதற்கென பதினாறுக்கும் மேலான சைவ வைணவ தலங்கள் பொலநறுவையில் அமைக்கப்பட்டன எனவும் அவற்றின் இரண்டாம் சிவாலயமான வானவன் மாதேவி ஈஸ்வரம் அழிவுறாது இன்றும் சீரான நிலையிலுள்ளது. இலங்கையிலுள்ள இன்றுவரை நிலைபெறும் இந்துக் கோயில்களின் கட்டிடங்களிலே இதுவே மிகப் பழமையானதாகும். அழகும் உறுதியும் கொண்ட கற்றளியாக அமைக்கப் பெற்றதான இக் கோயில் சோழர் காலப் பணியின் சீர் பண்புகளுக்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. அதில் முதலாம் இராஜேந்திர சோழனின் சாசனங்கள் இரண்டும் அதி இராஜேந்திரன் காலத்துச் சாசனங்கள் இரண்டும் காணப்படுகின்றன. இவை சோழராட்சிக் காலத்துக் கோயிலொன்றின் நிறுவாக அமைப்பினைப் பற்றிய விபரங்கள் சிலவற்றைப் பதிவு செய்துள்ள ஆவணமென்ற வகையில் அது மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கல்வெட்டின் மூலம் தென்னிந்தியக் கோயில்களிற் போல இலங்கையிலுள்ள சில சைவக் கோயில்களிலும் கோயில் நிர்வாக முறை சோழரால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. என்பது தெளிவாகின்றது. அமைப்பளவில் பெருத்து மக்கள் வாழ்வோடு தம்மைப் பெரிதும் இணைத்துக் கொண்ட நிலையில் தமக்கே இயல்பாக அமைந்த சமயக் கடமைகளோடு உலகியற் கடமைகளையும் மேற்கொண்டு அதிகளவான பணியாளர்களையும் இக்காலக் கோயில் நிறுவனம் கொண்டிருந்த போது இந் நிறுவன நிர்வாக அமைப்பு முன்னைய காலங்களை விடப் பெருத்து சிக்கலடையலாயிற்று இத்தகைய சிக்கல் மிக்க வளர்ச்சி பெற்ற அமைப்பினைக் கவனிப்பதற்கு பல நிர்வாக உத்தியோகத்தர்கள் கோயில் நிறுவனத்திலே நியமனம் பெற்றிருந்தனர். அவர்களுட் குறிப்பிடத்தக்கோர் பன்மாஹேஸ்வரர், தேவகன்மிகள், ஸ்ரீகாரியம் செய்வொர் பசிபாத் மூலத்தோர் மூலப்பாடுடையார், வாரியர் என்போராவர். இவர்களுடன் கோயிலில் சேவை புரிவதற்கென பல தேவரடியார்களும் அங்கு நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களுடன் சிவபிராமணர், பட்டர் என்போரும் இடம் பெற்றிருந்தனர். இவர்களில் பன்மாஹேஸ்வரர் சமூகத்தின் பல்வேறு பிரிவினரும் கோயில் நிறுவனத்துக்கு அளித்த தானங்களை பல சந்தர்ப்பங்களிலும் பாதுகாத்துக் கொண்டனர். இதனால் பாதுகாப்புச் சம்பந்தமான அதிகாரங்களை சில வேளைகளில் பெற்றிருந்தனர். அதாவது தானங்களைப் பொறுப்பேற்றவர்கள் அவற்றை நடை முறைப்படுத்த தவறுகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களிடமிருந்து குற்றப்பணம் அறவிடும் அதிகாரத்தை இவர்கள் பெறறிருந்தனர். தேவ கன்மிகளைப் பொறுத்த வரை

1. பிறரால் கோயில் நிறுவனங்களுக்கு கொடுக்கப் பட்ட தானங்களைப் பெற்று பாதுகாத்தல்.

2. கோவிலின் பிறஉத்தியோகத்தருடன் சேர்ந்து சில நடவடிக்கை களை எடுத்தல்.

3. சில வேளைகளில் நிலங்களிலிருந்து கிடைக்கவிருந்த சொத்துக் களைப் பாதுகாத்து அவற்றை மேற்பார்வை செய்தல் என்பன வாகும். பதிபாத மூலத்தோரை பொறுத்தவரை கோயில்களுக்கு அளிக்கப்பட்ட தானங்களைப் பாதுகாத்தல் சில வேளைனகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையார், ஊரார், நகரத்தார் ஆகியோருடன் சேர்ந்து கோயில் கருமங்களை செய்தல். பட்டுடை பஞ்சா சாரியாரைப் பொறுத்தவரை மூலஸ்தானத்துக் கடவுளுக்குப் பட்டுடை உடுத்துவிக்கும் தொழிலை மேற்கொண்டனர். இவ்வாறாக இவர்கள் வானவன் மாதேவி ஈஸ்வரத்தில் நிர்வாகத்தில் அதிகாரம் பெற்றவர்களாகக் காணப்பட்டனர்.

இங்கு தான தருமங்களையும் கோயில் விவாகரங்களையும மேற் பார்வை செய்தல் பன்மாகேஸ்வரரின் மரபு வழியான உரிமையாகும். பன்மாகேஸ்வரர் ரட்ஷை என்ற தொடர்கோயிற் சாசனங்களின் இறுதியிற் காணப்படுகின்றமையும் குறிப்பிடக் கூடியது மூலஸ்தானத்தின் ஆராதனை முதலான கருமங்களை புரிகின்ற அந்தணரை பதிபாத மூலபட்டுடைப் பங்சாசாரிய தேவகன்மிகள் என்ற பெயரால் அழைத்தனர். கோயில் பணிகளைச் செய்வதற்கு பரிசாரகர் என்ற பணி மக்களும் கடமை புரிந்தனர். மாணிக்கம் என்ற பட்டம் பெற்ற தேவடியார் பலர் வானவன் மாதேவீ ஈஸ்வரத்தில் இருந்தனர். கங்கை கொண்ட சோழ மாணிக்கம் காம திருவியான கோது குலமாணிக்கம் கோவிந்தன் ஆடவல்லாலான நாற்பத்தெண்ணாயிரம் மாணிக்கம் வேதன் காமியான இராஜேந்திர சோழ மார்ணிக்கம், தேவன் உய்ய வந்தானான முடி கொண்ட சோழ மாணிக்கம் என்னும் தேவரடியாரை அங்குள்ள சாசனங்கள் குறிப்பிடுகின்றன.

மேலும் கோயிலில் விளக்கெரிப்பதற்கும் திருவாராதனை நிகழ்த்துவதற்கும் அரசாங்க அதிகாரிகளினாலே பல ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவ்வகையில் விளக்கெரிப்பதற்கு சோழ மண்டலத்து விற்பேட்டு நாட்டு மங்கலப்பாடி வேளாண் சோழ பல்லவரையன் என்னும் பிரதானி ஏற்பாடு செய்திருந்தான். அதற்கென 5 காசும் இருசாணே நால்விரல் நிழத்துத் தாராநிலை விளக்கு ஒன்றும் இது தலைமுறை தலைமுறையாக சந்திரன், சூரியன் உள்ளவரை இக்கோயில் என்றும் எரியும் விளக்கு எரிப்பதற்காக வழங்கப்பட்டது. திருவாராதனை செய்யவாரும் பரிசாரகரும் பன்மாகேஸ்வரக் கண்காணி செய்வாரும் நாட்டவரும் தேடிவரயாரும் என்றென்றும் இடையாறாது விளக்கெரிப்பதற்கு சம்மதித்து காசினை பொறுப்பேற்றனர் என்பதற்கு ஆதாரங்கள் பலவும் இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன.அவனால் வழங்கப்பட்டன. திருவாராதனை செய்வாரும் பரிசாரகரும் பின்மாகேஸ்வரக் கண்காணி செய்துவாரும் நாட்டவரும் தேவரடியாரும் என்றென்றும் இடையாறாது விளக்கெரிப்பதற்கு சம்மதித்து காசினை பொறுப்பேற்றனர் என்பதற்கு ஆதாரங்கள் பலவும் இங்கு காணப்படுகின்றன.

இத்தகையதான சிறப்புக்கள் பலவும் பெற்ற இத்தலமானது இலங்கையிற் சோழராட்சி முடிவுற்று ஏறத்தாழ ஆயிரம் வருடங்களுக்கு மேலாகியும் அவ்வாட்சியை இன்றும் நினைவுபடுத்திக்கொண்டிருக்கும் உன்னத பண்பாட்டுக் கருவூலமாக விளங்குவது இக் கோயிலாகும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கைத் தொல்பொருளாய்வுப் பகுதியினர் மேற்கொண்ட அகழ்வாரய்ச்சி நடவடிக்கைகளின் போதே இக் கோயிலின் பெருமை வெளிக்கொணரப்பட்டது. இதன் கலையம்சம் பற்றி கவனித்த தென்னிந்திய வரலாற்றுத்துறைப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்.

“கருங்கல்லினாலும் சுண்ணாம்புக் கல்லினாலுங் கட்டப்பட்டுப் பழைய பொலனறுவை நகரில் சுவர் மதில்களுக்கிடையில் காணப்படும் இச் சிறிய அழகுமிக்க சிவதேவாலயம் தற்போதும் நல்லபாதுகாப்பு நிலையில் காணப்படும் ஒருசில இந்து நினைவுச் சின்னங்களுள் ஒன்றாகும் தஞ்சாவூரில் அமைக்கப்பட்ட பெருங்கோவிலை அதியுன்னதமானதும் விசாலமானதுமான உதாரணமாகக் கொண்ட கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட பத்தாம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளுக்குகிடையில் தென்னிந்தியாவில் கட்டப்பட்ட இந்துக் கோயில்களின் அமைப்பினை இக்கோயிலின் கட்டிட அமைப்புமுறை ஒத்தது என ஐயமின்றி கூறலாம்” என எடுத்துக்காட்டியமை அவர் ஆலயத்தின் சிறப்பினை அறிந்து கொள்வதற்கு ஏற்புடைய சான்றாகின்றன. உன்னத பண்பாட்டுக் கருவுலமாக விளங்குவது இக்கோயிலாகும். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கைத் தோல்பொருளாய்வுப் பகுதியினர் மேற்கொண்ட அகல்வாராய்ச்சி நடவடிக்கைகளின் போதே இக்கோயிலின் பொருமை வெளிக் கொணரப்பட்டது. இதன் கலையம்சம் பற்றிய கவனித்த தென்னிந்திய வரலாற்றுத்துறைப் பேராசிரியர் நீலகண்டசாஸ்திரி அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலிங்கோற்பவ மூர்த்தமும் வழிபாடும்

சைவ சமயத்தின் முழுமுதற்கடவுள் சிவன் எடுக்கும் மூர்த்தி பேதங்களுள் ஒன்றாக முதன்மை பெற்றதாக அமைந்து காணப்படுவது லிங்கோற்பவ மூர்த்தமாகும். இது இறைவன் ஆண் பெண் வடிவுக்கு அப்பாற்பட்டவராகவும் அடிமுடி தேடியும் கண்டறியப்படாதவராகவும் அருவமும் உருவமும் அன்றி அருவுருவத்திருமேனி கொண்டவராக இருக்கின்றார் என்பதையும் எடுத்துக் காட்டும் ஒரு வடிவமாகவும் காணப்படுகின்றது.

லிங்கம் என்ற சொல் அடையாளம் என்றும் பொருளை உணர்த்தும். அடையாளம் என்பது ஒரு பொருளை இத்தன்மையத்து என்று உணர்த்துவதற்கு ஏற்பட்ட குறியாம் ஒரு பொருளை உணர்த்துவதற்கு ஏற்பட்ட அடையாளம். அப்பொருளையே உணர்த்தும்வேறு பொருளை உணர்த்தாது ஒரு பொருளுக்கு ஏற்பட்ட அடையாளத்தை எப்பொழுது உபயோகப்படுத்துகிறோம் என்று ஆராய்ந்தால் ஒரு பொருளை நேரிற் காட்ட முடியாத சந்தர்ப்பத்தில் அப்பொருள் இத்தன்மையதாய் இருக்கும் என்று அத்தன்மையை விளக்குகின்ற ஒரு குறியைக் காட்டுவது வழக்கம். அது போல சிவமாகிய பொருளை நேரிற் காட்ட முடியாத சந்தர்ப்பத்தில் அச் சிவப்பொருள் இத் தன்மைத்து என்ற காட்டும் அடையாளமே லிங்கம், சந்திரசேகர். சோமாஸ்கந்தர் முதலிய மூர்த்தங்களுக்கு லிங்கம் என்ற பெயர் பொருந்தாது. இம்மூர்த்தங்கள் வேறு வேறு அண்டங்களில் பேசும் தெய்வங்களாய் உருவத் திருமேனிகளோடு காணப்படுவதால் உபசாரமாக லிங்கங்கள் என்று கூறுவர். இந்நிலையில் உருவப்பொருள் அல்லாத சிவப்பொருளைக் குறிப்பதே லிங்கம் எனப்படும்.

ஆலயங்களில் உள்ள திருவுருவங்களில் சிவலிங்கம் மிக முக்கியமானது. அது சிவபெருமானின் அருவுருவத் திருமேனியைக் குறிப்பது. அது தத்துவங்கள் நிறைந்தது. இறைவன் சிவலிங்கத் திருவுருவினை உடையவன் என்பதை உலகில் உள்ள அவன் படைப்புக்கள் யாவும் சான்று பகர்கின்றன. இலிங்கம் சிவபெருமான் ஒருவருக்கே சிறப்பாக அமைந்த திருவுருவமாதலால் அது சிவலிங்கம் எனப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் லிங்கம் என்ற சொல் எல்லாம் தோன்றி மறையும் மூலம் என்றும் பொருள்படும். லிங்-லயம், கம்-தோன்றுதல இக்கருத்தையே சுப்பிரபேதாகமம் வலியுறுத்துகின்றது.

"லயம் கச்சந்தி பூதாதி சமஹாரே நிகிலாநிச
சிருஷ்டிகாலே யதா சிருஷ்டிஸ்தஸ்மாஸ் லிங்கமுதாகிருதம்"

சங்கார காலத்திலே சமஸ்த சேதானா சேதனப் பிரபஞ்சங்களும் லயத்தை அடைந் பின் சிருஷ்டிது காலத்தே அங்ஙனம் உற்பத்தியாகின்றமையால் லிங்கம் எனப்படும். இவ் லிங்கம் என்னும் சொல் அடையாளம் குறி எனப் பொருள்படும். இது பற்றி பெரியபுராணம் கருத்து கூறும் இடத்து,

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும்
காரணமாய் நீள்நாகம் அணிந்தார்க்கு

நிகழ் குறியாம் சிவலிங்கம்" என்பதை நாம் அறிகின்றோம் இன்னும் லிங்கம் என்பதில் லி என்பது லயத்தைக் குறிப்பது எனக் கூறிய நிலையில் சிவம் + லிங்கம் சிவலிங்கம் என வந்தது. சிவம் கடவுள் இலிங்கம் அடை யாளம் எனவே கடவுளைக் காட்டும் குறி அடையாளம் சின்னம் எனப்படும். ஒரு நாட்டின் அடையாளமாக கொடி இருப்பதை நாம் அறிவோம். ஒரு கொடியைக் கொண்டு அந்நாட்டை நாம் அறிவது போல சிவலிங்கம் என்பது சிவனைக் குறிப்பது என்பதை நாம் அறிகின்றோம்.

இன்னும் லிங்கம் என்பதில் லி என்பது லயத்தைக் குறிப்பது லயம் என்றால் ஒடுங்குதல் என்பது பொருள் கம் என்பது போதல், தோன்றுதல் ஆகியவற்றைக் குறிக்கும். எனவே [illegible]மாக்களும் உலகமும் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் இடமாயு[illegible]து. லிங்கம் எனப் பொருள் கொள்வதும் உண்டு அன்றியும் லிங்கம் என்ற சொல் லிகி என்ற தாதுவில் நின்றும் பிறந்து சித்தரித்தல் என்னும் பொருளும் கொள்ளக் கிடந்தலால் சிவபிரான் படைத்தல் முதலிய ஐந்தொழில்களாற் பிரபஞ்சத்தைச் சித்தரிக்கின்றார் என்றும் பொருள் கூறுவர்.

சிவலிங்கத்தின் அமைப்பு முறையினை நோக்குமிடத்து இருபெரும் பாகங்கள் உள்ளன. அவை மேற்பாகம், கீழ்ப்பாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவாம். கீழ்ப்பாகம் அகன்றுள்ளது அது பீடம் போல் அமைந்துள்ளது. அதனை ஆசுடையார் என்பர். அது சத்தியைக் குறிப்பது. ஆவுடையார் பாகம் மேலே எண் கோணமாகவும் கீழே நாற் கோணமாகவும் இருப்பது இதன் கருத்து. எல்லா அண்டங்களும்சிவசத்தியின் ஆளுகைக்குட்பட்டவை என்பதாம். ஆவுடையாரினின்றும் நீண்டு தீர்த்தம் வடியும் பாகமாயுள்ளதை கோமுகி என்பர். கோமுகி என்றதினால் கோவாகிய பசுக்களை (உயிர்களை) தன்னிடத்து அழைத்து மலநீக்கம் செய்து சிவமாக்கும் செயலுக்கு அறிகுறியாய் அமைந்துள்ளது என்பதாம் இதனையே தன் நிலமை மன்னுயிர்கள் சாரத்தருஞ்சத்தி என்று பெரியோர் 4றியுள்ளனர். இதனை உள்ளடக்கியவை விஷ்ணு பாகம் என்னும் ஏனையவற்றை பிரம பாகம் எனவும் அழைப்பர். இங்கு ஆவுடையாரின் கீழ் எண்கொணமாகவும் அவ் எண் கோணத்தின் கீழ் நாற்கோணமாகவும் பிரதிட்டாலிங்கம் அமைந்திருக்கின்றது. இவற்றின் கருத்தென்னவெனில் நான்கு திக்கும் எட்டுக் கோணங்களுமாயிருக்கின்ற எல்லா அண்டங்களும் சத்தியினால் ஆக்கப்படுவன என்பதையும் அவையெல்லாம் சத்தியினுள் அடங்கும் என்பதனையும் உணர்த்தும் பொருட்டாக அமைந்துள்ளது.

இறைவன் இங்ஙனம் சத்தியும் சிவமும் என பெண்பாலாகவும் ஆண்பாலாகவும் தம்முள் இருவேறு வகைப்பட்ட தன்மைகள் உடையனாயிருத்தலால் இவ:வுலகம் எல்லாம் ஆண் பெண் என்ற இருபகுதியாக இயங்குகின்றன. இக் கருத்து அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகளாற் சிவஞான சித்தியாரில் விளக்கபபட்டுள்ளது. அத்திருவாக்கு வருமாறு

**"சத்தியும் சிவமும் ஆயதன்மை இவ்வுலகம் எல்லாம்**
**ஒத்துஒவ்வா ஆணும் பெண்ணும் உணர்குணங் குணியும்ஆக**
**வைத்தனன் அவளால் வந்த ஆக்கம் இல்வாழ்கை எல்லாம்**
**இத்தையும் அறியார்பீட இலிங்கத்தின் இயல்பும் ஓரார்"**

எனவே இலிங்கம் என்பது சிவமேயாம். அது பக்குவம் நோக்கி ஆன்மாக்களின் தியான பூசா நிமித்தம் அச்சிவம் விளங்கும். சிலை முதலிய வடிவங்களிற் கற்பிக்கப்பட்டதாகும். அதன் சொரூபம், பிரணவ வடிவமாகக் காணப்படும் அகாரம், கண்டம், உகாரம். கோமுகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாரம் வட்டம் எனவும் அதன் விருத்தம் உருத்திரபாகம், நடுவில் எட்டு மூலை விட்டுணுபாகம் கீழ்ப்பகுதியின் அடி நான்கு மூலை பிரமபாகம் எனவும் உருத்திரபாகம் பும்லிங்கம் விட்டுணுபாகம் ஸ்திரி லிங்கம் பிரமபாகம் நபுஞ்சகலிங்கம் எனவும் அறிய விளங்கும்.

இச் சிவலிங்கம் பரவெளியாகிய அருவத்தைக் காட்டுகின்ற உருவமாயிருப்பதால் அருவுருவத் திருமேனி எனப்படும். அன்றியும் அதீத நிலையில் நிற்கின்ற சிவம் சத்தியோடும் கூடிச் சீவன் முத்தர்க்கும் சாதகர்க்கும் ஞானிகட்கும் அவரவர்க் கேற்ற தியானத்தில் அளவிடுதல் நிமித்தமாக அவிகாரமான நிட்களத்திலெ சத்தி விகற்பமான கலைகளாலே தியான மூர்த்தங்களாக விளங்கும் சாதாக்கியத்தைக் குறிப்பதனாலும் அருவுருவத் திருமேனி எனப்படும். இச்சாதாக்கியம் ஐந்து வகைப்படும். அவற்றுள் இலிங்கமும் பீடமுமாக விளங்கும் நிலை கன்ம சதாக்கியமாகும். சிவசாதாக்கியம் அமூர்த்தி சதாக்கியம் மூர்த்தி சாதாக்கியம் கர்த்திரு சாதாக்கியம் என்னும் நான்கும் ஒன்றை ஒன்று பற்றி ஐந்தாவதாகிய கன்ம சதாக்கியத்தைச் சேர்ந்திருத்தலின் இந்தக் கன்ம சாதாக்கியம் மற்றைய சாதாக்கியங்களிலும் சிறப்புடையதாகும்.

**"ஐந்தியற் சத்திக ளாயினோர் தமைத்**
**தந்தது மருவுருத் தாங்கி யவ்வழிச்**
**சித்தனை யருச்சனை செய்து யாவரு**
**முய்த்திடச் சதாசிவ வுருவைத் துற்றதும்"**

என கந்த புராணமும்

**"பந்தமாகிய மலவி ருள கற்றும்**
**பரிதி யாயுள பல்லு யிர்க்குயிரா**
**யந்த மாதிகனாய் பருமொளியா**
**யமல மாகு மவ்வ ருவெனு முகுலம்"**

எனத் திருவாதவூரடிகள் புராணமும் கூறுமாற்றால் அவற்றின் சிறப்புக்களை அறிய முடிகிறது.

இவ் இலிங்கமானது மூவகையான பேதங்களைக் கொண்டது. அவையாவன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அவ்வியத்தலிங்கம் - பீடமும் இலிங்கமுமாயிருத்தல்

2. வியக்தா வியக்தாலிங்கம் - இலிங்கத்திலே முகமும் தோள்களும் வெளிப்பட்டிருப்பது.

3. வியக்தலிங்கம் - எல்லா அவயவங்களும் வெளிப்பட்டிருக்கும

சந்திரசேகரர் முதலிய மகேஸ்வர வடிவங்கள்

இத்தகைய பேதங்களை வேறு வகையாகவும் கூறுவர். அவற்றை விரிக்கல் பெருக்கும் திருக்கோயில் தூபி தூலலிங்கம் எனவும் விமானத்துள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் சூக்கும லிங்கம் எனவும் அதற்கு முன்னுள்ள பலிபீடம் பத்திரலிங்கம் எனவும் கொள்ளப்படும். இவ்வுண்மைகள் திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளன.

**"தூய விமானமுந் தூலம தாருமால்**
**ஆய சதாசிவ மாகுநற் சூக்குமம்**
**ஆய பலிபீடம் பத்திர லிங்கமாம்**
**ஆய அரனிலை ஆய்ந்து கொள்வார்கட்கே."**

எனக் கூறப்பட்டுள்ளமை அவற்றின் சிறப்புக்களை உணரக்காரணமாகின்றன.

இவ்லிங்கமானது ஆலயங்களில் அதிகம் காணப்படும். அதே நேரம் வருடாவருடம் ஞாபகப்படுத்தப்படுவதற்கும் ஏற்ற மூர்த்தமாகும். அதாவது மாசி மாத கிருஷ்ண பட்ச சதுர்த்தி 14ம் நாள் வரும் சிவராத்திரி தினத்தில் நான்கு மார்க்கத்திலுள்ளவர்களும் தத்தம் பக்குவ நிலைக்கேற்ப வணங்கும் வடிவமாக காணப்படும் நிலையில் இதனை வணங்குவதால் ஏற்படும் பயன் அறிவு ஆராய்ச்சியால் இறைவனை அடையமுடியாது. அகந்தையை அடக்கி தன்னை உணர்தல் மூலமே இறைவனை அடைய முடியும் என்பது எடுத்துக் காட்டப்படுவதற்கு ஏற்ற வடிவம் இது பற்றி சம்பந்தப் பெருமான் கருத்துக் கூறும் இடத்து

**"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்கு**
**சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதி"**

என கூறிச் சென்றுள்ளார். இவ் இலிங்கமானது பரார்த்த லிங்கம் இட்டலிங்கம் என இருவகைப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**I. பரார்த்தலிங்கமானது** சிவபெருமான் சங்கார காலம் வரையும் சாந்நித்தியராய் இருந்து ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிக்கப் பெறும் இலிங்கமாம். இது தாவரலிங்கம் எனவும் படும் இது ஐவகைப்படும்.

அ) சுயம்புலிங்கம் - தானே தோன்றியது.

ஆ) காணலிங்கம் - விநாயகர் சுப்பிரமணியர் முதலிய கணங்களால் தாபிக்கப்பட்டது.

இ) தைவீகலிங்கம் - விட்டுணு முதலிய தெய்வங்களாலே ஸ்தாபிக்கப்பட்டது.

ஈ) ஆரிடலிங்கம் - இருடிகர் அசுரர் இராக்கதர் என்னும் இவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது.

உ) மானுடலிங்கம் - மனிதரால் ஸ்தாபிக்கப்பட்டது.

**II. இட்டலிங்கமானது** ஆசாரியார் விசேட தீட்சையைப் பண்ணிச் சீடனைப் பார்த்து "நீ உள்ளளவும் கைவிடாது இவரை நாடோறும் பூசி" என்று அனுமதி செய்து அடியேன் இச்சரீரம் உள்ளளவும் சிவபூசை செய்தன்றி ஒன்றும் உடகொள்ளேன் என்று பிரதிக்ஞை செய்வித்துக் கொண்டு கொடுக்க அவன் வாங்கிப் பூசிக்கும் இலிங்கமாகும். இது ஆன்மார்த்தலிங்கம் எனவும் சலலிங்கம் எனவும் படும். இது வாணலிங்கம், படிகலிங்கம், இரத்தினலிங்கம், யோசலிங்கம், சணிகலிங்கம் எனப் பலவகைப்படும்.

இத்தகைய இலிங்கங்களை வழிபடும் மரபு சைவசமயத்தவருக்கு இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பமாகியது என்பதற்கு சிந்து வெளிப்பிரதேசமான மொகன்சதாரோ, கரப்பா ஆகிய நகரங்களில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்க வடிவங்கள் சான்றுப் பொருள்களாகக் காணப்படுகின்றன. வேத காலத்தில் படிங்குடிப் பெருமக்கள் மத்தியில் காணப்கட்டது. இதிகாச காலத்தில் ஆதி இலக்கியமான இராமாயணத்தில் இராமபிரானால் இராமேஸ்வரத்தில் சிவலிங்கம் வைத்து வழிபடப்பட்டது, எனவும் இறைவனை விக்கிரகத்தில் வைத்து வழிபாடு செய்தல் சிரேஷ்டமானது என்பதனை மகாபாரதக்கதையொன்று எடுத்து விளக்கும் நிலையில் அசுவத்தாமன் அக்கினி அஸ்திரத்தை நரநாராயணர்கள்மேல் பிரயோகித்தான் அது பாண்டவர்கள் சேனையை அழித்தது. ஆனால் நரநாராயனருக்குத் தீங்கு செய்ய முடியாது போயிற்று இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமுடைந்த அசுவத்தாமன் போரை நிறுத்திக் களத்தை விட்டு ஓடினான் வியாசமுனிவர் அசுவத்தாமன்முன் எதிர்ப்பட்டு நீ யாது காரணத்துக்காகப் போரைவிட்டு ஓடுகிறாய் என்று கேட்டார். நான் பிரயோகித்த அக்கினி அஸ்திரத்துக்கு எவரேனும் தப்பமுடியாது நரநாராயணரைச் செயிக்க முடியாது போன காரணம் யாது என அறியப்போகிறேன் என்றான். கேசவாச்சுரைப் போல் நீ தவத்தினால் சிறந்தனையேயாயினும் அவ்விருவரும் யுகந்தோறும் சிவபிரானை லிங்கத்திலே அர்ச்சிக்கின்றார்கள் நீ அச்சிவனை விக்கிரகத்தில் வழிபடுகிறாய் ஆதலின் அவர் தவவலிமை உனது தவவலிமையில் சிறந்தது என வியாசர் கூறினார். இவை மகேசுவர வடிவங்களுக்கும் மேலாயது சிவலிங்கம் என்பதும் அவ்வழிபாடு மிக்க சிறப்புடையது மட்டுமல்ல தொன்மையானது. என்பதும் இதிகாச நூல்கள் கூறும் துணிவுமிக்க கருத்தாகும்.

மேலும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் திருமேனிகளில் சிவலிங்கம் மிகப்பெருமையானது. அதனை வழிபடுவது சிறப்புடையது என சிவாகம நூல்களும் சான்று காட்டி விளக்கிச் செல்கின்றன. இத்தகைய நிலையில் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கத் திரு மேனிகளை சிவனெனக் கருதி வழிபடும் சரியையாளருக்கும் சிவன் அங்கு வெளிப்பட்டு நின்று அருள் செய்வார். இங்கே கிரிகையாளர் மந்திரத்தினால் லிங்கத்தில் சிவனைப் பதித்து வழிபடுவர். யோகியர் உள்ளத்தில் அவர் உறைந்திருந்து அருள் புரியும் நிலையில் மந்திரங்களினால் வழிபடும் யோகிகளுக்கு கடைந்த வழித்தோன்றும் நெருப்பைப் போல கறந்தவழித் தோன்றும் பாலைப்போல விரும்பிய வடிவாய் சிவலிங்கம் முதலிய திருமேனிகளில் அவ்வப்போது தோன்றி நின்று அருள் செய்வார் அன்பினால் வழிபடும் ஞானிகளுக்கு கன்றை நினைந்த புனிற்றாவின் முலைப்பால் போலக் கருணை மிகுதியால் அவர்கள் தன்மேல் வைத்த அன்பே தானாய் எப்போதும் வெளிப்பட்டு நிற்று அருள் செய்வார் என்பதனை கூறுமிடத்து.

**"திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனி தன்னைத்**
**சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவான் அங்கே**
**உருக்கொலி மந்திரத்தால் என நினைக்கும் அவர்க்கும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உளன் எங்கும் இவன் எங்கும் உளன் எனப்பார்க்கும்**
**விருப்பாய வடிவாகி இத்தனத்தின் எரிப்போன்**
**மந்திரத்தில் வந்துதித்து மிகுஞ் சுரப்பிக்கெங்கும்**
**உருக்காண ஒண்ணாத பால் முலைப்பால் விம்மி**
**ஒழுகுவது போல் வெளிப்பட்டருளுவன் அன்பர்க்கே.**

என வரும் சிவஞான சித்தியார் செய்யுள் சிறப்பு ஆதாரமாகின்றது இவ் இலிங்க வழிபாட்டுச் சிறப்புக்களை அறிந்து கொள்ளும் இலக்கியக் குறிப்புக்களில் காசி தாண்டவம் மிருதச் சங்கிதை என்பன சிறப்பு மிகுநூல்களாக காணப்படுகின்றன. இவற்றின் பெருமை கொண்டு இவ்வழிபாடு பற்றி நோக்குமிடத்து இறைவன் சர்வ வியாபகன் (அதாவது எங்கும் உள்ளவன்) ஆயினும் கோயிலில் உயிர்கள் வந்து வழிபட அவர்க்கு அருளும் கருணைத்திறத்தால் சாந்நித்தியம் பெற்று இருப்பார் என்பது.

**"செம்மலர் கொன்றாள் சேர வொட்டா**
**அம்மலங்கழி அன்பரோடு மாரீஇ**
**மாலறநேயம் மலிந்தவர் வேடமும்**
**ஆலயந்தானும் ஆரனெனத் தொழுமே"**

என சிவஞானபோதம் 12ம் சூத்திரம் சான்று காட்டி விளக்கிச் செல்கின்றது. இவற்றினூடாக எள்ளுக்குள் எண்ணெய் இருப்பது போலவும், பாலில் எண்ணெய் இருப்பது போலவும் பேரோளியாய் இருப்பது சிவத்தின் அருள் வெளிப்பாட்டை பெறும் இடமாகவும் இருப்பது சிவலிங்கம் ஆகும். இச்சிவலிங்கத்தினை வழிபட்டு முத்தியடைந்தோர் 21பேராகும் இவர்களில் சேரமான் பெருமாள், சாக்கியநாயனார், கலிங்காமர், பூசலநாயனார், மார்க்கண்டேயர் போன்றோர் சிறப்பு மிக்கவராக காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தட்சிணா மூர்த்தமும் அதன் வழிபாடும்

இறைவன் எடுக்கும் மூர்த்தி பேதங்கள் போகமூர்த்தம், யோகமூர்த்தம், வேகமூர்த்தம் எனப் பலவகைப்படும் நிலையில் போகமூர்த்தத்தில் போகியாய் திகழ்ந்து உயிர்களுக்கு போகத்தைப் புணர்த்துகின்றான். யோகியாய் அமர்ந்து உயிர்களுக்கு யோகமுத்தியைக் கொடுக்கின்றான். வேகியாய் விளங்கி உயிர்கள் செய்த வினையை அழித்தருளுகின்றான். இவற்றிலே அருள்பாலிக்கும் வடிவமாகவும் சச்சிதானந்த பெருவடிவாக உலகமக்கள் உய்தி அடையும் பொருட்டு எடுக்கப்பட்ட வடிவமாக விளங்குவது தட்சிணாமூர்த்தமாகும். இங்கு இறைவன் தட்சிணம் எனப்படும் தெற்குத் திசையை நோக்கி வீற்றிருத்தலில் அவருக்கு தட்சிணாமூர்த்தி என பெயர் வழங்குவதாயிற்று.

இவ்திருவுரு அமைப்பு முறையினை நாம் நோக்குமிடத்து கோயில்களிற் தென்புறச் சுவரின் ஒரு மாடத்தில் எழுந்தருளியிருப்பார். கல்லால மரநிழலில் தனிமையான சூழலில் புலித்தோலின் மேல் அவர் அமர்ந்திருப்பார். சில சிற்பங்களில் தாமரை மலர்மீதும் (பத்மாசனம்) அவர் அமர்ந்திருப்பது உண்டு அவர் தம் வலக்கால் ஆசனத்தின் கீழ் தொங்கவிடப்பட்டிருக்கும். இடக்கால் வளைந்து வலத் தொண்டையின்மீது குறுக்காக இருக்கும் இந்நிலை வீராசனம் எனப்படும். சில சிற்பங்கள் உத்குமசாசனம் முதலிய நிலையிலும் அவர் விளங்குவார். அவர் தம் திருவடியின் கீழ் முயலகன் கிடப்பான். திருவடியானது அவனை அழுத்திக் கொண்டோ அழுத்தாமலோ இருக்கும்.

தட்சிணாமூர்த்தி முக்கண்ணும் நாற்றோளும் உடையவர். அவருடைய வலக்கை சின் முத்திரையைப் காட்டிக்கொண்டு திகழும் சில சிறபங்களில் நாட்டிய நூல்கள் கூறும் சாந்தாம்ச முத்திரையும் காட்டுவதுண்டு இடக்கை வரதம் அல்லது தாண்டம் ஆகிய குறிப்பினை உணர்த்தும் மற்றொரு வலக்கையில் உருத்திராக்க மாலையும் இடக்கையில் நெருப்பு அல்லது பாம்பு இருக்கும் சில சிற்பங்களில் உருத்திராக்க மாலைககுப் பதில் புத்தகமும் நெருப்பு அல்லது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்புக்குப் பதில் நீலோற்பவ மலரும் விளங்கும். அமுத கலசத்தினையும் அவர் ஏந்தியிருப்பார். தட்சிணா மூர்த்தியின் வடிவம் வளைவுநெளிவுகளின்றி நேராக நிமிர்ந்த நிலையில் திகழும் ஒரு நெறிப்பட்ட உள்ளத்தின் உறுதியையும் தியாக நிலையின் இயல்பினையும் உணர்த்துவதற்கு அது ஓர் அடையாளமாகும். சடாபாரம், சடாபந்தம், சடாமண்டலம், சடாமகுடம் முதலியவைகளுள் ஒன்றை உடையவராக அவர் விளங்குவார். அதன்கண் கங்கையும் மதியும் கபாலமும் கொன்றையும் காணப்படும். திருமுக மண்டலம் தெளிவும் மகிழ்வும் நிரம்பி சாந்த நிலையில் திகழும் அவர்தம் [illegible] யோக பாவனையில் மூக்கு நுனியை நோக்கியிருக்கும். இது அடியார்க்கு அருள்செய்வதனையும் ஒரு நல்லாசிரியன் நிமிர்ந்திருந்து உண்மை ஞானம் கண்டறிந்த பின்பே மாணவர்களுக்கு போதனை செய்ய வேண்டும் என்பதனையும் எடுத்துக்காட்டும் அவர் பளிங்கு போன்ற வெண்ணிறம் உடையவராக விளங்குவார். இத்தகைய தன்மை படைத்தவர்க்கு தனித்துவம் மிக்க கேயில்களும் ஆலங்குடி, திருவாரூர் போன்ற இடங்களில் அமைந்து காணப்படுவது சிறபபுடைய அம்சமாகக் காணப்படுகின்றது.

இத் தெய்வத்தினை கலைகளின் ஆரம்ப நிகழ்வுகளின் போது வணங்கும் நிலையில் ஆயகலைகள் அறுபத்து நான்கிலும் சிறந்த கலை சங்கீதக் கலை எனவும் அக்கலையின் நாயகனாகவும் போற்றுவதுண்டு. இவற்றின் பெறுபேறாக இத் தெட்சிணாமூர்த்தியை நான்கு பிரிவுகளில் உள்ளடக்கிக் கொள்வர். அவை முறையே

யோக தடசிணா மூர்த்தம்
வீணா தட்சிணா மூர்த்தம் ஞான தட்சிணா மூர்த்தம்
வியாக்கியான தட்சிணா மூர்த்தம்

## 1. யோக தட்சிணா மூர்த்தம்

மனித வாழ்விலே யோகமே உயர்ந்தது. என்பதனை எடுத்துக் காட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட வடிவம் இங்கு இறைவன் வேதங்களின் நுண்பொருள்களை ஆகமங்களைக் கொண்டு தெரிவித்த பின்னரும் கூட மனம் ஒரு நெறிப்படாமல் வருந்திய அம்முனிவர்களாகிய சனகர், சனாற்குர், சனந்தனர். சனதனமாரர் ஆகிய முனிவர்கள் அங்கு வந்து அவரை வணங்கி சுவாமி மேலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைகளைப் பலமுறை கற்றோம். எனினும் எங்கள் அறிவு பலவாறாக மயங்கி நிற்கின்றது. தேவரீர் ஒருவரே எங்கள் மயக்கத்தினை நீக்கி யருளக் கூடியவர். அதனாலேயே தங்களிடம் வந்தோம் என அவர்கள் பணிந்து நின்னறனர். முனிவர்களிடத்திலே பேரிரக்கம் கொண்டார். முனிவர்களைப் பார்த்து அன்பர்களே உங்களுக்கு மெய்யறிவு உண்டாகும் வண்ணம் ஆகமப் பொருளை விளங்க வைப்போம் என்று கூறி சரியை, கிரிகை, யோகம் என்னும் மூன்றையும் உரைத்தருளினார். அப்பொழுது ஞானத்தையும் உரைத்தருள வேண்டுமென்று முனிவர்கள் வேண்டி நின்றனர். "ஞானம் நாவினாலே நவிலற் பாலதன்று." என்று இறைவன் கூறி வலக்கையைச் சின் முத்திரையாகப் பிடித்து மார்பிலே சேர்த்து ஒருகணம் யோக சமாதியில் அமர்ந்தார். இங்கு சின்முத்திரையால் பெருவிரலும் சுட்டுவிரலும் ஒன்றை ஒன்று வளர்ந்து சார்ந்து நிற்க ஏனைய மூன்று விரல்களும் விலகி தனித்து நின:று கொண்டிருக்கும் இவற்றினாலே பெருவிரலின் உதவியின்றி நாம் எதனையும் பிடித்தல், எடுத்தல் முதலியன செயதல் இயலாதாதலின் அது சின் முத்திரையிற் பதியினைக் குறிக்கின்றது. சுட்டு விரல் தன்னியல்பின் நிற்கின்றது. அந்நிலை பசு எனப்படும். உயிரானது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும் மலங்களோடு சேர்ந்திருந்ததால் பதியாகிய கடவுளின் தொடர்பை பெறலாம். பிறப்பிறப்புத் துன்பத்துட்பட்டு உழல்தலை உணர்த்தும் உயிரானது பிறப்பு இறப்பு துன்பங்களில் நினின்று விடுபடுதல் வேண்டுமாயின் மும் மலங்களின் தொடர்பை விட்டுப் பதிப் பொருளின் திருவடிகளை அடையப் பெறுதல் வேண்டும் அவற்றின் ஊடாகவே முத்தியினை அடையலாம் என்பதையும் எடுத்துக் காட்டி நிற்கும் நிலையில் அதனை அம்முனிவர்களுக்கு எடுத்துக் காட்டி விளக்கும் வகையில் யோகியாய் எழுந்தருளி யோகநெறியால் ஞானமடைந்து நிட்டை கூடும் நிலைகளை விளக்கியருளினார். அவ்வாறே விளக்கிய வடிவமே யோக தட்சணாமூர்த்தமாகும் இதனை திருஞானசம்பந்தப் பெருமான் "பண்டு நால் வருக்கற முரைத்தருளி" என்று தொடங்கும் திருக்கேதீஸ்சரப் பதிகத்திலே எடுத்துக் காட்டிச் சென்றுள்ளார். இத்துடன் கந்தபுராணத்தில் காமதகனப் படலத்தில் இவர்தம் இயல்பு பெரிதும் விளக்கப் பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உ. வீணா தட்சிணா மூர்த்தம்

வீணை வாசித்துக் கொண்டிருக்கும் திருப்பெரு வடிவாகும் இது இசையாலே எதனையும் சாதிக்கலாம் என்பதை எடுத்துக் காட்டுவனவாகும். இங்கு "வேதததுு ஒலி கொண்டு வீணை கேட்பார் வெண் காடு மேவிய விகிர்தனாரே" எனவும் "கருங்கடல் வண்ணம் களேபரமும் கொண்டு கங்காளராய் வருங்கடல் மீளநின்று எம் குறை நல்வீணை வாசிக்குமே" எனவும் கூறப்படுவதில் இருந்து இறைவன் திருக்கையில் என்றுமே வீணை தாங்கி அதனை வாசித்துக் கொண்டு வீணா தட்சிணா மூர்த்தி என பெயர் கொண்டு இருக்க என்றுமே எம் மக்களால் துதிக்கப்படுகின்றார்.

## ஊ. ஞான தட்சிணா மூர்த்தி

இறைவன் ஞான வடிவினர் ஞானமே திருமேனியாகக் கொண்டு திகழும் அப்பெருமான் தன்னை வழிபடுவோர்க்கெல்லாம் ஞானத்தை வழங்கி அருள்பவர் ஆதலினால் அவருக்கு ஞான தட்சிணா மூர்த்தியெனப் பெயர் கொள்ளயிற்று. ஞானமானது தட்சிணா மூர்த்தியின் முன்னிலையில் அவரை நோக்கியே நின்று கொண்டு இருக்கின்றது. என்பதும் அது மனித வாழ்வில் பெறப்படும் இறுதிக் காட்சி அதனை எங்குமே பெறலாம் என்பதனையும் அதியுர்வாகக் காட்டி நிற்கும் வடிவமாகும்.

## ரு. வியாக்கியான தட்சிணா மூர்த்தம்

உள்பொருள் அறிவை மனிதருக்கு வியாக்கியானம் செய்யும் வடிவம் பெரும்பாலான கோயில்களில் அமைந்திருப்பவர் வியாக்கியான தட்சிணா மூர்த்தியாவர். வேதாகமங்களில் நுண்பொருள்களையெல்லாம் விளக்கி அருள் புரிபவர் இவர் முன்னொரு காலத்தில் சனகர், சனந்தனர், சானாதனர், சனற்குமாரர் என்றும் நான்கு முனிவர்கள் வேதத்தின் பொருள் விளங்காமல் மயங்கி இறைவனை நோக்கித் தவம்புரிந்தனர். இவர்களுக்கு இறைவன் வெளிப்பட்டு வியாக்கியான தட்சிணா மூர்த்தியாக வேதங்களின் பொருள் நுட்பங்களை ஆகமங்களால் தெளிவித்து அருளினன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏரிசையும் வடபாலின் கீழ் இருந்தங்கு
ஈரிருவர்க்கு இரங்கி நின்று
நேரிய நான்மறைப் பொருளை உரைத்து
ஒளி சேர் நெறியளித்தோன்
அழிந்த சிந்தை அந்தணர்க்கு
அறம் பொருள் இன்பம்
வீடு மொழிந்த வாயான்"

என வரும் தேவாரப் பாடல்கள் இங்கு கருதற்பாலன.

இவ்வாறான முறைமைகளில் உருப்பெற்று இருக்கும் தட்சிணா மூர்த்தத்தின் தத்துவ பொருள் நுட்பத்திறன்களை நோக்கின்

1. பளிங்கு போன்ற வெண்ணிறத் திருமேனி இவர் உலகப் பொருள் ஒவ்வொன்றிலும் தோயாது தூயவராகத் திகழ்வதை உணர்த்தும்.
2. இவர் எல்லாத் தீமைகளையும் அடக்கியாளும் வலிமையுள்ளவர் என்பதற்கு அடையாளமாக தம் வலக்காலால் முயலகனை மிதித் மிதித்துக் கொண்டு வீற்றிருக்கின்றார்.
3. இவர் திருக்கையில் உள்ள சிவஞான போதம் எல்லா ஞானங்களையும் தன்னுள்ளே அடக்கிக் கொண்டு திகழ்கின்றது. ஞானத்தால் தான் வீடு பேறு எய்துதல் இயலும் என்பதனை இது காட்டுகின்றது. நோய் வாய்ப்பட்டு வருந்தும் பிணியாளார் பொருட்டு மருத்துவர்கள் மருந்துப் பொருட்களை கட்டிச் சுமந்து கொண்டு சென்று தந்து நலம் விழைவிப்பது போல மும்மூர்த்திகளின் வயப்பட்டு மயங்கி வருந்தும் உயிர்களின் பொருட்டு இறைவன் இவற்றின் அறியாமையைப் போக்கி அறிவையளிக்கும் சிவஞான போத செழும் பொருள் நூலைக் கையில் ஏந்திக் கொண்டிருக்கின்றான்.
4. இவர் வைத்துக் கொண்டுள்ள உருத்திராக்க மாலை முப்பத்தாறு அல்லது தொன்னுற்றாறு என்னும் தத்துவங்களை உணர்த்துகின்றது அது திருவைந்தெழுத்தை உருத்திராக்க மாலை கொணடு பன்முறை எண்ணிப்பல காலும் செபித்து உருவேற்றித் தியானித்தலே ஞானத்தை அடையும் நெறியென்றும் குறிப்பிடுகின்றது. இதனால் தான் தட்சிணா மூர்த்தியின் முன்னர் இருந்து தியானம் செய்யும்படி நூல்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இவர் இடக்கையில் அமிர்த கலசம் ஏந்திக் கொண்டிருத்தல் அனைத்துயிர்க்கும் பேரின்பத்தை அளிக்க வல்லராதலை அறிவிக்கின்றது.

6. mtH GypNjhypd;kU mkHej;jpUj;jy;jh rf;jpfis mlf;fpahS k;M wwy;kpf;ftH vdgjidf;fhl;LfpwJ. NkY k;,tH jhkiu kyhpy;mkHeJ ,Uf;Fk;jd;ik "மலர்மிசை ஏகினான்" எனத் திருக்குறள் குறிப்பிடுவதற்கு ஏற்ப அன்பர்களின் இருதயமாகிய தாமரை மலரில் எழுந்தருளுவார் எனபதனைக் குறிக்கும் தாமரை மலர் ஓங்காரமாகிய பிரணவத்தையும் உணர்த்தும் என்பர்.

7. எவராலும் வெல்லயியலாத காம தேவனை எரித்தருளிய இவர் தம் செயல் ஞாமும் வீடும் எய்த விரும்புவோர் எவரும் ஐம்பொறி அவாக்களை அறுத்தொழித்துப் புலனடக்கம் உடையராதல் வேண்டும். என்பதனைப் புலப்படுத்துகின்றது. துறவு நெறியின் சிறப்பினையும் தட்சினாமூர்த்தம் இங்ஙனம் செம்மையுற உலகுக்குத் தெரிவிக்கின்றது.

8. படர்ந்து பரவியுள்ள ஆலமரமும் அதன் நிழலும் மாயையினையும் அதன் காரியம் ஆகியே காட்டுகின்றன. சங்க நூல்களில் ஆலமரச் செல்வன் என்னும் பெயரே தடசினாமூர்த்திக்கு பெரு வழக்காகக் காணப்படுகின்றது.

9. தட்சிணாமூர்த்தியின் அருகில் உள்ள வெள்விடை தருமத்தையும் அதன் இயல்பினையும் விளக்குகின்றது. அவரைச் சூழ்ந்துள்ள விலங்குகளும் பிறவும் அவரே அனைத்துயிர்களுக்கும் தலைவர் (பசு பதி) என்பதற்கு அடையாளமாகும்.

10. அவர் தம் உடலின்மீது அணிந்துள்ள பாம்பு கு[illegible]லிசத்தின் அறிகுறியாகத் திகழ்கின்றது.

11. வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் இருந்தே தியானம் முதலிய செயல்களைச் செய்ய வேண்டும். என்பது விதி ஆனால் தட்சிணாமூர்த்தியோ தென்முகம்நோக்கி வீற்றிருக் கின்றார். அது அவர் நம்மைப் போல் விதி விலக்குக்களுக்கு உட்பட்டவரல்லர் அப்பாற்பட்டவர் என்பதனை அறிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைமைப்பட்ட தட்சினாமூர்த்தியை நாம் வழிபடுவதன் ஊடாக உயர்ஞானம் பலவும் பெறலாம் என்பது எடுத்துக் காட்டப் பட்ட நிலையில் பல்வேறு சமயங்களும் பல்வேறு வகைகளில் கடவுளை வழிபடுகின்றன. தாயென்றும், தந்தையென்றும், அரசனென்றும், தலைவனென்றும் பிணிதீர்க்கும் மருத்துவனென்றும் அறியாமை போக்கும் ஆசிரியனென்றும் பலவகை நிலைகளில் கடவுள் வழிபாடு உலகில் திகழ்ந்து வருகின்றது. அவற்றுள் கடவுளை ஆசிரிய நிலையில் வைத்து வழிபடும் முறையே தட்சிணாமூர்த்தம் எனப்படும். தன் வாய் மொழிகளாற் கற்பிக்கும் ஆசிரியனை விட ஒப்புயர்வற்ற தன் தூய இனிய வாழ்வின் சிறப்பினால் மாணவர்களுக்கு உள்ளொளி பெருகச்செய்யும் திறம் உடையவனே மிகவும் சிறந்த நல்ல பேராசிரியனாவான். அதனாலேயே அருணகிரிநாதர் தம் திருச் செந்தூர்த் திருப்புகழில் இவரை ஊமைத்தேவர் எனக் குறிப்பிடுகிறார். தடசணாமூர்த்தி வேதாகமப் பொருட்களை எல்லாம். சொல்லாமற் சொல்லி விளக்குகின்றார் என்கிறார் பரஞ்சோதி முனிவர். அங்ஙனம் மாணவர்களை சிந்திக்கச் செய்து உய்த்துணர வைக்கின்ற ஒப்புயர்வற்ற சிறந்த தெய்வீக அருட்பேராசிரியர் தட்சண்மூர்த்தி எனலாம். இவரை வழிபடுவதனாலேயே மனித குலத்தின் விழுமிய பெரும் செல்வமாக விளங்கும் சிந்தனைத்திறன் சிந்தித்து உணரவல்ல உரிமைச்சிறப்பு சிந்தித்து உணர்வினால் விளையும் தெளிவு நலன் ஆகிய பல குறிக்கோள்களையும் அடைய முடியும் என்பது சிந்தனையாளராகிய சமய வாதிகளின் முழுமைப்பட்ட கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரமும் அதுகாட்டும் வாழ்வு முறையும்

இந்து சமயத் திருநூல்களின் வரிசையில் ஒன்றாய் சைவசமய வரலாற்றின் தனித்துவத்தை அதிஉயர்வாக எடுத்துக் காட்டுவதற்கு ஏதுவாக அமைந்த நூலாகக் கருதப்படுவது திருமந்திரம் இதன் ஆசிரியர் திருமூலர் இவரால் கி.பி. 4-6ம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்திலே எழுதப்பட்டதாக ஆய்வாளர் கருத்துக் கூறுவர். இது சைவத்தின உயிர் நாடியாக விளங்கும் பன்னிரு திருமுறைத் தொகுப்பிலே 10ம் திருமுறையாக வகுக்கப்பட்ட நூலாக கருதப்படுகின்றது. திருமுறைகள் யாவும் தோத்திர நூல்கள் வரிசையிலே இடம் பெறத் திருமந்திரமோ சாத்திர நூல் வரிசையிலே முதன்மை பெறுகின்றது. எனினும் சமயத்தில் அடங்க வேண்டிய ஒழுக்க நெறி தத்துவ நெறி வழிபாட்டு நெறி ஆகிய மூன்றையும் இந்நூல் பெற்றிருப்பது இதற்கேயுரிய பெருஞ்சிறப்பாகும்.

இந்நூல் ஆசிரியர் திருமூலர் அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவர் சித்தர் நந்திதேவர் அருள் பெற்ற நான் மறை யோகிகளில் ஒருவர் வேத ஆகமங்களில் நன்கு ஊறியவர் இதனால் சைவசித்தாந்தக் கருத்தை எடுத்தியம்பும் நிலையில் ஏனைய சைவ சித்தாந்த நூல்கள் எழுதுவதற்கு முன்னர் சித்தாந்தக் கருத்தை தமிழில் கூறுகின்ற முதலாவது நூலாக இது கருதப்படுகின்றது. இதனை திருநெறிய தமிழ் எனச் சம்பந்தர் சிறப்பித்துள்ளார். ஆதலாவ் மூலன் உரை செய் மூவாயிரம் தமிழ் எனவும் தமிழ் மூவாயிரம் எனவும் இந்நூல் போற்றப்படும். என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே என்றார் திருமூலர். இந்நூலுக்கு திருமந்திரமாலை தமிழ் வேதாகமம் என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு.

> "திருக்கோவில் செல்வார் திருமந்திரநூல்
> உருக்கமுடன் கொணடு சென்றோதில்
> பெருக்க அருள் முதலாம் ஐந்தும்
> அருள்வான் முக்கண்ணன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அப்பர் சுவாமிகளும் திருமந்திரம் ஓதுவார் பலன்களை எடுத்துக் காட்டினார். எனவே அப்பர் சுவாமிகள் காலத்திற்கு முற்பட்டது திருமந்திரம் என்பதும் இங்கு புலப்படுத்தப்படுகின்றது.

**நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த**
**மறைமொழி தானே மந்திரம்.** (தொல்காப்பியம்)

என்பதற்கமைய திருமந்திரமானது மறைமொழிகள் பலவற்றைத் தம்முன் கொண்ட பரமனது திருவருள் ரகசியங்களை மறைபொருளாகக் கொண்டுள்ளது. கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள் எனில் கடவுளைக் கண்ட தெரிந்தவர்கள் சித்தர்கள் எனலாம். சித்தர் போக்கு சிவன் போக்கு என்றவாறு அன்பு நிலை ஒன்றே அவர்களது உயர்ந்த கோட்பாடாகவுள்ளது. உயிர் களிடத்துறையும் பரம்பொருள் ஒன்று அது அன்பெனும் வடிவமானது. மனிதர்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் நேசித்தல் என்பது சிவப் பொருளை நேசித்தல் என்பதே அதனை.

**அன்பும்சிவமும் இரண்டென்பர் அறிவிலர்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அறிந்திருப் பாரே.**

என திருமூலர் அருமையாக எடுத்துரைத்துள்ளார். அன்பு, மானிடத்துவம், சமத்துவம், சகோதரத்துவம், என்பனவற்றினை எடுத்துரைக்கும் காலத்தால் முற்பட்ட அரும் நூல்களில் தலையாயதாக அன்பு செலுத்தலாவது அனைவரையும் சமநோக்குடன் நேசிப்பது அறவழிக்கு தீங்கு நேரும்போது அஞ்சாமையுடன் எடுத்துரைப்பது தருமமே இறைமை என எண்ணிப் பிறருக்குதவுதல் சமுதாய சேவையே வழிபாடு என உணர்ந்து இவற்றினை நடைமுறையிலே பின்பற்றியொழுகுதல் இவையே அன்பின் பரிமாணங்கள் என உணரப் பெறுவதே உன்னதமான சமயநெறி என திருமந்திரம் போதிக்கின்றது.

திருமந்திர நூலமைப்பின் தனித்துவத்தை நாம் நோக்கின் இது ஒன்பது தந்திரங்களால் ஆனது திருக்குறளின் பாற்பகுப்பிற்கு இணையானது. இத் தந்திரப் பகுப்பாகும். ஒவ்வொரு தந்திரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவும் பலவுமான கலிவிருத்தங்களை உள்ளடக்கிய அதிகாரங்களைக் கொண்டு விளங்குகின்றது. இத்தந்திரங்களுள்ளே முதற்றந்திரத்திலே இருபத்து நான்கு அதிகாரங்கள் உள்ளன. இவ்வதிகாரங்களில் பெரும்பாலானவை வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கான நெறிமுறைகள்பலவற்றை விளக்குகின்றன. அவ்வகையில் சைவமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நியதிகளை எடுத்துக் காட்டம் நிலையில் பஞ்சமாபாதகங்களை இது கடிந்து கூறுகின்றது. கொல்லாமை, புலாலுண்ணாமை, பொய்யாமை, கள்ளாமை, மது அருந்தாமை, மாமிசம் உண்ணாமை, பிறர் மனை நயவாமல் ஆகிஙய ஒழுக்கங்களை இவ்வதிகாரங்கள் வற்புறுத்திச் செல்லுகின்றன. இரண்டாம் தந்திரம் இருநூற்றியெட்டுத் திருப்பாடல்களில் கல்வியறிவு கல்லாமை, பொருள்தெடல் போன்றனவும் அவற்றுடன் இறைவனின் அட்டவீரச் செயல் நைந்தொழில் தத்துவம் மூவகை ஆன்மாக்களின் செயற்பாடு கூறியதுடன் சமூக நடவடிக்கையில் ஒவ்வாத விடயங்களை எடுத்து இயம்புகின்றன. **மூன்றாந் தந்திரத்தில்** இறைவன் இறைவி ஒத்த இல்வாழ்வென்னும் தவநிலையும் அவற்றில் பின்பற்றப்படும். யோகநிலை அதனால் ஐம்புலன்களையும் ஒருநிலைப்படுத்தி சித்தத்தை சிவன்பால் செலுத்தி தியானத்தில் ஈடுபட்டு சமாதிநிலை கூடுதல் அதனால் ஞானம் கைகூடுகின்றது என்பதனை **நான்காம் தந்திரத்தில்** இறைவனை மந்திர வடிவில் கண்டு இதில் குறிப்பிட்டுள்ளார். பலவகை சக்கர அமைப்புக்கள் பற்றியும் இத் தந்திரம் எடுத்து விளக்குகின்றது. தாந்திரிய வழிபாடு பற்றிய நெறிமுறைகள் இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. **ஐந்தாம் தந்திரத்திலே** சைவத்தின் பல பிரிவுகளும் அவை எடுத்துக் காட்டும் மார்க்கங்களும் அதனால் பெறும் முத்தியையும் கூறியதுடன் புதிய சமயங்கள் கண்டிக்கப்படுவதும் எடுத்து இயம்புகின்றது.

**ஆறாம் தந்திரத்தில்** சற்குரு துணையும் சிவகுரு தரிசனம், திருவடிப்பேறு, திருநீற்றின் மாண்பு, துறவு, தவம், சிறப்பிக்கப்படுவதுடன் ஆன்மா உலகத் தலைகளினின்றும் விடுபட்டு ஈடேற்றம் பெறுவதும் பாவங்களைப் போக்கும் ஆற்றல் திருநீற்றுக்குண்டு எனவும் அதனால் சிவசின்னங்கள் இங்கு சிறப்பிக்கப்படுகின்றன. தவவாழ்வும் அதனுடன் தொடர்புடைய துறவறம் அனுஷ்டிக்க வேண்டிய அவசியம் அனுட்டிப்பதால் ஏற்படும் பயன் என்பன விரித்துரைக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏழாம் தந்திரமானது** உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆரோக்கியமும் ஆன்மபலமும் புத்துணர்ச்சியும் வழங்கும். யோகப் பயிற்சி பற்றிய செய்திகளையும் அவற்றிலே ஆறு ஆதாரங்கள் ஆறு லிங்கங்கள் தியானத்தின் சிறப்பு சிவனுக்கு இயற்றும் வழிபாடு மக்கள் தொண்டு மகேசன் தொண்டு என விளக்க மகேசுவர பூசை என்பன சிறப்பிக்கப்படுவதுடன் குருபூசைத்தினங்கள் அவற்றின் வகைகள் பற்றியும் எடுத்துக் காட்டுகின்றன. **எட்டாம் தந்திரமானது** சித்தாந்தத்தின் விளக்கம் பிற சமயத்திற்கும் அதற்குமள்ள தொடர்பு பதி பசு பாச விளக்கம் பாசத்தை விட்டு பசு பதியை அடைய வேண்டியது பற்றியும் அடையும் முறைபற்றியும் எடுத்துக் காட்டுகின்றன. இவற்றுடன் காரண காரிய உபாதிகள், மகாவாக்கியங்கள், உண்மை பேசல், ஆசை ஒழித்தல், பத்தி வளர்த்தல் தூய்மையடைவதிலும் விடுதலை பெறுவதிலும் நாட்டம் உருவாக்குதல் என்பன எடுத்துக் காட்டப்படுகின்றன. **ஒன்பதாம் தந்திரம்** ஐந்தெழுத்தின் மகிமை அதிலே நமசிவாய, சிவாயநம, ஆகிய மந்திரங்கள் பெறும் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது. குரு, குருமடம், குருதரிசனம் வைணவ சமாதி, ஸ்தூல சூக்கும, அதி சூக்கும பஞ்சாட்சரங்கள் பேசப்பட்டுள்ளன. இத்தகைய சிந்தனைகளினூடாக திருமந்திரம் மனித உணர்வு பற்றிய பல்வேறு கருத்துக்களையும் வாழ்க்கை முறைக்குத் தேவையான பல பண்புகளையும் உலகினர்க்கு உணர்த்தி இருக்கின்றதெனலாம்.

மேலும் இந்நூலானது ஆகமத் தொடர்புபட்ட கருத்துக்களை தமிழிலே தருவதால் தமிழாகம நூல் எனக் கருதப்பட்ட நிலையில் ஆகம வழிப்பட்ட சைவநெறியும் அவர்களை ஒழுக்க நெறியின்பாற் செலுத்தி ஆற்றுப்படுத்தியது. சிவனின் மாண்பையும் சிவநாம கீர்த்தனத்தின் பயனையும் விதந்து கூறும் நிலையில்

**சிவனோடொக் குந் தெய்வந் தேடினும் இல்லை**
**அவனொடொப் பாரிங்கு யாவரும் இல்லை**
**புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்**
**தவனச் சடைமுடித் தாமரை யானே.**

என்பதனூடாக சிவனுக்கு நிகரான தெய்வம் மூவுலகிலும் இல்லை பண்டு உலகின் எல்லைகளைக் கடந்து வளர்ந்த பேரொளிப் பிழம்பு, தியெனத்தக்க முடியையும் தன்மையான தாமரையெனத்தக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியையும் கொண்டதானது சிவபரம்பொருள் என்பதனையும் அத்தகைய பரம்பொருளை,

**சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்**
**சிவ சிவ என்றிடத் தேவருமாவர்**
**சிவ சிவ என்னைச் சிவகதி தானே.**

என்பதனூடாக சிவ சிவ என்னும் இணைமொழி மந்திரம், பாவநாசம், தேவநிலை. சிவலோகப் பெருவாழ்வு என்னும் நலன்களை உண்மைப் பக்தர்களுக்கு அளிக்கும் எனவும் இந்நிலையில் வறுமை நிலையிலும் உடல் தேவ தேவனின் சேவையிலே என்ற உண்மையை எடுத்துக் காட்டி, அக்கோயிலிலே இறைவனை இருத்தி வழிபடுதல் சிறப்பானது என்பதனை,

**உள்ளம் பெருங்கோயில் ஊன்உடம்பாலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.**

என எடுத்துக் காட்டி உள்ளத்தினை மூலஸ்தானமாகவும் ஊனுடலை ஆலயமாகவும் வாயினை கோபுர வாசலாக உயிரை சிவலிங்கமாகக் கொண்டு ஐம்புலன்களும் ஒளிவீசும் தீபங்களாக்கி வழிபட வேண்டும் என எடுத்தியம்பி அவற்றின் ஊடாக "காயமே கோயிலாக" என எடுத்தியம்பிய அப்பர் சுவாமிகளின் வாக்கு உண்மையினையும் திருமூலர் தமது திருமந்திரத்தில் எடுத்துக் காட்டிச் சென்றுள்ளார்.

இத்தகைய திருமந்திரம் நாட்டின் அரசியல் முறையிலே கோன்முறை அரசு செய்தாலே அறம் வளரும் பாவம் தேயும் அறவழி நில்லாது ஆண்டவனை நினைவினிற் கொள்ளாது மருள்வழி ஒழுகும் மன்னனால் நாட்டிற்கும் சமூகத்திற்கும் பெரும் கேடு விளையும் அத்தகைய அரசன் பல கற்றும் கல்லாதவர்க்கே சமமானவன். கல்லா அரசனைக் காட்டிலும் முறைமை வழுவாத காலன் மிக நல்லவன் என்பதனைத் திருமந்திரம்

**கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்**
**கல்லா அரசனின் காலன் மிக நல்லன்**

என எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன் அன்பும் சமாதானமும் முதலிலே மனித மனங்களிலே விதைக்கப்பட வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லொழுக்கம் என்னும் நீரூற்றி அதனை வளர்க்க வேண்டும். மனித மனங்கள் வெறும் காடும் முட்களும் நிறைந்த பற்றைகளாக இருப்பதனை மாற்ற வேண்டும். அப்போது தான் இயற்கை நியதிகளைப் பேணிக் காக்கும் பக்குவம் வளர முடியும் என்பது திருமந்திரத்தின் கருத்தாகும்.

கல்வி பற்றிய சமுதாய சிந்தனைக் கருத்தும் இங்கு எடுத்துக் காட்டப்பட்ட நிலையில் ஒழுக்க கல்வியும் ஆன்மீகக் கல்வியும் மனிதனை சுயகட்டுப்பாட்டுடன் முறையான வாழ்வு வாழ வழிவகுக்கும் எனவும் சமூக சேவையே கல்வி முறையின் அத்திவாரமாக அமைய வேண்டும். கல்வியும் ஒழுக்கமும் சேர்ந்திருக்க வேண்டும். என்பதனை உணர்த்தவே "வேதம் உரைத்தானும் வேதியன் ஆகான்" எனத் திருமூலர்விளக்கியுள்ளார்.

பொருட் செல்வமும் அதனைக் கொண்ட அறவாழ்விலும் கிடைக்கின்ற பொருளானது அறச்செல்வத்தை வளர்க்க அனுசரனையாக அமைய வேண்டும் என்பதே திருமந்திரத்தின் இலட்சியம் எனலாம்.

**"ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன் மின்**
**பார்த்திருந்துண் மின் பழம் பொருள் போற்று மின்**
**காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே"**

என்றவாறு எள் எனினும் ஏழாகப் பகிர்ந்துண்பது போன்ற இரக்கமும் தயையும் காக்கையிடமிருந்து ஒற்றுமை உணர்வையும் மனிதர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்றார் திருமூலர் அதனால்

**"அவ்வியம் பேசி அறம் கெட நில்லன் மின்**
**வெவ்வியனாகி பிறர்பொருள் வவ்வன் மின்**
**செவ்வியனாகி சிறந்துண்ணும் போது**
**நவ்வி கொடு மின் தரைப்பட்ட போதே"**

என்றபடி துன்பம் செய்து அறமுறை வழுவுமாறு நிற்க வேண்டாம் பேராசை கொண்டு பிறர் பொருளை விரும்ப வேண்டாம் எல்லா வகையிலும் நற்பண்புடையராகி உண்ணும் போது வருவோர்க்கும் ஒருகை உணவு கொடுத்து ஆதரிக்க வேண்டுமெனக் கூறியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்திலே தனிமனிதனாகப் பிறந்து அதிலேயே வளருவதால் சமூகத்தை விட்டு விலகி வாழ்வது இயலாத காரியம் எனலாம். சமூகமும் நலமுடன் இருந்தால் தான் குடும்பமும் நலத்துடன் இருக்கும். குடும்பம் நலமுடன் இருந்தால் தான் என்ற தனிநபரும் நலமுடன் இருந்தால் தான் என்ற தனிநபரும் நலமுடன் இருக்க முடியும் நன்றே நினை மின் நமனில்லை என்பதே திருமந்திர வாக்காகும். சாதிகுலம் என்பதும் மனிதர் செய்த சதி, என்பதெ சித்தர் கொள்கையாகும் பிறப்பினால் உயர்வு தாழ்வு வருவதில்லை மனிதரது செயல்களே அவர்களது உயர்வினை நிர்ணயிக்கின்றன. அதனால் தெய்வமும் ஒன்று அத்தெய்வத்தின் முன் சகல மாந்தரும் ஒன்றுதான் என்ற உண்மையினைத் திருமந்திரம்

**"ஒன்றே குலம் ஒருவனே தேவன்**
**நன்றே நினைமின் நமனில்லை நாளுமே"**

என மனித சமத்துவத்தினை எடுத்துக் காட்டியுள்ளார். திருமூலரது சமயாதீதம் கடந்த மனித சமூக சகோதரத்துவமானது. மக்கள் அனைவரையும் ஒரு குலமாக அன்பினால் பிணைப்பதாகும். அதனை

**"மனமில்லை மாசில்லை மானாபிமானங்களில்லை**
**அன்பினில் பதித்த வைப்போருக்கே"**

என்னும் பாடலில் அழகுறத் திருமந்திரம் எடுத்துக் காட்டியது. இது மட்டுமல்லா எல்லார்கரும் காட்டும் பொது நெறியாக

சீவனைச் சீவனாக்கும் நெறிக்கு உகந்ததான ஓர் வாழ்வினை வகுத்துக் காட்டம் திருமந்திரம் எல்லார்க்கும் பொதுவான தருமத்தை அழகை எளிமையாகக் காட்டுவதும் குறிப்பிடத்தக்கதே. செல்வர், வறியவர், வலியவர், மெலியவர் வரும் எக்காலத்தும் செய்யத்தக்க தருமங்களாக அது நான்கு அறிவுரைகளை அறவுரைகளை எமக்கு வகுத்துத் தந்துள்ளது.

சைவனே நீ கோயில் சென்று பூசையும் கிரியைகளும் அபிடேக ஆராதனைகளும் செய்ய இயலவில்லையே என்று வருந்த வேண்டியதில்லை. ஒரு பச்சிலையை இறைவனுக்குச் சூட்டி வழிபடு அது போதும், எமது சமய வாழ்வுக்கும் உலகியல் வாழ்வுக்கும் உரிய நற்பிராணி பசுவாகும். அதற்கு உன் கைக்குள் அடங்கிய புல்லினைக் கையுறையாக உணவாக அளிக்க உன்னால் இயலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ உண்ணும் போது ஒரு கைப்பிடி உணவினைப் பசியென வருவோர்க்கு உன்னால் கொடுக்க இயலாதா பிறர்க்கு எதுவும் கொடுக்க இயலாத பட்சத்தில் உன் முகமலர்ந்து ஓர் இன்னுரை பேசுவதும் உனக்குக் கடினமா? உனக்கு மட்டுமல்ல உன்னில் தாழ்ந்தவர் உயர்ந்தவர் யாவருக்கும் இவை இயலக்கூடிய செயல்கள் தாம்.

"யாவர்க்கு மாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே."

இவ்வளவு எளிமையாக திருமந்திரம் போல வேறொரு நூல் வாழும் வழியினைக் காட்டவில்லை என்பதே உண்மையாகும்.

இவற்றின் பெறுபேறாக திருமந்திரமானது மிகச் சிறந்த சமய, தத்துவ ஒழுக்க நூலாக அற்புதமான உவமை, உவமேயம் என்பவற்றைக் கொண்ட இலக்கிய நூலாகத் தமிழுலகம் இனிது உணர்ந்துய்யும் பொருட்டு அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்று நிலைகள் பற்றியும் ஞானம், அன்பு, பக்தி, சமரசம், வேதம், ஒழுக்கம். உண்மை, திருவருள், ஆன்மா, யோகம் என்பன போன்ற விடயங்களையும் கூறுவதுடன் என்றும் சைவ மரபு நெறி தவறாது நின்று வாழ்வதற்கும் ஏற்ற நூலாகக் கருதப்படுவது இத்திரு மந்திரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயக்கர்கால கோபுரங்கள்

இந்துக் கோயில்களிற் கட்டிடக் கலை வளர்ச்சியில் கோபுர காலம் என்று குறிப்பிடும் அளவுக்கு கோபுரங்கள் சிறப்பாக பெரும் எடுப்பில் அமைக்கப் பெற்றமையின் பேறாக எழுச்சி பெற்ற காலமாக விளங்கிய காலம் நாயக்கர் காலமாகும்.

கட்டிடக்கலை வரலாறு பல்லவர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் பல்லவர்களுடைய கோயில்கள் ஆகம அடிப்படையில் தோற்றுவிக்கப் பெற்றவையாயினும் அங்கு நெடிதுயர்ந்த கோபுரங்கள் எடுக்கப்பெறவில்லை. முற்காலச் சோழர் கோயில்களிலும் மகாதுவாரம் எனும் திருவாயில்கள் அமைக்கப்பெற்று இருந்தனவேயன்றி உயர்ந்த கோபுர வாயில்கள் அமைக்கப் பெறுவதில்லை. மாமன்னன் இராஜராஜனின் படைப்பான தஞ்சை ராஜராஜீச்சரத்தில் இரண்டு கோபுர வாயில்கள் இருப்பினும் அவை உயரம் குறைந்தனவையே. ஏழு நிலைகளோ பதினொரு நிலைகளோ கிடையாது. இப் பெருமன்னன் காலத்தில் தில்லைக் கோயில் கேரளத்துக் கோயில் வாயில்கள் போன்றே ஓடு வேயப்பட்ட திருவாயில்களே இருந்தன என்பதை தஞ்சை ஓவியங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. முதன் முதலாக சோழர் கோயிற் கட்டிடக் கலையில் முதலாம் குலோத்துங்கன் மற்றும் விக்கிரம சோழன் எடுத்த தில்லைக் கோயிற் கோபுரங்கள் தாம் ஏழு நிலைகள் பெற்று உயர்ந்து விளங்கின.

"பலன் கொள் மைந்தனார் எழுநிலைக் கோபுரம் பணித் தெழுந்தார்" என்பன போன்று சேக்கிழார் பெரிய புராணத்தில் பல இடங்களில் "நீடுநீள் நிலைக் கோபுரமாக" ஏழு நிலைகள் உள்ள கோபுரங்களையே காட்டுகின்றார். இதுதான் நெடிதுயர்ந்த கோபுரங்கள் எடுக்கும் தமிழகக் கோயிற் கட்டடக்கலைக்குத் தோற்றுவாயாக அமைந்தது என்றால் அது மிகையாகாது. மதுரைச் சொக்கநாதர் திருக்கோயில் கிழக்குக் கோபுரம் ஒன்பது நிலைகளைக் கொண்டது. இங்குள்ள கல்வெட்டுச் சான்றுகள் கொண்டு இது ஜயவர்மன் முதலாம் சுந்தர பாண்டியனால் கி. பி. 1256ல் எடுக்கப்பட்டது என ஆய்வாளர்கள் குறிப்பர். இத்திருக் கோபுரங்கள் அடிப்படையிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயநகரப் பேரரசர்களும், நாயக்கர்களும் உயர்ந்த கோபுரங்கள் எடுக்கும் கலையைப் போற்றி வளர்த்தனர்.

திருவண்ணாமலைத் திருக்கோயிலின் ஆயிரங்கால் மண்டபத்திற்கு முன்பாக உள்ள கற்பலகை ஒன்றில் கி.பி. 1517ல் வெட்டுவிக்கப்பெற்ற கிருஷ்ண தேவராயனின் சாசனமொன்று பின்வருமாறு குறிப்பிடுகின்றது. உடையார் திருவண்ணாமலை உடைய நாயனார்க்கும் நாச்சியார் உண்ணாமுலை நாச்சியாருக்கும் இராயர் கிருஷ்ணராயர் மகாராயர் தன்மமாகப் பண்ணுவித்த திருப்பணி ஆயிரங்கால் மண்டபம் இதற்கு முன்பாக வசந்தன் தெப்பத் திருநாளுக்கு வெட்டின திருக்குளம் இதற்குத் தண்ணீர் வரத்து விழ வெட்டின திருமலைதேவி அம்மன் சமுத்திரம் பதினொரு நிலைக் கோபுரம் ஏழாம் திருநாள் மண்டபம் விநாயகர்க்குப் பண்ணுவித்த திருத்தேர் வானவதரையன் சோழன் வாசல்கதவு கதவுக்கால் மேற்படி உத்தம சோழன் திருவாசல் கதவு மேற்படி பலகணி வாசல் பொன் பூசினதும் இந்த வாசல் முன்னாகவும் பத்திரமாத்திற் கெட்டிக் கொடுங்கைத் தகடு பொன் பூசினதும் உண்ணாமுலை நாச்சியார் கோயில் சடைப் பெருமாள் நாயினார் சன்னதிக்கு மேற்கு வாசல் கால் கதவு மேற்படி வெங்கலமும் வாசல் கால் கதவு மேற்படி பொன் பூசினதும் தூவிப் பொன் பூசினதும் நாச்சியார் கோயில் மடைப்பள்ளி முன் வெட்டின ஆராவ முதக் கிணறும்" என்று தொடர்கின்றது. இக்கல்வெட்டின் வழியாக பதினொரு நிலைக் கோபுரம் எடுக்கும் விஜயநகர பாணி பற்றி அறிவதோடு ஒரு திருக்கோயிலில் அப் பேரரசர்கள் எந்தெந்த விதமான திருப்பணிகள் புரிந்தார்கள் என்பதையும் தெளிவாக அறிகின்றோம்.

திருவண்ணாமலையில் பதினொரு நிலைக் கோபுரத்தையும் ஆயிரங்கால் மண்டபத்தையும் எடுத்ததாகப் பேசும் இந்தக் கிருஷ்ண தேவராயரின் கல்வெட்டின் முற்பகுதி ஸ்ரீ காளஸ்தி கோயிலில் நூற்றுக்கால் மண்டபமும் பெரிய கோபுரத்தையும் இதே பேரரசர் எடுத்தார் எனக் குறிப்பிடுகின்றது. திருவண்ணாமலை கிழக்குக் கோபுரத்தில் உள்ள கல்வெட்டுப் பாடல்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தானேற்ற மாகச் சகாத்தங்க ளாயிரத்து
நானூற்றுத் தொண்ணூற்று நாலின்மேல் - மானேற்ற
தென்னருணை நாதருக்குச் செல்வமதிபன் கயிலை
யன்ன தொரு கோபுரங் கண்டான்"

"மருவு சிவனேசன் மகிழுலக நாதன்
இருவரும் பேரன்பாலியற்ற - அருணையிலே
மானபரன் செல்வ மகிபால னப்பதினொன்
றான நிலைக் கோபுரங் கண்டான்."

எல்லப்பநயினார் சொன்னது என்ற கல்லெழுத்துக்களால் கிழக்கு கோபுரம் தஞ்சைநாயக்க மன்னர் செல்லப்பநாயக்கரால் எடுக்கப்பெற்றது என்பதை அறிகிறோம். அதனை இங்குள்ள பல வடமொழிக் கவிதைக் கல்வெட்டுக்களும் உறுதி செய்கின்றன.'. 135அடி நீளம் 98அடி அகலம் 217அடி உயரம் உடைய இந்தப் பதினொரு நிலைக் கோபுரம் தஞ்சை நாயக்க மன்னனின் மகத்தான பணி என்பதில் ஐயமில்லை.

கிருஷ்ண தேவராசனின் சிறந்த கோபுரப் பணிகளுள் குறிப்பிடத்தக்கது தில்லை வடக்குக் கோபுரப் பணியாகும் இங்கு அக்கோபுர வாயிலியேலயே அவரது உருவச்சிலையோடு அத்திருப்பணியை மேற் கொண்ட சிற்பிகளின் உருவச் சிலைகளும் அவர்தம் பெயர்களும் கல்வெட்டுப் பொறுப்புகளோடு உள்ளன. அவை முறையே

"விருத்த கிரியில் சேவகப் பெருமான்
இந்த சேவகப் பெருமான் மகன் விசுவமுத்து
இவன் தம்பி காரணகாரி
திருப் பிறைக் கொடைஆசாரி திருமருங்கன் என்பவையாகும்.

இவற்றை நோக்கும் போது தமிழகத்தில் உள்ள நெடிதுயர்ந்த கோபுரங்களை எடுக்கக்காரணமாக இருந்தவர்கள் கிருஷ்ண தேவராயர் அச்சுத தேவராயர் சதாசிவராயர் போன்ற பேரரசர்களும் அவர்களது நாயக்கள்களுமே என்பது தெளிவாக விளங்குவதுடன் இப்பெரும் பணிகளைப் புரிந்தவர்கள் விருத்தாச்சலம் சேவகப்பெருமாள் போன்ற தமிழகத்துச் சிற்பிகளே என்ற பெருண்மையும் புலப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஸ்ண தேவராயர், அச்சுதராயர், சதாசிவராயர் போன்றவர்கள் எடுத்த தமிழகக் கோபுரங்கள் ராயர் கோபுரங்கள் என அழைக்கப்பட்டதுடன் அவற்றுள் சில முற்றாக கட்டி முடிக்கப் படவில்லை. சில கோபுரங்கள் 180 அடி உயரமளவில் எழுந்தன. செஞ்சி, தஞ்சை, மதுரை நாயக்கர்கள் எடுத்த கோபுரங்களும் தென் காசிப் பாண்டியர் எடுத்த கோபுரமும் தமிழக வரலாற்றில் குறிப்பிடத் தக்கனவையாகும். இவர்கள் காலப் பாணியாக வெளி மதிலில் நான்கு மிகப் பெரிய கோபுரங்கள் எடுத்ததோடு உள் மதிலிலும் நான்கு கோபுரங்கள் எடுத்தனர். கற்சிற்பங்களுக்கு ஓரளவு முக்கியத்துவமும் சுதைச் சிற்பங்களுக்கு மிகுந்த ஆக்கமும் அளித்தனர் திருவண்ணாமலை திருக்குன்றம் குடந்தை சாரங்கபாணி மன்னார்குடி, மதுரை மீனாட்சி ஆலயம். வில்லிபுத்தூர், திருவரங்கம், தென்காசி, பட்டீச்சரம் போன்ற திருக்கோயில் கோபுரங்கள் இவர்கள் வளர்த்த கலையின் சிறந்த எடுத்துக் காட்டுக்கள் இவற்றின் கோபுரச் சிற்பங்களின் நயம் சோழர்கள் காலத்திற்குச் சற்றுக் குறைவுபடினும் கட்டிட நிர்மாணக் கலை விண்ணளவு உயர்ந்தது.

தஞ்சை செல்லப்ப நாயக்கரின் திருக்கோயிற் பணிகளாக சங்கீதா சுதா ஏன்னும் நூலின் கோவிந்த திட்சிதர் நீண்ட பட்டியல் ஒன்றைக் குறிப்பிடுகின்றார். காஞ்சிபுரம், திருநெடுக்குன்றம் விருத்தாசலம் ஸ்ரீசைலம் திருமலை. திருப்பதி போன்ற இடங்களில் கோபுரங்கள் எடுத்ததை விபரிக்கின்றார். இது போன்று விஜய நகரப் பேரரசர்களின் ஆக்கத்தாலும் ஊக்கத்தாலும் தஞ்சை, நெஞ்சி மதுரை நாயக்க மன்னர்கள் எண்ணற்ற கோபுரங்களை எடுத்தனர். காஞ்சி திருவண்ணாமலை, தில்லை, திருவரங்கம் ஆலவாய் திருவில்லிப்புத்தூர் வேலூர் திருக்கோவிலூர் விரிஞ்சி புரம் கும்பகோணம் போன்ற இடங்களில் எடுக்கப்பட்ட கோபுரங்கள் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவையாகும். உபபீடம் அதிஷ்ட்டானத்திலிருந்து சிகரம் ஸ்தூபி வரை சோழர் பாண்டியர் எடுத்த கோபுரங்களுக்குரிய அனைத்து அங்கங்கள் இருப்பினும் ஒவ்வொரு அங்கத்திலும் சிற்ப வேலைப்பாடுகள் மிக அதிகமாக இருப்பதே விஜய நகர நாயக்கர்களுடைய கோபுரங்களின் கலைச் சிறப்பாகும். சோழர் கோபுரங்களின் அஷ்டானத்தில் காணப்படும் குமுதம் விருத்த அல்லது திரிபட்ட குமுதமாகவே வேலைப் பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றிக் காணப்படும் ஆனால் இவர்களுடைய படைப்புக்களில் குமுதம் பல மடிப்புக்களுடனும் அதனிடையே கொடிக் கருக்குகளும் பூ வேலைப்பாடுகளுடனும் காணப்பெறும் அஷ்டானங்கள் பெரும்பாலும் கபோத பந்த அதிஷ்டானங்களாகவே காணப்பெறும். கால்களும் பலகைகளும் பல மடிப்புகளுடன் நுண்ணிய வேலைப்பாடுகள் மிகுந்து திகழும் பஞ்சாரங்களிலும் மிக அதிகமான மடிப்புக்களும் வளைவுகளும் இருக்கும். கோஷ்டங்களின் தலைப்பகுதி மகர தோரணமாக இருப்பின் மகர வாய்களிலும் மற்ற இடங்களிலும் கொளடிக் கருக்கு வேலைப்பாடுகள் அதிகமாக இருக்கும். சில இடங்களில் கொஷ்டங்களில் கபோதக அமைப்பு நீண்டு கொடுங்கை என்ற பெயரில் மரவேலைப்பாடுகள் போன்று குறுக்கு நெடுக்குச் சட்டங்கள் தாங்கி நிற்கும்.

கோபுர வாயில்களைத் தாங்கி நிற்கும் நிலைக் கால்களில் மன்னர்கள் உருவச்சிலைகள் நாட்டிய அணங்குகள், புராணச் சிற்பங்கள் காமக்கனை நாட்டும் சிற்பங்கள் ஆகிய வேலைப்பாடுகள் செருக்கப் பெற்றுத் திகழ்வது இவர்களது தனிப்பாணியாகும். வாயில்களின் உட்புற விதானங்களில் தாமரை மலர்கள் இராசிசக்கரங்கள் மலர்கொத்தும் கிளிகள் பிஜங்களுடன் அமைந்த எயந்திரங்கள் ஆகிய சிற்பங்களை வடிப்பதும் இவர்கள் பின்பற்றிய இலக்கணங்களாகும்.

தமிழகத்திலுள்ள விஜயநகர நாயக்கர்கள் காலக் கோபுரங்கள் அனைத்தையும் தொகுப்பாக நோக்குமபோது அவற்றின் வடிவமைப்பின் அடிப்படையில் அவைகளை மூன்று பெரும் பிரிவு களாகப் பிரிக்கலாம். திருவண்ணாமலை, காஞ்சிபுரம், விருத்தாசலம், திருக்கோவிலூர், கும்பகோணம் பொன்ற இடங்களில் உள்ள கோபுரங்கள் அகன்ற அடித்தளம் ஒரே சீரான குறுக்கும் உடற்பகுதி கட்டமான பக்க அமைப்புக்களுடைய சிகரம் ஆகியவற்றோடு இருக்கும். இவ்வகைக் கோபுரங்களே தமிழகம் முழுவதும் காணப்படுகின்றன.

திருவில்லிபுத்தூர், மன்னார்குடி இராஜகோபாலசாமி கோயில் கிழக்குக் கோபுரம் மதுரை தெற்குக் கோபுரம், ஆகியவை அடிப்பீடம் நீளம் அதிகமாகவும் அகலம் குறைவாகவும் உடற்பகுதி நடுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைவுபெற்றுக் குறுகியும் சிகரம் நீள்வட்டப் பக்க அமைப்போடு சற்று மாறுபட்டுக் காணப்படும். மூன்றாவது வகையாகக் குறிப்பிடப்பெறும் கோபுரங்களாகத் திகழ்பவை திருவரங்கம் வெள்ளைக் கோபுரம் திருக்கழுக் குன்றம் பெரிய கோபுரம் ஆகியவையாகும். இவற்றில் சாலை மற்றும் ஒவ்வொரு தளதுவாரங்கள் சிகரத்திலுள்ள மகாநாசிக்கூடு போன்றவை மிக அதிக அளவான பிதுக்கம் பெற்று முன்னோக்கித் திகழும்.

இவற்றுக்கும் மேலாக சிறந்த சிற்பங்களுடன் கூடிய கோபுரங்கள் எடுத்துக் காட்டாக மதுரை மீனாட்சியம்மன் ஆலயக் கோபுரங்கள் காணப்பட்ட நிலையில் கோயிலானது மாமதுரை நகரின் மத்தியில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது ஒவ்வொரு பிரசாரத்திலும் பல கோபுரங்கள் நான்கு பக்கமும் நான்கு பெரிய கோபுரங்கள் வானளாவித் திகழ்கின்றன் மேற்குப் புற கோபுரம் அன்பர்களை வரவேற்கின்றது. வடக்கு கோபுரத்துக்கு அருகில் ஐந்து இன்னிசைத் தூண்கள் உள்ளன. இத்திருக்கோயிலுள் எட்டுக் கோபுரங்களும் இரண்டு விமானங்களும் உள்ளன. வெளிப்புற கோபுரங்களுடன் மொத்தமாக பதினொரு கோபுரங்கள் அமைந்துள்ள போதிலும் தெற்கு வாசக் கோபுரம் திராவிட கலை மரபுடன் எல்லாக் கோபுரத்திலும் பெரிதாக அதிகூடிய சிற்ப வேலைப் பாடுகளுடன் இறைவனது தெய்வீக வரலாறுகளை எடுத்து இயம்புவன இக்காலத்தின் பெருமைக்கு சிறந்த சான்றாகவும் நாயக்கர் கால கோபுரங்களின் தனித்துவத்துக்கும் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஞான போதம்

சைவசித்ததாந்த நூல்கள் பதின்நான்கினுள் முடிமணியாய்த் திகழ்வது ஆன்மாக்கள் உய்யும் பொருட்டும் சைவசமய வரலாறு தழைத்தோங்கவும் ஏற்புடையதான இந்நூல் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவர் எனும் வேளாள அறிஞரால் அருளிச்செய்யப்பட்டது. இதன் கண் உரைநடைப் பகுதியும் செய்யுள் பகுதியும் உள்ளன இதன் காலம் 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதி அதாவது 1223இல் எழுந்த ஒரு ஞானநூல். இந்நூல் வடமொழியிலுள்ள ரௌரவாகமத்தின் 73வது பகுதியான பாபவிமோசனப் படலத்தின் 12ஆம் அத்தியாயத்தின் மொழிபெயர்ப்பாகும்.

இச் சிவஞானபோதமானது முப்பொருளின் உண்மையையும் அவற்றின் இலக்கணத்தையும் எடுத்துக்கூறும் பொதுப் பகுதியையும் வீடு பேற்றிற்குரிய ஞானநெறியினையும் அதன் பயனையும் எடுத்துக்கூறும் சிறப்புப் பகுதியையும் உடைய முழுமுதற் சைவசித்தாந்த நூலாகும். பன்னிரண்டே சூத்திரங்களைக் கொண்ட இந்நூலின் அமைப்பு சிறிய பாடல்களாகவும், பாடல்கள் யாவும் 40வரி கொண்டு சிந்தாந்தக்கருத்தினை விளக்க 39 அதிகரணங்களும், 81 வெண்பாக்களாலும் ஆக்கப்பட்ட இந்நூலின் தத்துவக் கருத்துக்கள் ஆழமானதாகவும் ஊன்றிக் கவனிக்கற்பாலன. தமிழ் மொழிக்கு எவ்வாறு பன்னிரண்டு உயிர் எழுத்துக்கள் அமையப்பெற்றுள்ளனவோ அதைப் போன்றே இந்நூலும் 12 சூத்திரங்களை உடையதாகும். ஒவ்வொரு சூத்திரத்திற்கும் கருத்துரை விளக்கப்பட்டிருப்பதுடன் அச் சூத்திரத்தின் பகுதிகளைக் காரண உதாரணங்களோடு கூடியதாக இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்நூலானது "நின்ற சிவமொன்ற தனைத்தேர்தல் ஞானம் நிகழ்போதம் தேர்ந்ததனைத் தெனிதலாம்" என்ற அருள்வாக்கின் மூலம் அதனுடைய பொருளை அறியத்தக்கதாக இருக்கின்றது. சிவம் ஒன்று அவரைத் தேர்ந்தறிதல் சிவஞானமாகும், தேர்ந்தபின் தெளிதலே போதமாகும் ஆகையால் சிவமாகிய பொருளைத் தேர்ந்து தெளிதலே சிவஞானபோதம் எனப்படும். சிவம் அடிமையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைமையுமாகிய பசு, பாசங்களைத் தழுவிநிற்கும் தேர்தலாகிய ஞானம் ஆகமங்களிலே நிகழும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருட்களை ஆகமங்களினாற் தேர்ந்து அத்தேர்ச்சியால் உண்டாகும் ஐயங்களை தெரிவிப்பது சிவஞான போதமாகும். இந்நூலின் சிறப்பு

"வேதம் பசுவதன்பால் மெய்யா கம நால்வ
ரோதுந் தமிழுதனி னுள்ளுறை நெய் - போதமிகு
நெய்யினுறு சுவையா நீள்வெண்ணெய் மெய் - கண்டான்
செந்தமிழ் நூலின் திறம்"

என்று கூறப்படுவதிலிருந்து அறியமுடிகின்றது. மேலும் ஒளிகளால் அகற்றமுடியாது எங்கும் பரந்த புற இருளை ஓரிடத்துதித்த பன்னிருவகைப்பட்ட சூரியன் நீக்குவது போல மற்றச் சமய நூல்களினால் நீக்கமுடியாத அக இருளை ஓர் ஆகமத்தின் ஒரு படலத்தில் உள்ள பன்னிரு சூத்திரங்களால் நீங்கியருளச் சிவஞானபோதம் உதவியது.

இருட் கேட்டிற்கும் நிருவிகற் பஞ் சவிகற்பம் என்னும் இருவகை காட்சிக்கும் சூரியன் இன்றியமையாதவாறுபோல மலத்தீர்விற்கும் ஆராய்ச்சி அநுபூதி என்னும் இருவகை உணர்விற்கும் சிவஞானபோதம் இன்றியமையாச் சிறப்புடையது. எல்லா நூற்பொருளும் திரண்டு கூடிய நேயம் பெரும்பெயர் மகாவாக்கியம் ஒருவார்த்தை அஞ்செழுத்து என்பவற்றையும் தன்னுள் அடக்கியது. என்பது எடுத்துக்காட்டப்படும் இடத்து

"அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் அஞ்சின்
பொருள் நூல் தெரியப்புகின்"

என வலியுறுத்திச் செல்கின்றது.

இந்நூலானது அவையடக்கம் ஒருவெண்பாவாலும் காப்பு ஒருவஞ்சித்துறையாலும் கூறப்பட்டுள்ளன. அவையடக்கத்தில் உயிரின் இயல்பு உணர்ந்தவரே பதியின் இயல்பை உணர்வர் என்றும் அவரே கடவுள் நெறியின் முடிவுகளை உணரவும் வல்லவர் என்றும் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் கூறப்பட்ட 12சூத்திரங்கள் ஒவ்வொன்றும் 40அடிகளை உடையன இந்த 40 அடிகளும் 216 சொற்களை யுடையன. இந்த 216 சொற்களும் 624 எழுத்துக்களையுடையன. இது விளக்கும் பொருளோ அளவிறந்தது இப்பெரு நூல் உணர்தற்கரியது இவற்றில் முதல் ஆறு சூத்திரங்களும் முப்பொருளின் பொது இலக்கணத்தைக் கூறுவதால் அப்பகுதி பொது அதிகாரம் எனவும் பின் ஆறு சூத்திரங்களும் முப்பொருளின் சிறப்பு இலக்கணத்தைக் கூறுவதால் சிறப்பு அதிகாரமெனவும் கூறப்படும். முதல் ஆறு சூத்திரங்களில் முதன் மூன்றும் முப்பொருளின் உண்மையை விளக்குவதால் பிரமாண இயல் என்றும் பின் மூன்றும் அவற்றின் இலக்கணத்தை கூறுவதால் இலக்கணவியல் என்றும் கூறப்படும். சிறப்பு அதிகாரத்தில் முதல் மூன்றும் அதிகாரி, சாதனம், சாதிக்கும் முறை ஆகியன கூறப்படுவதுடன், சாதனம் அடைவதற்குரியவர் உயிர்களே என்பதையும் இறைவன் குருவாக எழுந்தருளி ஞானம் உணர்த்துதலையும் அங்ஙனம் ஞானம் கைவரப்பெற்ற உயிர் ஐந்தெழுத்தோதிப் பயன்பெறுதலையும் மூன்று சூத்திரங்களும் விளக்கும் நிலையில் சாதன இயல் என்றும் பின் மூன்று சூத்திரங்களும் பாசவிடுதி, சிவப்பேறு, சீவன், முத்தர் ஆகியனபற்றி கூறுதலால் அது பயன் இயல் எனவும் கூறப்படுகின்றது.

மேலும் இங்கு விதந்துரைக்கப்பட்ட பன்னிரு சூத்திரங்களில் முதற் சூத்திரத்தில் கண்ணால் காணப்படும் உலகம் தோன்றி நின்று ஒடுங்குதலைக் கொண்டு கண்ணாற் காணப்படாத கடவுள் உண்டென்று விளக்கப்பட்டிருக்கிறது சங்காரக் கடவுளாகிய சிவனே கருத்தாவாகும் என்பது விளக்கப்படுமிடத்து

"அவனவ ளதுவெனு மவைமூ வினைமையின்
தோற்றிய திதியே யொடுங்கிய மலத்துளதாம்
அந்த மாதி யென்மனார் புலவர்"

என்பதினூடாக அவனென்றும், அவளென்றும், அதுவென்றும் இவ்வாறு பகுத்துப்பலவாய்ச் சுட்டியுணர்தப்படும் சொற்பிரபஞ்சம், பொருட்பிரபஞ்சம் என்னும் இருகூற்றுத் தொகுதியும் தோன்றி நின்று ஒடுங்கும் முத்தொழிலுடைமையால் ஒருவனாற் தோற்றப்பட்டதாய் உளபொருளேயாம் அது தான் தோன்றும் போது தான் ஒடுங்குவதற்கு ஏதுவாய் நின்ற கடவுளினின்றும் சகசமலம் நீங்காமையால் அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்குதற்பொருட்டு மீளத் தோற்றம் பெறுகின்றது என்பது விளக்கப்பட்டிருக்கின்றது.

இரண்டாம் சூத்திரத்தில் இறைவன் உலகத்தைத் தோற்றுவிற்கும் காலத்து உயிர்களோடு ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நின்று தனது சத்தியால் அவ்வுயிர்களின் இருவினைகளுக்கேற்பப் புதுச் சிருட்டியைச் செய்கின்றான் ஆகையால் உலகத்திற்கு இறைவன் நிமித்தகாரணனாவான், மாயை முதற்காரணமாகும், கன்மமும் திரோதானமும் துணைக் காரணங்களாகும், முதல்வன் சத்தியுடன் ஒன்றாதற்கும் இரண்டாதற்கும் சூரியனும் அதன் ஒளியும் போலப் பொருளால் ஒன்றாயும் தன்மையால் இரண்டாயும் நிற்பன் என்பது எடுத்துக்காட்டப்படுமிடத்து

"அவையே தானே யாயிருவினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே"

என்பதனூடாக சங்கார காரணனாகிய முதல்வன் கலப்பினால் உடலின் உயிர்போல அவ்வான் மாக்களேயாய் பொருட்டன் மையாற் கண்ணின் அருக்கன்போல அவற்றின் வேறுமாய் உயிர்க்குயிராதற்றன்மையானே கண்ணொளியின் ஆன்ம போதம் போல உடனுமாய் நின்று ஆணையென்னும் தனது சிற்சத்தியால் வரும் இருவினைகளால் அவ்வான்மாக்கள் இறத்தல் பிறத்தல்களைப் புரியும் வண்ணம் அவ்வாணையிற் பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்பான் என்பது விளக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் சூத்திரத்தில் உடம்பின் கண் ஆன்மா என்பது ஒன்றுண்டு என்பதைப் பல காரணங்களைக் காட்டி விளக்கப் பட்டிருக்கின்றது. காணப்படும் உடம்பைக் கொண்டு காணப்படாத உயிர் உண்டென்று சாதிக்கலாம் இந்திரியங்கள் காரணங்கள் முதலியவற்றின் வேறாய் உடம்பினுள் உயிர் உண்டு என்பது எடுத்துக்காட்டப்படுமிடத்து

"உளதில தென்றலின் எனதுடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்
உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனூடாக இலது என்றன் முதலிய அறுவகை ஏதுக்களானும் மாயா இயந்திர தநுவினுவென உடம்போடு சேர்த்து ஓதிய குறிப்பேது வானும் இவற்றின் வேறாய் இவ்வுடம்பினுள் ஆன்மா வெனப்படுவதொன்றுண்டு என்பது நிருபிக்கப்படுகின்றது.

நான்காம் சூத்திரத்தில் உயிரின் இலக்கணம் கூறப்படுகின்றது உயிர், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐந்தவத்தைப்படும் என்று உயிரின் தடத்தல் இலக்கணம் கூறப்படுகின்றது அவத்தை என்பது நிலையைக் குறிக்கும் உயிரின் நிலை 1) ஆணவத்தோடு கூடி நிற்றலும் 2) கருவிகளோடு கூடிநிற்றலும் 3) அருளோடு கூடிநிற்றலும் என மூவகையால் அவை முறையே கேவலம், சகலம் சுத்தம் என மூவகைப்படும் என்பதும் எடுத்துக்காட்டப்படுமிடத்து

“அந்தக்கரணம் அவற்றினொன்று அன்றவை
சந்தித்தது ஆன்மாச் சகசமலத்து உணராது
அமைச்சரசு ஏய்ப்ப நின்று அஞ்சவத் தைநதே”

என்பதனூடாக அந்தக்கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கனுள் ஆன்மா ஒன்றல்ல. நுண்ணுணர்வில்லாத அரசன் சூழ்ச்சித் துணைவராகிய அமைச்சர்களோடும் கூடிநின்று தன்தொழில் நடத்துவது போல சகசமலத்தினால் உணர்வின்றிக் காலதிகளாற் பொதுவகையான உணர்வு நிகழினுஞ் சிறப்பு வகையான் நிகழுமாறு தனக்குத்துணையாக அவ்வந்தக்கரணங்களோடு கூடி நின்று வினை செய்வதனால் ஆன்மா ஐந்தவித்தைக் குட்பட்டு அவலப்படுகின்றது என்பது எடுத்துக்காட்டப்படுகின்றது.

ஐந்தாம் சூத்திரத்தில் இந்திரியங்கள் உயிரால் விடயங்களை அறிவதுபோல உயிர் சிவனால் விடயங்களை அறியுமெனப் பாச இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இவற்றின் சிறப்பு

“விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண் மூக்கு
அளந்தறிந்து அறியா ஆங்கவை போலத்
தாந்தம் உணர்வின் தமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதினூடாக மெய், வாய், கண், மூக்குச், செவியென்பன தத்தம் விடயங்களை இதின்னதென்று அளவிட்டறிந்தும் அங்ஙனம் அறியும் தம்மையும் தம்மை அதிட்டித்து நின்று செலுத்தி அறிவிக்கும் உயிரையும் அறியமாட்டாது அதே போல உயிர்களும் தமதறிவிற்கு வியஞ்சகமாகிய முதல்வனது சிற்சத்தியான் இருவகை அஞ்சவத்தையினின்று வினைப்பயன்களை அனுபவிக்கும் தம்மையும் தம்மைச் செலுத்தி நிற்கும் திருவருளையும் அறியமாட்டா, உயிர்கள் அவ்வாறுணர்தல் காந்தத்தைக் கண்ட இரும்பு அதன் சந்நிதி மாத்திரையின் வலித்துக்கொள்ளப்படுமாறு போல்வது. கரணத்தாலன்றிச் சங்கற்பத்தால் அதிட்டிக்கும் முதல்வன் அது பற்றி விகாரியாகான் என்பது எடுத்துக்காட்டப்படுகின்றது.

ஆறாம் சூத்திரத்தில் பதியின் சொரூபம் சித்து, சத்து எனச்சிறப்பு இலக்கணம் கூறப்பட்டுள்ளது சிவசொரூபம், பாசஞானம், பசுஞானங்களால் அறியப்படாது சிவஞானம் ஒன்றலேயே அறியப்படும் என்பது எடுத்துக்காட்டப்படும் இடத்து

> "உணர் உருஅசத்தெனின் உணராது இன்மையின்
> இருதிறன் அல்லது சிவசத்து ஆமென
> இரண்டு வகையின் இசைக்குமன் உலகே"

என்பதனூடாக முப்பொருள் தம்முணர்வின் அளவைகளான் அறியப்படும் இயல் பிற்றென்னின் அங்ஙனம் அறியப்படும் பிரபஞ்சம் போல் அழிபொருளாகி அசத்தாகும் அங்ஙனமன்றி அறியப்படாததோ வென்னின் முயற் கொம்பு போலச் சூனியப் பொருளாம் இவ் விருபகுதியுமின்றி ஒருவாற்றானறியப்படாமையும் ஒருவாற்றா னறியப்படுதலுமாகிய சிவசத்தாமெனக் கூறுவர் மெய்யுணர்வின் நிலை பெற்றுயர்ந்தோர் எனப்படுகின்றது.

ஏழாம் சூத்திரத்தில் ஆன்மாவின் சொரூப லக்கணம் கூறப்பட்டுள்ளது ஆன்மா சத்தோடு சார்ந்து சத்தாகவும் அசத்தோடு சேர்ந்து அசத்தாயும் சத்து அசத்து இரண்டையும் அறியும் பொருள் ஆன்மாவாகும் ஆகையால் ஆன்மா சதசத்து எனப்படுகின்றது என்பதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியாது அசத்திலது அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா"

எனக்கூறி வாக்கு மனாதீதமாகிய சிவசத்தின் சந்நிதியில் உணர் உருவாகிய அசத்தெல்லாம் பாழாகலின் சத்தாகிய சிவம் அசத்தாகிய பிரபஞ்சத்தை அறிதல் செய்யாது அசத்தாகிய பிரபஞ்சம் அறிவில்லாத சடமாகலின் சத்தாகிய சிவத்தை அறிதல் செய்யாது. ஆதலால் பாரிசேட அளவையான் இருதிறன் அறிவுளது ஒன்று உண்டு என்பது பெறப்படுதலின் அதுவே சத்தாதல் தன்மையும் அசத்தாதல் தன்மையும் ஆகிய இரண்டுமின்றிச் சதசத்தாயுள்ளது ஆன்மா எனக்கூறிச் செல்லுகின்றது.

எட்டாம் சூத்திரத்தில் ஆன்மா ஞானசாரியனால் உபதேசிக்கப்படும் ஞானத்தால் சிவபெருமான் திருவடியை அடையுமெனத் திருவடி அடைதற்குச் சாதனம் கூறப்பட்டுள்ளது. இதனை,

"ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவு மாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரண்கழல் செலுமே"

என்பதனூடாக விளக்கி ஆன்மா தான் முன்னே செய்த புண்ணிய விசேடத்தால் தனக்கு அந்தர்யாமியாய் இருகாறும் உண்ணின்று உணர்திவந்த பரம்பொருளே இப்பொழுது இருவடிவமுங் கொண்டெழுந்தருளி வந்து சிவதீக்கை செய்து ஐம்பொறிகாளாகிய வேடருட்பட்டு வளர்ந்து நின்பெருந்தகைமையை அறியாது மயங்கி இடர்ப்பட்டாய் நின் தகைமை இவ்வியல் பிற்றென்று அறிவுப்ப அறிந்த மாத்திரையே அவ்வேடரை விட்டுநீங்கி அன்னியமன்றி அனன்னியமாந் தன்மையின் நிலைபெற்று அம்முதல்வன் திருவடிகளை அணையும் என்பது எடுத்துக்காட்டப்படுகின்றது.

ஒன்பதாம் சூத்திரத்தில் ஆன்மாவானது தன் அறிவின் கண்ணே முதல்வனை கண்ணினாலே கண்டு கானல்நீர் போலும் நிலையில்லாத பிரபஞ்சத்தைவிட்டு சிவனது திருவடிநிழலை அடைந்து அந்நிலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமொருவிய வழியும் வாசனையால் வந்து தாக்கும் மலம்மாயை என்னும் இரண்டனுடனே வலிய கன்ம மலமும் இல்லையாய் பற்றறக் கழியும் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

பதினொராம் சூத்திரத்தில் பாசம் நீக்கப் பெற்ற ஆன்மாவுக்குச் சிவப்பேறு உண்டாகும் பாசம் நிங்கப்பெற்றதனால் ஆன்மாவானது தன்னோடு சிவன் அத்துவிதமாய் நின்று காட்டியும் கண்டும் வரும் பேருப காரத்தை இடைவிடாத அன்பினால் நினைந்து அவன் திருவடியாகிய சிவானந்தத்தை அடைதலே சிவப்பேறாகும் அது அயரா அன்பினாற் கிடைக்கும் பாசம் நீங்கித் திருவடி அடைத்ல் உடம்பு உள்ள பொழுதே கூடும் என்பது கவனிக்க வேண்டிய தொன்றாகும் என்பதனை

"காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன் கழல் செலுமே"

என்பதினூடாக காட்டக்காணும் தன்மையுடைய கண் உருவத்தைக் காணும்படி அதனோடொருங்கிசைந்து நின்று காட்டி அவ்வுருவத்தைக் காண்கின்ற ஆன்மாப் போல அறிவிக்க அறியும் இயல்புடைய அவ்வான்மா விடயத்தை அறியும்படி முதல்வன் அதனோடொருங்கியைந்து நின்று அறிவித்து அறிந்து வருதலான் அவ்வத்துவித நிலையை மறவாது கடைப்பிடித்துச் செய்யும் அன்பானே அம்முதல்வன் திருவடியாகிய சிவானந்தாநுபூதி தலைப்படும் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் அயரா அன்பினால் முக்திநிலை எய்தக்கூடியவர் இறைவன் திருவடியை அணைதற்குத் தடைசெய்யும் மும்மல அழுக்கை ஞான நீரினாற் கழுவவேண்டும் என்று முதற்கண் கூறப்பட்டுள்ளது. பின்னர் மலநீக்கத்தை நிலைபெற செய்வதற்குத் தன்னைப் போல் அயரா அன்பினால் முதல்வன் பாதமடைந்த மெய்ஞானிகளோடு சேர வேண்டும் அம்முத்தர்களோடு பெற்ற இணக்கம் நிலை பெறுவதற்கு சிவபெருமான் வெளிப்பட்டு விளங்கும் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவன் எனக் கண்டு வழிபடவேண்டும் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறா வண்ணம் முத்திப் பஞ்சாட்சரத்தை தியானிக்கவேண்டும் இதனால் ஆன்மா சாந்தி பெறும் என்பது

**"ஊனக்கண் பாசம் உணராப் பதியை**
**ஞானக் கண்ணினில் சிந்தைநாடி**
**உராத்துணைத் தேர்த்தெனப்பாசம் ஒருவத்**
**தண்ணிழலாம் பதி விதி எண்ணும் அஞ்செழுத்தே"**

என்பதினூடாக எடுத்துக்காட்டி குறை உணர்வாகிய பசு அறிவானும் பாச அறிவானும் அறியப்படாத முதல்வனை அவனது திருவடி ஞானத்தால் பாசக் கூட்டம் நின்றுழி நில்லாது பேய்த்தேரின் இயல்பிற்றாய்க் கழிவது என்றறிந்து நீங்கவே அப்பதிஞானம் பிறவித்துயராகிய வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும் அவ்வாறு பாசத்தை ஒருவி ஞானத்தைப் பெற்று ஞேயத்தைக் கண்ட காட்சி சலியாமைப் பொருட்டு அப்பொருள் பயக்குந்திரு அஞ்செழுத்து விதிப்படி கணிக்கப்படும் என வலியுத்தப் பட்டுள்ளது.

பத்தாம் சூத்திரத்தில் ஆன்மா சுத்தியினால் ஏற்படும் பயன் பாசநீக்கம் எனக் கூறப்பட்டுள்ளது. பாசநீக்கத்தில் முதல்வனுடன் ஏதுமாய் நிற்றலால் ஆணவமலம் நீங்கும் அவருடைய அருள் வழியாகிய இறைபணி நிற்றலால் மாயை கன்மங்களின் நீக்கம் உண்டாகும் இறைவன் திருவருளை இன்றித் தனக்கு செயலில்லையென அறிந்து எச்செயலும் அவன் செயலாகவே காணும் இறைபணி நிற்பவர்க்கும் பிராரத்தவினை உயிரைத் தாக்காமல் ஆகாமிய வினையும் வறுவித்துப்போல் மேற்பிறவியை உண்டு பண்ணாது என்பது எடுத்துக்காட்டப்படுமிடத்து

**"அவனே தானே ஆகிய அந்நெறி**
**ஏகன் ஆகி இறைபணி நிற்க**
**மலமாயை தன்னோடு வல்வினை இன்றே"**

எனக்காட்டி ஞானக் கண்ணினிற் சிந்தை நாடப்பட்ட அம் முதல்வன் பொருட்டன்மையால் வேறாயினும் வேறு காணப்படாது யானே கண்டேன் என்னும்படி உயிர் தானே யாய் நின்ற அப்பெத்த நிலைபோல ஈண்டுத் தானெனவேறு காணப்படாது அம்முதல்வனே யாம்படி ஒற்றுமைப்பட்டு அவ்விறை பணியின் வழுவாது நிற்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மாஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே"

என எடுத்தியம்பி அயரா அன்பின் அரன் கழலணைந்த சீவன் முத்தன் செய்கமல மலர்போல விரிந்து விளங்கிய முதல்வனது சீர் பாதத்தை அணைதற்கு உடம்படாது அயர்த்தலைத் செய்விக்கும் அவ்வியல்பினை உடைய மும்மல அழுக்கை ஞானநீரால் கழுவி தன்மைப்போல அயரா அன்பின் அரன் கழலடைந்த மெய்ஞ் ஞானிகளோடு கலந்து கூடி அவ்வாறு கழுவப்பட்டு மலமயக்கு நீங்க அன்பரொடு சேர்ந்து அன்பு மிக்க அவருடைய திருவேடத்தையும் சிவாலயத்தையும் முதல்வனெனக்கண்டு வழிபட்டு வாழ்வான் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஞான நெறியிற் புகுந்து சிவஞானத்தை உணர்ந்து முத்தியடைதலே இலட்சியம் என்னும் பொருள்பட பல்வேறு அம்சங்களையும் அதற்குரிய வழிவகைகளையும் எடுத்து விளக்கிச் செல்வது சிவஞான போதம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஞான சித்தியார்

சைவ சித்தாந்த நெறிக்கு உயிர்நாடிகளாய் அமைந்தவை வேதங்கள், சிவாகமங்கள், திருமுறைகள், மெய்கண்டசாஸ்திரங்கள் பதினான்கும் சைவசித்தாந்த சாதகன் கற்றுத் தேளிந்து கடைப்பிடித்தற்கு உரியன. இச் சாத்திரநூல்களுள்ளே தலையாயது மெய்கண்டார் அருளிய சிவஞான போதமாகும். மெய்கண்டாரின் முதல் மாணவராகிய அருணந்திசிவாச்சாரியாரால் உருவாக்கப்பட்ட நூலே சிவஞானசித்தியார் ஆகும். இது சைவசித்தாந்த நூல்களின் வரிசையில் இரண்டாம் நிலையில் வைத்தெண்ணப்படுவது. நூலாசிரியர் அருணந்திக்கு சகலாகம பண்டிதர், சதாசிவ சிவாச்சாரியார், காப்பாளர், குலகுரு எனவேறு பலநாமங்கள் காணப்பட்டன. இவர் மெய்கண் டாருக்கு ஆண்டில் மூத்தவராயினும் அவர் சிவஞானபோதத்தை நன்குணர்ந்து இப்பெரிய நூலை செய்தவராகையால் இது கி.பி. 1253ஆம் ஆண்டளவில் அமைந்த நூல் என்று கூறுவர்.

இந்நூல் ஆசிரியர் அருணந்தி சிவஞானபோதத்தை நன்கு முறையாக கேட்டுத் தெளிந்து எல்லோரும் விளங்கிக்கொள்ளும் வகையிலும குருநாதரின் அருளுபதேசத்தின் மூலமாக "நீ இச் சிவஞானபோத நூற்பொருளை விரித்துப் பிற்காலத்தவர்க்கு இனிது விளங்குமாறு ஒருநூல் செய்க" என வேண்டுதல் செய்ய அதை ஏற்றுக்கொண்டு "எம் குருநாதன் தீதகல எமக்களித்த ஞான நூலைத் தேர்ந்துரைப்பன் சிவஞானசித்தி என்றே" என்று இவர் பாடியுள்ளதைக் கொண்டு இதனையறியலாம். இச் சிவஞானசித்தியார் சிவஞான போதத்தின் வழிநூலாய் அமைந்த அதே நேரம் சித்தாந்த சாஸ்திரங்களுள் மிகவிரிவானது. சிவாகமங்களின் கருத்தை கூறுகின்றது. இதன் பெறுபேறாக "பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப்பாதி போதும் என்று இந்நூலின் பெருமைபற்றி தருமை ஆதீன முதற் குருவரான குருஞானசம்பந்த மூர்த்திகள் கூறியிருக்கின்றார்கள். இதே கருத்தை தாயுமான சுவாமிகளும் கூறியுள்ளார். மாபாடிய கர்த்தாவாகிய சிவஞான சுவாமிகளும் "சிவஞான சித்தியார் சிவாகமங்களுக்கெல்லாம் உரையாணி" என்பர். இந்நூல் வாக்கு, காரணம் விளக்கமாகவும், தெளிவாகவும் கூறும் தன்மையில் வேதம் ஆகமம் இரண்டும் இன்றியமையாத் தன்மை கொண்டவை என்பதனை இது எடுத்துவிளக்குகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
ஆதிநூல் அனாதி அமலன் தரு நூலிரண்டு
ஆரணநூல் பொது சைவம் அரும் சிறப்புநூல்"

என எடுத்து விளக்கி இவற்றின் அடிப்படையில் சித்தாந்தக் கோட்பாட்டை அணுகியுள்ளது என்பர்.

இது பரபக்கம், சுபக்கம் என்னும் இருபகுதிகளைக் கொண்டது உலகாயுதம் முதல் பாஞ்சராத்தி ஈறாக பதினான்கு புறச்சமயவாதிகளின் கொள்கைகளை எடுத்துக்கூறி அவற்றை அளவை முறையால் மறுப்பது பரபக்கம் இது முதனூலின் அவையடக்கத்தை ஆதாரமாகக் கொண்டது இதன் கண் முந்நூற்றொரு விருத்தங்கள் உள்ளன. சபக்கம் சாத்திரநூல்களுக்குரிய அளவை கூறியபின்முப்பொருட்களின் உண்மை அவற்றின் பொதுவியல்பு, சிறப்பியல்பு பாசத்தினின்று நீங்கிக் கடவுளை அடைவதற்கான வழிகள் கடவுளை அடைந்தோர் தன்மை ஆகிய பொருட்களை முன்னூற்றி இருப்தெட்டு விருத்தங்களில் விரித்துக் கூறுகின்றது. முதனூலின் பன்னிரு சூத்திரங்களின் பொருளையும் பன்னிருண்டு அதிகாரங்களாக பிரிக்கும் வகையில் இரு அமைந்துள்ளது. இதன் கண் கூறப்படும் விடயங்களைப்பற்றி "சைவ சமய வளர்ச்சி" என்னும் தமது நூலிலே டாக்டர் மா. இராசமாணிக்கனார் குறித்துள்ளமை பின்வருமாறு.

"சில ஆகமப் பிரமாணங்களை ஒப்புக்கொள்ளாத சமயங்கள் புறச் சமயங்கள் எனப்பட்டன. வைதீகச் சார்பில்லாத சமயங்கள் புறப்புறச் சமயங்கள் எனவும் வைதீகச் சார்புடையவை புறச்சமயங்கள் எனவும் கூறப்பட்டன. புறப்புறச் சமயிகளுள் உலகாயுதர் சௌத்ராந்திகர், யோகசாரர், மாத்யாமிகர், வைபாடிகள் ஆகிய நால்வகைப் பௌத்தர், நிகண்டவாதிகள் ஆசீவகர் என்னும் இருவகைச் சமணர் அடங்குவர், பட்டாச்சாரியர் மதம், பிரபாகரமதம் என்னும் இருவகை மீமாஞ்சகமதமும் சுத்தப் பிரமவாதம், மாயாவாதம், பாற்கரியவாதம், கீரிடப் பிரமவாதம் என்னும் நால்வகை ஏகான்மவாதமும் பாஞ்சராத்திரிகம் என்னும் வைணவ மதமும் புறச்சமயத்துள் அடங்கும் அவர் அனைவருடைய சமயக் கொள்கைகளைக் கூறி சித்தாந்தத்துடன் முரண்படுவனவற்றை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்துச் சித்தாந்தத்தை நிலை நிறுத்துவதே பரபக்கம் என்பது. இது 301 செய்யுட்களைக் கொண்டது. சுபக்கத்தில் சிவஞானபோதப் பொருளே விரித்துரைக்கப்படுகிறது அப்பகுதி 238 செய்யுட்கள் கொண்டது சித்தியாரின் பெருமையை "சிவனுக்கு மேல் தெய்வம் இல்லை சித்திக்கு விஞ்சிய நூலில்லை" என்னும் பழமொழியாலும் தாயுமானவர் பாராட்டுரையாலும் அறியலாம். எனக் கூறியுள்ளார்.

சிவஞான சித்தியாரிலே சைவசித்தாந்தக் கோட்பாட்டின் தனித்துவப் பொருட்களாகிய பதி, பசு, பாசம் ஆகியவைபற்றி மிகவும் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. இவற்றில் முதனிலைப்பட்ட பொருளாகிய பதி அறிவின் துணைக்கொண்டு நாடுவோருக்கு அருளோடு பொருந்தி உயிருக்குயிராகும் பரமாத்மாவாகி அறிவை நல்குவான் என்பதும் இவன் அருவமுருவாருபமானது மன்றி நின்ற உருவமும் என இறைவன் மூன்று வடிவங்கள் கொண்டவனாயினும் உண்மையில் இவை ஒன்றுமில்லாத சுத்தசைத்தன்னிய சொரூப லக்கணத்தை உடையவன் என்பதனை எடுத்தியம்பும் நிலையில்

"ஒருவனோடொருத்தியொன்றென் றுரைத்திடுமுலக மெல்லாம்
வருமுறை வந்து நின்று போவது மாதலாலே
தருபவ னொருவன் வேண்டுந் தான் முதலீறுமாகி
மருவிடு மாநாதி முத்தசித்துரு மன்னிநின்றே"

என்பதனூடாக சேதன அசேதனப் பிரபஞ்கம் தோன்றி நின்று ஒடுங்குதலால் அதனைக் காரியப்படுத்தும் ஒருகருத்தா வேண்டும் அக்கருத்தா நிமித்த காரணனும் சங்கார காரணனுமாய் சத்திவடிவம் பொருந்தி நின்று பிரபஞ்சத்தை காரியப்படுத்துபவனாக இருக்கின்றான். என்றும் அவன் முதல்வண் உயிர்களோடு கலப்பினால் ஒன்றாகவும் பொருட்டன்மையால் அவற்றின் வேறாயும் செலுத்தும் தன்மையால் அவற்றோடு உடனாயும் நிற்பன் எவ்வாறெனின் சத்திவடிவாய் வியாபித்து சேதனப் பிரபஞ்சமாகிய உயிர்களோடு ஒன்றாயும் உடனாயும் நின்று அவரவர் கண்மத்திற்கேற்ப தனு கரணாதிகளைக் கொடுத்து வினைப்பயனை நுகர்வித்தும் அசேதனப் பிரபஞ்சமாகிய தனுகரணாதிகளோடு அத்துவிதமாய் கலந்து பிரிவின்றியும் நிற்பவன் இவ்வாறாயினும் இவற்றுக்கு வேறுமாய்த் தோய்வின்றி நிற்கும் வல்லமை கொண்டவன் அப்பதியாகிய இறைவன் எனக் கூறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்ட இறைவன் தடத்த நிலைகளில் படி இறங்கி சிவன் எனவும் சத்திவடிவினை சிவம் எனவும் குறிப்பிடும் நிலையில் மூவகை திருமேனியல்லாது அம்மூன்றினுள் ஒன்றாய்க் கூடும் தன்மைபடைத்தவன் சத்தியும் சிவமுமாகி உயர்குணம் குறியுமாகி இவ்வாழ்க்கைக்கெல்லாம் உறுதுணையாக இருப்பார். எனவும் கூறிச் சென்றதுடன் ஆன்மா அந்தக்கரணங்களின் துணை கொண்டு விடயங்களை அறிவதாயிருந்த போதும் அவற்றில் நின்றும் வேறுபட்டதான பொருளாக நின்று செயல்படும் ஆற்றல் படைத்தது எனவும் அவற்றிலும் மேலாக ஆன்மா சத்தோடு சத்தாகவும், அசத்தோடு கூடி அசத்தாயும் நிற்றலால் அது சதசத்து எனப்படும். ஆன்மா ஆற்றல் அற்றது அறிவிக்கு அறிவது உயிர் சத்தையும் அசத்தையும் மறியக்கூடிய காரணத்தால் சதசத்து எனப்பட்டதேயன்றி சத்தும் அசத்துமாகிய மாறுபட்ட உடையதல்ல என்பதும் அறியவேண்டும் அதே நேரம் சத்து பதியாகும், அசத்து மாயாகாரிய உடலுலகுகளாகும் உயிர் இவ்விரண்டினையுஞ் சார்ந்து நிற்கும் நிலையை இந்நூலானது விபரித்துச் செல்லும் நிலையில்

"அறியாமை சாரின் அதுவாய் அறிவாம்
நெறியான போதுதவாய்நிற்கும் - குறியா
சதசத் தருளுணர்த்த தானுணரா நின்ற
விதமுற் றறிவெனும் பேர் மெய்"

எனக் கூறுகின்றது. ஆன்மா ஒரு விடயத்தை நுகரும்போது ஐம்பொறிகளிலொன்றும் பஞ்சபூதங்களிலொன்றும் அந்தக்கரணங்கள் நான்கும் கலாதிகள் ஐந்தும் ஆகிய பதினொரு தத்துவங்களையும் பொருந்தி நின்று அவற்றின் உதவியால் அனுபவிக்கும் முதல்வன் அக்கருவிகளைக் கூட்ட அவன் செயலால் அக்கருவிகளோடு கூடி நின்று ஆன்மா போகங்களை அனுபவிக்கும் என எடுத்து இயம்புகின்றது.

பாசவினைகளைப் பொறுத்தவரையில் அவை ஆணவம், கன்மம், மாயை என்னும் வடிவங்களில் நின்று செயல்பட்டு ஆன்மாவுக்கு பல்விதமான துன்பங்களை விளைவிக்கின்றது என்பதனை இந்நூலானது எடுத்து விளக்குவது ஆணவம். இன்று ஒன்று அதன் சத்திகள் எண்ணில்லாதவாகும் உயிர்கள் ஒவ்வொன்றும் பல சத்திகள் பொருத்தி நிற்கும் என்பது விளக்கப்படுமிடத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒன்றாதாய் அநேக சத்தியுடையதாய் உடனாய்ஆதி
அன்றதாய் ஆன்மாவின் தன் அறிவோடு தொழிலை ஆர்த்து
நின்று போத்திருத்துவத்தை நிகழ்த்திச் செம்பினிற்களிம்பேய்ந்து
என்றும் அஞ்ஞானங் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே...

என்று கூறுவதனூடாக ஆணவமானது எண்ணிறைந்த சக்திகளை யுடையதாய் எண்ணிறந்த உயிர்களினுஞ் சேர்ந்து செம்பிற் களிம்புபோல அநாதியே சேர்ந்து நிற்பதாயக் கேவல நிலையில் அவ்வுயிர்களின் அறிவோடு தொழில்களை மறைத்து நின்று காலத்திலே போக நுகர்ச்சிக்குக் காரணமாய் நின்று எப்பொழுதும் அஞ்ஞானத்தை உண்டாக்கிய வண்ணமே இருக்குமென எடுத்துக்காட்டியும், ஆணவமல பரிபாகத்தின் பொருட்டு உலகம் தோன்றி மாயாமல பரிபாகத்தின் பொருட்டு நிலைத்து கன்மமலபரிபாகத்தின் பொருட்டு ஒடுங்கும் என்பதை

"அழிப்பிளைப்பு ஆற்றல் ஆக்கம் அவ்வவர் கன்மமெல்லாங்
கழித்திடல் நுகரச்செய்தல் காப்பது கண்மஒப்பில்
தெழித்திடல் மலங்கள் எல்லாம் மறைப்பருள் செய்தி
பழிபொழிபந்தம் வீடுபார்த்திடின் அருளேயெல்லாம் தானும்"

என்பதனூடாக ஒடுக்கமாவது இளைப்பாற்றலும் தோற்றமாவது அவரவர் கன்மம் கழியத்தக்கதாக மலபரியாகம் வரச்செய்ததும் நிலைத்தல் கன்மத்தை அனுபவிக்கச் செய்தலும் மறைப்பாவது இருவினை யொப்பு வரத்தக்கதாக மலங்களை முதிர்வித்த:லும் அருளாவது பந்தத்தினின்று நீங்கச் செய்து திருவருள் கிட்டுத்ல் என்னும் ஐந்தொழிலும் அருட்செயலாவதற்கு காரணமாக இருப்பது எனவும் மாயையின் இயல்பு நிலையில்

"நித்தமாய் அருவமாய் ஏகநிலையதாய் உலகத்திற்கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாவியாய் விமலனுக்கோர்
சத்தியாய்ப் புவன போகந் தனுகரணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமுஞ் செய்யுமன்றே"

என்பதனூடாக உலகிற்கு முதற்காரண மெனப்படும் மாயை என்று முள்ளதாய் அருவமாய் ஒன்றாய் உள்ளதாயும் உலகம் தோன்றுவதற்கு ஒருவித்தாயும் சடப்பொருளுமாய் எவ்விடத்தும் வியாபகமாயும் இறைவனுக்கு ஒரு பரிக்கிரக சத்தியாய் புவனமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகமும் தனுவும் காரணமுமாக உயிர்களின் பொருட்டு விரிந்ததொரு மலமாகி விபரீத உணர்வினை உண்டாக்கும் தன்மை கொண்டது என்பது எடுத்துக் காட்டப்படுகின்றது.

இந்நிலையில் ஐம்பொறி முதலிய தத்துவங்கிள் வசத்தாகித் தன்னையும் தனது தலைவனையும் அறியாது வருந்தும் ஆன்மாவுக்கு முதல்வன் அது பக்கிவ செய்தியவிடத்துத் திருவருளே திருமேனியாகக் கொண்டெழுந்தருளி வந்து உபதேசித்துத் தத்துவ நீக்கம் செய்து ஆணவமல வலியைக் கெடுத்து ஞான முதிப்பித்துப் பரமுத்தியைக் கொடுப்பான் அத்தகைய முத்தியை பெறுவதனை இலட்சிய மாகக்கொண்டு ஆன்மா பிரபஞ்சம் நிலையற்ற தெனக்கண்டு திருவைந்தெழுத்தை முறையே செயித்து உண்மை நிட்டைகூட முயற்சிக்கவேண்டும் இவ்நிட்டையிலே சிவன்முத்தர் உடலழிந்து படமும்மலம் பற்றற்றத் திருவடிப்பேறு கிட்டும் அவ்வேளை அத்துவித பரமுத்தியின் பந்துய்க்கமுடியும் இதற்கு குருலிங்கசங்க வழிகாட்டுமரபினை பின்பற்றுதல் வேண்டும் என்பதனையும் இந்நூல் வலியுறுத்திச் செல்லுகின்றது.

இதுமட்டுமன்றி இந்நூலானது சாஸ்திர நூலாகவும் தோத்திர நூலாகவும் அமைந்திருந்ததோடு தலைசிறந்த இலக்கியநூலாகவும் உள்ளது இதிலுள்ள பாடல்கள் யாவும் சுவையுள்ளவை ஈசனுக்கு அன்பில்லாதவர்களைப்பற்றி சிறு கோபத்தோடு பாடிய பாடலின் தன்மை நோக்குமிடத்து

**"ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கண்பில்லார்**
**எவ்வுயிர்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்"**

என எடுத்துக்காட்டி உண்மையன்பில்லாது இவ்வுலக வாழ்விலே ஏதோ காலம் களிக்கும் வகையில் கருமத்தை செய்து அருள் ஞானக் குறியில் நின்று கும்பிட்டு தண்டமிட்டுக் கூத்தாடியே திரிவர் இதனால் பிரயோசனமில்லை எனவே இதனை விடுத்து உண்மைப் பொருளைத் தேடியலைந்து அதன் திருவடியடைந்து முத்தியின்பம் பெறவேண்டும் என்பதனை வலியுறுத்திச் செல்லும் நூலாக இவ் சிவஞான சித்தியார் காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் தனித்துவத்திறன் உணர்ந்த அறிஞர் பெருமக்கள் பலரும் இதற்கு உரை எழுதியுள்ளார்கள் இவ்வகையில் மறைஞான சம்பந்தர், நிரம்ப வழங்கியதேசிகர், சிவாக்கிரகயோகிகள், ஞானப்பிரகாச சுவாமிகள் முதலானோர் குறிப்பிடக்கூடியவர்கள் ஈழத்தவரில் சுவாமி ஞானப்பிரகாசர், திருவிளங்கம் என்றும் சைவப் பெரியார்களும் இந்நூலுக்கு உரை எழுதியமை அதன் தனித்துவத்தை மேலும் நிலை நாட்டிச்செல்வதற்கு காரணமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மாழ்வார்

வைணவ சமயவரலாற்றுப்பரப்பில் சித்தரிக்கப்பட்ட பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராக கருதப்பட்டவர் நம்மாழ்வார் இவர் பாண்டி நாட்டிலே தாமிரபர்ணிக் கரையிலேயுள்ள திருக்குருகூர் என்னும் ஊரில் வாழ்ந்த காரியார் உடைய நங்கை என்பாளை மணந்து பெற்ற குழந்தை தோன்றிய சில நாள்கள் அழாமலும் பால் குடியாமலும் கிடந்தார் எனவே பெற்றோர் இவரை அருகிலுள்ள திருமால் கோயிலுக்கு எடுத்துச்சென்று அங்குள்ள புளியமரத்தடியிலே தொட்டில் கட்டி வளர்த்தித் தாமும் அங்கே வரங்கிடந்தனர். பின்பு குழந்தையை தூக்கி பெருமாள் முன்வைத்தனர் அதுவரை அசையாமற் கிடந்த குழந்தை தவழ்ந்து சென்று புளியமரத்தடியில் பத்மாசனத்தில் இருந்தார். பதினாறு வயது வரை கண்மூடிய வண்ணம் பேசாமலிந்தார் இந்நிலையில் மதுரகவி என்பார் உண்மை நாடி வடநாடெங்கும் தலயாத்திரை மேற்கொண்டு இவ்வழியே வந்தபோது அங்கே ஒரு ஒளி தோன்றியதும் அருகிற் சென்று அதைப்பார்த்தபோது இவரை கண்டார் கண்டதும் உண்மை புரிந்து கொண்டு இவரை குருவாக ஏற்றுக்கொண்டார்.

இக்குருநாதர் அறியாமையை உண்டாக்கும் சடம் என்னும் வாயுவைக் குழந்தைப் பராயத்திலே விரட்டியதால் சடகோபன் என்றும், உலக நடைக்கு மாறாக இருந்தமையால் மாறன் என்றும், மகிழம் பூமாலையைத் தரித்தமையால் வகுளாபரணர் என்றும், புறச்சமயங்களாய யானைகளை எளிதில் அடக்கியமையால் பாராங்குசர் என்னும், பெயரையும் திருக்குரு கூரிற் பிறந்தமையால் குருகைப்பிரான் என்னும் பெயரையும், பெருமானின் விசேட கடாட்சம் பெற்றமையால் நம்மாழ்வார் என்றும், நாமத்தையும் பெற்றார்.

இவர் திருமாலின் அவதாரமாக பேசப்பட்டவர் பகவானின் சிறப்பியல்புகளை எடுத்து இயம்பும் வகையில் நான்கு பிரபந்தங்களை உருவாக்கினார். இவை பெரும்பாலும் நான்கு வேதசாராம்சத்தை உள்ளடக்கி இருந்தது. இதனால் வேதத்தமிழ் என்றும் ஞானத் தமிழ் என்றும் போற்றுவார். இவர் செய்த நூலகளாக கருதப்பட்டவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்பனவாம். இவை நான்கும் அந்தாதித் தொடையாகவே அமைந்துள்ளன. இவற்றில்

| | | | | |
|---|---|---|---|---|
| திருவிருத்தம் | - | இருக்குவேதகாரம் | - | 100 |
| திருவாசிரியம் | - | யசுர்வேதசாரம் | - | 70 |
| பெரியதிருவந்தாதி | - | அதர்வனவேதசாரம் | - | 87 |
| திருவாய்மொழி | - | சாமவேதசாரம் | - | 1102 |
| | | | | 1296 |

மொத்தமாக 1296 பாடல்களை உள்ளடக்கிக்கொண்ட நிலையில் பத்தி அனுபவச் சிறப்புக்கள் அதிகமாக எடுத்துக்காட்டப்பட்ட நிலையில் கடவுளை தோத்திரம் செய்வதாலும் தியானிப்பதாலும் எல்லா நன்மைகளையும் பெறலாம் என்பர்.

**"தொழுமின் அவனைத் தொழுதால் வழுநின்ற வல்வினை**
**மாள்வித்து அழிவின்றி ஆக்கம் தருமே"**

என எடுத்துக்காட்டியதுடன் "பனிநெஞ்சே நாளும் பரம பரம்பரனை பிணி ஒன்றும் சாரா என்றும் பாடுவார். நெஞ்சோடு பேசும் நிர்மையில் தமது நெஞ்சை நோக்கி

**"நன்நெஞ்சே நம்பெருமான் நமக்குஅருள் தான் செய்வானே"**

என்று தேற்றுவார் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருவேங்கட மலையைத் தொழுதாலே நமது வினைகள் யாவும் ஓய்ந்து போகும் என்பர்.

**"குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்**
**அன்று ஞாலம் அளந்த பிரான் பரன்**
**சென்று சேர்திரு வேங்கடமாமலை**
**ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே"**

எனக்கூறி அடியவர்களை பகவானிடம் பத்தி செலுத்துமாறு ஆற்றுப்படுத்தும் நம்மாழ்வர் தாமுணர்ந்த தமது சொந்த அனுபவத்தையே கூறுகின்றார் "கண்டேன் கமல மலர்ப்பாதம் காண்டலுமே" விண்டே ஒழிந்த வினையாயின் எல்லாம் என்பர் இன்னும் "பிடித்தேன் பிறவி கொடுத்தேன் பிணி சாரேன் என்று ஆத்ம சரித்திரம் பேசுவர் வினையேன் வினைதீர்க்கும் மருந்தானாய் என்றும் அறிந்தனர் எல்லாம் அரியை வணங்கி அறிந்தனர் நோய்கள் அறுக்கும் மருந்தே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் உலகத்தை காத்தருள் புரியும் பீடுடைய பிரானின் பெருமையைப் பேசுவர். இவற்றின்பேறாக சமயப்பூசலுக்கு மத்தியில் கடவுள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு சன்மார்க்க வாழ்வுக்கும் தியாகப் பெருவாழ்வுக்கும் பாசுரங்களால் இராசபாதை அமைத்தவர்.

இவர் சித்து + அசித்து + ஈசன் என்று செம்புகின்ற மூவகைத் தத்துவத்தின் முடிவு கண்டவர் என்பதால் இவரை சதுர் மறைப்புரோகிதர் என்று பெரியோர் போற்றுவார். இவர் பரமாத்மாவை அகத்துறையும் அழகன் என்று அருமையாகக் கூறுவார் உயிர் உடலைத் தாங்கி நடத்தும் வகையில் இறைவன் உள்ளிருந்து உயிரைத் தாங்கி நடத்துகின்றான் என்னும் விசிட்டாத்துவிதக் கொள்கையை நம்மாழ்வார் அழகாக அரண்செய்கின்றார்.

**"திடவிசும்பு எரி வளிநீர் நிலம் இவைமிசை**
**படர்பொருள் முழுவதுமாய் அவைஅவை தோறும்**
**உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும்பரந்துளன்**
**சுடர்மிகு சுருதியுள் இவை யுண்டசுரனே"**

எனக்கூறி உலகத்தையும் ஜீவாத்மாவையும் உடலாகக் கொண்டிருக்கும் இறைவன் ஒருவன் என்பதையும் அவனை ஒரு சமயம் ஒருசித்தாந்தம் என்பனவுள் அடக்கிவைக்க முடியாது என்பதையும் கூறும் இவர் இறைவனை முனியே நான்முகனே முக்கண் அப்பா எனப் போற்றுவார். மேலும்

**"யாவையும் எவரும்தானாய் அவரவர் சமயந்தோறும்**
**தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான் உணர்வின் மூர்த்தி**
**ஆவிசேர் உயிரினுள்ளாலாதுமோர் பற்றிலாத**
**பாவனை யதனைக் கூடில் அவனையுங் கூடலாமே எனவும்**
**அவரவர் தமதம தறிவறி வகைவகை**
**அவரவர் இறைவர் எனவடி அடைவர்கண்**
**அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்**
**அவரவர் விதிவழி யடைய நின்றனரே"**

எனவும் எடுத்தியம்பி அவற்றினூடாக எவர் எவர் எச்சமயத்தினூடாக அவனைக்கண்டு வழிபட ஆசைகொள்ளுகின்றனரோ அவரவருக்கேற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் வெளிப்பட்டு அருள்புகுவதுடன் அவ்வச்சமயத்தின் சிறப்பையும் காட்டுவார் அதேநேரம் வைணவ சமயத்தின் தனித்துவத்திலே இறைவனின் பரத்துவக்கருத்துக்களையும் தத்துவார்த்த முறமையில் எடுத்து விளக்கி காட்டிய பெருமைக்குரியவராக காணப்படுவர் நம்மாழ்வார்.

இவரது பாடல்களில் ஒன்றான திருவிருத்தம் சங்க இலக்கியங்களில் ததும்பும் அகத்துறை முறையிலமைந்தது இவர் நாயகி பாவமெய்திப் பெண் பேச்சுப்பேசி தம் கடவுட்காதலைப் பிரேம திசையில் வெளியிடுகின்றார். இத் திருவிருத்தம் சொற்சுவையும் பொருட் பொலிவும் மிக்கது அந்யாபதேசம் என்னும் வெளிப்படைப் பொருளும் ஸ்வாபதேசம் என்னும் உள்ளுறைப் பொருளும் உடையது பல பாடல்கள் தோத்திர ரூபமாயமைய வந்துள்ளது இந்நூல் இறைவனிடம் பிறவி நீக்கத்தை வேண்டும் முறையில் அமைந்துள்ளது இங்கு தலைவனைப் பெற்றதாக மகிழ்ந்து கூறும் பகுதிகளெல்லாம் இறைவனை அகக்கண்ணால் கண்டு மகிழ்ந்து கூறுவனவென்றும் தலைவனைப் பிரிந்து பிரிவாற்றாது வருந்திக் கூறுவனவெல்லாம் அங்ஙனம் அகக்கண்ணாற் கண்ட இறைவனை புறக் கண்ணாலும் காணவிரும்பி அங்ஙனம் காணப்பெறாது கலங்கித் தலைவி நிலையடைந்து கூறுவதாக அமைந்துள்ளது. இறைவனாகிய தலைவனைப் பிரிந்த ஆன்மாவாகிய தலைவியின் நிலையைப் பாவனை செய்த நம்மாழ்வார் அழகிய மாமைநிறம் நீங்குகிறது என்றும் அவ்விடத்தில் பசலைபடர்கின்றது என்றும் கூறும்போது பேரரசர் இருந்த இடத்தில் குறும்பர் குடிபுகுவதைக் குறிப்பர் தலைவி பெற்ற தனியழகு சக்கரத்தண்ணல் தந்தது என்றும் தலைவனைப் பிரிந்துரையும் ஓர் இரவு ஓர் ஊழிக்காலமாகின்றது என்றும் பாடும் அமைதி அற்புதமானது. இவற்றுடன் அகத்துறைகள் பல அற்புதமாக அமைந்துள்ளன அவை தலைவன் களிறு வினவுதல் தலைவியின் பிரிவாற்றாத நிலையைத் தோழி கூறுதல், கடலை நோக்கித் தேர்வழிதூரல் எனத் தலைவன் தழையேந்திச் செல்லுதல் தலைவியின் ஆற்றாமையைத் தோழிகூறுதல் தலைவி கூடல் இழைத்து வருந்துதலைத்தோழி கூறுதல் முதலிய துறைகளைக் குறிக்கும் பாடல்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசிரியமானது ஏழு அகவற்பாக்களாலானது காசினியோர் தாம் வாழக் கலியுகத்தே வந்துதித்து ஆசிரியப்பாவதனால் அருமறை நூல் விரித்தானை தேசிகனைப் பராங்குசனைத் திருவருளத் தாரானை மாசடையா மனத்து வைத்து மறவாமல் வாழ்த்துதுமே" என்று அருளாளப் பெருமானெம் பெருமானார் என்பார் போற்றுவார். தெய்வக் குழாங்கள் கைதொழக் கிடந்த தாமரையுந்தித் தனில் பெருநாயக மூவுலகளந்த சேவடியோயே என்றும் உலகு படைத்துண்ட எந்தை என்றும் ஓராவிலைச் சேர்ந்த வெம்பெருமாயன் என்றும் பாடும் நம்மாழ்வாரின் பாடல்கள் நயமானவை.

பெரிய திருவந்தாதி திருமால் பெருமையைப் பாடுவதோடு அவரைச் சேருதல் வேண்டும் என்று நெஞ்சுக்கு உறுதியளிப்பதுமாகும். "முயற்சி சுமந்தெழுந்து முந்துற்ற நெஞ்சே" எனத் தொடங்கி எப்போதும் கைகழலா நேமியான் நம்மேல் வினை கடிவான் மெய்கழலே யேத்தமுயல்" என முடியும் என்பத்தேழு பாடல்கள் உள்ளன. கண்ணன்பால் தம் நெஞ்சை ஈடுபடுத்திய தம்பெருமையைப் பாடும் பாடல் சுவையானது.

திருவாய்மொழி ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரம் எனப் புகழ்பெற்றது இதில் நம்மாழ்வார் தம் மனக்கடலைக் கடைந்து பெற்ற அமுதமான வேதாந்த ஞானத்தையும் பத்தியனுபவத்தையும் உலகத்தவர் உய்யுமாறு அருளியுள்ளார். இந்நூலானது கறவைப் பசுக்கள் என வர்ணிக்கப்பட்ட நிலையில் இடையர் குலத்தவரின் அன்றாடச் செயல் திறன்கள் எடுத்துக்காட்டப்பட்ட சிறப்பு ஆயர் ஆடு மேய்க்கச் செல்லும் போது "சிற்றாடையும் சிறுபத்திரமும்" அணிந்து செல்லுகின்றனர் கரிகையும் தெறிவில்லும் செண்டுகோலும்" எடுத்துச் செல்லுகின்றனர் என்று யசோதை புலம்புவதிலிருந்து இடைச்சிறுவர்கள் கன்றுமேய்க்க அதிகாலையிலேயே உண்டுவிட்டு செல்வதும் "கறவைகள் பின் சென்று கானம் சேர்த்து உண்போம்" என்பதிலிருந்து மாடுமேய்க்கச் செல்பவர்கள் காட்டிலேயே கஞ்சி குடிப்பதை அறிய முடிவதும் ஆயர்கள் துவராடை உடுத்தியிருப்பதையும் பால் கறப்பதற்காக "கடையா" என்ற மூங்கில் குழாயை வைத்திருப்பதையும் மாடு கன்றுகளை அடக்கக் கையில் கோல் தாங்கி இருப்பதையும் பசுக்கள் மணியோசை கேட்டுத் தம்மை நோக்கி ஓடிவருவதற்காக தங்கள் இடுப்பில் "சறகைமணி"யைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியிருப்பதையும் "துவர் உடுக்கை கடையாவின் கழிகோல் கைசறையினார்" என்றும் திருவாய் மொழிப்பாசுரம் சித்தரிக்கின்றது.

இவ் திருவாய்மொழி ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரம் எனப் புகழ்பெற்றது இதில் நம்மாழ்வார் தம் மனக்கடலைக் கடைந்து பெற்ற அமுதமான வேதாந்த ஞானத்தையும் பத்தியனுபவத்தையும் உலகத்தவர் உய்யுமாறு அருளியுள்ளார். பத்தர்க்கு அமுதமாய் மக்கள் அனைவரும் விரும்பி ஏற்பதாய் சகல அனர்த்தங்களையும் அழிப்பதாய் ஆயிரமாகப் படைத்த உபநிடதங்களோடு கூடியதாய் நம்மாழ்வாரது வாக்குகளாலான திராவிட வேதசாகரம், தமிழ் வேத சாகரம் என்னும் திருவாய் மொழியை நான் வணங்குகின்றேன். என நாத முனிகள் அருளியுள்ளமை அந்நூல் சிறப்பின் தனித்துவத்தை உணர்ந்து கொள்ள முடிகின்றது. மேலும் ஈஸ்வர முனிகள், சொட்டை நம்பிகள், அநந்தாழ்வன் பட்டர் முதலானோரும் புகழ்ந்துள்ளனர். இது வேத உபநிடதங்கள் போல இராமனுஜருக்குத் தம் மதத்தின் தனித்துவத்தை நிலைநாட்ட உதவியாயிற்று என்பர். நம்மாழ்வார் பெற்றெடுத்த திருவாய் மொழியை இராமனுஜர் போஷித்து வளர்த்தார் என்றும் கருத்தை "முதல்தாய் சடகோபன் மொய்ப்பால் வளர்த்த இதத்தாய் இராமானுஜன்" என்னும் அடிகள் குறிக்கின்றன.

நம்மாழ்வாரின் பாடல்கள் எல்லாம் வாய்மொழிமரபாக வந்த வேதசாரக்கருத்துக்களை நினைவுபடுத்துவது ஞானப்பாற்கடல் எனக் கொள்ளத்தக்கது. வைணவசமய மரபின் உயிர்நாடியாய் இருப்பது பின் வந்த தத்துவங்களுக்கு விதையாகவுள்ளது. அகப்பொருள்துறைகள் பலவற்றைச் சமயத்துறையில் அழகுறப் பாடிய நம்மாழ்வார் இயற்கைக் காட்சிகளிலும் ஈடுபாடு கொண்டதோடு காணுமிடமெல்லாம் கண்ணனையே கண்டுகளித்தவர் "உண்ணும் சோறு, பருகும்நீர், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான் என்று பாடியவர். உயர்ந்த அறிவினால் ஆராய்வதற்கும் தெரிந்து கொள்வதற்கும் அருமையான தத்துவார்த்தங்களையெல்லாம் அறிவுக்கும் உணர்ச்சிக்கும் அமுதமாகும் வண்ணம் அற்புதமாக விளக்கியுள்ளார் சிலருக்கே சாத்தியமாயிருந்த வேதாந்த தத்துவத்தைப் பலரும் விளங்கிக்கொள்ளும் வகையில் சுவைக்களஞ்சியமாக அவர் எடுத்துக்காட்டிவிட்டார். இதனால் வைணவசமய. தத்துவமரபிலே அவருக்கு தனித்த இடம் உண்டு என்றே அறிஞர்கள் கருத்துக் கூறியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாவிய நூல்கள்


01. இந்து சமயம்
ஆ. கந்தையா ஸ்ரீகாந்தா அச்சகம் - 1964

02. இந்து சமயம் நா. கணபதிப்பிள்ளை
ஸ்ரீலங்கா புத்தகசாலை - 1969

03. தமிழ் இலக்கியத்தில் கலையும் கருத்தும்
பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை
பாரிப் புத்தகம் பண்ணை
இரண்டாம் பதிப்பு - சென்னை - 05 - 1978

04. இந்து சமய பாடம்
சைவப்புலவர் - வித்துவான் நா. கணபதிப்பிள்ளை - 1974

05. தமிழ் இலக்கிய வரலாறு
பேராசிரியர் வி. செல்வநாயகம்
ஸ்ரீலங்கா வெளியீடு - - 1995

06. திருத்தொண்டர் பெரியபுராண வசனம்
துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை - 1983

07. சைவநெறி
எட்டாம் வகுப்பு
கல்வி வெளியீட்டுத் திணைக்களம் - 1988

08. ஆராய்ச்சி (காலாண்டு ஆய்விதழ்) மலர் - 04
நா. வானமாமலை - 1974

09. இலங்கையில் இந்துகலாச்சாரம் பகுதி - I
பேராசிரியர் – சி. பத்மநாதன்
இந்துசமய பண்பாட்டு அலுவல் திணைக்களம் - 2000

10. இந்தியா ஓவியம்
மே. சு. இராமசுவாமி நேஷனல் புக் டிரஸ்ட்
வாசகர் வட்டம் சென்னை - - 1972

11. கோயில் கலைகளும் சிற்பங்களும்
பி ஆர். ஸ்ரீனிவாசன் கலைஞன் பதிப்பகம் - 1965


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. திருக்கோணேசர் ஆலய கும்பாபிஷேக மலர்
திருக்கோணேசர் ஆலய புனருத்தாராண
கும்பாபிஷேக சபையார் திருகோணமலை - 1963
14. மட்டக்களப்பு தமிழகம்
வி. சீ. கந்தையா
ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம்
குரும்பசிட்டி - யாழ்ப்பாணம் - இலங்கை - 1964
15. சைவநெறி - தரம் - 11
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
16. இந்து தருமம்
நடராஜர் சிவகாமியம்மன் மாணிக்கவாசகர்
குடமுழுக்குச் சிறப்பிதழ்
இந்து மாமன்றம் - பல்கலைக்கழகம் பேராதனை - 1977
17. இளங்கதிர் பல்கலைக்கழக தமிழ் சங்கத்தின்
23ஆது வெளியீடு ஆண்டு மலர் - 1978 - 1979
18. திருக்கேதீச்சரம் - திருக்குடத் திருமஞ்சன மலர்
திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச்சபை
- வெளியீடு - 04-07-1976
19. சைவநெறி - தரம் - 10
கல்வி வெளியீட்டுத் திணைக்களம் - 1999
20. திருக்கோணேசர் ஆலய கும்பாபிஷேகமலர்
வெளியீடு - திருக்கோணேசர் ஆலய புனருத்தாரண
கும்பாபிஷேக சபையார் திருகோணமலை - 1981
21. சென்னை - சைவசித்தாந்த மகாசமாஜ
சைவசித்தாந்த மகாநாட்டு உரை நிகழ்ச்சி தொகுப்பு
இலங்கை - தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி
தேவஸ்தானத்தில் நடைபெற்ற பவளவிழா மலர் - 1981
22. சைவசித்தாந்த ஒழுக்கவியல் அடிப்படைகள்
திருமதி – கலைவாணி – இராமநாதன்
கார்த்திகேயன் பிறைவேட் லிமிட்டெட்
கொழும்பு - ஸ்ரீலங்கா - 1997
23. சைவசமய வளர்ச்சி
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
பாரிநிலையம் சென்னை - 1972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. இந்தியச் சிந்தனைமரபு
கலாநிதி – நா. சுப்பிரமணியன்
கௌசல்யா - சுப்பிரமணியன்
சவுத் ஏசியன் புக்ஸ் இரண்டாம் பதிப்பு - 1996
25. திருமூலர் திருமந்திர விளக்கவுரை
திருநெல்வேலி சைவசித்தாந்தக் கழக வெளியீடு - 1974

பகுதி I, II

26. சோழர்கலைப்பாணி S. K. பாலசுப்பிரமணியம்
பாரிநிலையம் சென்னை - 1966
27. தமிழக சேவையிற் கலைமரவு
குடவாயில் பாலசுப்பிரமணியம் எம். ஏ. தஞ்சாவூர் - 1993
28. சிறப்புமிக்க சிவாலயங்கள்
செந்தமிழ்வித்தகர், தெய்வத்தமிழ் மணி
புலவர் – சி. முத்துப்பிள்ளை
பைலட் - பப்ளிகேஷன்ஸ் சென்னை.
29. புதிய இந்துசமய பாடத்திரட்டு
க. சி. குலரத்தினம்
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை யாழ்ப்பாணம் - 1976
30. வேதாந்த தெளிவாம் சைவசித்தாந்தம்
இளையதம்பி – சுப்பிரமணியம்
ஆசிர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம் - 1987
31. சைவசித்தாந்தம்
டாக்டர் – முத்துராமன் எம். ஏ.
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் - 1975
32. முப்பொருள் உண்மை விளக்கம்
மு இளையதம்பி B .A.
சைவப்பிரகாச அச்சியந்திரசாலை யாழ்ப்பாணம் - 1978
35. இந்துநாகரிகம் பாகம் I
க. சி. குலரத்தினம்
பகுதி மூன்று
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை யாழ்ப்பாணம் - 1980



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கள் சிந்தனைக்கு

- ஆன்மாவே நீ எனும் உண்மை அறிந்தால் ஆனந்தம் நிரந்தரமாய் பெற்றிடுவாய்.

- அதற்கு அன்பு, பொறுமை, சகிப்புத்தன்மை, மற்றும் பண்பு. மன உறுதி, ஈகை இவை மனிதனை தெய்வமாக்கும்.

ஆண்டவன் எப்போதும் உனக்குள்ளே உளன். உனது பார்வையை உலகிலிருந்து திருப்பினால் அவரைக் காணலாம்.

- ஊக்கத்துடன் உனது கடமையை செய்தலும், பயனை நோக்காது இறையர்ப்பணமாகச் செய்வதுமே கன்ம யோகம்.

- கருமத்தின் குறிக்கோள் ஞானம் பெறுதலே யாகும். உள்ளத்தை தூய்மையாக்கி தெருப்பெருக்குவோனும், தேசத்தை ஆழ்வோனும், செயல்புரிந்தால் ஞானத்தை அடையமுடியும். கருமயோகமும், சந்நியாசமும் ஒன்றே உண்மைத் துறவும் பற்றற்ற கருமமும் சாதனைப் பரம்பொருளிடத்து எடுத்துச் செல்வனவாகும்.

முற்றிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு. சி. சோதிலிங்கம்

(B.A. Dip-in-Ed.)

(சோதி)

## ஆசிரியரினால் வெளியிடப்பட்ட நூல்கள்

| | |
|---|---|
| இந்து சமயம் வினாவிடைத் தொகுப்பு | - 1995 |
| இந்து நாகரிகம் விளக்கக் குறிப்பு | - 1995 |
| இந்து நாகரிகம் வினாவிடை இல. 1 | - 2001 |
| இந்து நாகரிகம் வினாவிடை இல. 2 | - 2002 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org